
https://t.me/tamilpdfebooks

முத்துலட்சுமி ராகவன்



அழகான ராட்சசியே...

பாகம் - II

https://t.me/tamilpdfebooks

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

அழகான ராட்சசியே...!

பாகம் – 2



ஓர் வார்த்தையில் எனை உயிர்ப்பித்த
அழகான ராட்சசி நீ....

அலைபாயும் மனதோடு பெற்றவளின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் ஊர்மிளா.. மகளின் தவிப்பை உணர்ந்தாலும்.. அவளிடம் எந்த ஆலோசனையையும் பூங்குழலி சொல்லவில்லை..

அது அவள் மகளின் வாழ்வு..! முடிவை அவள்தான் எடுக்க வேண்டும்... வேறு யாரும் அதைத் திணிக்கக் கூடாது..

சோமசுந்தரம அதைத்தான் செய்ய முயன்றார்.. அவரால் நரேந்திரனின் செயலை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.. அதைவிட.. அவர் பெற்று வளர்த்த அவருடைய மகளின் மீது அவருக்கு உரிமையில்லை என்ற ரீதியில் அவரை அவன் தள்ளி வைத்ததை மன்னிக்க முடியவில்லை..

https://t.me/tamilpdfebooks

'இப்பவே இப்படின்னா.. நாளைக்கு என் மகளுக்கும்.. எங்களுக்கும் இடையே அகழியே வெட்டி வைச்சிருவான்.. இவன் எனக்கு மாப்பிள்ளையா வரக்கூடாது..'

அவர் தீர்மானித்து விட்டார்.. எப்பாடுபட்டாவது அந்தத் திருமணத்தை நடக்க விடாமல் செய்து.. அவரின் செல்ல மகளை கையோடு அழைத்துக் கொண்டு போய் விட வேண்டுமென்பதில் முனைப்பாக இருந்தார்.. பின்னாள்களில் ஊர்மிளா நரேந்திரனைப் பிரிந்து பெற்றவர்களைத் தேடி ஓடி வந்த போது.. பூங்குழலி அதைச் சொல்லியே அவரைக் குத்திக் காட்டிப் பேசி அழுதாள்..

"அன்னைக்கே என் மகளை அவர்கூட வாழவிட மாட்டேன்னு அழிச்சாட்டியம் பண்ணினீங்க.. இப்ப என்மக அவபுருசனைப் பிரிஞ்சு ஓடி வந்துட்டா.. இப்ப உங்க மனசு நிறைஞ்சிருச்சா..?"

அந்த அளவுக்கு சோமசுந்தரம் ஊர்மிளா, நரேந்திரனின் திருமணத்தை தடுத்து நிறுத்துவதில் முனைப்புக் காட்டினார்..

"இவர் உனக்கு வேண்டாம் ஊர்மிளா.. வாழ்க்கையின் அடிப்படையே பொய்யில் ஆரம்பிக்கக் கூடாதும்மா.."

"அதை இவர் சொல்லக்கூடாது ஊர்மிளா... இவரோட வாழ்க்கையின் அடிப்படையும் பொய்யிலதான் ஆரம்பிச்சது.."

"கொள்கைப் பிடிப்பு இருக்கனும் ஊர்மிளா.. பண முதலைகள்கிட்ட இருந்து நாம விலகியே நிற்கனும்.."

https://t.me/tamilpdfebooks

"உன் முன்னால நிற்கிறது முதலையில்லை ஊர்மிளா.. மனுசன்.. உன்னை உயிருக்குயிராய் காதலிக்கிற மனுசன்.."

"காதலிக்கிறவன் பொய் சொல்வானா..?"

"இப்படிப்பட்ட தகப்பனுக்கு மகளாய் பிறந்துட்ட வளைக் காதலிக்கிறவன் பொய் சொல்வான் ஊர்மிளா.."

"பொய் சொன்னதை சமாளிக்க காதலை கேடயம் போல யூஸ் பண்ணக்கூடாது ஊர்மிளா.."

"பொய்யே காதலுக்காக சொன்னதுதானே ஊர்மிளா..? கேட்டுப்பார்.. என் பிஸினெஸ்ஸில் எந்த இடத்திலும் பொய் இருந்ததில்லை.. எனக்கும் பொய்க்கும் வெகு தூரம்.."

"பேச்செல்லாம் நல்லாத்தான் இருக்கு.. இதைப் பொதுக்கூட்டத்தில பேசினா நாலுபேர் கை தட்டுவாங்க.. பேஸ்புக்கில போட்டா நாலுபேர் லைக் போடுவாங்க.. அதை விட்டுட்டு நம்மகிட்டப் பேசி எதுக்காக எனர்ஜியை வேஸ்ட் பண்ணனும் ஊர்மிளா..?"

"பொதுக்கூட்டத்தில் பேசறதெல்லாம் உங்கப்பா வோட வேலை.. பேஸ்புக்கில் லைக்கை எதிர்பார்த்து நான் ஸ்டேடஸ் போட மாட்டேன்.. சொல்ல நினைக்கிறதைச் சொல்வேன்.. நான் எனர்ஜிடிக் மேன் ஊர்மிளா.. இந்தப் பேச்சுக்கெல்லாம் என் எனர்ஜி குறைஞ்சிராது.."

"நீ கிளம்பு ஊர்மிளா.. இந்தக் கல்யாணம் உனக்கு வேண்டாம்.. நேர்மையானவனா.. மனைவிகிட்ட

https://t.me/tamilpdfebooks

உண்மையாய் இருக்கிறவனாப் பார்த்து நான் உனக்கு கல்யாணம் பண்ணிவைக்கிறேன்..”

“நான் உன்னைத் தடுக்கப் போகிறதில்லை ஊர்மிளா.. உன் அப்பா சொன்னதைப் போல கிளம்ப உனக்கு விருப்பம்ன்னாக் கிளம்பி விடு.. அவர் பார்த்து வைக்கிற நோ்மையான.. மனைவிகிட்ட உண்மையாய் இருக்கிறவனாய் பார்த்து கல்யாணம் பண்ணிக்க.. நான் குறுக்கே வரமாட்டேன்.. நான் நரேந்திரன்.. நரேன் குரூப் ஆஃப் கம்பெனிஸின் முதலாளி.. உலகம் பூராவும் பிஸினெஸ் பண்றவன்.. திருச்சிக்கு வந்தேன்.. உன்னைப் பார்த்தேன்.. காதலிச்சேன்.. நீ பெண் கேட்டு வரச் சொன்ன.. உன் அப்பா முதலாளிகளை வெறுக்கிறவரா இருந்தார்.. அதனால நான் முதலாளிங்கிறதை மறைத்து உன்னைப் பெண் கேட்டேன்.. அதைத்தவிர வேற எந்தத் தப்பையும் நான் செய்யலை.. காதலிக்கிறவளை விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னுதான் எந்தக் காதலனும் நினைப்பான்.. நானும் அதைத்தான் நினைச்சேன்.. அதைத் தப்புன்னு நீ நினைச்சா தாராளமா இந்தக் கல்யாணத்தை வேண்டாம்ன்னு சொல்லிட்டு கிளம்பிப் போகலாம்.. நான் உன்னைத் தடுக்க மாட்டேன்..”

‘அவ்வளவுதானா..?’ ஊர்மிளா நிலை குலைந்தாள்..

அவன் அவளைத் தடுக்க மாட்டானா..? அவள் கிளம்ப முனைந்தால் வழிவிட்டு விலகி நிற்பானா..? அவள்மீது அவன் வைத்திருக்கும் காதலின் அளவு இவ்வளவுதானா..?

https://t.me/tamilpdfebooks

அவளின் இதழ்கள் துடித்தன.. கைகள் நடுங்க அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.. அவள் பார்வையில் தெரிந்த உக்கிரத்தில் நரேந்திரனின் பேச்சு நின்றது..

"உங்க பணக்காரப் புத்தியைக் காட்டிட்டிங்கள்ல..?"

"ஊர்மிளா..?"

"நான் பாட்டுக்கு.. நானுண்டு.. என் வேலை யுண்டுன்னு திருச்சியிலே இருந்தேன்.. தேடி வந்து காதல் சொல்லி.. கல்யாணம் வரைக்கும் கொண்டு வந்து நிறுத்திட்டு.. இப்ப கல்யாணத்தை நிறுத்தனும்னா நிறுத்திக்க.. கிளம்பனும்னா கிளம்பு.. நான் தடுக்க மாட்டேன்னு லேசா சொல்லிட்டிங்கள்ல..? இந்த ஊர்மிளா அவ்வளவு எளிதானவளா ஆகிட்டேனில்ல.. நீங்க நினைத்தா என் மனதைக் கலைப்பீங்க.. அதுக்கப்புறம் விலகனும்னா விலகிக்க.. நான் உன்னைத் தடுக்க மாட்டேன்னு சொல்லுவீங்க.. இதை நீங்க சொல்லலைங்க.. உங்க உடம்பில ஓடற பணக்கார ரத்தம் சொல்லுது.. எளியவங்களை ஈஸியா நினைக்கிற உங்க மேல்தட்டு வர்க்கத்தோட குணம் சொல்லுது.."

அன்று சொன்ன அதே வார்த்தைகளை பின்னாள்களில் பலமுறை நினைத்துப் பார்த்திருக்கிறாள் ஊர்மிளா.. அவள் சொன்னதைப்போல அவன் அவளை எளிதாகத்தான் நினைத்துவிட்டான் என்று வேதனைப் பட்டிருக்கிறாள்.. திருமண மண்டபத்திலேயே அவளை தடுக்க முனையாதவன்.. அவன் வீட்டிலிருந்து வெளியேறிய போது தடுக்காமல் வேடிக்கை பார்த்ததில்

https://t.me/tamilpdfebooks

ஆச்சரியமெதுவில்லை என்று மனம் நைந்திருக்கிறாள்.. கட்டின மனைவி எங்கேயிருக்கிறாள் என்று மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக தேடாதவனின் கல்மனம் கல்யாண மண்டபத்திலேயே வெளிப்பட்டு விட்டதே என்று விடிய விடிய பல இரவுகளில் தூங்காமல் அழுதிக்கிறாள்..

நரேந்திரன் அப்படித்தான் இருந்தான்.. எந்தக் காரணத்தைக் கொண்டும் உன்னை நான் வற்புறுத்த மாட்டேன்.. உன்மீது எனக்குக் காதல்.. பணக்காரன் என்பதை மறைத்து திருமணம் வரை கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறேன்.. இப்போது உண்மையைச் சொல்கிறேன்.. ஏற்றுக்கொண்டால் என்னுடன் மணமேடைக்கு வா.. உனக்குத் தாலிகட்டி என் மனைவியாக்கிக் கொள்கிறேன்.. இல்லை பிரிந்து செல்ல முடிவெடுக்கிறாயா..? உன் விருப்பம் அதுவென்றால் நான் விலகி நின்று வழி விடுகிறேன்.. நீ சென்று வா..

அவளை அவன் வற்புறுத்தவில்லை.. அசையாமல் நின்றான்.. அவனது துளைக்கும் பார்வை மட்டுமே அவள்மீது படிந்திருந்தது..

முடிவை அவள் பொறுப்பில் விட்டுவிட்டு கடமையைத் தட்டிக் கழிப்பவனைப்போல அவன் அவளுக்குத் தோன்றினான்..

'ஏன் அவன் என்னை கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி ஃபோர்ஸ் பண்ணலை..?'

https://t.me/tamilpdfebooks

இதற்கான விடையை அவர்களின் முதலிரவின் போது நரேந்திரன் அவளிடம் சொன்னான்..

“உன்னைக் கட்டாயப்படுத்தி.. உன் கழுத்தில் கத்தியை வைச்சு நான் கல்யாணம் பண்ணிக்கிட்டதாக இருக்கக் கூடாது டி.. என் மனசில உன் மேல இருக்கிற காதலில பாதியாவது உனக்கு என்மேல இருக்க வேணாமா..? அப்படியிருந்தா நீ என்னை விட்டு விலகிப் போக மாட்டேன்னு நான் கால்குலேட் பண்ணினேன்.. என் கணக்கு சரியா இருந்தது..”

அந்தப் பதில் அந்தத் தருணத்தில் அவளை அமைதிப்படுத்தி அவனிடம் அடைக்கலம் கொள்ள வைத்தாலும்.. பின்னாள்களில் அந்தப் பதிலில் அவள் பொருமியிருக்கிறாள்..

அவன் சொன்ன அத்தனை விளக்கங்களும் அவனைக் குற்றமற்றவன் என்று நிரூபிப்பதற்காகத்தானா..? அவளைத் திருமணம் செய்து கொள்ள கழுத்தில் கத்தியை வைத்தாலும் பரவாயில்லை என்று ஏன் அவன் நினைக்கவில்லை..?

அவன்மீது இருந்த மயக்கத்தினால்.. முதலிரவில் அவனது அருகாமை தந்த போதையினால்.. அவனது பதிலை சரியென்று அவள் ஏற்றுக் கொண்டு விட்டதாகவே பின்னாள்களில் ஊர்மிளா நினைத்தாள்..

அவனது பதில் சரியான பதிலள்ள.. எந்த ஒரு சூழ்நிலையிலும் அவன் தற்காத்துக் கொள்கிறவனாகவே இருந்திருக்கிறான்.. அது திருமண மண்டபமாக

https://t.me/tamilpdfebooks

இருந்தாலும் சரி.. அதன் பின்னால் வந்த வாழ்வாக இருந்தாலும் சரி..

நான் உன் கழுத்தில் கத்தியை வைத்து உன்னைத் திருமணம்செய்து கொண்டதாக இந்த ஊர் உலகமும் நினைக்கக் கூடாது.. நீயும் நினைக்கக் கூடாது.. எனவே முடிவை நீ எடு.. இது திருமண மண்டபத்தில் அவன் எடுத்த நிலைப்பாடு..

என் அம்மா உன்னைப்பற்றித் தவறாக சொன்னார்கள்.. நான் அதை ஏனென்று கேட்கவில்லை.. மாறாக.. அவர்கள் சொன்னது உண்மையா என்று உன்னைக் கேள்வி கேட்டேன்.. ஏனென்றால்.. என் வீட்டில் உள்ளவர்கள் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்.. அது என் கௌரவத்திற்கு முக்கியமானது.. அப்படி அனைவரின் முன்னிலையிலும் உன்னைக் கேள்வி கேட்பதினால் உன் மனம் புண்பட்டிருக்குமானால்.. நான் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டேன்.. இது அவன் வீட்டில் அவன் எடுத்த நிலைப்பாடு..

இரண்டு தருணங்களிலும் அவன் அவளை முடிவெடுக்கும் கட்டாயத்தில் நிறுத்தினான்.. அவளை தடுத்து நிறுத்த முனையவில்லை.. இது ஊர்மிளாவின் மனதில் ஆழமாக பதிந்து விட்டது..

“வா.. ஊர்மிளா.. போகலாம்..”

சோமசுந்தரம் திருமண மண்டபத்தை விட்டு அவளை கிளப்ப முனைந்தபோது தலை அசைத்து தன் மறுப்பை வெளிப்படுத்தினாள் ஊர்மிளா.. அதில்

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் கண்கள் மின்னின.. அவன் முகத்தில் வந்த வெற்றியின் சாயலில் சோமசுந்தரம் சினம் கொண்டார்..

"நான் வரலைப்பா.."

"புத்தியோடதான் பேசறியா ஊர்மி..? இவர் சொல்கிறது எல்லாமே பொய்யாய் இருக்கு.. இதை தெரிஞ்ச பின்னாலுமா கிளம்பி வர மாட்டேங்கிற..?"

"ஆமாம்பா.. இவர் பணக்காரர் இல்லைன்னு பொய் சொல்லியிருக்கலாம்.. ஆனா என் காதலில் எந்தப் பொய்யும் இல்லையேப்பா.. இவரைப்போல நான் எதையும் மறைக்கலையே.. பொய் சொல்லலையே.. உண்மையாய் இவரைக் காதலிச்சேனே.."

"ஊர்மி..?"

"மனசார இவரை நினைச்சுட்டு.. காதலிச்சுட்டு.. வேற ஒருத்தருக்கு எப்படிப்பா நான் கழுத்தை நீட்டுவேன்..?"

ஊர்மிளாவின் அந்தக் கேள்வியில் சோமசுந்தரத்தின் எதிர்ப்புக்கள் பொடிப்பொடியாகின.. நரேந்திரன் கர்வம் கொண்டான்.. பூங்குழலி தன் வளர்ப்பில் பெருமிதம் கொண்டாள்..

"மன்னிச்சிருங்க.."

நரேந்திரன் இரு கரங்களையும் குவித்து சோமசுந்தரத்திடமும் பூங்குழலியிடமும் மன்னிப்புக் கேட்டான்.. பூங்குழலி பதறிப்போனவளாக இழுத்துப் போர்த்தியிருந்த புடவை முந்தானையை இறுக்கிப்

https://t.me/tamilpdfebooks

பிடித்தபடி தரையில் பார்வையைப் பதித்தாள்.. பேச அவளுக்கு நா எழும்பவில்லை..

சோமசுந்தரம் அப்படி எதையும் செய்யவில்லை.. மாறாக மருமகனை முறைத்தார்.. அவரின் கம்பீரம் குறையாமல் கண்டிப்பான தொனியில் பேசினார்..

“என் மகள் ஒரு கேள்வியில என் மறுப்பை உடைச்சிட்டா... உங்க கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கிறேன்.. ஆனா.. என்மக வாழ்க்கையிலே ஏதாச்சும் சிக்கல் வந்துச்சுன்னா நான் சும்மா இருக்க மாட்டேன்.. நீங்க எவ்வளவு பெரிய கோடிஸ்வரனா இருந்தாலும்.. எனக்கு அதைப் பத்திக் கவலையில்லை.. என்மகள் கண்ணிலே ஒரு சொட்டுக் கண்ணீர் வந்தாலும்.. உங்களை உண்டு இல்லைன்னு பண்ணிருவேன்.. நினைவிருக் கட்டும்..”

அவருடைய சீற்றத்துக்கு பதிலுக்குச் சீறாமல் இதமாகவே பதில் கொடுத்தான் நரேந்திரன்.. அவனைத் தவிர வேறு யாருக்கும் தன் வாழ்வில் இடமில்லையென்று ஊர்மிளா சொல்லி விட்டதில் அவன் இமயத்தின் உச்சியில் நிற்பதைப் போல உணர்ந்தான்.. அந்த அருமையான காதலியைப் பெற்றவரின் சீற்றத்துக்கு நம்பிக்கையான பதிலைக் கொடுக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வுதான் அப்போது அவனிடம் இருந்தது..

“இல்லை.. நீங்க என்னைக் கேள்வி கேட்பதைப் போல வைத்துக்க மாட்டேன்.. ஊர்மிளாவை என் கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொள்வேன்.. என்னை நீங்க நம்பலாம்..”

https://t.me/tamilpdfebooks

"பணக்காரங்க வார்த்தையும்.. தண்ணி மேலே எழுதின எழுத்தும் ஒன்னுன்னு சொல்வாங்க.."

"இந்தப் பணக்காரன் சொல்கிற வார்த்தை கல்வெட்டு..! மாறாது.."


அதனால்தான்.. அந்த வாக்குறுதியில் இருந்து தவறிவிட்ட குற்ற உணர்ச்சினால்தான் பின்னாள்களில் நரேந்திரன் சோமசுந்தரத்திடம் பொறுத்துப் போனான்.. அவன்தான் வேண்டும் என்று பெற்றவரின் பேச்சை மீறி அவனுக்கு கழுத்தை நீட்டிய ஊர்மிளாவை.. வாக்களித்த படி கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொள்ள முடியாத குற்ற உணர்ச்சிதான் சோமசுந்தரதின் பேச்சுகளுக்கு பதிலுக்குப் பதில் பேசாமல் அவனை மௌனமாக இருக்க வைத்தது..

திருமணம் நிற்காது என்றானதும்.. நரேந்திரன் உற்சாகமாக அறைக்கதவை திறந்து வைத்தான்.. காத்திருந்த உறவினர்கள் அவர்களை சூழ்ந்து கொண்டார்கள்..

"மாப்பிள்ளையோட அம்மாவும்.. தம்பி.. தங்கையும் என்னமா பழகறாங்க தெரியுமா..? அந்தம்மா முகத்தில கர்வம் இருந்தாலும்.. அந்தப் புள்ளைககிட்ட அது இல்லை.. பாசமா பேசறாங்க.."

அடுத்த வெடிகுண்டு வெடித்தது.. தாய்.. தகப்பன் இல்லாத அனாதையென்று சொல்லிக் கொண்டவனுக்கு பெங்களூரில் ஒரு குடும்பமே இருந்ததில் சோமசுந்தரம் மீண்டும் தலையைப் பிடித்தார்..

https://t.me/tamilpdfebooks



சொல்வனத்தில் பூத்து வந்த
சொற்களிலே காதல் சொன்ன
அழகான ராட்சசி நீ....

நரேந்திரனுக்கு என்று குடும்பம் இருக்கிறதா..? அவன் தாய்.. தந்தையில்லாத அநாதை என்றல்லவா சொன்னான்..?

ஊர்மிளாவும்.. அவளைப் பெற்றவர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. நரேந்திரன் செதுக்கி வைத்த சிலை போல நின்றான்.. அப்போதுதான் கடலைக் கடந்து முடித்தவனின் முன்னால் மலை தோன்றி நின்றதில் மலையேற வேண்டுமே என்ற மலைப்பு அவன் முகத்தில் தோன்றியது.. என்னடா காதல் இது என்று தலையைப் பிடித்துக் கொண்டான்..

"இதை நாங்க செய்யனும்.." என்றார் சோமசுந்தரம்.

"உங்களுக்கு அப்பாம்மா இல்லை.. அநாதைன்னு சொன்னீங்களே..?" ஊர்மிளா வினவினாள்..

"அப்பாம்மா இல்லைன்னுதான் சொன்னேன்.. அநாதைன்னு சொல்லலை.." என்றான் நரேந்திரன்..

"கெட்டிக்காரத்தனமா பேசுகிறாராம்.." இடக்காக சொன்னார் சோமசுந்தரம்..

https://t.me/tamilpdfebooks

"உங்ககிட்டக் கெட்டிக்காரத்தனமா பேசிட்டாலும்.. ம்ஹீம்.. நீங்க கேட்டுட்டுத்தான் வேற வேலை பார்ப்பீங்க.." அவரை விட இடக்காக பதில் சொன்னான் நரேந்திரன்..

"இந்த இடக்கு மடக்கு பேச்செல்லாம் இங்கே வேணாம்.. இன்னும் எத்தனை பொய்யை சொல்லியிருக் கார்ன்னு வரிசைகட்டிச் சொல்லிரச் சொல்லு ஊர்மிளா.. மொத்தமா கேட்டுக்கலாம்.. ஒவ்வொன்னாச் சொல்லி மனுசருக்கு ஹார்ட் அட்டாக்கை வர வைக்க வேணாம்ன்னு சொல்லு.." மகளிடம் உறுமினார் சோமசுந்தரம்..

"ஹார்ட் அட்டாக்கெல்லாம் ஹார்ட் இருக்கிறவங் களுக்குத்தான் வரும்.." எரிச்சலோடு சொன்னான் நரேந்திரன்..

"எனோஃப்.." ஊர்மிளாவின் முகம் இறுகிவிட்டது..

"ஊர்மி.."

"பேசாதீங்க.. எங்க அப்பாவுக்கு இதயம் இருக்கா இல்லையாங்கிறதை நீங்க சொல்லக் கூடாது.. முதலில் உங்களுக்கு அது இருக்கா..?"

"ஏய்ய்.."

"இவ்வளவு பெரிய கோடிஸ்வரர்.. ஒன்னுமே இல்லாதவரைப் போல நடிச்சுக் கல்யாணம் வரைக்கும் கொண்டு வந்து நிறுத்தியிருக்கீங்க.. காதலிச்சுட்ட கொடுமைக்காக கழுத்தை நீட்ட சம்மதிச்சிருக்கேன்.. அடுத்து என்னடான்னா.. அநாதைன்னு சொல்லிக் கிட்டவருக்கு இங்கே ஒரு குடும்பம் இருக்கு.. இதை

https://t.me/tamilpdfebooks

எப்படி எடுத்துக்கச் சொல்றீங்க..? இப்படி அடுத்தடுத்து உங்க பின்னாலே இருக்கிற உண்மைகளெல்லாம் வெளிப்பட்டா.. இன்னும் நீங்க எத்தனை பொய்களைச் சொல்லியிருக்கீங்கன்னு எங்கப்பா கேட்பாரா மாட்டாரா..?"

"ஓ..! உங்கப்பாவுக்கு சப்போர்ட் பண்ற..!"

ஒரு தினுசான குரலில் சொன்னவனை எரிச்சலுடன் பார்த்தாள் ஊர்மிளா.. அவன் கோடிஸ்வரன் என்பதில் அவளுக்குத் துளிக்கூட மகிழ்வில்லை.. அதற்கு மாறாக.. அவளைக் காதலித்த.. அந்த சாதாரண நரேந்திரனுக்காக அவள் மனம் ஏங்கியது..

அந்த நரேந்திரனிடம் கேலியும்.. கிண்டலும் இருக்கும்.. இதுபோல பணக்கார மிடுக்கெல்லாம் இருக்காது.. அந்த நரேந்திரனின் கம்பீரம் வேறு வகையானதாக இருக்கும்.. இதுபோல ஆணவத்தை உணர்த்தும் கம்பீரமாக இருக்காது.. அந்த நரேந்திரனும் சோமசுந்தரத்திடம் மோதுவான்.. அந்த மோதல்.. இந்த மோதல் போல இருந்ததில்லை..

"எங்கப்பா பக்கம் உண்மையிருக்கு.. உங்க பக்கம் அது இல்லையே.. நான் என்ன செய்வேன்..?" துக்கத்துடன் சொன்னாள் ஊர்மிளா..

"உண்மையில்லைன்னு சொல்லாதே.. அதை உன்னிடம் இதுநாள்வரைக்கும் சொல்லலை.. அதை மட்டும் சொல்லு.. என்னைக் காதலிச்சது உனக்குக் கொடுமையாப் போயிருச்சில்ல..?"

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் தீர்க்கமான பார்வையில் ஊர்மிளா தடுமாறிப் போனாள்.. அவன் பார்வை அவளைக் குற்றம் சாட்டியது.. அவன் மீதான தவறு என்று அந்த நிலையிலும் அவன் காட்டும் நிமிர்வில் அவள் குழம்பிப் போய் நின்றாள்.

"உண்மையை மறைச்சது பொய்க்குச் சமானம் தானே..?" மகளின் தடுமாற்றத்தை ஈடுகட்டிய சோமசுந்தரம் கேட்டார்..

"என்னங்க நீங்க..? உங்க மகளுக்கு எடுத்துக் கொடுத்துக்கிட்டே இருக்கீங்களா..? நான் எங்கேங்க பொய் சொன்னேன்..? எனக்கு உண்மையாகவே அம்மா.. அப்பா உயிருடன் இல்லைங்க.. இங்க இருக்கிறது என் அப்பாவின் இரண்டாவது மனைவியும்.. அவங்களுக்குப் பிறந்த என் தம்பியும்.. தங்கையும் தான்.."

நரேந்திரன் சொன்னதில் பூங்குழலி மிரண்டு போனாள்.. ஒற்றைப் பெண்ணை ஒரு சொல் கேட்க விடாமல் பூவைப்போல பொத்திப்பொத்தி வளர்த்து விட்டு.. இதுபோல ஒரு புகுந்த வீட்டில் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமா என்று அவளுக்கு அச்சமாக இருந்தது..

'மாப்பிள்ளைக்கு சித்தின்னா அவங்க என்ன குணத்தில இருப்பாங்களோ.. இதில வேற அவங்களுக்கு ஆணொன்னும்.. பொண்ணொன்னுமா ரெண்டு பிள்ளைக இருக்காங்க.. கடைசியில இப்படியாப்பட்ட இடத்திலா என் மகள் வந்து மாட்டனும்..?'

https://t.me/tamilpdfebooks

அவளுக்குக் கண் கலங்கி விட்டது.. மாமியார் என்றால் கூட பெற்ற மகனின் மனைவியென்று பார்ப்பாள்.. இங்கே அப்படியில்லைமல் சின்ன மாமியார் இருக்கிறாளே.. மாமியார்.. நாத்தனார் என்ற நேரடி உறவுகள்.. மருமகனின் சித்தி.. அவளின் மகள் என்று மாறும் போது இன்னும் கொஞ்சம் கடுமை கூடி வருமே..

பரிதவித்த அவள் விழிகளைப் பார்க்கச் சகிக்காமல் சோமசுந்தரம் யுத்த முழக்கத்தை அதிகப் படுத்தினார்.. அன்று பூங்குழலி அப்படித்தான் சொன்னாள்..

"அவருக்கு வசதியில்லைன்னா என்னங்க..? நம்மகிட்ட இருக்கிற சொத்து சுகம் யாருக்காக..? எல்லாம் ஊர்மிளாவுக்காகத்தானே.. அவளைக் கட்டிக்கிற மாப்பிள்ளைக்கு அந்தச் சொத்தில் உரிமையில்லையா..? அப்பாம்மா இல்லேங்கிறாரு.. பெண்ணைக் கட்டிக் கொடுத்து வீட்டோட மாப்பிள்ளையா ஆக்கிக்கலாம்ங்க.. மாமியார்.. நாத்தனார்ன்னு என் மகள் பயந்துக்கிட்டு குடும்பம் நடத்த வேண்டியிருக்காது பாருங்க.."

பூங்குழலி சந்தோசப்பட்டபோது சோமசுந்தரம் அவளைக் கண்டித்தார்..

"இது பிற்போக்குச் சிந்தனை பூங்குழலி.. நீ பெண்ணை மட்டும் பெற்றிருக்கிறதினாலே இப்படிப் பேசறியா..? இதுவே நமக்கும் ஒரு மகன் இருந்து.. அவனுக்கு கல்யாணம் பேசப் போனா.. அவங்க வீட்டிலே உன்னைப் பத்தியும்.. ஊர்மிளாவைப் பத்தியும் இப்படித்தான் பேசியிருப்பாங்க.. அதை மறந்துராதே.. மாமியாரும்.. நாத்தனாரும் வில்லிகளா..?"

https://t.me/tamilpdfebooks

"நான் அந்த அர்த்தத்தில சொல்லலைங்க.. நம்ம ஊர்மிளா வெளியே பார்க்கத்தான் தைரியசாலியைப் போல இருப்பா.. மத்தபடி அவ மனசு பூஞ்சைமனசு.. சொல்லு தாங்க மாட்டா.. அதனால வார்த்தையை விட்டுட்டேன்.."

பூங்குழலி மன்னிப்புக் கேட்டாலும்.. அவள் மனதில் ஊர்மிளா மாமியார்.. நாத்தனார் என்று புகுந்த வீட்டின் உறவுகளிடம் மாட்டிக்கொள்ள வேண்டியதில்லை என்ற நிம்மதியே விரவியிருந்தது..

அந்த நிம்மதி உடைந்து.. இன்னும் அதிகமான சிக்கலுக்குள்ளே மகள் பிரவேசிக்கப் போகிறாள் என்ற அச்சத்தை உண்டாக்கியதில் அந்தத் தாய்மனம் தவித்தது..

"அப்பாம்மா இல்லைன்னு சொன்னவருக்கு.. அப்பா ரெண்டாம் தாரம் கட்டிக்கிட்டாரு.. அவங்களுக்கு ரெண்டு பிள்ளைகள் இருக்காங்கன்னு சொல்ல வாய் வரலையாம்.. இது எப்படியிருக்கு..?"

என்னவோ 'பதினாறு வயதினிலே' திரைப்படத்தில் சூப்பர்ஸ்டார் பேசுவதைப் போல.. படு ஸ்டைலாக இடக்குப் பேசியவரை என்னதான் செய்வது என்ற வெறி நரேந்திரனுக்குள் கிளர்ந்தது..

சோமசுந்தரம் கேட்ட கேள்விகள் அனைத்தும் நெத்தியடிக் கேள்விகளாக.. அவனால் பதில் சொல்ல முடியாத கேள்விகளாக இருந்ததில் அவனுடைய வெறி அதிகரித்தது..

https://t.me/tamilpdfebooks

அவனுக்கு மட்டும் அப்பாவின் இரண்டாவது திருமணத்தைப் பற்றியும்.. அந்தக் குடும்பத்தைப் பற்றியும் சொல்லக் கூடாதென்ற ஆசையா என்ன..?

அப்படிச் சொன்னால்.. சோமசுந்தரம் என்ன சொல்லுவார்..? முறைப்படி உங்க சித்தியோடும்.. உங்க குடும்பத்தோடும்.. பெண் கேட்டு வாங்க என்னு சொல்லியிருப்பாரா.. மாட்டாரா..? நரேந்திரனின் கோடிஸ்வர அந்தஸ்து வெளிப்பட்டு விடும் அபாயம் இருந்ததில் நரேந்திரன் அதைச் சொல்வதைத் தவிர்த்து விட்டான்..

தாய்.. தகப்பன் இல்லையென்று சொல்லி விட்டால் மாப்பிள்ளை வீடு பார்க்க என்று அவனது பின்புலத்தை ஆராய்வதை சோமசுந்தரம் தவிர்த்து விடுவார் என்பதால் அவன் கவனமாக வார்த்தைகளைக் கையாண்டான்.. அது இதில் கொண்டு வந்து விடும் என்று நினைத்தா பார்த்தான்..?

“சார்.. மறைக்கனும்னு நான் நினைத்து மறைத்ததில நீங்க குற்றம் கண்டு பிடிக்க எதுவுமில்லை சார்.. நான் சொன்னதும்.. செய்ததும்.. ஊர்மிளாவின் மேலே இருந்த காதலுக்காக மட்டும்தான்.. மற்றபடி உங்களை ஏமாற்றி உங்க சொத்தை கொள்ளையடிச்சிரலை..”

“நீங்க கோடிஸ்வரர்.. நாங்க அப்படியில்லைங் கிறதைச் சொல்லிக் காட்டறிங்களா..?”

“என்னசார்.. நீங்க விதண்டாவாதமாவே பேசிக்கிட்டு இருக்கீங்க..? இப்ப எங்கேஜ்மெண்ட் ஆரம்பமாகப்

https://t.me/tamilpdfebooks

போகுது.. ஊர்மிளாவை ரெடி பண்ணி அழைத்துக்கிட்டு வருகிற வேலையைப் பாருங்க..”

நரேந்திரன் கோபத்துடன் பேசினான்.. சோமசுந்தரம் ருத்ர அவதாரமெடுத்தார்..

“ஏன் சொல்ல மாட்டிங்க..? பொதுவுடைமை பேசறவனை.. பொண்ணுக்கு அலங்காரம் பண்ணச் சொல்கிறோமேங்கிற எண்ணமில்லாம பேசறவர்கிட்ட என்ன வளமையை எதிர்பார்க்க முடியும்..?”

அப்போதுதான் தவறை உணர்ந்தவனாக நாக்கைக் கடித்துக் கொண்டான் நரேந்திரன்.. உதவி கோரும் பாவனையில் ஊர்மிளாவை அவன் பார்க்க... உனக்கெல்லாம் நான் உதவி செய்வேனா என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ஊர்மிளா..

‘இவளே அழகான ராட்சசி..! சோமசுந்தரத்தின் வாரிசு.. வேற எப்படி இருப்பா..? இவரைப் போல ஜொராக்ஸ் காபியாத்தானே இருப்பா..?’

நரேந்திரன் பல்லைக் கடித்தபடி பூங்குழலியைப் பார்த்தான்.. அவளோ.. மகளின் சின்ன மாமியாரும்.. அவள் பெற்று வைத்திருக்கும் நாத்தனாரும் என்ன மாதிரியான குணாதிசியத்துடன் இருப்பார்களோ என்ற கலவரத்துடன் கையைப் பிசைந்து கொண்டிருந்தாள்.. அவளின் பயத்தைக் கண்டவனுக்கு ஐயோ பாவம் என்று ஆகிவிட்டது..

அவனுக்குப் பெண் கொடுக்க பூங்குழலி இந்த அளவுக்கு அச்சப்பட வேண்டுமா..?

https://t.me/tamilpdfebooks

அவள் முகத்தைப் பார்த்துப் பரிதாபப்படுவதை விட சோமசுந்தரத்தின் முகத்தைப் பார்த்து விடுவதே சாலச் சிறந்தது என்று தோன்றிவிட அவரிடமே சமரசம் பேசினான் நரேந்திரன்..

"உங்க பொண்ணுக்கு அலங்காரமே தேவையில்லை சார்.. அவ சும்மாவே அழகாத்தான் இருப்பா.. ரெடி பண்ணி அழைச்சுக்கிட்டு வாங்கன்னு நான் சொன்னதுக்கு அர்த்தமே வேறு சார்.."

"எங்களுக்கென்னங்க தெரியும்..? நாங்க ஒரு வாசகம் பேசினாலும் திருவாசகமாய் பேசறவங்க.. ஒளிவு மறைவில்லாம நேரடியாய் பேசறவங்க.. ஒரு வார்த்தைக்குள்ள.. ஒன்பத்திரண்டு பொய்யை மறைச்சு வைச்சுப் பேசற சித்து வேலையெல்லாம் எங்களுக்குத் தெரியாது.."

சோமசுந்தரம் மைக்கில்லாமல்.. மேடையில்லாமல் வெளுத்துக் கட்டியதில் நரேந்திரன் ஆயாசப்பட்டுப் போனான்... இந்தப் பேச்சிற்கு முடிவே இருக்காது என்று அவனுக்குத் தோன்றியது.. விட்டால் சோமசுந்தரம்.. விடியும் வரை பேச்சை வளர்க்கத் தயாராக இருந்தார்.. ஆனால் வந்திருக்கும் உறவினரையும்.. விருந்தினரையும் வரவேற்க வேண்டிய சூழ்நிலையில் நரேந்திரன் அதற்குத் தயாராக இல்லை.

அவன் கல்யாண மாப்பிள்ளை..! அவனைத் தேடுபவர்களின் முன்னிலையில் புன்னைகயுடன் அவன்

https://t.me/tamilpdfebooks

நின்றாக வேண்டும்.. சோமசுந்தரத்தின் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது..

"ஓகே சார்.. நான் பொய்யனாகவே இருந்து விட்டுப் போகிறேன்.."

"நீங்க பொய்காரர்தாங்க.. இதில என்ன பெரியமனதா நீங்க விட்டுக் கொடுத்துப் பேசறது..?"

"நான்தான் ஒப்புக்கிட்டேனில்ல..? நான் பொய்க் காரன்தான்.. நீங்க பெரிய உண்மை விளம்பிதான்.."

"நீங்க சொன்னாலும்.. சொல்லாட்டியும்.. நான் உண்மை விளம்பிதாங்க.. திருச்சியில வந்து கேட்டுப் பாருங்க.."

"எதை..?"

"ம்ம்ம்.. கொடிக்கா வெத்தலை அங்கே குறைஞ்ச விலைக்குக் கிடைக்குது.. அதை வந்து கேட்டுப் பார்க்கச் சொன்னேன்.."

எடுத்தெரிந்து பேசிய சோமசுந்தரத்தை நரேந்திரனுக்கு பிடித்திருந்தது.. அவன் கோடிஸ்வரன் என்பதை அறிந்தபின்னால் அவர் காட்டிய கோபத்தில் அவர் மீதான அவனின் பற்றுதல் அதிகரித்தது..

அவனது உயரத்திற்காகவும்.. பணத்திற்காகவும்.. பெண் கொடுக்க நினைத்தவர்களின் மத்தியில்.. அதை அறிந்தவுடன் பெண் கொடுக்க மாட்டேன் என்று வாதம் செய்த அவரின் உண்மையான கொள்கைப் பிடிப்பை மனதுக்குள் அவன் வெகுவாக பாராட்டினான்..

https://t.me/tamilpdfebooks

"இங்கே வந்திருக்கிற கெஸ்டுக்கு கொடிக்கால் வெற்றிலையைப் பத்தியெல்லாம் எதுவும் தெரியாது சார்.. அதனால.. கொடிக்கா வெற்றிலையை திருச்சியிலேயே விட்டுட்டு நாம ஆக வேண்டிய வேலைகளைப் பார்க்கலாம்.. ஐ.. மீன்.. கல்யாண ஏற்பாடுகளைப் பார்க்கலாம்ன்னு சொன்னேன்.. நீங்க இதுக்கும் ஒரு வழக்கை ஆரம்பிச்சு வைச்சுராதீங்க.."

சோமசுந்தரம் அடுத்து அதைச் சொல்வதாகத்தான் உத்தேசித்திருந்தார்.. உங்கள் வீட்டுக் கல்யாண வேலைகளைப் பார்க்கத்தான் வேலை மெனக்கெட்டு திருச்சியிலிருந்து கிளம்பி வந்தேனா என்று கேட்பதாக இருந்தார்.. அதை முன் கூட்டியே தடுத்து நிறுத்திவிட்ட நரேந்திரனின் புத்திசாலித்தனத்தை நினைத்தவருக்கு மனதுக்குள் சிரிப்பு அரும்பத்தான் செய்தது..

நரேந்திரன் அவரை சார் என்றுதான் அழைத்தான்.. திருமணத்திற்கு பின்னால் அது மாறிவிடும் என்றுதான் பூங்குழலியும்.. ஊர்மிளாவும் நினைத்தார்கள்.. அது மாறுவதற்குள்.. ஊர்மிளாவின் வாழ்க்கையே மாறிவிட்டதில்.. அவனது 'மாமா' என்ற அழைப்பை சோமசுந்தரத்தால் செவிமடுக்கவே முடியவில்லை..

"நரேன்.. ஆர் யு ஹியர்..?"

நுனிநாக்கு ஆங்கிலத்தில் அவனை அழைத்த அந்தப் பெண்மணியின் வயதை.. அவளின் தோற்றத்தை வைத்துக் கணக்கிட முடியவில்லை.. முடியை வாரி.. உயரமாக தூக்கி அமைத்துக் கொண்டையிட்டிருந்த பாணிக்கு அவள் சில

https://t.me/tamilpdfebooks

மணி நேரங்களையாவது செலவளித்திருக்க வேண்டும் என்று சோமசுந்தரம் நினைத்துக் கொண்டார்.. சிறு வயதுப் பெண்ணைப் போன்ற அதீத ஒப்பனையுடன் இருந்த அந்தப் பெண்மணியைப் போலவே அங்கிருந்த பெரும்பான்மையான பெண்மணிகள் இருந்தார்கள்.. அழைத்தவள் யாராக் இருக்கக் கூடும் என்ற நினைவில் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள.. நரேந்திரன் அறையை விட்டு வெளியேற முனைந்தான்..

'ஒருவேளை.. இந்த அலப்பறைதான் மாப்பிள்ளை யோட சித்தியோ..?' பூங்குழலியின் சந்தேகத்தை நரேந்திரனின்..


"வாங்க ஆண்ட்டி.." என்ற வரவேற்பு நிவர்த்தி செய்து வைத்தது..

'அப்பாடி.. இந்தம்மா மாப்பிள்ளையோட சித்தியில்லை..'

பூங்குழலி அறியவில்லை.. அந்த அதிநவின ஒப்பனையுடன் இருந்த பெண்மணிக்கு கள்ளமில்லாத வெள்ளை மனது என்பது..

நரேந்திரனின் சித்தியான அகல்யாவுக்கு அப்படி யில்லை.. எதை வைத்து எதை அடிக்க வேண்டும் என்ற வித்தையைக் கற்றுக் கைக்குள் வைத்திருக்கும் சாகச மனது அவள்மனது..

https://t.me/tamilpdfebooks



ஓடும் நதியினிலும்..
உன் தடத்தை பதித்துச் செல்லும்
அழகான ராட்சசி நீ....

அகல்யா.. அமைதி தவழும் முகத்துடன்.. சாந்த சொரூபியாக பூங்குழலியிடம் கை குவித்தாள்..

"வாங்க.. சம்பந்தியா ஆகப் போகிறோம்.. இப்பத்தான் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்க முடிஞ்சிருக்கு.. நரேன் பண்ணின வேலையில நாம ஒருத்தரையொருத்தர் பார்த்துக்க முடியாமலே போயிருச்சு.."

பாந்தமாக பேசியவள்.. அகலக் கரையிட்ட காஞ்சிபுரம் பட்டுப் புடவையில் ஒளிர்ந்தாள்.. உடலில் பூட்டியிருந்த வைர நகைகளின் ஒளிர்வில் அவளின் சாத்வீகம் கூடியிருப்பதைப் போல தோன்றியது..

"நாம நினைச்ச அளவுக்கு மாப்பிள்ளையோட சித்தி கடுமையானவங்க மாதிரி தெரியல.." பூங்குழலி சோமசுந்தரத்தின் காதைக் கடித்தாள்..

"நான் எங்கேடி நினைச்சேன்.. நீ நினைச்சிருப்ப.." அவர் கடுப்படித்தார்..

https://t.me/tamilpdfebooks

அளவான ஒப்பனையுடன்.. அதீதமான அலங்கார மில்லாமல்.. பட்டும் வைரமுமாக தனிக்களையுடன் இருந்த அகல்யாவிடம் பூங்குழலிக்கு மரியாதை ஏற்பட்டது..

"வணக்கம் சம்பந்தி.." அவள் பதிலுக்கு கை குவித்தாள்..

"சம்பந்தியா..? அண்ணின்னு கூப்பிடுங்க.. என்னதான் உயரத்தில இருந்தாலும்.. நமக்குன்னு சில பழக்க வழக்கங்கள் இருக்கு.. அதை மாத்த முடியுமா..?" மென்மையாக முறுவலித்தாள் அகல்யா..

"அதைச் சொல்லுங்க.." பூங்குழலியின் முகம் மலர்ந்து விட்டது..

அடுத்து "அண்ணா.." என்று அகல்யா கிளை கொண்டாட.. அவளுடைய அண்ணன் அந்த அறைக்குள் இருக்கிறாரா என்று சுற்று முற்றும் தேடிப் பார்த்தார் சோமசுந்தரம்..

அவரைத் தவிர வேறு எந்த ஆணும் அந்த அறைக்குள் இல்லை.. நரேந்திரன் நுனிநாக்கு ஆங்கிலத்தில் அழைத்த 'ஆண்ட்டி' யை பின் பற்றியிருந்தான்..

'வேற யாரை இந்தம்மா அண்ணான்னு பாசமலர் சாவித்திரியைப் போல அழைச்சு வைக்குது..?' அவர் யோசிக்க ஆரம்பிக்க..

"உங்களைத்தன் அண்ணா.." என்று அவரைத்தான் அண்ணனாக வரித்திருப்பதை உறுதி படுத்தினாள் அகல்யா..

https://t.me/tamilpdfebooks

'அண்ணனா..?'

சோமசுந்தரத்திற்கு அந்த விளிப்பை பிடிக்க வில்லை.. 'தம்பி' என்ற உறவு முறையைப் பற்றி அகல்யாவுக்குத் தெரியாதா என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டார்.. அகல்யாவுக்கு அண்ணனாகும் வயதா அவர் வயது என்று மனதுக்குள் கோபம் கொப்புளிக்க..

"சொல்லுங்கம்மா.." என்று அகல்யாவை தனக்கு அம்மாவாக்கி மனதை அமைதிப் படுத்திக் கொண்டார் சோமசுந்தரம்..

"நரேனுக்குத்தான் ஊர்மிளான்னு அந்த கடவுள் எழுதி வைச்சிருக்கார்.."

"அப்படியா..? உங்களுக்கு போஸ்ட் பண்ணினாரா..?"

இப்படிக் கேட்டு விட்டு சோமசுந்தரம் கையில் ரகசியமான பூங்குழலியின் கிள்ளலை வாங்கினார்.. அது வலித்த வலியில் பூங்குழலியின் கோபத்தின் பரிணாமம் வெளிப்பட்டது..

'அடிப்பாவி..! இப்படி பிராண்டி எடுத்துட்டாளே.. போன ஜென்மத்தில இவ பூனையாய் பிறந்திருப்பாளோ..'

பூங்குழலியின் முகம் அவள் புலிப்பரம்பரையில் பிறந்திருப்பாள் என்று அறிவித்தது..

'பெண்ணுக்கு கல்யாணம்.. மாப்பிள்ளையோட சித்திகிட்ட பேசற லட்சணமா இது..? கொஞ்சமாவது பெண்ணைப் பெற்றவரைப் போல பேசி வைக்கிறாரா..?

https://t.me/tamilpdfebooks

இந்தம்மா கேலி செய்கிறார்ன்னு கோவிச்சுக்கிட்டா என்ன பண்றது..?'

நல்ல வேளையாக அகல்யா அப்படியெல்லாம் கோபப்படவில்லை.. மாறாக மலர்ந்து சிரித்தாள்..

"அண்ணனுக்கு ஹியுமர் சென்ஸ் அதிகம் போல.."

அவள் சொன்ன வார்த்தைகளை ஆமோதித்த பூங்குழலிக்கு..

"இல்லையா அண்ணி..?" என்று அகல்யா தன்னை சின்னவாளாக்கிக் கொண்டதை ஆமோதிக்க முடிய வில்லை.. புன்னகையுடன் தலையசைத்து சமாளித்தாள்..

ஊர்மிளா குளித்து உடைமாற்றி ஒப்பனைக்கு அமர்ந்தாள்.. நிச்சய தாம்பூலத்திற்கான விலையுயர்ந்த பட்டுச்சேலை அவளுக்காக காத்திருந்தது.. அதை உடுத்தி மண்டபத்திற்கு அவள் அழைத்து வரப்பட்ட போது வைர அட்டிகையை மேடையில் அணிவித்து திருமணத்தை உறுதி செய்தாள் அகல்யா..

வைரத்தில் கலவரமான ஊர்மிளாவின் முகபாவனையில் அகல்யாவுக்குள் சிந்தனை எழுந்தது..

'வைரத்தை விரும்பாத பெண்ணும் இருப்பாளா..?'

ஊர்மிளா அப்படியிருந்ததில் அவளது குணாதி சியத்தைப் பற்றிய முதல் மதீப்பிடு அகல்யாவின் மனதில் விழுந்தது..

"இவதான் உன் நாத்தனார் ஊர்மிளா.."

https://t.me/tamilpdfebooks

தனது மகளை ஊர்மிளாவுக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள்.. கண்களில் லேசான அச்சரேகை இழையோட அர்ச்சனாவைப் பார்த்த ஊர்மிளாவின் மருண்ட பார்வையில் அவளைப்பற்றிய அடுத்த மதிப்பீடு அகல்யாவின் மனதில் பதிவானது..

'பயந்தவளா இருக்கிறா..'

மேடையில் நலங்கு முடிந்து எழுந்த ஊர்மிளா பூங்குழலியின் அறிவுரையின்படி அகல்யாவின் பாதம் தொட்டு வணங்கியபோது அவளைப் பற்றிய மூன்றாவது மதிப்பீடு அகல்யாவின் மனதுக்குள் வந்தது..

'மாமியார்ங்கிற பவரை மதிக்கிறா...'

அகல்யாவுக்கு அவையே போதுமானவையாக இருந்தன.. ஊர்மிளாவை நரேந்திரனின் வாழ்விலிருந்து அகற்ற அவள் அதிகமாகச் சிரமப்பட வேண்டியிருக்காது என்ற முடிவுக்கு அவள் வந்திருந்தாள்..

அலட்சியமாக.. நரேந்திரனின் ஒட்டு மொத்த காதலுக்கும் நானே சொந்தக்காரி என்ற இறுமாப்புடன்.. அகல்யாவை ஒரு பொருட்டாக நினைக்காத ஆணவக் காரியாக ஊர்மிளா இருந்திருந்தால் அகல்யா அவளைக் கண்டு பயந்திருப்பாளோ என்னவோ..

அப்படியில்லாமல்.. நேர்மையாக.. கணவனின் உறவினர்களை மதிக்கத் தெரிந்தவளாக.. உறவுகளுக்கு மரியாதை கொடுப்பவளாக ஊர்மிளா இருந்ததில் அகல்யாவுக்குள் உற்சாகம் ஊற்றெடுத்தது..

https://t.me/tamilpdfebooks

அதுநாள்வரை அவள் பார்த்திருந்த நரேந்திரனின் முகத்தில் சிரிப்பிருக்காது.. கடுமையும்.. கண்டிப்பும் மட்டுமே அங்கே தாண்டவமாடும்.. அவனுக்குச் சிரிக்கத் தெரியுமா என்ற சந்தேகம் அகல்யாவின் மனதில் நிலைத்திருந்தது...

அன்றைய நரேந்திரன் அதை உடைத்தான்.. நொடிக் கொரு முறை அவன் பார்வை ஊர்மிளாவைத் தேடி.. அவள்மீது படிந்து மீண்டது.. கண்கள் சந்தித்த அந்த நொடியில் அவர்களுக்கு இடையே தோன்றிய பார்வையின் பரிமாற்றத்தில் அகல்யாவின் மனதில் அக்கினி எழுந்தது..

நரேந்திரன் ஊர்மிளாவை பார்த்து ரகசியமாக கண் சிமிட்டினான்.. அகல்யாவின் விழிகள் விரிந்தன..

'இவனுக்கு கண் சிமிட்டக்கூடத் தெரியுமா..?'

அவளறிந்த நரேந்திரனுக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது.. அவன் பெண்களை என்னவோ.. 'ரோபா' போல பார்த்தபடி பேசிவிட்டு நகர்கிறவன்..

அவனா ஒரு பெண்ணின் கண்ணசைவில் கண்ணடிக்கிறான்..?

ஊர்மிளாவின் ரோஜா வண்ணக் கன்னங்கள் அவளின் வெட்கத்தைப் பறைசாற்றின.. அகல்யா முகம் மாறாமல் பெருந்தன்மையே வடிவமானவளாக பூங்குழலியிடம் அன்பு பாராட்டிக் கொண்டிருந்தாள்..

நலங்கு முடிந்தவுடன் திருமண மண்டபத்தில் கூட்டம் கொஞ்சமாக குறையத் தொடங்கியிருந்தது..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா மேடையை விட்டு இறங்கினாள்.. நரேந்திரன் அவளருகில் போனான்.. தேங்கி நின்றவளிடம்..

"இப்படி உட்கார்.." என்று ஒரு நாற்காலியைக் காட்டி விட்டு அருகில் அமர்ந்தான்..

தனிமையில் பேசாமல் திருமண மண்டபத்தில் மற்றவர்களின் கண் பார்வையில் அவர்கள் உட்கார்ந்து பேசியதில் விகல்பம் ஏதுமில்லாததால் சோமசுந்தரமும்.. பூங்குழலியும்.. அவர்களின் உறவினர்கள் சாப்பிட்டு விட்டார்களா என்ற பந்தி விசாரிப்பில் ஈடுபட்டபடி அங்கிருந்து அகன்று விட்டார்கள்..

அகல்யாவும் அதைப்போல நகர்ந்தாக வேண்டிவர.. அவள் அருண்குமாரிடம் திருமண ஏற்பாடுகளைப் பற்றி ஆழ்ந்து பேசுவதைப் போல பாவனை செய்தபடி தள்ளி அமர்ந்து கொண்டாள்.. அங்கொருவரும்.. இங்கொரு வருமாக இருந்த திருமண மண்டபத்தில் நரேந்திரனும்.. ஊர்மிளாவும்.. ஆளில்லாத சினிமாத் தியேட்டரில் படம் பார்க்க வந்திருப்பதைப் போல உணர்ந்தார்கள்..

அவர்களைச் சுற்றிக் கவிந்திருந்த இதமான அந்த தனிமையை இருவருமே விரும்பி நுகர்ந்து ரசித்தார்கள்..

இது போன்ற தனிமைகள் வெகு அரிதாகத்தான் வாய்க்கும்.. சந்தடிகளின் மத்தியில் கிடைக்கிற மௌனம் ஒரு வரம்..! கூட்டத்தின் மத்தியில் கிடைக்கும் தனிமை அதிலொரு விதம்..

மணப்பெண் அலங்காரத்தில் ஊர்மிளா ஜொலித்தாள்.. அதீத அழகுடன் இருப்பவளின் அழகு கூடியிருந்ததில் நரேந்திரனுக்குள் கிறக்கம் உண்டானது..

https://t.me/tamilpdfebooks

"கோபமாடி..?" மென்குரலில் வினவினான்..

"இல்லைன்னு சொல்ல மாட்டேன்.." என்றாள் ஊர்மிளா..

"அதானே.. சோமசுந்தரம் பெற்றிருக்கிற குலக் கொழுந்துக்கு கோபம் வராமல் எப்படியிருக்கும்...? ஊர்மி... நான் எதைச் சொல்லியிருந்தாலும்.. அதை.. உன் மீதிருக்கும் காதலினாலதான் சொன்னேன்டி.. புரிஞ்சுக்க.."

ஊர்மிளாவுக்கு புரிந்திருந்தது.. அவளின் கன்னம் சிவந்தது... மெதுவாக இமை உயர்த்தி அவனைப் பார்த்தாள்... அந்தப் பார்வை நரேந்திரனின் மனதை கொள்ளை கொண்டது..

அந்த முன்னிரவைத் தாண்டிக் கொண்டிருந்த இரவுப் பொழுதில் தோன்றிய அந்த மயக்கம் அவனை ஆட்டி வைத்தது.. அவன் முன்னால் அமர்ந்திருக்கும் பேரழகி, அவனது காதலி.. அவனுக்கு மனைவியாகப் போகிறவள்.. விடிந்தால் அவனுக்கும்.. அவளுக்கும்.. திருமணம் என்ற நிலையில் அவனுக்கு உரிமையானவளாக.. அதே சமயம்.. அன்னியமானவளாக.. கிடைத்தும், கிடைக்காத நிலையில் அவனை அலைக்கழித்துக் கொண்டிருப்பவள்...

அவளிடம் மின்னிய வசீகரத்தில் நரேந்திரன் ஈர்க்கப் பட்டான்..

முடிவேயில்லாமல் அந்த இரவுப் பொழுது நீண்டு கொண்டிருப்பதைப் போல அவனுக்குத் தோன்றியது.. அதை அவளிடம் சொன்னபோது அவள் வாய் பொத்தி சிரித்தாள்..

https://t.me/tamilpdfebooks

உறவினர்களை சாப்பிட விட்டு.. தூங்க அனுப்பி வைத்து விட்டு திரும்பி வந்த சோமசுந்தரமும்.. பூங்குழலியும் மகளின் அந்தச் சிரிப்பைப் பார்த்தார்கள்.. அவர்களின் மனம் நிறைந்தது..

"இந்தச் சிரிப்பு என்னென்னைக்கும் அவகிட்ட நிலைச்சு நிற்கனும்.." பூங்குழலி கண்கள் கசிய தெய்வத்திடம் வேண்டிக் கொண்டாள்..

"நிலைச்சு நிற்கும்டி.. நிலைச்சு நிற்காம எங்கே போயிரப் போகுது..? மனசுக்குப் பிடிச்சவரைக் கட்டிக்கப் போறா.. அவ முகத்தில சிரிப்பு வற்றாமத்தான் இருக்கும்.." உறுதியாக சொன்னார் சோமசுந்தரம்..

"நானும் இதைத்தான் நினைக்கிறேன்.."

நிறைவுடன் சொல்லியபடி திரும்பிய பூங்குழலியின் பார்வையில் சற்றுத்தள்ளி அமர்ந்திருந்த அகல்யா தென்பட்டாள்..

அவள் அவர்களைப் பார்க்கவில்லை.. அவளின் பார்வை சற்றுத் தொலைவில் அமர்ந்து சன்னக்குரலில் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த நரேந்திரனின் மீதும்.. ஊர்மிளாவின் மீதும்.. நிலைத்திருந்தது.. கடுத்த அவளின் முகபாவனையில் பூங்குழலி திடுக்கிட்டாள்.. சற்றுப் பொழுதுக்கு முன்னால் அவர்களிடம் இன்முகமாக பேசி உறவு கொண்டாடிய அகல்யாவின் முகமா இது..?

கண்கள் இடுங்கி.. புருவங்கள் சுளித்திருக்க.. கடுத்த முகபாவத்துடன் அந்த மணமக்களை எதிரிகளைப்

https://t.me/tamilpdfebooks

பார்ப்பதைப் போல பார்த்துக் கொண்டிருந்த அவளின் பார்வையில் சோமசுந்தரமும் முகம் மாறினார்..

"இந்தம்மா எதுக்காகடி இவங்க சொத்தே கொள்ளை போனதைப்போல இப்படி முறைச்சுக்கிட்டு இருக்காங்க..?"

"தெரியலைங்க..."

"சின்னஞ்சிறுசுக.. தனியாப் பேசனும்னு நினைக்காம.. மத்தவங்க கண்பார்வையிலே உட்கார்ந்து பேசுதுக.. அதை கண்காணிக்கிறதே அநாகரிகம்.. அதில இந்தம்மா முறைச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்காங்க.."

"அதுதான் எனக்கும் புரியலைங்க.."

"இப்பத்தான் நம்மகிட்ட வயித்தில இருக்கிற புள்ளை வழுக்கி விழுகிறதைப் போல சிரிச்சு.. சிரிச்சு.. சொந்தம் கொண்டாடிப் போசிக்கிட்டு இருந்தாங்க.. இப்ப என்னடான்னா.. பூலான்தேவி ரேன்ஜுக்கு போஸ் கொடுத்துகிட்டு உட்கார்ந்திருக்காங்க.. இவங்க நம்ம கிட்ட காட்டற முகங்களில எந்த முகம், இவங்க சொந்த முகம் பூங்குழலி..?"

பூங்குழலிக்கு மட்டும் அது தெரிந்திருந்ததா என்ன..? அவளே அகல்யா காட்டிய இரட்டை முகத்தில் கலவரமடைந்திருந்தாள்.. இதில் எந்த முகம்.. அகல்யாவின் சொந்த முகம்..? என்ற சோமசுந்தரத்தின் கேள்விக்கு விடையை எப்படிச் சொல்வாள்..?

"இவங்க குடும்பமே ஒரு தினுசாத்தாண்டி இருக்கு.."

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரம் சிந்தனையுடன் சொன்னார்.. பூங்குழலியின் மனதில் இருந்த சந்தோசமும்.. நிறைவும் அகன்று.. அங்கே சஞ்சலமும், துயரமும் குடி கொண்டன..

பெண்ணைப் பெற்றவர்கள் அனைவரும் அடையும் சஞ்சலமும், துயரமும்தான் இவை.. இவற்றை உணராத பெண்ணைப் பெற்றவர்கள் இருக்க முடியாது.. திருமணம் முடிவாகும் வரை சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் மாப்பிள்ளையைப் பெற்ற மகராசி.. திருமணம் முடிந்த அடுத்த நொடியில் முகம் மாறிப் போவது ஏன் என்ற மர்மத்தை அதுநாள்வரை அறியாதவர்கள் அவர்கள்.. பெற்று வளர்த்த மகளை முகமூடியின் பின்னால் ஒளிந்திருக்கும் முகம் எத்தகைய முகம் என்பதை அறியாமல் தாரை வார்த்துக் கொடுக்க நேரிடும் கொடுமையில் துயரப் பெருங்கடலில் வீழ்பவர்கள் அவர்கள்..

ஊர்மிளாவின் முகச்சிரிப்பு நிலைத்திருக்க வேண்டுமே என்ற கவலைக்கு ஆளானாள் பூங்குழலி..

“என்னங்க..” அவளின் குரல் நடுங்கியது..

“நீ எதை நினைச்சுப் பயப்படறன்னு எனக்கும் புரியுது பூங்குழலி.. இதில நம்மளாலே எதுவும் செய்ய முடியாது.. ஒதுங்கி நின்னு வேடிக்கை பார்க்கத்தான் முடியும்..” சோமசுந்தரம் பெருமூச்சு விட்டார்..

“அவ நம்ம பொண்ணுங்க..”

https://t.me/tamilpdfebooks

"இல்லைன்னு யாரு சொன்னதுடி..? ஆனா.. அவ மேல நமக்கிருக்கிற உரிமையும், அதிகாரமும் இப்ப நரேந்திரனின் தோளுக்கு இடம் மாறியாச்சு.. இனிமே ஊர்மிளாவின் மேலே நம்மளைவிட அவருக்குத்தான் அதிகமான உரிமையிருக்கு.."

"அப்ப.. பெண்ணைப் பெத்தவங்க தள்ளித்தான் நிக்கனுமா..?"


"நிச்சயமாய்.."

"அவளுக்கு ஏதாச்சும்.."

பூங்குழலியால் சொல்ல வந்ததை சொல்ல முடிய வில்லை.. அவளின் தாய்மனம் நடுங்கியது.. முன்பின் தெரியாத நரேந்திரன் வீட்டோடு மாப்பிள்ளையாக அவர்களின் கண்பார்வையில் இருப்பானென்ற நினைவிருந்த போது அவள் மனதில் பயமிருக்கவில்லை.. மகளின் வாழ்வை அருகிலிருந்து பார்க்கப் போகும் நிம்மதி இருந்தது..

இப்போது நிலைமை மாறி.. மகளை முன்பின் தெரியாத மனிதர்களின் மத்தியில் விட்டுவிட்டு.. திருமணம் என்ற பெயரில் பிரிந்து செல்ல வேண்டிய நிலை வந்தபோது அவள் மனதில் அச்சம் சூழ்ந்தது..

https://t.me/tamilpdfebooks



என் மனதில் முள்ளை வைத்து..
பிரிந்துபோகும் சொல்லை வைத்த..
அழகான ராட்சசி நீ....

யதேச்சையாக திரும்பிய அகல்யா அவர்களைப் பார்த்து விட்டாள்.. நொடிப் பொழுதில் அவள் முகத்தில் பூத்து நின்ற மலர்ந்த புன்னகையில் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சூன்யக்காரியைப் போல பார்த்துக் கொண்டிருந்த தேவமாது இவள்தானா என்று பூங்குழலி தடுமாறிப் போனாள்..

சோமசுந்தரத்திடம் அப்படியெல்லாம் தடுமாற்றம் வந்து விடவில்லை.. அவர் உன்னைப் போல எத்தனை பேரை பார்த்திருப்பேன் என்ற ரீதியில் மௌனப்பார்வையுடன் நின்றார்...

அதுவரை நரேந்திரனையும், ஊர்மிளாவையும் உறுத்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த அகல்யா வாத்சல்யத்துடன் அவர்களை திரும்பிப் பார்த்து விட்டு எழுந்து வந்தாள்..

"கிட்ட வருகிறாங்கங்க.." பூங்குழலி பயந்தாள்..

"வந்து என்ன செய்யப் போறாங்க..? உன்னைத் தூக்கி விழுங்கப் போகிறாங்களா..? பயப்படாம நில்லு

https://t.me/tamilpdfebooks

பூங்குழலி.. அச்சமே நரகம்.. இந்த சோமசுந்தரத்தோட பெண்டாட்டி அச்சப்பட மாட்டா.."

"ஆனா.. ஊர்மிளாவோட அம்மா அச்சப்படுவா.."

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோதே அகல்யா அவர்களை சமீபித்து விட்டாள்.. அவளின் புன்னகை விரிந்தது..

"பாருங்க இவங்களை.. சாப்பிடப் போகனும்ங்கிற நினைப்பில்லாம பேசிக்கிட்டு இருக்காங்க.." குறை பட்டாள்..

"எவங்க..?" சோமசுந்தரம் சுற்று முற்றும் பார்த்தார்..

"அண்ணனுக்கு எல்லாமே ஜோக்தான்.." அகல்யா சிணுங்குவதைப் போல சொன்னாள்..

'கொடுமை..' சோமசுந்தரம் ஆற்ற மாட்டாமல் பூங்குழலியைப் பார்த்தார்.. அவள் அதைப்பற்றியெல்லாம் கண்டு கொள்ளாமல் ஊர்மிளாவைப் பற்றிய கவலை யோடிருந்தாள்..

'இந்தம்மா வயசுக்கு.. இவங்களுக்கு நான் அண்ணன்ங்கிறதே ஜோக்தான்.. இதில தனியா வேற ஜோக் வேணுமா..?'

"அவங்கன்னா.. நம்ம பிள்ளைகள் அண்ணா.." தேனொழுக அகல்யா பேசினாள்..

"ஓ.. நீங்க மாப்பிள்ளையையும், ஊர்மிளாவையும் சொன்னீங்களா..?" என்றார் சோமசுந்தரம்..

https://t.me/tamilpdfebooks

"வேற யாரைச் சொல்லியிருப்பேன்னு நீங்க நினைக்கறிங்க..?" அகல்யா அப்பாவி போல கேட்டாள்..

இதற்கு அவள் சூனியக்காரியைப் போலவே முகத்தை வைத்திருக்கலாம் என்று சோமசுந்தரத்திற்குத் தோன்றியது..

அவளிடம் சொன்னால்.. ஆஹா.. அதற்கென்ன அண்ணா (?) என்று கேட்டுக் கொள்ளவா போகிறாள்..? என்ற ஞானோதயம் வந்த காரணத்தினால் அவர் லேசாக தலையை அசைத்து வைத்தார்..

"பாருங்களேன்.."

'எதைப் பார்க்க..?'

"நானும் அப்போப்பிடிச்சு இவங்களைப் பார்த்துக் கிட்டு இருக்கேன்.."

'அதைத்தான் நாங்க பார்த்தோமே..'

"இவங்க பேசிக்கிட்டே இருக்காங்க.."

'அதில உங்களுக்கென்னம்மா பிரச்னை..?'

"நிறுத்தின பாடாய் இல்லை.."

'ஓ..! உங்களுக்கு அந்த ஐடியா வேற மனசில இருக்கா..?'

"நானும் இப்போ பேச்சை முடிச்சுக்குவாங்க.. அப்போ பேச்சை முடிச்சுக்குவாங்கன்னு காத்துக்கிட்டு இருக்கேன்.."

'உங்களுக்கேன்ம்மா அந்த வேலை..? அவங்க வயிறை அவங்க பார்த்துக்க மாட்டாங்களா..? நீங்க உங்க

https://t.me/tamilpdfebooks

வயிறைப் பார்த்துக்கிட்டு சாப்பிடப் போக வேண்டியது தானே..?'

"பார்க்கிறவங்க என்ன சொல்வாங்க..?"

'எதைப் பார்க்கிறவங்க..?'

"என்னடா.. மாப்பிள்ளைக்கு அம்மாவாய் இருந்துக்கிட்டு.. பெண்ணையும், பையனையும் சாப்பிட அழைச்சுக்கிட்டுப் போகாம அவங்களை பேசவிட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கான்னு சொல்லிற மாட்டாங்களா..?"

அதற்கு மேலும் 'மைண்ட் வாய்ஸ்' கொடுக்க முடியாத சோமசுந்தரம் நேரடிப் பேச்சுவார்த்தையில் இறங்கி விட்டார்..

"யார் சொல்வாங்க..?"

"பார்க்கிறவங்கதான்.."

"யாரும் இங்கே பார்க்கலையே.. நாங்க வந்தப்ப நீங்கதான் ஊர்மிளாவையும்.. மாப்பிள்ளையையும் பார்த்துக் கிட்டு இருந்தீங்க.."

சோமசுந்தரத்தின் பேச்சில் அகல்யாவின் முகம் கருத்து.. உடனடியாக மலர்ந்த நிலைக்கு வந்தது..

"அண்ணனுக்கு இதிலும் ஜோக்தான்.."

அவள் அதையும் நகைச்சுவையாக்கி சிரித்ததில் பூங்குழலியின் மனதில் பயம் மிகுந்தது.. அகல்யாவின் புன்னகை சாதாரணப் புன்னகையாக இல்லாமல்..

https://t.me/tamilpdfebooks

சாகசப் புன்னகையாக இருந்ததில் அவளின் அடிவயிறு கலங்கியது..

"அவங்கபாட்டுக்கு பேசிக்கிட்டு இருக்காங்க.. நாம அதில குறுக்கிட்டா நல்லா இருக்காது.. வயிறு பசிச்சா அவங்களே சாப்பிட வரப் போறாங்க.. நீங்க உட்காருங்க.."

சோமசுந்தரம் சாப்பிடப் போகாமல் அங்கேயே உட்கார்ந்து அகல்யாவுக்கும் ஒரு சேரைக் காட்டியதில் அவளின் கடுப்பு அதிகரித்தது.. அவளால் நரேந்திரனும், ஊர்மிளாவும் தனித்துப் பேசிக் கொள்வதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை.. அதை சோமசுந்தரம் தம்பதியினரின் முன்னால் காட்டிக் கொள்ள முடியாமல் கடனே என்று உட்கார்ந்தாள்.. அந்தச் சமயம் பார்த்து அருண்குமார் அந்தப் பக்கம் வந்தான்..

"அருண்.." ஆனந்தமாய் அழைத்தாள்..

அருண்குமார் அவர்களின் பக்கத்தில் வர..

"என் மகன்.." என்று பெருமையுடன் சொன்னாள்..

"ஓ.. இவர்தான் நீங்க பெத்த மூத்த மகனா..?"

சலனமில்லாமல் சோமசுந்தரம் கேட்ட கேள்வியில் அகல்யாவின் முகம் பயங்கரமாக மாறியது.. இப்போது அவள் பழைய மலர்ந்த முகமூடிக்குத்திரும்ப சில நிமிடங்களாகின.. அவள் தன்னை சரிப்படுத்திக் கொள்ளும் வரையில் நிதானமாக காத்திருந்தார் சோமசுந்தரம்..

"இவன் நரேந்திரனின் தம்பிங்க.. நரேன்தான் எனக்கு மூத்தமகன்.."

https://t.me/tamilpdfebooks

கவனமாக 'பெற்ற மகன்' என்ற வார்த்தையைத் தவிர்த்தாள் அகல்யா..

"அப்படிங்களா..?" சோமசுந்தரத்தின் பார்வை அருண்குமாரை அளவெடுத்தது..

அகல்யாவின் ஜாடையிலிருந்த அவன் சிநேகிதமாக சிரித்தான்.. பொய் முகமூடியில்லாத அந்த இணக்கமான சிரிப்பில் அவருக்குள் ஆச்சரியம் வந்தது.. அகல்யாவின் வயிற்றில் பிறந்த மகன் எப்படி பொய்மையில்லாத இயல்போடு இருக்கிறான்..?

"வணக்கம் மாமா.." என்றான் அருண்குமார்..

"வணக்கம் தம்பி.." மனதார சொன்னார் அவர்..

"அருண்.. அங்கே பாரு.. உன் அண்ணன் சாப்பிட மறந்து உட்கார்ந்துக்கிட்டு இருக்கிறதை.. போய் சாப்பிடக் கூப்பிட்டுக்கிட்டு வா.." என்றாள் அகல்யா..

"புரிஞ்சுதான் பேசறிங்களா அம்மா..?"

அருண்குமார் தாயை அதட்டியதில் பூங்குழலிக்கு ஆச்சரியம் வந்தது..

"அண்ணனே.. அண்ணி கூடப் பேச இப்பத்தான் சான்ஸ் கிடைச்சிருக்குன்னு உட்கார்ந்திருக்கிறார்.. இப்பப் போய் அங்களை டிஸ்டர்ப் பண்ணச் சொல்றீங்களே.. அவங்களுக்கு பசியெடுத்தா சாப்பிட வரமாட்டாங்களா..?"

"இப்ப நீதான் புரியாம பேசற அருண்.. விடிந்தால் கல்யாணம்.."

https://t.me/tamilpdfebooks

"அதுக்கு..?"

"உன் அண்ணன் ரெஸ்ட் எடுக்க வேணாமா..?"

"கல்யாணம்ன்னு வந்துட்டாலே யாராலேயும் ரெஸ்ட் எடுக்க முடியாது.. இன்னைக்கான ரெஸ்டை இனிமே வரப் போகிற நாள்களில எடுத்துக்குவாரு.. நீங்க கவலைப் பட்டுக்காதீங்க.."

"சாப்பிட லேட்டாகுதேடா.."

"ஊஹீம்.. நீங்க மணி பார்க்கலைன்னு நினைக்கிறேன்.. அதிக நேரமாகலை.. இன்னும் நிறைய நேரமிருக்கு.. அண்ணன் பேசி முடிக்கட்டும்.. தானாய் அவர் எழுந்து வருகிற வரைக்கும் யாரும் அவரை நெருங்கக் கூடாது.."

தாயின் கட்டளையை மறுத்துவிட்டுப் போன அருண் குமாரின் செய்கையில் அவன் மீது சோமசுந்தரத்திற்கும், பூங்குழலிக்கும் மதிப்பு வந்தது.. அவர்களின் முன்னிலையில் மகன் அவளின் கட்டளையை நிராகரித்து விட்டதில் தோல்வியுணர்வை உணர்ந்தாள் அகல்யா..

அதை உணராதவர்கள் போல இயல்பாக அவளுடன் பூங்குழலியும், சோமசுந்தரமும் பேசிக் கொண்டிருந்தார்கள்..

அடுத்து.. அர்ச்சனா அகல்யாவின் பார்வைக்கு தட்டுப்பட..

"அர்ச்சனா.." என்று அழைத்தாள் அவள்..

அவளும் பக்கத்தில் வந்தாள்.. பூங்குழலியிடம் சொந்தமான சிரிப்புடன்..

https://t.me/tamilpdfebooks

"சாப்பிட்டுட்டீங்களா ஆண்ட்டி..?" என்று வினவினாள்..

"அவங்க எங்கே சாப்பிட்டாங்க..? எல்லாம்.. உன் அண்ணனும் அண்ணியும் செய்கிற வேலை.. அவங்க ரெண்டு பேராலே நாங்க மூன்று பேரும் சாப்பிடாம உட்கார்ந்திருக்கிறோம்.."

அகல்யா அவர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டதில் பூங்குழலிக்கு தூக்கிவாரிப் போட்டது.. அவள் கலவரத்துடன் சோமசுந்தரத்தைப் பார்க்க.. அவர் பொறுமையாக இருக்கச் சொல்லி சைகை செய்தார்..

அகல்யாவின் நாடகத்தை பார்க்கப் பார்க்க.. அவருக்குள் கோபம் பெருகியது.. இது போன்ற சாகசங்களை அவருக்குப் பிடிக்காது.. எதுவாக இருந்தாலும் நேருக்கு நேராக பேச வேண்டும் என்ற கொள்கையை உடையர் அவர்.. நரேந்திரனும், ஊர்மிளாவும் மெதுவாக பேசிவிட்டு வரட்டும்.. அவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று அவரும் பூங்குழலியும் சொல்லிக் கொண்டிருக்க.. அவர்கள் பேசிக் கொண்டிருப்பதினால் தான் அவரும், பூங்குழலியும் சாப்பிடாமல் உட்கார்ந்திருக் கிறார்கள் என்று கொஞ்சம் கூடத் தயக்க மில்லாமல் அகல்யா சொல்லிக் கொண்டிருக்கிறாளே.. அந்த வார்த்தைகளையும்.. அவரையும், பூங்குழலியையும் வைத்துக் கொண்டு சொன்ன அசாத்திய துணிச்சலில் பூங்குழலியின் முகம் வெளுத்து விட்டது..

https://t.me/tamilpdfebooks

"அண்ணனும்.. அண்ணியும் செய்கிற வேலையா..? அப்படி அவங்க என்ன வேலையைச் செய்தாங்கம்மா..?"

"அங்கே பாரு.."

அகல்யா சுட்டிக் காட்டிய திசையில் திரும்பிப் பாத்தவள்..

"பேசிக்கிட்டுத்தானே இருக்காங்க..?" என்றாள் குழப்பமாக..

"சாப்பிடாம பேசிக்கிட்டு இருக்காங்கடி.." என்றாள் அகல்யா..

"ஸோ வாட்..? அவங்களுக்கு வயிறு பசிச்சா சாப்பிடப் போறாங்க.. அதுக்காக நீங்க மூணுபேரும் சாப்பிடாம உட்கார்ந்திருக்கீங்களா..? குட் ஜோக்..! முதலில் ஒன்னைத் தெரிஞ்சுக்கங்க.. அண்ணனும் அண்ணியும் மறைவாகப் போய் பேசலாம்ன்னு நினைக்காம நம்ம கண்ணுக்கு முன்னாலே உட்கார்ந்து பேசறதே பெரிய விசயம்.. அது அவங்க நமக்குக் கொடுக்கிற மரியாதை.. அதைக் கண்காணிச்சுக்கிட்டு உட்காராம பெரியவங்க நீங்கள்ளாம் கண்டும் காணாததைப் போல விலகிப் போகிறதுதான் நாகரிகம்.. அதுதான் நீங்க அவங்களுக்குக் கொடுக்கிற மரியாதை.. வெறும் பேச்சுக்குக்கூட இங்கே 'தடா'வா..? ஏன் அங்கிள்.. நீங்களுமா இப்படி..? அம்மாவுக்குத்தான் இங்கிதம் தெரியலை.. நீங்களாவது எடுத்துச் சொல்லக் கூடாதா..? அதை விட்டுட்டு இவங்ககூட கூட்டணி போட்டுக்கிட்டு இருக்கீங்க.."

https://t.me/tamilpdfebooks

அர்ச்சனாவின் பேச்சில் பூங்குழலிக்கு போன உயிர் திரும்பி வந்ததைப் போல இருந்தது.. பரவாயில்லையே என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

"நான் எங்கேம்மா உங்கம்மாவோடு கூட்டணி போட்டேன்..?" என்று சோமசுந்தரம் சொன்னதும் அகல்யாவின் முகம் கருத்து விட்டது..

பெண்ணைப் பெற்றவர்.. சம்பந்தகார அம்மாவைக் காட்டிக் கொடுக்க மாட்டார் என்று அவள் கணக்குப் போட்டிருந்தாள்.. அவள் பொய்யே சொன்னாலும்.. அதை மறுத்துப் பேசுவது மரியாதையாக இருக்காது என்ற எண்ணத்தில் அவர் மௌனமாக இருந்து விடுவார் என்பது அவளின் எண்ணம்.. பல தருணங்களில் இதுபோன்ற சாதுர்யமான கணக்குள் சரியாக குறிபார்த்து அடித்து வென்றிருப்பதை அவள் கண்கூடாக கண்டிருக்கிறாள்.. வெல்வதற்காக அவள் கையாளும் யுக்திகளில் இதுவும் ஒன்றாக இருந்து வந்திருக்கின்றது.. எப்படி இல்லையென்று சொல்வது என்று வாய் மூடி மௌனமாக பழியை ஏற்றுக்கொள்ளும் வாயில்லாப் பூச்சிகளின் மத்தியிலே நான் எப்போது அப்படிச் சொன்னேன் என்று நேருக்கு நேராக கேள்வி கேட்டும் மனிதரை முதல் முறையாக அப்போதுதான் அவள் சந்தித்திருக்கிறாள்..

"நீ என்ன சொன்னயோ.. அதைத்தான் நாங்களும் உங்க அம்மாகிட்டச் சொல்லிக்கிட்டு இருந்தோம்.. அவங்க மெதுவா சாப்பிட வரட்டும்.. தொந்தரவு பண்ண வேண்டாம்ன்னு சொன்னேன்.. உங்க அம்மாதான் கேட்கலை.. அவங்க பேசிக்கிட்டு இருக்கிறதைக் கூட நாங்க கவனிக்கலைம்மா.. எங்க பக்கத்து சொந்தக்

https://t.me/tamilpdfebooks

காரங்களை சாப்பிட விட்டு.. படுக்க வசதி பண்ணிக் கொடுத்துட்டு இப்பத்தான் இங்கே வர்றோம்.. உங்க அம்மாதான் எங்களைக் கூப்பிட்டு அவங்க பேசிக்கிட்டு இருக்கிறதைக் காண்பிச்சாங்க..”

சோமசுந்தரம் சொல்லச் சொல்ல.. அர்ச்சனா.. தலையில் அடித்துக் கொண்டு அகல்யாவை பார்த்தாள்..

“ஏம்மா.. நீங்க மாறவே மாட்டிங்களா..?” கேள்வி கேட்டபடி அவள் நகர்ந்து விட..


‘என்ன ஒரு தைரியம்..!’ என்று சோமசுந்தரத்தை நினைத்து மனதுக்குள் வெகுண்டாள் அகல்யா..

‘கொஞ்சமாவது மாப்பிள்ளையோட அம்மாங்கிற பயமிருக்கா..? இந்த ஆளே இப்படின்னா.. இவரு பெத்து வளர்த்து வைச்சிருக்கிற மகள் எப்படியிருப்பாளோ.. கல்யாணத்துக்கு முன்னாடியே நரேந்திரனை வசியம் பண்ணி வைச்சிட்டா.. இனிமே.. காலமெல்லாம் அவ காலடியிலதான் நாங்க இருந்தாகனுமா..?’

அவளை அதிக நேரத்துக்கு சோதிக்காமல் நரேந்திரனும்.. ஊர்மிளாவும் எழுந்து விட்டார்கள்.. சிறு தலையசைவுடன் நரேந்திரன் போய் விட்டான்.. அகல்யாவைக் கவனிக்காமல் ஊர்மிளாவிடம் தலையை அசைத்து விட்டு அவன் போய் விட்டதில் தனது அதிகாரம் பறிபோவதை உணர்ந்தாள் அகல்யா..

அவளை கண்டு கொள்ளாமல் ஊர்மிளாவை நோக்கி சோமசுந்தரமும்.. பூங்குழலியும் விரைந்து விட்டதில் தான் தனிமைப் பட்டு விட்டதைப் போன்ற சினம் அவளுக்குள் உருவானது..

https://t.me/tamilpdfebooks



தித்திக்கும் வார்த்தை தந்தும்..
எத்திக்கும் எனைத் தேடவிட்ட
அழகான ராட்சசி நீ....

ஊர்மிளா தூங்க ஆரம்பித்தாள்... மணப் பெண்ணுக்கே உரிய பதட்டம் தந்த பரபரப்பான உணர்வில் தூக்கம் பிடிக்காமல் புரண்டு.. புரண்டு படுத்துக் கொண்டிருந்தவள் இமைமூடி உறங்க ஆரம்பித்ததும் அறையை விட்டு வெளியே வந்தாள் பூங்குழலி.. அவள் மனதில் பயம் சூழ்ந்திருந்தது.. அவளுக்கு கண்ணீர் விட வேண்டும் போல இருந்தது.. மலைபோல மனதில் அழுந்தும் பாரத்தை இறக்கி வைக்க வழி தெரியாமல் தவித்தாள் அந்தத் தாய்.. மகளின் எதிர்காலம் குறித்த மருட்சி அவளை வாட்டியது..

திருமண மண்டபத்தில் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன.. ஆள்கள் இல்லாத மண்டபத்தின் நாற்காலிகளில் ஒன்றில் வெளிச்சமில்லாத இருள் மூலையை தேர்ந்தெடுத்து அவள் உட்கார்ந்தாள்.. அவள் விழிகளில் இருந்து தாரை.. தாரையாக.. கண்ணீர் வடிய தொடங்கியது.. மெதுவாக சத்தமில்லாமல் அவள் விசும்பிக் கொண்டிருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"பூங்குழலி.." அவள் தோளில் சோமசுந்தரத்தின் கரம் படிந்தது..

அவளருகில் சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்தவர்.. இருளிலும் தெரியும் அவளின் கண்ணீர் தாரைகளின் வெள்ளி மின்னல் கோட்டினை உற்றுப் பார்த்தார்..

"அழுகிறயாடி..?"

"இல்லை.."

பூங்குழலி கண்ணீரைத் துடைக்க முயன்று தோற்றாள்.. நிற்காமல் அது பெருகியதில் சோமசுந்தரம் விசனம் கொண்டார்... மனைவியின் துயர் அவரை வாட்டியது..

"ஏண்டி..?" அதட்டினார்..

"இல்லைங்க.. சும்மா கொஞ்சநேரத்துக்கு.. மத்தவங்க முன்னாலே உட்கார்ந்து என் மகளும்.. மாப்பிள்ளையும் பேசிக்கிட்டு இருந்தாங்க.. அதையே தாங்கிக்க முடியாம இந்தம்மா அந்தப் பதறு பதறுச்சே.. நாளைக்கு கல்யாணமான பின்னாலே என் மகளை அவ புருசன் கூட சந்தோசமா வாழ விட்டிருமா..?"

"குழலி..!"

சோமசுந்தம் பதைத்தார்.. பூங்குழலியின் ஆழ்ந்த சிந்தனையில் அவருக்குள் பிரமிப்பு ஏற்பட்டது.. எதையெல்லாம் அவள் யோசித்திருக்கிறாள் என்று ஆச்சரியப்படும்போதே.. அவளது யோசனையின் பின்னால் ஒளிந்திருந்த உண்மை அவரை அரட்டியது..

https://t.me/tamilpdfebooks

"இந்தம்மா எதை வேணும்னாலும் வாய் கூசாம சொல்கிறவங்களா இருக்காங்கங்க.. இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே நாம சொல்லாத பேச்சை சொன்னதா நம்ம முன்னாடியே துணிச்சலா சொன்னவங்க.. ஊர்மிளாகிட்ட எப்படியெல்லாம் பேசுவாங்களோ.. இப்ப நடந்தது சின்னப் பேச்சு.. போகுதுன்னு விட்டிரலாம்.. இதுவே பெரிய பேச்சா இருந்துச்சுன்னா.. என்மக வாழ்க்கை நிம்மதியா இருக்குமாங்க..?"

அவள் தாய்..! பெண் மனதின் நுட்பம் நுண்ணிய உணர்வுகளையும் கண்டு சொல்லும் வல்லமை படைத்தது.. அவர்களின் உன்னிப்பு அத்தகையது.. பூங்குழலி வாழ்ந்து பார்த்தவள்.. அவள் மனதில் ஊர்மிளாவின் திருமண வாழ்வு எத்தகையதாக இருக்கும் என்ற பயம் எழுந்தது..

பின்னாள்களில் சோமசுந்தரம் அதை நினைத்துப் பார்த்திருக்கிறார்.. ஒரு சின்னச் சொல்லில்.. சின்ன சம்பவத்தில்.. அகல்யாவின் குணத்தை.. சாத்வீகமே வடிவான பூங்குழலி எப்படி கணித்தாள் என்று வேதனையுடன் ஆச்சரியமடைந்திருக்கிறார்..

அகல்யா ஊர்மிளாவை நிம்மதியாக வாழ விட மாட்டாள் என்பதை அன்றே யூகித்து சொன்னவள் பூங்குழலி..

"மனசைப் போட்டு அலட்டிக்காதே குழலி.."

"முடியலைங்க.. மனசு கிடந்து அடிச்சுக்குது.."

https://t.me/tamilpdfebooks

"அலையில்லாத கடல் வேணும்னு ஆசைப்பட்டா அது நடந்திருமா குழலி..? வாழ்க்கைன்னா எல்லமும்தான் இருக்கும்.. அதை எதிர்கொண்டு வாழப் பழகிக்கனும்.. என் மகளுக்கு இதையும் நான் கற்றுக் கொடுத்திருக்கிறேன் குழலி.. என் மகள் நேர்மையானவ.. வைராக்கியமானவ.. எதையும் எதிர்த்து நின்னு ஜெயிச்சுக் காட்டுவா.."

சோமசுந்தரம் உறுதியாகத்தான் சொன்னார்.. அதை முறியடித்துக் காட்டினாள் ஊர்மிளா.. அகல்யாவின் சதுரங்க ஆட்டத்தில் வெட்டப்பட்ட காயாக.. சிறகொடிந்த பறவையாக..

"அப்பா.." என்று அவர் காலடியில் விழுந்த ஊர்மிளாவுக்கு அகல்யாவின் சாகசத்தை எதிர்த்து நிற்கும் வல்லமையை தெரிந்திருக்கவில்லை..

நேர்மையாளர்களுக்கு.. அந்த நேர்மையே தளையாகி விடுகிறது.. அவர்களால் சாகசக்காரர்களை ஒருபோதும் முறியடிக்க முடிவதில்லை..

நேர்வழியில் போகிறவர்களுக்கு ஓர் வழிதான்... சாகசக்காரர்களுக்கு பல வழிகள்.. அவையும் குறுக்கு வழிகள்.. செல்ல நினைக்கும் இலக்கை மிக எளிதாக தொட்டு விடும் சாமர்த்தியம் கொண்டவர்கள் அவர்கள்.. பல நாக்கு அவர்களிடம் இருக்கும்.. எதையும் பேசி விட்டு அதை இல்லையென்று சொல்ல அவர்களால் முடியும்.. அதே போல இல்லாத எதையும் இருப்பதைப் போல பேசி விடவும் அவர்களால் முடியும்..

அதைத்தான் அகல்யாவும் ஊர்மிளாவுக்குச் செய்தாள்.. அதைவிட.. அவள் அப்படிச் செய்யக்கூடும்

https://t.me/tamilpdfebooks

ன்பதை யூகித்து பூங்குழலி பயந்தாளே.. அதுதான் தாய்மையின் சூட்சுமம்..

சோமசுந்தரம் அடிப்படையில் ஓர் போராளி.. போராட்டத்திலேயே தன் வாழ்நாளைக் கழித்தவர்.. கழிப்பவர்.. அவர் ஊர்மிளாவுக்கு அவரிடமிருந்த போர் குணத்தை கற்றுக் கொடுத்திருந்தார்.. அதனால் அவர் மகள் எதையும் எதிரித்து நின்று வென்று காட்டி விடுவாள் என்ற ஆழ்ந்த நம்பிக்கையை அவள் மீது வைத்திருந்தார்.. அந்த நம்பிக்கை பொய்த்துப் போக ஊர்மிளா அவரைத் தேடி திரும்பி வந்து விட்டபோது அவரும் கொதித்தார்.. ஏன் அவள் தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பிவிட்டாள் என்று கேட்டார்.. அவருடைய மகள் தோற்றுப் போய் திரும்பலாமா என்று சாடினார்..

கண்களில் உயிரைத் தேக்கி.. உடலில் உள்ள சக்திகளெல்லாம் வடிந்து போனவளாக சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஊர்மிளா சோகையாக விரக்திச் சிரிப்பைச் சிரித்தாள்..

“இது நேர்மையான யுத்தமில்லை அப்பா.. நீங்கள் போராடியது நேருக்கு நேராக.. இது அப்படியில்லை.. சூதையும்... வஞ்சனையையும்... பொய்யையும்... பித்தலாட்டத்தையும்.. எதிர்த்து நின்று போராட நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுக்கவில்லையே அப்பா.. சாசகத்தை சாகசத்தால்தான் வெல்ல முடியும்.. சூழ்ச்சியை சூழ்ச்சி தான் முறியடிக்கும்.. பொய்யை பொய்யால்தான் எதிர் கொள்ள முடியும்.. அம்மா சொன்ன மகாபாரத கதையில் இப்படித்தான் வருகிறது.. நீங்கள் அதைச் சொல்லிக்

https://t.me/tamilpdfebooks

கொடுக்கவில்லையே அப்பா.. சாகசம் எனக்குத் தெரியாது.. சூழ்ச்சியைப் பிடிக்காது.. பொய் சொல்ல வாய் வராது.. அதையெல்லாம் பிழைப்பாய் வைத்திருப்பவர்களிடம் தோற்று ஓடி வராமல் என்ன செய்யச் சொல்கிறீர்கள் அப்பா..? அதையெல்லாம் என்னைக் கற்றுக் கொள்ளச் சொல்கிறீர்களா..? வேண்டாம் அப்பா.. அதையெல்லாம் கற்றுக்கிட்டாத்தான் வெற்றி கிடைக்கும்ன்னா அப்படிப்பட்ட வெற்றியே எனக்கு வேண்டாம்..”

எதை நினைத்து பூங்குழலி பயந்தாளோ.. அதுவே பின்னாள்களில் நடக்கத்தான் செய்தது.. ஊர்மிளாவின் சோர்ந்த வார்த்தைகளில் மனது ரணமான போதும்.. சோமசுந்தரம் மகளை நிமிர்ந்து நிற்க வைத்தார்.. அவளது வைராக்கியத்துக்கு உரமூட்டினார்.. அவள் எதைச் செய்தாலும் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொண்டு அவளுக்குத் துணையாக நின்றார்..

இதெல்லாம் நடக்கப் போகிறது என்று அன்றைய நாளில் அவர்களுக்கு ஆருடம் தெரியுமா என்ன..?

பூங்குழலியின் அடிமனதிற்கு அது தெரிந்திருக்கிறது.. அதனால்தான் அவள்.. விடிந்தால் மகளுக்குத் திருமணம் என்ற நிலையில் தனிமையை நாடி வந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறாள்..

“இது வரைக்கும் வந்து விட்ட கல்யாணத்தை ஊர்மிளாதான் தீர்மானிச்சிருக்கிறா குழலி.. எந்த இடத்தில் பொய் இருக்கிறதோ.. அந்த இடத்தில் நான் இருக்க மாட்டேன்னு எடுத்துச் சொல்லியும்.. நரேந்திரனைத் தவிர வேற ஒருத்தருக்கு எப்படிப்பா கழுத்தை நீட்டுவேன்னு

https://t.me/tamilpdfebooks

கேட்டு என் வாயை அடைச்சிட்டா.. யாரையும் கல்யாணம் பண்ணிக்காம.. காலம் முழுக்க என் பொண்ணு கன்னியாவே நிற்கிறதுக்கு.. மனசுக்குப் பிடிச்சவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு போராட்டமான வாழ்க்கையையும் போராடி வாழ்ந்து பார்க்கட்டுமே.."

சோமசுந்தரம் சொல்வதிலும் ஒரு நியாயம் ஒளிந்திருப்பதை உணர்ந்தவளாக பூங்குழலி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மகளைத் தேடிச் சென்றாள்.. தூக்கத்தில் கனவு வந்தது போல.. ஊர்மிளா புரண்டு படுத்து கன்னம் குழி விழுக சிரித்தாள்.. அந்தச் சிரிப்பு நிலைக்க வேண்டும் என்ற வேண்டுதலை கடவுளிடம் வைத்தபடி பூங்குழலி உறங்க முயன்றாள்..

மறுநாள் மணமேடையில் நரேந்திரனின் அருகே அமர்ந்து அவன் கையால் தாலி வாங்கிக் கொண்ட ஊர்மிளாவை அணுகக் கூட அவர்களால் முடியவில்லை.. அடுத்தடுத்து வாழ்த்த வந்த வி.ஐ.பிக்களின் கூட்டத்தில் சோமசுந்தரமும்.. பூங்குழலியும் பின்னுக்கு தள்ளப்பட்டு தொலைந்து போனவர்களாக நின்றார்கள்.. அவர்களைக் கூட்டத்தில் தேடிய ஊர்மிளாவின் விழியசைவை கண்டு கொண்ட நரேந்திரன் அருண்குமாரை கூப்பிட்டு... சோமசுந்தரத்தையும்.. பூங்குழலியையும் மணமேடைக்கு அழைத்து வரச் சொன்னதினால் மட்டுமே அவர்களால் மணமக்களை ஆசிர்வதிக்க மீண்டும் மணமேடையில் ஏற முடிந்தது..

"தாரை வார்த்துக் கொடுத்திட்டா வேலை முடிஞ்சிருச்சா..? எங்களை ஆசிர்வதிக்க வேணாமா..?"

https://t.me/tamilpdfebooks

விளையாட்டைப் போல கேட்டபடி நரேந்திரன் ஊர்மிளாவுடன் அவளைப் பெற்றவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிக்கொண்டதைக் கண்ட அகல்யாவின் கண்களில் பொங்கி வழிந்த துவேசத்தில் பூங்குழலி அரண்டு போனாள்..

புகுந்த வீட்டிற்கு ஊர்மிளா கணவனுடன் போன போது சோமசுந்தரமும்.. பூங்குழலியும் கூடப் போனார்கள்.. அவர்கள் பக்கத்து சொந்தங்களை பஸ்ஸில் ஏற்றி பாதுகாப்பாக அவர்கள் திருச்சிக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருந்தபோது அங்கே வந்த அகல்யா..

"நீங்களும் போகலையா..?" என்று கேட்டாள்..

என்ன மாதிரியான கேள்வி இது..! பூங்குழலி சங்கடப் பட்டுப் போனாள்.. மகளைத் திருமணம் செய்து கொடுத்த கையோடு மண்டபத்திலிருந்து பெண்ணைப் பெற்றவர்கள் கிளம்பிப் போய்விட வேண்டுமா..?

"இல்லைங்க... நாங்க ஊர்மிளாவை அவளோட வீட்டில் விட்டுட்டு... நாளைக்குக் காலையிலே பெண்ணையும்... மாப்பிள்ளையையும் மறுவீட்டு விருந்துக்கு அழைச்சுட்டுத்தான் கிளம்புவோம்.."

அழுத்தம் திருத்தமாக சொன்னார் சோமசுந்தரம்.. அவர் சொன்ன அவர் மகளின் வீடு என்ற வார்த்தையில் அகல்யாவின் முகம் பயங்கரமாக கோணியது..

'என்ன நெஞ்சழுத்தம் இருந்தா என்னிடமே என் வீட்டை இந்த ஆளின் மகள் வீடு என்று சொல்வான்..?'

https://t.me/tamilpdfebooks

அவள் கொடூரமாக அவரைப் பார்த்தாள்.. அந்தப் பார்வையை பார்க்க பயந்த பூங்குழலியை முதுகுக்குப் பின்னால் இழுத்துக் கொண்டபடி அலட்சியமாக அகல்யாவை நேர்பார்வை பார்த்தார் சோமசுந்தரம்..

"மறு வீடா..? இது போல இடியாடிக் செண்டி மெண்டுக்கெல்லாம் எங்க லெவலில் இடமில்லை.. இதுக்குத்தான் நரேனிடம் கண்டிச்சு சொன்னேன்.. நம்ம ஸ்டேட்ஸீக்கு ஈக்குவலான இடத்தில பெண் பார்க்கலாம்ன்னு.. அவன் கேட்காமல்.. காதல்.. கத்தரிக்காய்ன்னு புதை குழியில மாட்டிக்கிட்டான்.. இதில வேற மறுவீடு.. விருந்துன்னு நீங்க கதை சொல்லிக்கிட்டு வர்றீங்க.. நரேனுக்கு இதெல்லாம் பிடிக்காது.. ஸோ.. நீங்களும் இதே பஸ்ஸில கிளம்பிருங்க.. இல்லைன்னா இடம் கிடைக்காம போயிரப் போகுது.."

சோமசுந்தரத்தின் அலட்சியப் பார்வையை தகர்க்கும் வார்த்தைகளைச் சொன்னாள் அகல்யா.. பூங்குழலி குன்றிப் போனாள்.. இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்ட பின்பும் மகளின் வீட்டிற்கு எப்படிப் போவது என்று மறுகினாள்.. சோமசுந்தரம் அகல்யாவின் வார்த்தைகளை வெகு அழகாக எதிர்கொண்டார்..

"ஸ்டேட்டஸைப் பத்திப் பேசறிங்க.. லெவலைப் பத்தியும் பேசறிங்க.. ஆனா.. பஸ்ஸில இடம் கிடைக்காமப் போயிரப் போகுதுன்னு லெவலை விட்டு இறங்கிப் பேசறிங்களே.. இதுதான் உங்கள் லெவல் போல.. உங்க ஸ்டேட்டஸ் பத்தி எங்களுக்கு அக்கறையில்லை.. எங்க

https://t.me/tamilpdfebooks

ஸ்டேட்டஸில எங்க பொண்ணும்.. மாப்பிள்ளையும் மறுவீட்டு விருந்துக்கு வந்துதான் ஆகனும்.."

"அதையும் பார்க்கலாம்.."

கொதிப்புடன் அகல்யா சொல்லிக் கொண்டிருந்த போதே..

"எதைப் பார்க்கப் போகிறிங்கம்மா..?" என்ற கேள்வியோடு ஊர்மிளா பின்தொடர அங்கு வந்து நின்றான் நரேந்திரன்..


தடாலடியாக அந்தர் பல்டி ஒன்றை அகல்யா அடித்த விதத்தில் பூங்குழலிக்கு மயக்கமே வந்து விட்டது..

"இல்லேப்பா.. நம்ம சம்பந்தியும்.. அண்ணியும் அவங்க பக்கத்து சொந்தக்காரங்களோட ஊருக்குக் கிளம்பறாங்க.. ஏன் அண்ணி.. உங்க பெண் வாழப் போகிற வீடு எப்படியிருக்குன்னு வந்து பார்த்துட்டுப் போங்கன்னு சொன்னேன்.. அதுக்கு அவங்க.. சொந்தபந்தம் கூட வந்திருக்காங்க.. அவங்களை விட்டுட்டு நாங்க மட்டும் வந்தா அதை அவங்களுக்கு நடக்கும் மரியாதை குறைவாய் நினைத்துக்குவாங்க.. எங்க மக இனிமேல் உங்க மக போல.. நீங்க பத்திரமா பார்த்துக்க மாட்டிங்களான்னு கேட்டுட்டாங்க.. இப்படிச் சொல்றவங்க கிட்ட.. இல்லையில்லை.. உங்க மகளை நான் பத்திரமா பார்த்துக்க மாட்டேன்னா சொல்ல முடியும்..? எனக்கு மூன்று பிள்ளைகள் அண்ணி.. உங்க மகளை நாலாவது பிள்ளையா நினைச்சுக்கிட்டு அதையும் பார்க்கலாம்ன்னு சொல்லிக்கிட்டு இருந்தேன் நரேன்.. ஊர்மிளாவோட

https://t.me/tamilpdfebooks

அப்பாவையும்.. அம்மாவையும் பத்திரமா இந்த பஸ்ஸில் ஏறி போயிட்டு வரச் சொல்லுப்பா.. இனிமே ஊர்மிளா நம்ம வீட்டுப் பொண்ணு.. அவளை நான் பார்த்துக்க மாட்டேனா..?”

அகல்யாவின் பார்வையில் மர்மம் பொதிந்திருந்தது..



ரோஜாவில் முள் இருந்தால்
ரோஜாவையே விலக்கி வைக்கும்
அழகான ராட்சசி நீ....

அது ஒரு அப்பட்டமான சவால்..! அதை அகல்யா சோமசுந்தரத்திற்கு அனுப்பி வைத்தாள்.. உன் மகளை.. என் கணவரின் மூத்த தாரத்தின் மகனுக்கு மணமுடித்து என் மருமகளாக வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறாயா..? இரு.. அவளை நான் ஒரு கை பார்க்காமல் விட மாட்டேன்..

இப்படியொரு அர்த்தம் பொதிந்த ‘அவளை நான் பார்த்துக்க மாட்டேனா..?’ என்ற சொற்றொடரில் பூங்குழலி துடித்துப் போய் விட்டாள்..

சோமசுந்தரம் புருவங்கள் சுருங்க.. எதிரே நின்ற அகல்யாவை கூர்ந்து பார்த்தார்.. எந்தவொரு தைரியத்தில் அவர் சொல்லாத வார்த்தைகளைச் சொல்லியதாக அவள் நரேந்திரனின் முன்னால் சொல்கிறாள் என்ற சினம்

https://t.me/tamilpdfebooks

அவருக்குள் எழுந்தது.. இதுபோன்ற செயலைச் செய்பவளின் முன்னால் அவள் சொன்னதை இல்லை யென்று சொன்னால் அது அவளைக் காட்டிக் கொடுத்ததைப் போல ஆகிவிடாதா என்று அவருடைய மனம் அவரைக்கேட்டது.. அப்படி அவர் காட்டி கொடுத்து விட மாட்டார் என்ற தைரியத்தினால்தானே அவ்வளவு தைரியமாக அவள் பொய் சொல்கிறாள் என்பதை அவருடைய அறிவு சுட்டிக் காட்டியது..

இதை வளர விடக்கூடாது என்று சோமசுந்தரம் முடிவெடுத்தார்.. இதுபோன்ற விசமச் செயல்களை துளிரிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும்.. இல்லையென்றால் இது தொடர்கதையாகி விடக் கூடிய அபாயம் இருக்கிறது..

“நான் எப்பங்க அப்படிச் சொன்னேன்..?” நிதானமாக அகல்யாவை நேருக்கு நேராகப் பார்த்துக் கேட்டார் சோமசுந்தரம்..

அவளுக்கு ‘சுரீர்’ என்று ஆகிவிட்டது.. சோமசுந்தரம் இடக்கு மடக்கானவர்தான்.. முதல்நாளே அர்ச்சனாவிடம் அவளை மாட்டி விட்டவர்தான்.. இருந்தாலும்.. அழையாத விருந்தாளியென்று அறிவுறுத்தினால் ரோசப்பட்டுக் கொண்டு வீட்டுக்கு வராமல் அப்படியே போய் விடுவார் என்று அவள் நினைத்திருந்தாள்.. என் வீட்டுக்கு வராதே என்று மறைமுகமாக சொல்லி விட்டால்.. அவள் முகத்தில் கூட விழிக்காமல் பஸ் ஏறி விடுவார்கள் என்றுதான் அவள் விடாமல் பேசி வைத்தாள்..

அதை அவர் முறியடித்து விட்டதில் முன்தினம் போல ‘என்ன தைரியம்..! இந்த ஆளு பொண்ணு வீட்டுக்காரனா..

https://t.me/tamilpdfebooks

இல்லை மாப்பிள்ளை வீட்டுக்காரனா..? என்று' மனதுக்குள் ஆத்திரப்பட்டாள்..

"நாங்க உயிருக்குயிரா வளர்த்த பொண்ணும்மா.. கல்யாணம் முடிச்சுக் கொடுத்த கையோட மண்டபத்தை விட்டு வெளியேற.. நாங்க என்ன முன்னே.. பின்னே தெரியாத மூணாம் மனுசங்களா..? பெத்தவங்கம்மா.. எங்க பொண்ணு எந்த வீட்டில.. எப்படியாப்பட்ட மனுசங்க மத்தியில வாழப் போகுதுன்னு தெரிஞ்சுக்காம பெங்களூரை விட்டு ஒற்றை அடியை எடுத்து வைக்க மாட்டோம்.. எங்க பொண்ணு இருக்கிற வீட்டோட அட்ரஸைக் கூடத் தெரிஞ்சுக்காம விட்டு விட்டு போறதுக்கு நான் என்ன கேணையனா..?"

சோமசுந்தரத்தின் கோபத்தில் நரேந்திரன் திரும்பி அகல்யாவை தீர்க்கமாக ஓர் பார்வை பார்த்தான்.. அவள் முகம் விழுந்து விட்டது.. சமாதானமாக எதையோ சொல்லப் போனவளை முகச்சுளிப்புடன் கையமர்த்தினான்..

"அருண்.. அம்மாவைக் கூப்பிட்டுக்கிட்டு போ.."

அவன் குரல் கொடுத்ததில் முகம் இறுக வந்த அருண்குமார் விழிகளால் அகல்யாவை அதட்டியபடி அழைத்துக் கொண்டு போனான்..

"ஐ ஆம் ஸாரி.." குற்ற உணர்வுடன் சொன்னான் நரேந்திரன்..

"பரவாயில்லைன்னு நான் சொல்ல மாட்டேன்.. எங்க கிட்டேயே இப்படிப் பேசறவங்க என் பொண்ணுகிட்ட எப்படிப் பேச மாட்டாங்க..? இதுக்குத்தான் நான் வெளியூரில் பெண் கொடுக்க வேண்டாம்ன்னு நினைச்சேன்.."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் முகம் கருத்து விட்டது.. புது மனைவியை அருகில் வைத்துக்கொண்டு அவன் கேட்க நேர்ந்த வார்த்தைகளில் கோபம் கொண்டவனாக.. அவன் அர்ச்சணாவிடம் எரிந்து விழுந்தான்..

"அம்மாவை தனியே விடாதேன்னு சொன்னேனில்ல.. கூட இருக்காம எங்கே போன..?"

"இல்லேண்ணா.. என் பிரண்ட்ஸ் வந்திருந்தாங்க.. அவங்ககூட பேசிக்கிட்டு இருந்ததில அம்மாவை மறந்திட்டேன்.."

"இப்பப்பாரு.. அவங்க ஊர்மிளாவோட பேரண்ட்ஸ் மனதை ஹர்ட் பண்ணியிருக்காங்க.. ஏன் அர்ச்சனா..? நீ கூட இருந்திருந்தா இதை அவாய்டு பண்ணியிருக்கலாமில்ல.."

"ஸாரிண்ணா.."

"ஸாரி சொன்னா எதுவும் சரியாகி விடாது.. புரிஞ்சுக்க.."

சோமசுந்தரத்தை ஜாடையாகப் பார்த்தபடி சொன்னான் நரேந்திரன்.. அவன் மன்னிப்புக் கேட்டானாம்.. அவர் அதை பொருட்படுத்தவில்லையாம்.. அவன் சொல்லிக் காட்டுவதை புரிந்து கொண்டார்சோமசுந்தரம்..

"சரியாகித்தானேங்க ஆகனும்..? எங்க பொண்ணை உங்க கையில பிடிச்சுக் கொடுத்திருக்கேன்.. எங்க பொண்ணுக்காக எதையும் பெரிசு பண்ணாம அனுசரிச்சுத் தானே ஆகனும்..? விடுங்க.. அவங்க மனசில என்ன இருக்கோ.. யாருக்குத் தெரியும்..?"

https://t.me/tamilpdfebooks

அகல்யாவின் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து வைத்திருந்த நரேந்திரனும் மௌனம் சாதித்தான்.. அர்ச்சனாவும் அமைதி காத்தாள்.. ஊர்மிளா சங்கடத்துடன் கணவனையும்.. நாத்தனாரையும் பார்த்தாள்..

பஸ் கிளம்பியது.. தன்பக்க சொந்தங்களுக்கு கையசைத்து விடை கொடுத்த ஊர்மிளாவின் முகத்தில் திருச்சியை விட்டுப் பிரிந்து வந்து விட்ட பிரிவுத் துயர் தெரிந்தது..

அதை அறிந்தவனைப் போல நரேந்திரன் அவள் தோளில் கை போட்டு இதமாக அணைத்துக் கொண்டான்..

"ஸ்ஸ்.. அப்பாம்மா.. அர்ச்சனா.." முகம் சிவக்க அவன் கைகளை விலக்க முனைந்தாள் ஊர்மிளா..

"இதையெல்லாம் நான் கண்டுக்க மாட்டேன் அண்ணி.." குறும்புடன் கண்சிமிட்டினாள் அர்ச்சனா..

மனைவிக்காக கையை விலக்கிய நரேந்திரன்.. கை அசைத்ததில் வரிசையாக கார்கள் வந்து நின்றன..

"அர்ச்சனா.. அத்தையையும்.. மாமாவையும் நம்ம வீட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டு வா.." நரேந்திரன் ஊர்மிளாவுடன் காரில் ஏறிக் கொண்டான்..

கார் நகர்ந்ததும்... சோமசுந்தரம் எதையோ தேடுவதைப் போல பாவனை செய்தார்..

"என்னங்க..?" என்றாள் பூங்குழலி..

"உன் மாப்பிள்ளை மாமான்னு சொன்னாரே.. யாரைச் சொன்னார்ன்னு தேடிப் பார்த்தேன்.." என்றார் சோமசுந்தரம்.

https://t.me/tamilpdfebooks

கணவரின் நையாண்டியில் பூங்குழலிக்கு சிரிப்பு வந்தாலும் அவள் சிரிக்கவில்லை.. சும்மாவே வெளுத்துக் கட்டுகிற மனிதர் அவள் சிரித்து வைத்தால் பிரித்து மேய்ந்து விடுவார் என்பதினால் அவள் அடக்கி வாசித்தாள்..

"பேசாமத்தான் வர்றீங்களா.. நம்ம மாப்பிள்ளையோட தங்கச்சியும் இங்கதான் நிக்குது.. தப்பா நினைச்சுக்கப் போகுது.." பயம் காட்டினாள் பூங்குழலி..

"ஊஹீம்.. அந்தக் கவலையே உங்களுக்கு வேணாம் அங்கிள்.. என்ஜாய் யுவர் ஷெல்ப்.. ஆக்சுவலா நீங்க போடற அதிரடி வெடி குண்டுகள் என்னை ரொம்பவே இம்ப்ரஸ் பண்ணுது.." ரசித்தபடி சொன்னாள் அர்ச்சனா..

"சொல்லிட்டியா..? இனி இவரை பிடிக்க முடியாது.. சும்மாவே சாமியாடுவார்.. நீ வேற சாம்பிராணி காட்டி வைச்சிட்ட.. ஆட்டம் அதிகமாகப் போகுது.."

பூங்குழலியின் கவலையில் அர்ச்சனா சிரித்தாள்.. அவளை பூங்குழலிக்குப் பிடித்திருந்தது.. அகல்யாவின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் இருவரும் தங்கமாக இருந்ததில் அவளுக்கு ஆச்சரியம்.. ஆச்சரியமாக இருந்தது.

அர்ச்சனாவுடன் அவர்கள் காரில் ஏறினார்கள்.. பெங்களூரின் மையப் பகுதியிலிருந்த நரேந்திரனின் பிரம்மாண்டமான பங்களா அவனுடைய செல்வச் செழுமையைக் காட்டியது..

வீட்டின் போர்டிகோவில் நின்றிருந்த அகல்யாவின் மமதையான பார்வை.. என்னைப் பார்.. என் செல்வத்தைப் பார் என்று பெருமை பேசியது..

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரம் அதை கண்டு கொள்ளாமல் இயல்பாக வீட்டுக்குள் நுழைந்தார்.. அதில் அகல்யாவின் கர்வம் அடி வாங்கியது..

‘இதுபோல வீட்டை இவன் கண்ணால் கூடப் பார்த்திருப்பானா..? என்னவோ.. என் ரேன்ஜீக்கு இதெல்லாம் கம்மி என்கிறதைப் போல.. என்ன தெனா வெட்டா உள்ளே வர்றான்..?’ அவள் மனம் குமைந்தது..

சோமசுந்தரம் வீட்டைச் சுற்றி இயல்பாக பார்வையை ஓட விட்டபடி கால்மேல் கால் போட்டு சோபாவில் உட்கார்ந்தார்.. அதில் அகல்யா மனதுக்குள் பொங்கினாள்.

‘இந்த வீட்டுக்கு நான் எஜமானியா..? இல்லை இவன் எஜமானனா..?’

கேட்க நினைத்ததை கேட்க முடியாமல் அவள் வீட்டில் இருந்த வேலையாள்களின் மேல் எரிந்து விழுந்தாள்..

“என்ன.. இங்கே தூசி இருக்குது..? இதோட மதிப்பு என்னான்னாவது உனக்குத் தெரியுமா..? போன ஜென்மத்தில புண்ணியம் பண்ணியிருக்க.. இந்த வீட்டுக்குள்ள காலடி வைச்சிருக்க.. அதை நினைச்சுப் பார்த்து எங்கே எப்படியிருக்கனும்னு அடக்க ஒடுக்கமாக இருந்து பழகு.. ஆட்டம் போடாதே.. அதுக்கெல்லாம் உனக்கு தகுதி பத்தாது..”

பேச்சு என்னவோ வேலையாளிடம்தான்.. ஆனால் அவளுடைய பார்வையெல்லாம் சோமசுந்தரத்தின்மீதே இருந்தது..

https://t.me/tamilpdfebooks

நல்லவேளையாக பூங்குழலி ஊர்மிளாவுடன் வீட்டுக்குள் போயிருந்தாள்.. சோமசுந்தரத்தின் செவிகளில் மட்டும் அகல்யாவின் பேச்சு விழுந்து வைத்தது.. பூங்குழலியின் செவிகளில் மட்டும் அந்தப் பேச்சு விழுந்திருந்தால் அந்த வீட்டின் பச்சைத் தண்ணீர்கூடக் குடிக்கக் கூடாது என்று வீட்டை விட்டு வெளியேறி யிருப்பாள்..

'அதுதானே இந்தம்மாவின் திட்டம்..!'

சோமசுந்தரம் யாருக்கு வந்த விருந்தோ என்று அகல்யா பேசும் வார்த்தைகளுக்கும் அவருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்ற ரீதியில் அலட்டிக் கொள்ளாமல் அவளைக் கத்தவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்..

கத்திக் கத்தி தொண்டை தண்ணீர் வற்றிப் போன அகல்யா தான் கத்திய கத்தலுக்கு யாதொரு பிரயோசனமும் இல்லையென்பதில் வெறியாகிப் போனாள்..

சோமசுந்தரம் சும்மாவும் இருக்காமல்..

"ஏம்மா.. உங்களுக்கு பிளட் பிரசர் இருக்கோ..?" என்று துக்கம விசாரித்து வைத்தார்..

"எதனாலே அப்படிக் கேட்கறிங்க அங்கிள்..?"

அகல்யாவிடம் ஒரு பாட்டில் குளிர் தண்ணீரைக் குடுத்தபடி விசாரித்தாள் அர்ச்சனா..

"வேலை செய்றவங்ககிட்டப் போய் இந்த அளவுக்கு கத்தறாங்களே.."

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரம் நினைத்திருந்தால் அதை சப்தம் போடுகிறார்களே என்று கேட்டிருக்கலாம்.. அவர் அப்படிக் கேட்கவில்லை.. அகல்யாவிடமெல்லாம் அதுபோன்ற நாகரிகத்தைக் கடைபிடிக்க முடியாது என்ற முடிவோடு அவர் கேட்டு வைத்ததில் உண்மையாகவே அகல்யாவின் ரத்த அழுத்தம் எகிறி விட்டது.. அதை உணர்ந்தவளாக...

"முதல்ல தண்ணியைக் குடிங்கம்மா.." என்று அதட்டினாள் அர்ச்சனா..

அகல்யா தண்ணீரை தொண்டையில் சரித்துக் கொண்டு ஆசுவாசமானதும் அடுத்து அவள் வாயை திறப்பதற்குள்.. அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்ட போய் விட்டாள் அர்ச்சனா..

'நல்ல பொண்ணு.. அருமையான வேலையைச் செஞ்சிருக்கு..' அர்ச்சனாவை மனதுக்குள் பாராட்டிக் கொண்டார் சோமசுந்தரம்..

புயலடித்து ஓய்ந்த அமைதி அந்த இடத்தில் இருந்ததில் அவருக்கு சிரிப்பு வந்தது.. எதனால் அகல்யாவுக்கு இந்த அளவுக்கு கோபம் வருகிறது என்று யோசிக்க ஆரம்பித்தார்.. காரணம் எதுவாக இருந்த போதிலும் ஒரு மனுசிக்கு இந்த அளவுக்கு பொடிப்புத்தி இருக்கக் கூடாது என்ற வெறுப்புணர்வு அவர் மனதில் படிந்தது..

"அங்கிள்.. உங்களுக்கு ரூம் ரெடியா இருக்கு.."

அருண்குமார் வந்து அவரை அழைத்துக் கொண்டு போனான்.. அவருக்கு கொடுக்கப்பட்டிருந்த அறையின்

https://t.me/tamilpdfebooks

அளவு.. திருச்சியிலிருந்த அவரது வீட்டின் பரப்பளவை ஒட்டி இருந்ததை கவனித்தவருக்கு இதனால்தான் அகல்யாவிற்கு இந்த அளவிற்கு தலைக்கனம் வந்திருக்கிறது என்று தோன்றியது..

அவருடைய பெட்டிகளை வேலையாள் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான்.. பூங்குழலி எங்கே என்று அவனிடம் கேட்கலாமா என்று நினைத்தவர்.. அந்த யோசனையை கைவிட்டார்.. குளியலறைக்குள் புகுந்து முகம் கழுவி உடை மாற்றியவர் கட்டிலில் படுத்து ஊர்மிளாவின் எதிர்காலத்தைக் குறித் யோசனையில் ஆழ்ந்தார்.. அப்படியே தூக்கம் கண்களைச் சுழற்றியதில் சொக்கிப் போனவராக தூங்கிவிட்டார்..

“என்னங்க.. எழுந்திருங்க..”

பூங்குழலியின் குரலில் எழுந்து அமர்ந்தார்.. அவள் கையில் காபிகப் இருந்தது.. அதற்குள் அவள் சுவாதீனமாக காபிக் கோப்பையை கொண்டு வரும் அளவிற்கு அந்த வீட்டில் பழகி விட்டதை நினைத்து அவருக்கு ஆச்சரியமாக இருந்தது..

‘இவ எப்படி அகல்யா வாயில விழுகாம தப்பிச்சா..?’

பூங்குழலி.. உடைமாற்றி.. லேசான ஒப்பனையுடன்.. வெளியே செல்வதற்குத் தயாரான தோற்றத்தில் இருந்தாள்.

“காபியைக் குடிச்சிட்டு சீக்கிரமா கிளம்புங்க..” என்றும் சொன்னாள்..

“அதிருக்கட்டும்.. அந்த அகல்யா எங்கே..?”

https://t.me/tamilpdfebooks

"மதியத்தில ரூமுக்குள்ள போனவங்கதான்.. இன்னும் ரெடியாகிக்கிட்டு இருக்காங்க.. ஊர்மிளாவுக்கு கூட அலங்காரம் முடிஞ்சிருச்சு.. அர்ச்சனாவும் கிளம்பியாச்சு.. இந்தம்மா இன்னும் கிளம்பலை.."

"ஓ.. அதனாலதான் நீ சுதந்திரமாக உலா வரயா..?"

"தெரியுதில்ல.. காபியைக் குடிங்க.."

சோமசுந்தரம் காபியைக் குடித்து விட்டு எழுந்தார்.. புருவங்களை உயர்த்தியபடி மனைவியிடம் விசாரித்தார்..

"எல்லாம் சரிடி குழலி.. எங்கே போக எல்லோரும் ரெடியாகிக்கிட்டு இருக்கீங்க..?"

"சரியாப் போச்சு போங்க.. இது கூடத் தெரியாம துங்கிக்கிட்டு இருந்தீங்களா..? நம்ம ஊர்மிளாவோட கல்யாண ரிசப்சன் நடக்கப் போகுது.."

"எங்கே..? அந்த மண்டபத்திலேயா..?"

"ஊஹூம்.. ஏதோ ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில நடக்கப் போகுதாம்.. பங்சனுக்கு சினிமா ஸ்டாரெல்லாம் வருவாங்களாம்.."

அவ்வளவு முக்கியமான விழா நடப்பதாக இருக்கும் போதா அவர்களை அந்த விழாவில் கலந்து கொள்ள விடாமல் ஊருக்கு அனுப்பி வைக்க அகல்யா முயற்சி செய்தாள்..?


"பார்த்தியாடி பூங்குழலி.."

"ம்ம்ம்.. எல்லாத்தையும் நினைச்சுப் பார்த்தாச்சு.. இனிமே இதைப்பத்தி பேசி பிரயோசனமில்லை..

https://t.me/tamilpdfebooks

நம்ம பொண்ணையும்.. மாப்பிள்ளையையும் மறுவீட்டு விருந்துக்கு அழைச்சிட்டு நாளைக்கே நாம ஊரைப் பாக்கக் கிளம்பிப் போயிரலாம்..”

பூங்குழலியின் கண்களில் கண்ணீர் திரையிட்டிருந்தது..



உன் சிற்றிடையில் - எனை
சிறை பிடித்த
அழகான ராட்சசி நீ....

அவர்களுக்குத் தெரியாது.. பெங்களூருக்கு வந்து திருமண மண்டபத்தில் நுழையும் வரை அவர்களுக்குத் தெரியாது.. நரேந்திரன் ஒரு கோடிஸ்வரன் என்பது..

அவன் இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தின் முதலாளியாக இருப்பானென்று அவர்களுக்குத் தெரியாது.. இவ்வளவு பெரிய.. பிரம்மாண்டமான மாளிகை போன்ற வீட்டிற்குச் சொந்தக்காரனாக இருப்பானென்று அவர்களுக்குத் தெரியாது..

இது அத்தனைக்கும் மேலாக.. அகல்யா போன்ற ஒரு சிற்றன்னையின் மகனாகவும் அவன் இருப்பானென்று அவர்களுக்குத் தெரியாது..

இவை எவையும் இல்லையென்று சொல்லித் தன்னை அடையாளமில்லாதவனாகக் காட்டிக் கொண்டு

https://t.me/tamilpdfebooks

தான் அவன் ஊர்மிளாவைக் காதலித்தான்.. எதுவும் இல்லாத அநாதையென்று சொல்லித்தான் அவளை பெண் கேட்டு சோமசுந்தரத்திடம் வந்து நின்றான்..

இப்படிப்பட்ட மாப்பிள்ளையை எந்தவித சொல்லிக் காட்டலும் இன்றி காருண்யத்துடன் ஏற்றுக் கொண்ட பரந்த மனது அவர்களுடையது..

அப்படிப்பட்ட மனம் கொண்டவர்களைத்தான் அகல்யா உரசிப் பார்க்கிறாள்.. பணத்துக்கு ஆசைப்பட்டு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டு.. அதையே சாக்காக வைத்து ஒட்டிக் கொள்ள முனைகிறார்கள் என்று ஜாடை பேசுகிறாள்..

"மனசெல்லாம் வலிக்குதுங்க.." பூங்குழலி விம்மினாள்..

"ஏய்ய்.. என்னடி இது..?"

"இல்லைங்க.. எனக்கு மனசே தாங்கலை.. இந்தம்மா பேசின பேச்சுக்கு நான் அப்பவே பஸ்ஸில் ஏறிப் போயிருப்பேன்.. ஊர்மிளாவை தனியே விட்டுட்டு எப்படிப் போறதுன்னுதான் பல்லைக் கடிச்சுக்கிட்டு பொறுமையா இந்த வீட்டு வாசப்படியை மிதிச்சிருக்கேன்.. பொண்ணு எந்த வீட்டில வாழ்கிறாங்கிற அட்ரஸ்கூடத் தெரியாம விட்டு விட்டுப் போக முடியுமா..?"

"இந்தம்மா இவங்க மகளை அப்படித்தான் விட்டு விட்டு வருவாங்க போல இருக்கு.. இவங்களும் ஒரு பொண்ணைப் பெத்து வைச்சிருக்காங்க.. அந்த நினைப்பில்லாம பேசறாங்க.."

https://t.me/tamilpdfebooks

"வேணாங்க.. மனது கஷ்டத்திலே சாபம் கொடுத்து ராதீங்க.. பாவம் அந்த அர்ச்சனாப் பொண்ணு.. இந்தம்மா வயித்திலே தப்பிப் பிறந்திருக்கு.. நம்ம பொண்ணுக்கு வாய்ச்சிருக்கிற மாமியாரைப் போல அந்தப் பொண்ணுக்கும் வாய்ச்சிர வேணாம்.. நல்ல வார்த்தையா சொல்லுங்க.."

"இவங்க சொந்த மாமியாரில்லைடி.. சின்ன மாமியார்.. நம்ம ஊர்மிளாவோட புருசனைப் பெத்தவங்களா இருந்திருந்தா.. கொஞ்சமாவது சம்பந்தின்னு நினைச்சுப் பார்த்திருப்பாங்கடி.. இங்கே அப்படியில்லையே.. எதுடா சாக்குன்னுல்ல தேடறாங்க.."

"ஊர்மிகிட்ட நான் எதையும் சொல்லலை.. நீங்களும் எதையும் சொல்ல வேணாம்.."

"ஆகட்டும்.. நீ மட்டும் தனியா அந்தம்மாகிட்ட மாட்டிராதே.. அவங்க பேசறதைத் தாங்கிக்க உன்னால முடியாது.."

"ம்ம்ம்.. நான் வருவேன்னு அந்தம்மா கொஞ்ச நேரம் உலாத்தி பார்த்தாங்க.. நான் ஊர்மிளாவை விட்டு நகரலை.. அதுக்கு மேலே உலாத்த முடியாம ரூமுக்குள்ள போயிட்டாங்க.. அதுக்கப்புறம்தான் நான் ஹால் பக்கமே வந்தேன்.."

"அவங்களைத்தான் அப்பவே அர்ச்சனா வந்து இழுத்துக்கிட்டு போயிட்டாளே.."

"அதுக்கப்புறமா.. நீங்க இங்கே வந்த பின்னாலே அவங்க ரூமை விட்டு வெளியே வந்து உங்களைத் தேடினாங்களே.. அது உங்களுக்குத் தெரியாதா..?"

https://t.me/tamilpdfebooks

"தெரியாதே.. தெரிஞ்சிருந்தா ரெஸ்ட் எடுக்காம அந்தம்மா கூட ஹோதாவில் இறங்கியிருப்பேனே.."

"நமக்கு எதுக்குங்க அதெல்லாம்..? நம்ம பொண்ணோட ரிசப்சனுக்கு நம்மள இருக்க விடக் கூடாதுன்னு திட்டம் போட்டு பேசினவங்க அந்தம்மா.. இப்படியெல்லாம் கூட மனுசங்க இருப்பாங்களா..? இவங்க கூடல்லாம் நாம மல்லுக்கு நிக்கனுமா..? நீங்க கிளம்புங்க.. ரிசப்சனுக்கு போக நேரமாச்சு.."

சோமசுந்தரம் யோசித்தார்.. அவர் என்ன யோசிக்கிறார் என்பதை பூங்குழலியால் புரிந்து கொள்ள முடிந்தது.. அதே யோசனைதான் அவளுக்குள்ளும் ஓடியது என்றாலும்.. பெற்றமனம்.. பெண்ணைத் தனியே விட மறுத்தது..

"கட்டாயம் நாம அங்கே போகத்தான் வேணுமா குழலி..."

"ஆமாம்..."

கண்ணீரை அடக்கிக் கொண்டு சொன்னாள் பூங்குழலி.. நிமிர்ந்து நின்று பழகியவளுக்கு அந்த நிலையில் மனம் வலிக்கத்தான் செய்தது.. அந்த வலியை மறைத்துக் கொண்டு உறுதியாக அவள் பேசினாள்..

"இப்ப நாம போகலைன்னா.. அந்தம்மா நினச்சதை நடத்திட்டதா ஆகிரும்.. நீங்கதானே சொன்னீங்க.. அந்தம்மா இதை ஒரு டெக்னிக்கா வைச்சிருக்காங்கன்னு.. அதை கண்டு பிடிச்சு சொன்ன நீங்களே இப்படிக் கேட்கலாமா..?"

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரம் சொன்ன வார்த்தைகளை வைத்தே அவரை மடக்கி விட்டாள் பூங்குழலி.. அவர் உடை மாற்றி தயாரானார்.. அவர்கள் ஹாலுக்கு வந்த போது.. ஊர்மிளா மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள்.. அவள் பின்னால் அர்ச்சனாவும் மற்ற உறவுப் பெண்களும் வந்ததில்.. என்னவோ.. அந்தக் காலத்து மகாராணி ஒருத்தி.. உப்பரிகையிலிருந்து இறங்கி வருவதைப் போல அந்தக்காட்சி இருந்தது.. ஊர்மிளாவின் ஒப்பனையும்.. வைர நகைகளும்... அவளின் தோற்றத்தையே மாற்றியிருந்தன..

"என்மக மகாராணியைப் போல இருக்கா.." பூங்குழலி பிரமிப்புடன் சொன்னாள்..

"ம்ம்ம்.. ஆனா.. மகாராணிகளின் வாழ்க்கையில் சிக்கல்கள் அதிகம் வரும் பூங்குழலி.. எளிமையான வாழ்க்கையில் கிடைக்கும் நிம்மதி அரண்மனை வாழ்வில் கிடைத்து விடாது.. இங்கே சுவர்களுக்கும் காதிருக்கும்.. சுதந்திரத்துக்கு இங்கே இடமில்லை.. முதுகில் எப்போதும் கத்திகளின் நுனிமுனைகள் நெருடிக் கொண்டிருக்கும்.. சிரித்துக் கொண்டே பழகுபவர்கள் முதுகில் குத்துவதையும் எதிர் கொள்ள வேண்டி வரும்.. சீசரின் கதை தெரியாதா..? அவன் கேட்ட 'நீயுமா புருட்டஸ்..?' என்ற கேள்வி எழுப்பும் மன அதிர்வு இன்று வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது குழலி.."

சோமசுந்தரம்.. மேடையில் பேசுவதைப் போல ஏற்ற.. இறக்கத்துடன்.. சொல் நயத்துடன் பேசினாலும் அதை மனதிலிருந்து பேசினார்.. அதிகமான வாசிப்பின்

https://t.me/tamilpdfebooks

அடையாளமாக அவரிடம் இதுபோன்ற சொற்கள் நயத்துடன் ஒன்று சேர்ந்து அருவிபோல அடிக்கடி கொட்டும்..

எப்போதும் கணவரின் இதுபோன்ற பேச்சுக்களில் பெருமிதப்படும் பூங்குழலி.. அன்று மனவேதனை கொண்டாள்..

உண்மை என்பது எப்போதுமே கசப்பையும்.. வேதனையையும் தருவதாகத்தானே இருக்கிறது..?

"ஏன் இப்படிப் பேசறிங்க..?"

"உண்மையைச் சொன்னேண்டி.."

"அதைத் தூக்கி உடப்பில போடுங்க.. மனசுக்கு கொஞ்சமாவது நிம்மதி வேணாமா..?"

"அப்ப.. உண்மைங்கிறது நிம்மதியை அழிக்கறதுன்னு சொல்ற..?"

"ஒன்னையும் சொல்லலை.. ஊர்மிளா வந்துட்டா.. உங்களுக்குப் புண்ணியமாப் போகும்... பேசாம இருங்களேன்.."

தாய்.. தந்தையின் அருகில் வந்த ஊர்மிளா அவர்களை வணங்கி எழுந்தாள்..

"நல்லா இரும்மா.." நெகிழ்வுடன் மகளை அணைத்துக் கொண்டாள் பூங்குழலி..

"தைரியமா இரு..." அவர் பாணியில் வாழ்த்துச் சொன்னார் சோமசுந்தரம்..

https://t.me/tamilpdfebooks

"உங்க பொண்ணாச்சே.. தைரியத்துக்கு என்ன குறைச்சல் இருக்கப் போகுது..? உங்க திமிரையும்.. தெனாவெட்டையும்.. சீதனமா கொடுத்திருப்பீங்கள்ல.. எங்க லெவலுக்கு சீதனமா தர வேற என்ன உங்ககிட்ட இருக்கப் போகுது..?" கேள்வி கேட்டபடி அகல்யா அங்கே வந்தாள்..

ஊர்மிளாவின் முகம் மாறியதில் அவள் கைவிரல்களைப் பிடித்து அழுத்தி.. அமைதிப் படுத்தும் எச்சரிக்கையை உணர்த்தினாள் பூங்குழலி.. இருந்தும் ஊர்மிளாவின் கைவிரல்கள் நடுங்கத்தான் செய்தன.. சுயமரியாதைக்கு பங்கம் வருவதை சகித்துக் கொள்ள முடியாமல் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள போராடுவதை பூங்குழலியால் புரிந்து கொள்ள முடிந்தது..

'ஊர்மிளா..' அவள் மனம் தவித்தது..

இதுபோன்ற மாளிகையில், மகாராணியைப் போல அவள் மகள் வாழவேண்டும் என்று அவள் ஆசைப் பட்டதில்லையே.. எளிமையான வாழ்வாக இருந்தாலும்.. மதிப்பு.. மரியாதையோடு, நிம்மதியாக மகள் வாழ வேண்டுமென்றுதானே அவள் ஆசைப்பட்டாள்..?

"என்ன.. இங்கே டிஸ்கசன் பலமாயிருக்கு.."

ஊர்மிளாவைப் பார்த்தபடியே பொதுவாக கேட்டபடி நரேந்திரன் அங்கே வந்தான்.. அழகு தேவதையாக நின்ற ஊர்மிளாவை விழுங்கி விடுவதைப் போல அவன் பார்த்து வைத்ததில் ஊர்மிளாவின் மன உணர்வுகள் தடம் மாறின.. அவள் வெட்கத்துடன் முகம் சிவந்தாள்.. மகளின்

https://t.me/tamilpdfebooks

கைவிரல்களில் நடுக்கம் குறைந்து விட்டதை உணர்ந்த பூங்குழலிக்கு நிம்மதி ஏற்பட்டது..

'மாப்பிள்ளை ஊர்மிளாவை பார்த்துக்குவார்..'

அந்த மாப்பிள்ளை கேட்ட கேள்வியைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் ஊர்மிளா அவனை விட்டுப் பிரிந்து பின்னாளில் தாய் தந்தையைத் தேடி ஓடி வந்தாள்..

அது நிகழும் என்பதை அறியாதவளாக பூங்குழலி தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டாள்..

'ஊர்மிமேலே அவருக்கு பிரியம் அதிகம்.. ஒருநாளும் அவளை விட்டுக் கொடுக்க மாட்டார்.. கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக்குவார்..'

மந்திரத்தை உருப் போட்டதைப் போல அவள் மனம் திரும்பத்திரும்ப இதையே உருப்போட்டது.. அதை ஆட்டிப் பார்ப்பதைப் போல அகல்யாவின் குரல் வெளிப் பட்டது..

"அதுவா நரேன்.. இங்கே ஊர்மிளா அவளோட அப்பாம்மாவைக் கண்டதும் காலில் விழுந்து எழுந்திருச்சா.. அதைப்போல நீயும் என்னைக் கண்டதும் காலில் விழுவேன்னு அருணும்.. அர்ச்சனாவும்.. ஊர்மிளாவோட அப்பாம்மாகிட்ட பெட் கட்டிக்கிட்டு இருக்காங்கப்பா.."

'என்னது..?!!..'

அங்கிருந்தவர்கள் அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அர்ச்சனாவுக்கும்.. அருண்குமாருக்கும்.. அகல்யாவின் அதுபோன்ற

https://t.me/tamilpdfebooks

அதிர்வெடிகள் பழக்கப்பட்டுப் போயிருக்க வேண்டும்.. அவர்கள் இருவரும் ஒரு சின்னச் சிரிப்பப் பார்வையோடு நிறுத்திக் கொண்டார்கள்.. சோமசுந்தரமும்.. பூங்குழலியும் அகல்யா அப்படியெல்லாம் பேசக்கூடும் என்பதை அறிந்து உணர்ந்திருந்தால் மனதின் வெறுப்பை முகத்தில் பிரதிபலிக்காமலிருக்கும் பிரயத்தனங்களை மேற்கொண்டபடி மௌனமாக இருந்தார்கள்..

ஊர்மிளாவால்தான் தாள முடியவில்லை.. அவள் மனம் அதிர்ந்தது.. பேசாத ஒரு பேச்சை பேசியதாக அகல்யா இயல்பாகக் கூறியதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.. அதிலும் அவள் பெற்ற பிள்ளைகள் பந்தயம் கட்டியதாக வேறு சொல்கிறாளே... அதை மறுத்துப் பேசாமல்.. அருணும்.. அர்ச்சனாவும் தங்களுக்குள் கேலிச்சிரிப்பை சிரித்துக் கொண்டிருக்கிறார்களே..

இல்லையென்று அவர்கள் சொல்லியிருக்க வேண்டாமா..? ஏன் அவர்கள் அதைச் செய்யவில்லை..?

அகல்யாவின் பாதங்களை நரேந்திரன் பணிவதில் ஊர்மிளாவுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க வில்லை.. அதை நேரடியாகச் சொல்லியிருக்கலாமே..

பார்த்தாயா நரேந்திரா.. உன் மனைவி அவளைப் பெற்றவர்களிடம் காலில் விழுந்து வணங்கி ஆசிர்வாதம் வாங்கினாள்.. அதைப்போல நீயும் உன்தாயான என் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க வேண்டாமா..?

இப்படிக் கேட்டிருந்தால் அதில் ஓர் அர்த்தம் இருக்கிறது.. நியாயம் இருக்கிறது.. உரிமைக்குரல்

https://t.me/tamilpdfebooks

இருக்கிறது.. அதை விட்டுவிட்டு.. அருணும்.. அர்ச்சனாவும்.. ஊர்மிளாவின் தாய் தந்தையிடம் பந்தயம் வைத்தார்கள் என்று பொய் சொல்வது ஒருவகையான சாகசம் அல்லவா..? அதில் நிர்பந்தம் ஒளிந்திருக்கிறதே..

மாமனார், மாமியாரிடம்.. தம்பியும், தங்கையும் பந்தயம் கட்டிவிட்டார்கள்.. அவர்கள் தோற்றுவிடக்கூடாது என்று அகல்யாவின் கால்களில் நரேந்திரன் விழுந்துதான் ஆகவேண்டும் என்ற சூழலை வெகு கெட்டிக்காரத்தனமாக அகல்யா உருவாக்கி விட்டாளே..

"இந்தம்மா பொய்யை தண்ணியைக் குடிக்கிறதைப் போல ரொம்பவும் இயல்பா பேசி வைக்கிறாங்கடி.." சோமசுந்தரம் முணுமுணுத்தார்..

ஊர்மிளாவின் அதிர்ந்த பார்வையில் எதைக் கண்டானோ.. நரேந்திரனின் முகத்தில் மெலிதான கோபம் வந்தது..

"ஏண்டா.. எதில்தான் பெட் கட்டறதுன்னு அளவு இருக்க வேண்டாமா..?" அருண்குமாரை அதட்டினான்..

"அண்ணா.. அது வந்து.." தாயைக் காட்டி கொடுக்க முடியாமல் தடுமாறினான் அருண்குமார்..

"உன்னையும் சொல்லனும்.. பெரியவங்ககிட்ட பெட் கட்டறோமேன்னு நினைப்பிருக்க வேணாமா..? இதைத்தான் நான் உனக்குச் சொல்லிக் கொடுத்து வளர்த்தேனா..?" அர்ச்சனாவிடம் அவன் சீறியதில்..

"அண்ணா.." என்று கண்கலங்கி விட்டாள் அர்ச்சனா..

https://t.me/tamilpdfebooks

"இதுக்கான பனிஷ்மெண்ட் என்ன தெரியுமா..? நீங்க எதைச் சொல்லி பெட் கட்டினீங்களோ.. அதை நடக்காம செய்கிறதுதான் அப்பத்தான் இனிமே இதுபோல அசட்டுத்தனமா பெட் கட்டிக்கிட்டு இருக்க மாட்டிங்க.. நான் அம்மா காலில் விழப் போவதில்லை.. கட்டின பெட்டில தோத்தாத்தான் உங்க ரெண்டு பேருக்கும் புத்தி வரும்.."


நரேந்திரன் ஊர்மிளாவை ஓர் பார்வை பார்த்து விட்டு செல்போனை காதுக்கு கொடுத்தபடி வாசலுக்கு நகர்ந்து விட்டான்.. அவன் பார்வையில் ஏதோ ஒரு செய்தி ஒளிந்திருப்பதைப் போல ஊர்மிளாவுக்குத் தோன்றியது.. இவன் அவளறிந்த நரேந்திரனா..?

அவள் காதலித்த நரேந்திரனின் பின்னால் மர்மங்கள் இருந்ததில்லையே.. இன்று அவளுக்கத் தாலி கட்டியிருக்கும் நரேந்திரனின் பார்வையில் கூட மர்மம் பொதிந்திருக்கிறதே..

"உங்களால்தான் அம்மா.."

அர்ச்சனாவும், அருண்குமாரும் ஒரே குரலில் சீறியதில் அகல்யாவின் முகம் சிறுத்து விட்டது.. இதுபோன்ற திருப்பத்தை அவள் எதிர்பார்த்திருக்க வில்லை.. எப்போதுமே நரேந்திரனிடம் இது போன்ற யுத்திகளை பயன்படுத்தியே அவள் நினைத்ததை சாதித்துக் கொள்வாள்... இன்றும் அதுபோல்தான் நடந்திருக்க வேண்டும்.. நந்திரன் ஊர்மிளாவின் முன்னாலும்.. அவளைப் பெற்றவர்களின் முன்னாலும் அகல்யாவின் கால்களில் விழுந்திருக்க வேண்டும்.. எப்படி அது மாறியது..?

https://t.me/tamilpdfebooks



உன்னிரு விழிகளிலே - என்
மனதை கட்டிப் போடும்..
அழகான ராட்சசி நீ....

ஊர்மிளாவைப் பார்த்தாள் அகல்யா.. அவள் முகம் சுருங்கியது.. புருவங்கள் சுளித்தன... நரேந்திரன் ஊர்மிளாவையே பார்த்துக் கொண்டிருந்ததை அகல்யாவும் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.. அதை உடைக்க வேண்டும்.. ஊர்மிளாவின் முன்னால் நரேந்திரனிடம் அகல்யாவுக்கு இருக்கும் செல்வாக்கை உணர்த்த வேண்டும்.. பார்.. உன் கணவன் என் காலடியில்.. என்பதை சொல்லாமல் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அவள் அப்படிச் சொன்னாள்..

அதை ஒரே பார்வையில் ஊர்மிளா தகர்த்து விட்டாளே...

அகல்யாவின் மனதில் வெஞ்சினம் உருவானது அப்போதுதான்.. அதுவரை ஆட்டம் காணாத அவளது அதிகாரம் ஆட்டம் காண ஆரம்பித்து விட்டதோ என்ற பதட்டம் அவள் மனதில் எழுந்தது.. அவளுக்குத் தெரியாமல் நரேந்திரன் திருமணத்தை முடிவு செய்து அதை மிக பிரம்மாண்டமான முறையில் நடத்தியும் காண்பித்து விட்டதில் அவள் மனதில் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது..

https://t.me/tamilpdfebooks

'எப்படி இது நடந்தது..?'

திருமணத்திற்கு முந்தைய நாள்வரை.. அதே ஊரில்.. மிகப்பெரிய திருமண மண்டபத்தில்.. ஊர், உலகத்தை யெல்லாம் அழைத்து.. அவர்களுக்கு மூன்று நாள்கள் விருந்து வைத்து நரேந்திரன் திருமணம் செய்து கொள்ளப் போகிறான் என்று அகல்யாவுக்குத் தெரியவே தெரியாது..

வெளிநாடுகளுக்கு அழைப்பிதழ்கள் போயிருக் கின்றன.. இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.. உள்ளூரில் இருப்பவர்களை நரேந்திரன் நேரடியாகவே போய் அழைத்திருக்கிறான்..

ஆனால்.. அகல்யாவின் கையில் மட்டும் திருமணத்திற்கு முதல்நாள்தான் அழைப்பிதழைக் கொடுத்தான்..

"லவ் மேரேஜ்.. டிசைட் பண்ணிட்டேன்.. நாளைக்கு மேரேஜ் நடக்கப் போகுது.. உங்களுக்கும்.. தம்பி, தங்கைக்கும் டிரஸ், ஜ்வல்ஸ் எடுத்திருக்கேன்.. நீங்க ரெடியாகிக்கங்க.."

இப்படிச் சொன்னவனிடம் எப்படி நீ இதை எங்களிடமிருந்து மறைக்கலாம் என்று கேட்க முடியாமல் வாயடைத்து நிற்க நேர்ந்ததில் அகல்யாவின் மனதுக்குள் புயலடிக்க ஆரம்பித்து விட்டது..

https://t.me/tamilpdfebooks

"கல்யாண மண்டபத்தை ஆறுமாதத்துக்கு முன்னாடியே ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்க மேம்.."

திருமணமண்டபத்தின் மேனேஜருக்கு யாரோ போல போன் போட்டுக் கேட்டதில் கிடைத்த தகவலில் அவளின் கொதிப்பு அதிகமாகியது..

'ஊர், உலகத்துக்கே தெரிஞ்சிருக்கு, எனக்குத் தெரியலை..'

நரேந்திரன் எப்போதுமே கெட்டிக்காரன்தான்.. அவனுடைய திருமண நிகழ்வில் அவன் காட்டி விட்ட அதீத கெட்டிக்காரத்தில் அவள் மனம் புழுங்கினாள்..

'இவனோட அப்பனுக்கும் எனக்கும் கோவிலில் கல்யாணம் நடந்துச்சு.. இவனுக்கு மட்டும் இப்படி ஆடம்பரமான மஹாலில் கல்யாணம் நடக்கனுமா..?'

மனதுக்குள் வெந்து போனவளுக்கு.. நரேந்திரனின் தாயான நளினிக்கும்.. அவனுடைய தந்தையான செழியனுக்கும் நடந்த திருமணம் இதைப் போல உலகத்தையே கலக்கிய மிகப் பிரம்மாண்டமான திருமணமாகத்தான் இருந்தது என்ற உண்மை வெகு வசதியாக மறந்து போனது..

அந்தப் புழுக்கத்துடனே இருந்தவளுக்கு ஊர்மிளாவைப் பார்த்த முதல் நொடியிலேயே மிளகாயை அரைத்து உடல் முழுவதும் அப்பிவிட்டதைப் போல எரிந்து வைத்தது..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா அழகானவளாக இருந்தாள்.. பேரழகோடு இருந்தாள்.. அவளது பார்வையும்.. சிரிப்பும்.. நரேந்திரனைக் கட்டிப் போட்டு வசியம் பண்ணி வைத்திருந்தன.. இமைக்கும் ஒவ்வொரு நொடியிலும்.. அவளுடைய விழிகள் நரேந்திரனின் பக்கமே வேலி போட்டுக் கொண்டிருந்தன..

அவனும் அந்த வேலியை மீறவில்லை என்பதுதான் அகல்யாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது.. யாராலும் கட்டுப் படுத்த முடியாத காற்றைப் போன்றவன் அவன்.. அவனையும் கட்டுப்படுத்தி ஒரிடத்தில் அசையாமல் உட்கார வைத்துவிடும் வல்லமை படைத்தவளாக ஊர்மிளா இருந்தாள்..

அகல்யாவினால் என்றுமே நரேந்திரனைக் கட்டுப் படுத்த முடிந்ததில்லை.. அவன்தான் அவளை கட்டுப் படுத்திக் கொண்டிருந்தான்.. அதையும் உடைத்து தன் சாகத்தினால் அந்த வீட்டில் எஜமானியாக கோலோச்சிக் கொண்டிருந்தாள் அகல்யா..

அந்தப் பதவிக்கு ஆபத்து வந்து விடுமோ என்று முதன் முதலாக அஞ்ச வைத்து விட்டாள் ஊர்மிளா..

ஒரே ஒரு பார்வையில் அகல்யாவின் சதித்திட்டத்தை முறியடிக்கச் சொல்லி நரேந்திரனுக்கு ஊர்மிளா கட்டளையிட முடியுமானால்.. அவள் எவ்வளவு சக்தி வாய்ந்தவளாக இருக்க வேண்டும்..? நரேந்திரனின் மீதான அவளுடைய ஆளுமை எந்த அளவுக்கு வலிமை வாய்ந்ததாக இருக்க வேண்டும்..?

https://t.me/tamilpdfebooks

உதட்டைக் கடித்தபடி எதுவுமே நடக்காததைப் போல அகல்யா திருமண வரவேற்பிற்கு கிளம்பி விட்டாள்.. அதில் பூங்குழலி அதிகமாக பயந்தாள்..

"எப்படிங்க இப்படி இருக்காங்க.. நாமளா இருந்தா இப்படி ஆகிருச்சேன்னு இடிஞ்சு போய் உட்கார்ந்துருவோமே.."

"அதுதான் அவங்களுக்கும், நமக்கும் இருக்கிற வித்தியாசம்.. எது நடந்தாலும் தூசைத் தட்டுகிறதைப் போல தட்டி விட்டுட்டு போய்கிட்டே இருக்கிறாங்க எதையும் ஜெயிச்சிருவாங்கடி.. ஐயோன்னு உட்காருகிறோம் பாரு.. அந்த இடத்திலதான் நாம தோற்க ஆரம்பிக்கிறோம்.."

"இப்படியாப்பட்ட வெற்றி நமக்கு வேணாம்.."

"அவங்களுக்கு வேண்டியிருக்கே.."

காத்திருந்த கார்களில் ஏறும் போது.. கவனமாக அகல்யா விலையுயர்ந்த வெளிநாட்டுக் காரில் ஏறிக் கொண்டாள்.. அர்ச்சனாவையும், அருண்குமாரையும் அவளுடன் அழைத்துக் கொண்டாள்..

புருவங்கள் முடிச்சிட நரேந்திரன் தடுத்து நிறுத்த முனைந்தபோது சோமசுந்தரம் அவனை தடுத்து விட்டார்..

"நாங்க இந்தக் காரில் வந்துக்கிறோம்.. காரில் சிறிசு என்ன.. பெரிசு என்ன..? எல்லாமே நாலு சக்கரத்தில்தான் ஓடப்போகுது.. ஆட்டோவில் போகிறதே ஆடம்பரம்ன்னு நினைக்கிறவங்க நானு.. உங்கம்மா என் கொள்கையை

https://t.me/tamilpdfebooks

புரிஞ்சு வைச்சிருக்காங்க.. அதுக்கு அவங்களுக்கு நன்றியில்ல சொல்லனும்.."

இலகுவாக பேசிவிட்டு வேறு ஒரு காரில் பூங்குழலியுடன் அவர் ஏறி அமர்ந்தார்.. ஊர்மிளா நிம்மதியான மனதுடன் நரேந்திரனை பின்பற்றினாள்..

கார்கதவை அவளுக்காக திறந்து விட்ட நரேந்திரனின் விழிகளில் காதல் மின்னியது.. ஊர்மிளாவின் பக்கத்தில் நெருக்கமாக உட்கார்ந்தவன் அவள் தோளைச் சுற்றிக் கையைப் போட்டுக் கொண்டான்.. காதலித்த காலங்களில் அவன் அதுபோல செய்ததுண்டுதான்.. அப்போதெல்லாம் சிரித்தபடியே ஊர்மிளா நகர்ந்து அமர்ந்து கொள்வாள்.. அப்போது அப்படிச் செய்யாமல் வெட்கப் புன்னகையுடன் முகம் சிவந்தவளை ரசனையுடன் அவன் பார்த்தான்..

அவள் தோளைச் சுற்றியிருந்த அவன் கரம் அழுந்தியதில் ஊர்மிளாவின் அடிவயிற்றில் உணர்வுகள் கிளர்ந்தன.. பட்டாம்பூச்சிகள் ஒன்று சேர்ந்து பறக்கும் படபடப்பை அவளுக்குள் உலர்ந்தவளுக்கு நா வறண்டு போனது.. லஜ்ஜையில் அவள் முகம் முன்னிலும் அதிகமாக சிவந்தது..

"என்னடி.. இப்பத் தள்ளி ஓட மாட்டேங்கிற..?" நரேந்திரன் அவள் காதில் கிசுகிசுத்தான்..

காருக்குள் டிரைவரும் இருக்கும் நினைவில் பேச்சு வராமல் தவித்தாள் ஊர்மிளா.. அவனுடைய

https://t.me/tamilpdfebooks

கள்ளத்தனத்தில் அவன் மீதான காதல் அவளுக்குப் பெருகியது..

"என்ன.. பதிலைக் காணோம்.." அவன் சீண்டினான்..

"ஸ்ஸ்ஸ்.. டிரைவர்.." அவள் முணுமுணுத்தாள்..

"டிரைவர் இருந்தா என்ன..? வெறும் பேச்சுத்தானே.. அதுக்குக் கூட தடாவா..?"

அவன் விழிகள் அவளை மேய்ந்ததில் பேச்சுக்கு அடுத்தபடியான செயல்முறைகளின் வழிமுறைகள் தெரிந்தன..

தாள முடியாத தவிப்புடன் அவன் கையைப் பிடித்துக் கிள்ளினாள் ஊர்மிளா.. நரேந்திரனின் விழிகள் வெளிச்சம் காட்டின..

இதுபோன்ற அணுகுமுறைகளினால்தான் அவனை அவள் வீழ்த்தினாள்.. அவன் பிறந்து.. வளர்ந்து.. பழகிய சூழலில் இதுபோன்ற அணுகுமுறைகள் இருந்ததில்லை..

நேரடியான.. ஆளை வெறுக்க வைக்கும் அணுகுமுறைகள் அவை..

இதுபோன்ற காதலும், ரகசியமும்.. குழைந்தெடுத்தக் கலவையில் ரகசியமாக விரல் தொடும் ஸ்பரிசத்தில் விதிர்த்து நாணும் பெண்மையின் மிளிர்வு பொங்கும் நாணத்துடன் விரல் தொட்டுக் கிள்ளும் இன்ப சுகானுபவங்களுக்கு அவனுலகில் இடமிருந்ததில்லை..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவின் ஓரவிழிப் பார்வையில் அவன் சொக்கிப் போனான்.. இன்னும் அதிகமாக அவளை நெருங்கி அமர்ந்தான்.. அவனது உராய்வை உணர்ந்த அவள் முகத்தின் வெட்கச் சிகப்பில் அவளைக் கடித்துத் தின்று விடும் ஆசை அவனுக்குள் மிகுந்தது..

"ஹோட்டல் வந்தாச்சு.. சார்.."

காரை நிறுத்திய பின்னாலும்.. இறங்க மனமில்லாமல் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து டிரைவர் சொன்னான்..

"உங்களாலேதான்.."

ஊர்மிளா அதற்கும் ஒரு சொல்லச் சிணுங்கலோடு அவன் கையைக் கிள்ளினாள்.. கிள்ளிய விரலுடன் அவன் விரல் பிணைய முனைய.. அவள்விரல் தயங்கிப் பின் வாங்கியது..

"இறங்க வேணாமா..?" ஏக்கத்துடன் சொன்னாள்..

அவன் காட்டிய நெருக்கம் அவளுக்குள் தாபத்தீயை மூட்டி விட்டிருந்தது.. அவனுக்கோ அந்த தாபம் தகிக்க ஆரம்பித்திருந்தது.. கட்டுப்பாடு காத்த கண்ணியமான காதலில் அத்தனை நாள்களாக சிறை பட்டிருந்தவன்.. அன்று அந்தக் கட்டுப்பாட்டை தகர்த்து எறியும் வேளை நெருங்கி விட்டதில் துடிப்போடு இருந்தான்.. அவனுக்கே.. அவனுக்கான.. அந்தப் பேரழகியை ஆண்டுவிடும் வேட்கையோடு இருந்தான்.. அதற்கும் இடைவெளி கொடுத்த திருமண வரவேற்பில் அவனுக்கு கோபம் வந்தது..

https://t.me/tamilpdfebooks

"இப்ப ரிசப்சன் வேணும்னு யார் கேட்டது..?"

கோபமான அவனது கேள்வியில் வாய்மூடி 'களுக்' கென்று சிரித்தாள் ஊர்மிளா..

"நிச்சயமாய் நான் கேட்கலை.. இது உங்க ஊர்.."

இப்படிச் சொன்னவளை அவன் எரித்து விடுவதைப் போல பார்த்ததில் அவள் திகைத்துப் போனாள்.. அவனே முதலிரவு வேளை தள்ளிப் போய் கொண்டிருக்கிறதே என்ற கோபத்துடன் இருந்தான்.. அதில் அவள் வேறு கேள்வி கேட்டு வைத்து.: கோபம் காட்ட வாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்தவனுக்கு வாய்ப்பை அளித்து விட்டாள்..

"என் ஊரா..? அப்ப உன் ஊர் எதுடி..? திருச்சியா..?"

ஒரு மாதிரியான ஆழ்ந்த குரலில் அவன் வினவியதில் ஊர்மிளாவுக்கு ஒன்றும் புரியவில்லை.. அவளுடைய ஊர் திருச்சிதானே.. அதை அவனிடம் சொன்னபோது இல்லையென்றான் அவன்..

"இனிமே உன் ஊர் பெங்களூர்தான்.."

'ஓ.. இவன் இப்படி வருகிறானா..?'

அவன் கண்டிப்பில் அவள் முகம் மலர்ந்து போனாள்.. அவனுடைய உரிமையான கோபம் அவளைத் தாலாட்டியது..

"போதுமே.. பயந்தே போனேன்.."

https://t.me/tamilpdfebooks

அவளின் கொஞ்சலான சிணுங்கலில் அவன் கோபம் பறந்தது.. காரை விட்டு இறங்கி.. சுற்றி வந்து ஊர்மிளாவுக்காக கார் கதவைத் திறந்து விட்டு வரவேற்பதைப் போல கைவிரித்தான்..

ஒருவழியாக முதலாளி காரை விட்டு இறங்கி விட்டார் என்று காரைக் கிளப்பப் போன டிரைவர்.. அதை மறந்து போனவனாக 'ஆ' வென்று வாய் பிளந்து நரேந்திரனின் செய்கையை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்..

வெட்கத்துடன் அவனை சிரிக்கும் கண்களால் கடிந்து கொண்ட ஊர்மிளாவின் கைவிரல்களோடு விரல் கோர்த்துக் கொண்டவன் உலகையே வென்றுவிட்ட பெருமிதத்துடன் ஹோட்டலின் படிகளில் ஏறினான்.. அதை உள்ளேயிருந்து கண்ணாடி சுவரின் மூலமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அகல்யாவின் முகம் தீப்பிழம்பானது..

ரிசப்சன் நடந்த ஹாலுக்குள் உலகில் உள்ள அத்தனை பிரபலங்களும் வந்திருந்தார்கள்.. திரைப் படத்துறையின் அத்தனை பிரமுகர்களும்.. முன்னனி நட்சத்திரங்களும் வந்திருந்தார்கள்.. அவர்களுக்கு மத்தியில் நரேந்திரனுடன் இணையாக நடந்து அவன் அறிமுகப் படுத்தியவர்களிடம் லேசாக சிரித்து.. கை குவித்து ஒரிரு வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

அவர்களை அணுக முடியாமல் கூட்டம் சூழ்ந்து கொண்டதில் அர்ச்சனாவும்.. அருண்குமாரும்.. மட்டுமல்லாமல் கொருவராக அடையாளம் தெரியாமல் தவித்துக் நின்று கொண்டிருந்தார்கள்.. அவர்களுக்கே அப்படியென்றால் அகல்யாவின் நிலையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. அவளை யாரோ எவரோ என்பதை மற்றவர்கள் பார்க்கும் அளவிற்கு அவள் தள்ளி நின்று கொண்டிருந்தாள்..

சோமசுந்தரமும்.. பூங்குழலியும் ஒதுங்கி நின்று கொண்டிருந்தார்கள் என்றால் அவர்களின் கதையே வேறு..

அவர்கள் இயல்பாகவே ஆரவாரத்திலிருந்து ஒதுங்கி நிற்கும் எளிமையான வாழ்க்கையை வாழ்பவர்கள்.. ரிசப்சன் ஹாலுக்குள் நுழைந்ததுமே அவர்கள் ஓரமாக ஒதுங்கி நின்று நிகழ்வுகளை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்..

அகல்யா அப்படியல்ல.. அவள் ஆரவாரத்தின் மத்தியில் இருக்க வேண்டும் என்று நினைப்பவள்.. செழியன் இருந்த வரையில் அது அவளுக்குக் கிடைத்த தில்லை.. அவர் போன பின்பு.. நரேந்திரனின் மூலமாக அவள் விரும்பிய ஆரவாரமும்.. ஆடம்பர வாழ்வும் அவளுக்கு கிடைத்து விட்டன.. அதைத் தக்க வைத்துக் கொள்ளும் சாதுர்யத்தை அவள் கற்று வைத்திருந்தாள்..

அன்றும் அதுபோலவே நரேந்திரனின் அருகே நிற்கும் முயற்சியில் அவள் ஈடுபட்டிருந்தாள்.. அருண்

https://t.me/tamilpdfebooks

குமாரையும்.. அர்ச்சனாவையும் இழுத்து விட்டாள்.. அவர்கள்தான் நரேந்திரனின் குடும்பம் என்ற பிம்பம் மீடியாவின் பார்வையில் விழ வேண்டும் என்று பாடுபட்டாள்.. அது கலைந்து விட்டது..



நதிநீரில் கால் நனைக்கும்
சந்தோசத்தை எனக்களிக்கும்..
அழகான ராட்சசி நீ....

அகல்யா எவ்வளவோ முனைப்பாக இருந்தாள்.. நரேந்திரனின் ஒருபக்கம் அவளும்.. இன்னொரு பக்கம அருண்குமாரும், அர்ச்சனாவும் இருக்க வேண்டும்.. அந்தப் போட்டோ எல்லாப் பத்திரிக்கைகளிலும் வரவேண்டும் என்பது அவளுடைய குறிக்கோளாக இருந்தது.. அந்த குறிக்கோளை மீடியா மக்கள் தகர்த்து விட்டார்கள்..

"மிஸ்டர் நரேன் ப்ளீஸ்.. மிஸஸ் நரேன் பக்கத்தில் நின்னு போய் கொடுக்கறிங்களா..?"

போட்டோகிராபரின் கேள்வியில் மிஸஸ் நரேந்திரன் அவன் பக்கத்தில்தானே இருந்தாள்..? எங்கே போனாள்..? என்று திரும்பிப் பார்த்த நரேந்திரன் திகைத்தான்..

https://t.me/tamilpdfebooks

அவன் பக்கத்தில் படுஸ்டைலாக கேமராவுக்கு போஸ் கொடுக்க ஏதுவாக செயற்கை சிரிப்பை உதட்டில் ஒட்ட வைத்த வண்ணம் அகல்யா நின்றிருந்தாள்..

"ஊர்மி...?"

அகல்யாவுக்கு அந்தப் பக்கமாக நின்றிருந்த ஊர்மிளாவின் கை பற்றி தன்னருகில் இழுத்துக் கொண்டான் நரேந்திரன்.. அகல்யாவின் முகம் மாறி விட்டது.. போட்டோகிராபர்களும்.. வீடியோ எடுக்கிறவர்களுமாக புதுமண தம்பதிகளை சூழ்ந்து கொண்டதில்.. அவள் பின்னடைய வேண்டியதாகி விட்டது.. அவளைப் போலவே பின்னடைந்த அருண்குமாரும்.. அர்ச்சனாவும்.. அவரவரின் தோழமை வட்டத்திற்குள் தங்களை இணைத்துக் கொண்டு சிரிப்பும் பேச்சுமாக அளவளாவ ஆரம்பித்து விட்டார்கள்..

'இதுக மட்டும் எப்படி இதையெல்லாம் ஈஸியா எடுத்துக்குதுக..'

அகல்யாவுக்கு புரியவில்லை.. அருண்குமாரை மடக்கிக் கேட்டபோது அவன் முகம் சுளித்தான்..

"கொஞ்சமாவது சென்சோட பேசறிங்களா..? இது மேரேஜ் ரிசப்சன்.. பார்ட்டியில்ல.. இங்கே அண்ணன் பக்கத்தில அண்ணிதான் நிற்கணும்.. அண்ணனோட தம்பி நிற்கக் கூடாது.."

"ஏண்டா..?"

https://t.me/tamilpdfebooks

"என்னம்மா நீங்க.. அவங்கதானே அண்ணண்னோட லைஃப் பார்ட்னர்.."

அகல்யாவுக்கு அதிர்வு வந்தது.. உனக்கு என்ன வந்தால் எனக்கென்ன என்று அருண்குமார் விட்ட அரட்டையைத் தொடரப் போய் விட்டான்.. ஆற்ற மாட்டாமல் அர்ச்சனாவை அவள் தேடிப்பிடித்தாள்..

"லூசாம்மா நீங்க..?" என்ற கேட்டாள் அர்ச்சனா..

அகல்யா லூசா..? சுற்றியிருக்கும் அத்தனை பேரையும் லூசாக்கி விடும் வல்லமை படைத்தவளைப் பார்த்து வந்த கேள்வியில் அகல்யா நொந்து போனாள்..

"என்னடி.. இப்படிக் கேட்கிற..?"

"பின்னே.. என்னம்மா..? எல்லோருக்கும் நான் அண்ணனோட தங்கைன்னு தெரியுமா..? மேரேஜ் ரிசப்சனுக்கு வருகிறவங்க அண்ணன் பக்கத்தில நிற்கிற பெண்ணைத்தானே அண்ணியா நினைச்சுக்குவாங்க..? அந்த அறிவில்லாம ஏன் வந்தன்னு கேட்கறிங்க.. போங்கம்மா.. போயி வந்திருக்கிற கெஸ்ட ரிஸீவ் பண்ணுங்க.."

'அது ஒன்னுதான் குறைச்சல்..'

அகல்யாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவள் என்ன நரேந்திரனின் கல்யாண வரவேற்புக்கு வருகிறவர்களை பந்தி விசாரிக்கவா அங்கே வந்திருக்கிறாள்..?

https://t.me/tamilpdfebooks

முதன்முதலாக.. நரேந்திரனின் மனைவி என்று ஒருத்தி வந்ததினால் அவளது அரியாசனம் பறிபோவதை உணர ஆரம்பித்தாள் அகல்யா..

இனி நரேந்திரனின் குடும்பமாக அவனுடைய மனைவியும்.. பிள்ளைகளும் மட்டுமே இருப்பார்கள் என்பதில் அவளுக்கு பீதி கிளம்பியது.. மணமக்களைப் பார்த்தாள்.. நரேந்திரன் குனிந்து ஊர்மிளாவின் காதோடு ஏதையோ சொன்னான்.. அவள் வெட்கத்துடன் எதையோ முணுமுணுத்தாள்.. அவன் பலத்த குரலில் சிரித்தான்..

"மிஸ்டர் நரேந்திரனுக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா..?"

அகல்யாவுக்கு பக்கத்திலிருந்த பிரமுகர் ஒருவர் வியப்புடன் சொன்னார்.. அதை அவருக்குப் பக்கதிலிருந்தவர் ஆமோதித்தார்..

"யெஸ் மிஸ்டர் வினோத்.. நானும் இதைத்தான் நினைத்தேன்.."

"லவ் மேரேஜாமே..?"

"அப்படித்தான் சொல்லிக்கிட்டாங்க.."

"அதுதான் இந்தச் சிரிப்பு.. மிஸஸ் நரேந்திரனும் அழகாய் இருக்கிறாங்க.. கண்ணசைவில் நரேந்திரனைக் கண்ட்ரோல் பண்றாங்க.."

அவர்கள் சிரித்துக் கொண்டார்கள்.. அகல்யா விழித்துக் கொண்டாள்.. நரேந்திரன் ஊர்மிளாவின் கட்டுப்

https://t.me/tamilpdfebooks

பாட்டுக்குள் போய் விட்டான் என்பதில் அவளுக்குள் குளிர் ஜீரம் வந்தது..

அதுவரை அகல்யாவின் கட்டுப்பாட்டுக்குள் ஒன்றும் நரேந்திரன் இருக்கவில்லை.. யாருக்கும் கட்டுப்படாத.. கட்டுக்கடங்காத காற்றாக அவன் இருந்தான்.. இன்று ஒரு பெண்ணின் கண் பார்வைக்கு அவன் கட்டுப்படுகிறான் என்றால் அந்தப் பெண்ணின் காதல் எத்தனை சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும்..?

அகல்யா பல்லைக் கடித்தாள்.. செழியன் இருந்த வரை நரேந்திரனின் கருணை அவள் பக்கம் வந்ததில்லை.. அவர் போனபின்பு.. கருணை கொள்ளாவிட்டாலும்.. நரேந்திரன் அகல்யாவை வெறுக்காமல்.. அவளையும் அவள் பெற்ற பிள்ளைகளையும் அவனது குடும்பமென்று சொல்லிக்கொள்ள அனுமதித்தான்.. அது சமூகத்தில் மிகப்பெரிய உயர்ந்த அந்தஸ்தை அகல்யாவுக்கும்.. அவளுடைய பிள்ளைகளுக்கும் அளித்தது.. அதில் அகல்யா கர்வம் கொண்டாள்.. அவள் பெற்ற பிள்ளைகளோ.. அதற்குக் காரணமான நரேந்திரனிடம் நன்றியுணர்வைக் கொண்டார்கள்..

அன்று அகல்யாவின் கர்வம் ஆட்டம் காண ஆரம்பித்திருந்தது.. ஊர்மிளாவின் ஒவ்வொரு சிரிப்பிலும் நரேந்திரனுக்கும்.. அகல்யாவின் குடும்பத்திற்குமான இடைவெளி அதிகரிப்பதைப் போல உணர்ந்தாள் அகல்யா.. அவளின் துவேசமான பார்வையினை அவதானித்தபடிதான் சோமசுந்தரமும், பூங்குழலியும் நின்று கொண்டிருந்தார்கள்..

https://t.me/tamilpdfebooks

"இந்தம்மா பார்வையைப் பாத்தியா குழலி.."

"வீட்டுக்குப் போனவுடனே ஊர்மிளாவுக்குச் சுத்திப் போடனும்ங்க.."

"வெளியாளுக பார்வை படாமலிருக்க சுற்றிப் போடலாம்.. வீட்டாளுக பார்வை படாமலிருக்க சுத்திப் போடணும்னா தினமுமில்ல சுத்திப் போடனும்..?"

"வேற என்னதான் செய்கிறது..?"

"நம்ம நிலைமையைப் பார்த்தியாடி.. திருச்சியிலே நிம்மதியா நானுண்டு.. என் புத்தகக் கடையுண்டு.. வாராவாரம் போகிற பொதுக் கூட்டமுண்டுன்னு நான் இருந்தேன்.. நீயும், நீயுண்டு.. உச்சிப் பிள்ளையார் கோவிலுண்டுன்னு இருந்த.. நிம்மதியாப் போன நம்ம வாழ்க்கையிலே எங்கே வந்து நிற்கிறோம்ன்னு பார்த்தியா குழலி.. நம்மைப் போல இருக்கிற இடம் தெரியாம வாழ்கிறவங்க நிற்க வேண்டிய இடமாடி இது..?"

சுற்றிலும் இருந்த ஆடம்பரமான மனிதர்களையும்.. அவர்களது கோட்.. சூட்டென்ற உடையலங்காரத்தையும் பார்த்தபடி கூறினார் சோமசுந்தரம்.. பூங்குழலி தலையை அசைத்தாள்..

"ஊர்மிளாவுக்காகத்தானே நாம இங்கே நிற்கிறோம்.."

"ம்ம்ம்.. அதைச் சொல்லு.. அவள் சந்தோசமாக இருந்தால் சரி.."

"சந்தோசமாக இருக்கணும்.."

https://t.me/tamilpdfebooks

வேண்டுதல் போலச் சொன்னபடி மகளைப் பார்த்தாள் பூங்குழலி.. ஊர்மிளாவின் முகத்தில் தெரிந்த வெட்கச் சிகப்பில் அவள் மனம் நிறைந்தது.. இது போன்ற மகிழ்வுடன் எப்போதும் அவள் வாழவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் பூங்குழலி..

நரேந்திரன் கம்பீரமாக.. சாம்பல் வண்ண கோட் சூட்டில் அரசனைப் போல அழகாக இருந்தான்.. அவனது ஆளுமை நிறைந்த அந்த அழகை ஓரக் கண்ணால் அள்ளிப் பருகுவதைப் போல அடிக்கடி பார்த்துக் கொண்டாள் ஊர்மிளா.. வாழ்த்துச் சொல்ல வருகிறவர்களைக் கட்டித் தழுவி பேசியபடி அடிக்கடி மனைவியைப் பார்த்துக் கொண்ட நரேந்திரனின் கண்கள் மின்னின..

"என்னடி.. சைட் அடிக்கிறயா..?"

அடிக்குரலில் மற்றவர்களுக்குக் கேட்காத வண்ணம் முணுமுணுத்தான் நரேந்திரன்.. ஊர்மிளாவின் முகம் செவ்வானமானது..

"நினைப்புத்தான்.." என்றாள் அவள்..

"என் நினைப்பில நீ இருக்கிறதைச் சொல்கிறயா..?" என்றான் அவன்..

"ஹ..! இவர் பெரிய ஹீரோ.. இவர் நினைப்பில நாங்க உருகறோம்.." ரகசியமாக உதட்டைச் சுழித்தாள் ஊர்மிளா..

"எங்கே.. என் முகத்தைப் பார்த்துச் சொல்லு.. நான் ஹீரோ இல்லையா..?" ரகசியமாக கண் சிமிட்டினான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா தவித்துப் போனாள்.. அவனுடைய பார்வையும்.. பேச்சும்.. ரகசிய கண் சிமிட்டல்களும் அவளுக்குப் புதிதல்ல என்றாலும் அன்று அவளுக்கு அத்தனையும் புதிதாக இருந்தன..

அடுத்தடுத்து விருந்தினர்கள் வந்து கொண்டே இருந்தார்கள்.. அவர்களின் நடையுடை பாவனைகள் ஊர்மிளா அறிந்து வைத்திருந்த சூழலிருந்து வித்தியாசமாக இருந்தன.. மேல்தட்டு வர்க்க மக்களின் ஒப்பனைகளையும்.. உடையலங்காரத்தையும்.. நுனி நாக்கு ஆங்கிலப் பேச்சுக்களையும் மருட்சியுடன் பார்த்தபடி இயந்திரம் போல கை குவித்துக் கொண்டிருந்தாள் அவள்..

அந்தச் சூழலோடு ஒன்றி வாழ அவளால் முடியுமா என்ற சந்தேகம் அவளுக்குள் எழுந்தது..

அந்த ஹாலின் மூலையில் மேற்கத்திய இசை ஒலித்துக்கொண்டிருந்தது.. வந்திருந்த விருந்தினர்களில் சிலர் லேசாக இடையை அசைத்தபடி நடனமாடிக் கொண்டிருந்தார்கள்..

'அப்பாவுக்கும்.. அம்மாவுக்கும் இதெல்லாம் பிடிக்காதே...'

கவலையுடன் கூட்டத்தின் மத்தியில் தாய் தந்தையைப் பார்வையால் துழாவினாள் ஊர்மிளா.. அவர்கள் இருக்கின்ற சுவடே தெரியவில்லை..

"யாரைத் தேடற..?"

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் கரம் அவள் தோளை அணைத்தது.. அவள் தாய்.. தந்தையை மறந்தவளாக அவனைப் பார்த்துச் சிரித்தாள்..

"யாரையும் தேடலை.."

"அதானே.. நீ தேட வேண்டிய ஆள்தான் உன் பக்கத்திலேயே இருக்கிறேனே.. அப்புறம் வேற யாரை நீ தேடப் போறியாம்..?"

அவளுடைய அம்மா.. அப்பாவை அவள் தேட மாட்டாள் என்ற நிச்சயத்துடன் அவன் சொன்னான்.. அவனை விட்டு அவள் அவர்களைத் தேடமாட்டாள் என்று நம்பினான்.. அந்த நம்பிக்கையை பொய்யாக்கி அவள் அவனை விட்டு விலகி அவர்களைத் தேடி ஓர் நாள் சென்றாள்.. அப்படிச் செல்ல வேண்டிய காலமும் அவர்கள் வாழ்வில் வரக்கூடும் என்பதை அறியாதவர்களாக அவர்கள் இருவரும் ரகசியப் பேச்சில் கிளுகிளுத்துச் சிரித்துக் கொண்டார்கள்..

சுற்றிலும் இருந்த அத்தனை கூட்டத்துக்கும் மத்தியில் அவர்களுக்கே அவர்களுக்கு என்று பிரத்யேகமான உலகை சித்தரித்துக் கொள்ள அவர்களால் முடிந்தது.. ஒவ்வொரு விருந்தினரும் வ'ந்து போகும் அந்த இடைபட்ட நேரத்தில் சின்னச் சின்ன கண்சிமிட்டல்கள்.. ரகசியப் பேச்சுக்கள் என்று அந்த நொடிகளை உல்லாசமய மானதாக ஆக்கிக் கொண்டிருந்தான் நரேந்திரன்..

அவனுடைய ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துக் கொண்டிருந்தாள் அகல்யா.. நரேந்திரனுக்கு அதுபோல

https://t.me/tamilpdfebooks

சிரிக்கக் கூடத் தெரியும் என்பதை அன்றுதான் அவள் கண்டாள்..

"ஹாய் அகல்யா.." என்றபடி அவளருகில் வந்தாள்.. சாதனா..

அவள் செழியனின் நண்பரின் மனைவி..

"ஹாய்..." அசுவராஸ்யமாக சொன்னாள் அகல்யா..

"ஒரு வழியாய் நரேன் மேரேஜ் பண்ணிக்கிட்டார் போல.." என்றாள் சாதனா..

அதில் உனக்கென்ன இவ்வளவு சந்தோசம் என்ற எரிச்சலுடன்..

"ம்ம்ம்.." என்று முணுமுணுத்தாள் அகல்யா..

"லவ் மேரேஜாமே..?" சாதனா விடவில்லை..

இதையே ஏன் எல்லோரும் மாற்றி மாற்றிக் கேட்கிறார்கள் என்று அகல்யாவுக்கு கோபம்.. கோபமாக வந்தது..

"ம்ம்ம்.." அவள் அதற்கும் முணுமுணுத்தாள்..

"பெண் ரொம்பவும் அழகாயிருக்கா.. நீ தேடியிருந்தாக் கூட இவ்வளவு அழகாய் பெண்ணை செலக்ட் பண்ணியிருக்க முடியாது.." என்று பாராட்டினாள் சாதனா..

'நான் எங்கேடி பெண் தேடினேன்..?' அகல்யாவுக்கு ஆயாசமாக இருந்தது..

https://t.me/tamilpdfebooks

திருமணம் என்ற ஒன்று நரேந்திரனுக்கும் நடக்கும் என்ற நினைவே இல்லாமல் வாழ்ந்தவள் அவள்.. அவளைப் போய் நரேந்திரனுக்காக பெண் தேடினாள் என்று சொன்னால் நம்பும்படியாகவா இருக்கிறது..?

"ம்ம்ம்.." அலுப்புடன் முணுமுணுத்தாள்..

"நரேனைப் பாரேன்.. வொய்பின் மேல் வைத்த பார்வையை விலக்கிக்கலை.. சாது போல இருக்கிற பொண்ணு.. நரேனைத் தன் கண்ணசைவுக்குள்ளே வைச்சிருச்சே.. பரவாயில்லை.. கெட்டிக்காரிதான்.." சாதான சான்றிதழ் கொடுத்தாள்..

அகல்யாவுக்கு 'பக்' கென்று இருந்தது.. இவள் கவனித்ததைப் போல அங்கே வந்திருந்தவர்களில் எத்தனை பேர் இதைக் கவனித்தார்களோ என்ற கவலையில் ஆழ்ந்தாள் அவள்..

நரேந்திரன் மனைவியின் கட்டுப்பாட்டுக்குள் போய் விட்டான் என்று மற்றவர்கள் சொல்வது அகல்யாவிற்கு நல்லதல்லவே..

"இல்லையில்லை.." அகல்யா உடனடியாக அதை மறுத்தாள்...

அவ்வளவு நேரமும் 'ம்ம்ம்' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தவள் அவசரம்.. அவசரமாக மறுத்துப் பேசியதும்.. சாதனாவின் இதழ்களில் நமட்டுச் சிரிப்பு தவழ்ந்தது..

https://t.me/tamilpdfebooks

"எதை இல்லைங்கிற..?" அறியாப் பெண்ணைப் போல அவள் வினவினாள்..

அவள் வேண்டுமென்றே வாயைக் கிளருவதை அகல்யா புரிந்து கொண்டாலும் அவளுடைய கேள்விக்கு பதில் அளிக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தாள்..

எந்த ஒரு நிலையிலம் நரேந்திரன் ஊர்மிளாவின் கட்டுப்பாட்டுக்குள் போய் விட்டான் என்பதை அகல்யா ஒப்புக்கொண்டு விடக்கூடாது.. அது அவளுக்கான இறக்கமாக ஆகிவிடும்.. அதை ஒரு போதும் அகல்யாவினால் அனுமதிக்க முடியாது..

"நரேன் தாய் சொல்லைத் தட்டாதவன்.. யாரோட கட்டுப்பாட்டுக்குள்ளேயும் போக மாட்டான்.."

"அது யாரோ இல்லை அகல்யா.. நரேனின் வொய்ப்.."

சாதனா நினைவு படுத்தினாள்.. அகல்யாவின் முகம் கோணியது.. இதைச் சொல்லச் சொல்லி இவளிடம் நான் கேட்டேனா என்ற வெகுண்டாள் அவள்..

"இருக்கட்டுமே.. அதுக்காக அவ கண்ட்ரோலில் நரேன் இருக்கனும்னு கட்டாயம் ஏதுமிருக்கா..?" படபடத்தாள்..

"உனக்கேன் இவ்வளவு கோபம் வருது..?" இமை கொட்டி விசாரித்தாள் சாதனா..

"எனக்கேன் கோபம் வரப் போகுது..? நான் சும்மா உன் கேள்விக்கு பதிலை மட்டும் சொன்னேன்.." அகல்யா சமாளித்தாள்..

"ஐ.. ஸீ..."


https://t.me/tamilpdfebooks

சாதனாவின் உதடுகளில் உன்னை நான் அறிவேன் என்ற புன்னகை தவழ்ந்தது..

"அதுசரி அகல்யா.. நரேந்திரன் தாய் சொல்லைத் தட்டாதவர்ங்கிறதை நீ எப்படித் தெரிஞ்சுக்கிட்ட..? ஏன் கேட்கிறேன்னா நரேனோட தாயை நீ பார்த்ததில்லையே.. அவங்க இறந்து போனதினாலதான உனக்கு நரேனோட அப்பாவை செகண்ட்மேரேஜ் பண்ணிக்கிறதுக்கான சான்ஸ் கிடைச்சது..?"

சிரித்தபடியே கழுத்தை அறுக்கும் வார்த்தைகளைப் பேச அகல்யாவுக்கு மட்டும்தான் தெரியுமா..? சாதனா விற்கும் அது தெரியுமென்பதை அவள் நிருபித்து விட்டுப் போய் விட்டாள்..

அகல்யாவிற்கு.. அந்த திருமண வரவேற்பின் விருந்து ருசிக்கவில்லை.. கசந்தது..



உன்னோடு இருந்த மணித்துளிகளை
உயிருள்ள வரை நினைக்க வைக்கும்..
அழகான ராட்சசி நீ....

பூக்கள் பரப்பப் பட்டிருந்த கட்டிலில் உட்கார்ந்திருந்த நரேந்திரன் எழுந்து வந்தான்.. அறைக்குள் வந்து நின்ற ஊர்மிளாவின் கால்கள் நடுநடுங்கின..

https://t.me/tamilpdfebooks

திரும்பி ஓடிப்போய் விடலாமா என்று கூட நினைத்தாள்.. பூங்குழலி.. அவள் கை பிடித்துச் சொன்ன இதமான அறிவுரைகளே அவளை நிறுத்தி வைத்தன..

"நாளைக்குக் காலையிலே நானும், உன் அப்பாவும் ஊருக்குக் கிளம்பிப் போய் விடுவோம் ஊர்மிளா.. இனி உன் வாழ்க்கை உன் புருசனோடுதான்.. அதனால அவர் மனதைப் புரிஞ்சு நடந்துக்கம்மா.."

"நான் அவர் மனதைப் புரிந்துக்கிட்டவதான்ம்மா.."

ஊர்மிளாவின் வார்த்தைகளை இதமான சிரிப்போடு தலையாட்டி மறுத்தாள் பூங்குழலி..

"இல்லைடா கண்ணம்மா.. ஆண்களின் மனசு ஒன்று போல இருக்காது.. இது நாள்வரை காதலனங்கிற முறையில நீ கண்டு வைத்திருக்கும் மனசே வேற.. இனிப் புருசன்ங்கிற முறையில நீ காணப்போகிற மனசுதான் உண்மையான அவரின் மனசு.."

"என்னம்மா இப்படிச் சொல்றீங்க..? மனசில ரெண்டு வகை இருக்குமா..?"

"இருக்கும்... கல்யாணத்துக்கு முன்னாலே எதையெல்லாம் மனசு ரசிச்சுச்சோ.. விரும்புச்சோ.. அதையே.. கல்யாணத்துக்கு அப்புறமா வெறுத்து ஒதுங்க வைக்கிற மனசு நம்ம மனசு.."

"அம்மா.."

ஊர்மிளாவின் கைவிரல்கள் நடுங்குவதை உணர்ந்து கொண்ட பூங்குழலி மகளுக்கு தைரியம்

https://t.me/tamilpdfebooks

கொடுக்கும் வகையில் அவளின் கை விரல்களைத் தட்டிக் கொடுத்தாள்...

"பயப்படாதேடா.. அவர் யார்..? உன் புருசன்.. நீ காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டவர்.. அவரைத் தவிர வேற யாருக்கும் கழுத்தை நீட்ட முடியாதுன்னு நீதானே சொன்ன..?"

"ஆனா அம்மா.. இந்தப் பணம்.. பகட்டு.."

"இதையெல்லாம் நீ ஏன் கண்டுக்கிற..? தாமரையிலைத் தண்ணீராய் இருக்க உனக்கு நான் சொல்லிக் கொடுக்கனுமா..? இதெல்லாம் இல்லாத ஒருத்தராத்தானே உன் புருசனை நீ நினைச்சுக் காதலிச்ச..? அதை மட்டும் அவருக்கு உணர்த்து.. போதும்.. உன் வாழ்க்கையிலே ஜெயிச்சுருவ.."

"நீங்க நாளைக்கே ஊருக்குப் போயாகனுமா..?"

"ஆமாண்டா செல்லம்.. இந்த ஒரு நாள் உன்கூட நாங்க இருந்ததே பெரிய விசயம்.. உனக்காக இருந்தோம்.. உனக்கு சொல்ல வேண்டியதைச் சொல்லி உன் புருசனிடம் அனுப்பி வைச்சு.. நீ வாழ்க்கையை வாழத் தொடங்கிட்டன்னு தெரிஞ்சபின்னாலேதானே என்னால கிளம்பிப் போக முடியும்..? அந்த ஒன்னுக்காகத்தான் ஒட்டாத இந்த சூழலிலே நாங்க இருந்தோம்.."

"அம்மா..."

"பயப்படாதே ஊர்மிளா... தாய்க்குத் தாயா... தகப்பனுக்குத் தகப்பனா உனக்கு உன் புருசன் இருப்பாரு..

https://t.me/tamilpdfebooks

எங்களை நீ மறந்திரனும்.. உன் புருசனை மட்டும் தான் நினைக்கனும்..”

பூங்குழலி எடுத்துச் சொன்னாள்.. மகளை குளிக்க வைத்து.. மெலிதான ஒரு செயினை மட்டும் அணிவித்து.. சன்ன ஜரிகையிட்ட சந்தன நிற பட்டுப்புடவையை உடுத்த வைத்து.. தலை முடியை தளர்வாகப் பின்னலிட்டு.. அதில் மல்லிகைச் சரத்தை தோளின் இருபக்கமும் வழியுமாறு வைத்து விட்டு.. கையில் பால் தம்பளரைக் குடுத்து அழைத்துக் கொண்டு போனாள்.. நரேந்திரனின் அறைவாசலை நெருங்கும்போது ஊர்மிளாவின் கால்கள் பின்னியதை உணர்ந்தவள் மெல்லிய சிரிப்புடன் மகளுக்கு தைரியம் சொல்லி அறைக்குள் அனுப்பி வைத்தாள்..

உள்ளே போன ஊர்மிளா அவளைக் கண்டதும் கட்டிலில் இருந்து எழுந்து வந்த நரேந்திரனைக் கண்டதும் வெடவெடத்தாள்.. பூங்குழலி சொல்லிய அறிவுரைகள் அவளை நிறுத்தி வைத்தாலும் அவள் விழிகளில் தெரிந்த மிரட்சி அவளைக் காட்டிக் கொடுத்தது..

அந்த மிரட்சியில் நரேந்திரன் புருவங்கள் முடிச்சிட்டன.. யோசனையுடன் அவளையே பார்த்தபடி அசையாமல் நின்றவன் அறைக் கதவை தாழிட்டு விட்டு அவளருகில் வந்தான்.. ஊர்மிளா நகர முனைந்தாள்.. கண்களில் அதட்டலுடன் அவள் கைபற்றி அவன் தடுத்தான்..

“ஏன் இப்படி சில்லியா பிஹேவ் பண்ற..?”

https://t.me/tamilpdfebooks

அவனுடைய கோபத்தில் அவள் உதட்டைக் கடித்தபடி தலை குனிந்தாள்.. அவள் கைவிரல்களைப் பிடித்து நீவி விட்டவனின் கைவிரல்கள் மெதுவாக உயர்ந்து அவள் தோள் தொட்டு தழுவிக் கொண்டன.. அவன் மார்பில் ஊர்மிளாவை அவன் சாய்த்துக் கொண்டான்.. அவளது தளிருடல் நடுங்கியதில் முதுகில் தட்டிக் கொடுத்து அமைதி படுத்தினான்..

"வாட் ஹேப்பன்..?" அவள் காதோரமாக அதட்டினான்..

என்னவென்று அவள் சொல்வாள்..? எதையும் சொல்ல முடியாமல் நடுங்கிக் கொண்டிருந்தவளைக் கட்டிலுக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தான்.. அவள் பக்கத்தில் உட்கார்ந்தவன் அவள் விரல்களைப் பிடித்து நீவ ஆரம்பித்தான்.. அதில் அவளின் நடுக்கம் கொஞ்சமாக குறைந்தது..

"நீ இவ்வளவு சாப்ட்டானவளா..?" வியப்புடன் கேட்டான்..

ஊர்மிளா பதில் சொல்லவில்லை.. அத்தனை தினங்களாக அவளைக் காதலித்தவன்.. அவளால் காதலிக்கப் பட்டவன்.. கணவன் என்ற உறவில் இணைந்த பின்பு உரிமையுடன் அவளைத் தொடுகிறான்.. அதை அனுமதிப்பதில் அவளுக்கு ஏன் அத்தனை நடுக்கம்..?

"மோப்பக் குழையும் அனிச்சம்ன்னு அனிச்ச மலரின் மென்மையைப் பற்றி படிச்சிருக்கேன். அதுகூட முகர்ந்து

https://t.me/tamilpdfebooks

பார்த்தால்தான் வாடுமாம்.. உன்னை இன்னும் முகரக்கூட இல்லையேடி.. நீ அதுக்குள்ள இந்த நடுங்கு நடுங்கிற..?”

விளையாட்டாய் கேட்ட வண்ணம் அவளை நெருங்கி அமர்ந்து கொண்டான்.. அவனது கரம் அவள் தோள் சுற்றியது.. குனிந்தவன் அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைச் சரத்தை முகர்ந்தான்..

“ஹ..” என்று கிறங்கினான்..

“மயக்கறடி..”

கட்டிலில் சரிந்து படுத்து அவளை இழுத்து மார்பில் போட்டுக் கொண்டான்.. பூமாலையாய் அவன் மார்பில் கிடந்தவளின் தோள் தடவியபடி காதோரமாக பேசினான்..

“உன் விருப்பமில்லாமல் எதுவும் நடக்காது ஊர்மிளா.. பயப்படாமல் இரு.. நான் யாருடி.. உன்னோட நரேன்.. என்கூட இருக்க உனக்கு இத்தனை பயமா..?”

‘அதானே...’

தன் தயக்கம் தளர்வதை வியப்புடன் உணர்ந்தாள் ஊர்மிளா.. அவன் மார்பின் இதமான வெப்பம் அவனுடைய நெருக்கத்தை அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது.. அவள் தோள் தடவிய அவன் கரங்களின் வலிமையான இறுக்கம் கலந்த ஸ்பரிசம் அவளுக்குள் கிளர்ச்சியை உண்டு பண்ணியது..

“நாம பேசிக்கிட்டு இருக்கலாம்.. சரியா..?”

அவள் காதோரமாக கிசுகிசுத்த நரேந்திரன் பேசிய பேச்சுக்கள் அவளை வேறு உலகத்துக்கு அழைத்துச்

https://t.me/tamilpdfebooks

சென்றன.. சிவந்த அவளது காது மடல்களை தன் பற்களால் நெருடிய அந்தக் கள்வன் கண்சிமிட்டிச் சிரித்தான்..

ஊர்மிளா அவனிடம் ஒன்றிக் கொண்டாள்.. அவளது நெருக்கம் அதிகரித்ததில் அவனது வேட்கை அதிகரித்தது.. அவளை முழுவதுமாக இழுத்து தன மேல் கிடத்திக் கொண்டான் அவன்.. பஞ்சனை போல அவன்மீது படுத்திருந்த ஊர்மிளா மலர்பொதி போல கனமின்றி இருந்ததில்..

"காற்றைச் சாப்பிடறியாடி.." என்று அவள் காதோரமாக கேட்டு வைத்தான் நரேந்திரன்..

ஊர்மிளா வெட்கிச் சிவந்தாள்... அவள் மீது சுற்றியிருந்த நரேந்திரனின் கரங்கள் ஊர்ந்து அவள் மேனியெங்கும் பரவிப் படர்ந்ததில் அவளது உடல் கொதி கலனாக ஆனது..

காற்றுக் கூடப் புக முடியாத இடைவெளியில் அவளைத் தழுவியிருந்தவனின் உடலோடு உடல் பிணைந்து கிடந்த அந்த நிலையில் அவள் காதோரமாக அவன் சொன்ன..

"உனக்குப் பிடிக்கலைன்னா வேணாம்.. நாம சும்மா பிரண்ட்லியா பேசிக்கிட்டு இருப்போம்.." என்ற வாக்குறுதி அபத்தமாக தோன்றி வைத்தது..

"ம்ப்ச்.." அவள் அதிருப்தியுடன் முணுமுணுத்தாள்..

"என்னடி..? கன்வினியண்டா இல்லையா..? இப்படிப் படுத்துக்க.."

https://t.me/tamilpdfebooks

அவளை அக்கறையுடன் விலக்கி படுக்க் வைத்தவன் அவளை நெருக்கி அணைத்துக் கொண்டதில் அவளுடைய வசதியைப் பற்றிய அவனது அதீத அக்கறை புலப்பட்டது..

ஊர்மிளா கிளர்ந்தாள்.. அவள் கன்னம் தொட்ட அவன் கையை அவள் விலக்கவில்லை... அவள் கன்னத்திலே அவன் முத்தமிட்டபோது தடுக்கவில்லை.. அவளது இதழோடு அவன் இதழ் சேர்த்த போது உராய்ந்த அவனது மீசையின் ஸ்பரிசத்தில் அவளது நடுக்கம் முற்றிலுமாக விலகி விட்டது..

"ஊர்மிளா.." அவள் காதோரமாக அவன் முணுமுணுத்த போது..

"ம்ம்ம்.." என்ற முணுமுணுப்பை பதிலாக அவள் தந்தாள்..

அந்த முணுமுணுப்பில் ஒளிந்திருந்த அனுமதிப்பில் நரேந்திரன் மனதுக்குள் நகைத்துக் கொண்டபடி அவளை ஆக்ரமித்தான்.. அவள்மீது சரிந்து அவன் படர்ந்து பரவிய போது.. அவளது உணர்வுகள் கரை உடைந்தன..

ஊர்மிளா கண்களை மூடிக் கொண்டாள்..

அதிகாலையில் அவள் கண் விழித்த போது அவளது சேலை கட்டிலுக்கு அடியில் சுருண்டு கிடந்தது.. நரேந்திரனின் வலிமையான கரங்கள் அவளை வளைத்திருந்தன.. வெகு அருகாமையில் தெரிந்த அவன் முகத்தில் அவள் மயங்கிப் போனாள்.. ராத்திரிப் பொழுதில்

https://t.me/tamilpdfebooks

நடந்தவைகளை மனம் நினைவு கூர்ந்ததில் வெட்கத்துடன் அவன் கைகளை விலக்கப் போனாள்..

"ம்ம்ம்.."

அவன் புரண்டு படுத்தான்.. விழித்து அவள் முகம் பார்த்தான்.. கண்சிமிட்டினான். ஊர்மிளாவின் முகத்தில் லஜ்ஜை வந்தது.. அவள் உதட்டைக் கடித்தபடி எழுந்து கொள்ளப் போனாள்.. அவள் கை பிடித்து அவன் நிறுத்தினான்..

"எங்க போற..?"

அவன் கேள்வியில் அவளது வெட்கச் சிகப்பு அதிகமானது..

"விடிஞ்சிருச்சு.." முணுமுணுத்தாள்..

"ஸோ.. வாட்..?" அவள் மேல் அவன் கைவிழுந்தது..

"ஸோ வாட்டுன்னா என்ன அர்த்தம்..? எழுந்துக்க வேணாமா..?" அவன் கரத்தை விலக்க முடியாத தவிப்புடன் அவள் சொன்னாள்..

"விடிஞ்சா எழுந்துக்கணும்னு ஏதும் சட்டமிருக்கா..?" அவளை விடாமல் அவள் காதோரமாக அவன் கேள்வி கேட்டான்..

அவன் பிடித்த அந்த அடத்தை அவளுக்குப் பிடித்திருந்தது.. முதல் நாள் இரவின் இனிமையான நினைவுகள்.. அவன் முற்றிலுமாக அவளுடையவனாகி விட்டதை அறிவுறுத்தின...

https://t.me/tamilpdfebooks

அவன் முகத்தில் பிடிவாதமாக படிந்த முரட்டு முடிக்கற்றைக்குள் விரல் விட்டு கோதினாள் ஊர்மிளா.. அவள் பக்கமாக நகர்ந்து படுத்த நரேந்திரன் முற்றிலுமாக அவனை அவள் கைக்குள் ஒப்படைத்தான்..

ஒரு பெண்ணின் ஸ்பரிசத்திற்கு இவ்வளவு சக்தியா..?

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.. அவன் முடிமீது அலைந்த அவள் கைகளுக்கு முடியை கொடுத்தவன்..

“உனக்கு தைரியம்டி..” என்றான்..

“எதுக்காம்..?” என்றாள் அவள்..

“தி கிரேட் நரேந்திரனின் முடியைப் பிடிச்சு ஆட்டறயே..”

“ஹலோ.. நானொன்னும் தி கிரேட் நரேந்திரனின் முடியைப் பிடிச்சு ஆட்டலை.. எனக்கு மட்டும் சொந்தமான என் புருசன் நரேந்திரனின் முடியைப் பிடிச்சுத்தான் ஆட்டறேன்..”

ஒற்றை விரலை உயர்த்தி அவனை மிரட்டுவதைப் போல சொன்னாள் ஊர்மிளா.. நரேந்திரன் அதை ரசித்தான்..

அவள் மீதான மயக்கம் அதிகரித்ததில் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் அவன்.. விடுபட முடியாமல்.. விடுபட விரும்பாமல்.. விருப்பத்துடன்

https://t.me/tamilpdfebooks

அவளும் அவனிடம் சிக்கிக் கொண்டாள்.. அவன் தெரிய வைத்திருந்த அனைத்தையும் திரும்பவும் அவளுக்கு தெரிய வைக்க ஆரம்பித்தான்..

ஊர்மிளாவின் இமைகள் மூடிக் கொண்டன..

திருப்தியுடன் நரேந்திரன் விலகிப் படுத்தபின்பு விலகி எழுந்து குளியலறைக்குள் புகுந்தவளின் மனம் முழுவதும் சந்தோசம் நிரம்பியிருந்தது.. குளித்து முடித்து.. உடைமாற்றி.. ஈரக்கூந்தலை தளர்வாக பின்னலிட்டு.. கீழே இறங்கிச் செல்லும் வரை அந்த சந்தோசம் அவள் மனதில் நிலை கொண்டிருந்தது..

"பிஞ்சாக நானிருந்தேனே..
பெண்ணாக மாற்றி விட்டானே..
அஞ்சாமல் அணைத்து விட்டானே..
அச்சாரம் கொடுத்து விட்டானே..
அம்மம்மா.. ஏனடி தோழி..
சொன்னானே ஆயிரம் சேதி..
கண்ணாலே கண்டது பாதி..
தன்னாலே வந்தது மீதி..
அம்மம்மமா....."

அவளையறியாமல் ஆழ்ந்து பாடியபடி படிகளில் இறங்கியவள் யதேச்சையாக நிமிர்ந்து பார்த்து விட்டு அப்படியே நின்று விட்டாள்..

படிகளின் முடிவிலிருந்த ஹாலில் அவளையே துவேசமாக பார்த்தபடி நின்றிருந்தாள் அகல்யா.. அவள்

https://t.me/tamilpdfebooks


கண்களில் தெரிந்த வெறுப்பில் ஊர்மிளாவின் பாடல் பாதியிலேயே 'டாட்டா' சொல்லி விட்டு காணாமல் போய் விட்டது..

மனதுக்குள் பயம் எட்டிப் பார்க்க.. சோமசுந்தரம் வந்து அங்கு நின்று அச்சமில்லை.. அச்சமில்லை.. அச்சமென்பதில்லையே என்று முண்டாசுக் கவிஞன் போல மீசையை முறுக்கிக் கொண்டு பாடி அவளுடைய அச்சத்தை துரத்தி விட்டார்..

தந்தை சொல்லிக் கொடுத்த பாரதியின் கவி வரிகளை இறுக்கிப் பிடித்தபடி படியிறங்கிய ஊர்மிளா எதிரில் நிற்பது மாமியாராயிற்றே என்ற மரியாதையுடன் தயங்கி நின்றாள்.. அகல்யா சீறினாள்..

"என்ன..? ஒருநாள் ராத்திரியிலேயே கோட்டையைப் பிடித்து கொடியை நாட்டி விட்டதா மனதுக்குள்ள நினைப்பா..? இந்த ஒரு நாளைக்குள்ள எல்லாம் முடிஞ்சிராது.. இன்னும் நிறைய நாளிருக்கு.. எல்லா நாள்களும் உன்னோட நாள்களாக இருக்காது.."

https://t.me/tamilpdfebooks



நீ சிரித்தால் நான் சிரிக்கும்
நிலையில் என்னைத் தள்ளிவிட்ட
அழகான ராட்சசி நீ....

ஊர்மிளா அசையாமல் நின்றாள்... அவள் செவிகளில் விழுந்த வார்த்தைகளை அவளால் நம்பவே முடியவில்லை.. இப்படிப்பட்ட அநாகரிக வார்த்தைகளைக் கூட ஒருவரால் பேச முடியுமா..? அதுவும்.. ஒரு மருமகளைப் பார்த்து மாமியார் பேசுகிற வார்த்தைகளா இவை..?

'ச்சீ..' மனதுக்குள் அருவெறுத்தாள் ஊர்மிளா..

முதலிரவு முடிந்து வெளியே வருகின்ற புது மருமகளிடம் இந்த ஒரு இரவில் கோட்டையைப் பிடித்து கொடியை நாட்டி விட்டதாக சந்தோசப் படாதே என்று பேசும் இவள் எந்த மாதிரியான பெண்மணி..?

"அண்ணி..."

மாடிப்படிகளில் குதித்து இறங்கி வந்த அர்ச்சனாவின் குரலில் அகல்யாவின் முகபாவம் மாறியது..

"குட்மார்னிங் அண்ணி.. ஹேவ் எ ஸ்வீட் டே.." சிரித்த முகமாக சொன்னாள் அர்ச்சனா..

https://t.me/tamilpdfebooks

அகல்யாவின் அநாகரிகமான வார்த்தைகளினால் காயப் பட்டிருந்த மனதிற்கு அர்ச்சனாவின் வார்த்தைகள் மருந்தைத் தடவியதைப் போல இதமாக இருந்தன..

"குட் மார்னிங் அர்ச்சனா.." மலர்ந்த முகமாக சொன்னாள்..

"என்ன.. இங்கே நின்றுக்கிட்டு மாமியாரும் மருமகளும் என்ன ரகசியம் பேசறிங்க..?" என்று கேட்டாள் அர்ச்சனா..

"ம்ம்ம.. கோட்டையைப் பிடித்து கொடியை நாட்டறதைப் பத்தி பேசிக்கிட்டு இருந்தோம்..." அகல்யாவின் முக பாவத்தை அளவிட்டபடி சொன்னாள் ஊர்மிளா..

அகல்யாவின் முகம் வெளுத்தது.. எங்கே ஊர்மிளா அர்ச்சனாவிடம் அகல்யா பேசியதைச் சொல்லி விடுவாளோ என்று அவள் பயந்த பயம்.. அவள் விழிகளில் தெரிந்தது..

'அம்ஃது..' பல்லைக் கடித்தாள் ஊர்மிளா..

"எந்த ஊர் கோட்டையை அண்ணி..?" அர்ச்சனா ஆவலுடன் வினவினாள்..

"எல்லாம் உன் சொந்த ஊர் கோட்டையைத்தான்.." என்றாள் ஊர்மிளா..

"சொந்த ஊர்ன்னா.. இந்த ஊரையா சொல்கிறிங்க.. இங்கே எந்தக் கோட்டையை சொல்கிறீங்க...?" குழப்பத்துடன் வினவினாள் அர்ச்சனா..

https://t.me/tamilpdfebooks

"எந்தக் கோட்டையென்னு சொல்லிரட்டுமா அத்த்தை.."

அத்த்தையில் அழுத்தம் கொடுத்து அகல்யாவிடம் வெகு வினயமாக அனுமதி கேட்டாள் ஊர்மிளா..

அவளின் மறைமுக மிரட்டலில் அகல்யாவுக்குள் வன்மம் வந்தது.. 'நேத்து வந்தது.. என்னமா போட்டுத் தாக்கறா..' அவள் பல்லைக் கடித்தாள்..

"என்னம்மா..?" அர்ச்சனா அகல்யாவின் பக்கம் திரும்ப..

"உன் அண்ணி உன்னைக் கேலி பண்றா.. இது கூடத் தெரியாம அப்பாவியாய் இருக்கிறயே.. என் வயிற்றில் பிறந்ததுக்கு சூதுவாது தெரியாதுங்கிறதை அப்பப்ப நீரூபிச்சுக்கிட்டு இருக்க.." என்று அலுத்துக் கொண்டாள் அகல்யா..

"அப்படியா அண்ணி..?" என்று கேட்ட அர்ச்சனா விடம் லேசாக கண்சிமிட்டி சிரித்தாள் ஊர்மிளா..

"கேலிதான்.. ஆனால் முழுவதும் கேலியில்லை.. நீ அருமையான பெண் அர்ச்சனா.. கள்ளம்.. கபடம் இல்லாத தேவதை.. இதெல்லாம் கடவுள் உனக்குக் கொடுத்த வரம்.. அத்தையின் வயிற்றில் பிறந்ததால் வந்த வரமில்லை.."

நாத்தனாரைப் புகழ்வதைப் போல அகல்யாவைச் சாடி விட்டாள் ஊர்மிளா.. அதில் அர்ச்சனாவின் முகம் மலர்ந்தது.. அகல்யாவின் முகம் சிறுத்தது..

https://t.me/tamilpdfebooks

அதற்கு மேலும் அங்கே நின்று அகல்யாவின் முகத்தைப் பார்க்க விருப்பமில்லாததினால்..

"வா அர்ச்சனா.. காபி சாப்பிடலாம்.." என்று நாத்தனாரை கூட அழைத்தபடி சமையலறையைத் தேடிப் போய்விட்டாள் ஊர்மிளா..

அதில் அடுத்த அடி அகல்யாவுக்கு விழுந்தது.. முதல் நாள்தான் திருமணமாகி வந்த மணப்பெண்ணைப் போல இல்லாமல் என்னவோ காலம்.. காலமாய்.. அந்த வீட்டில் புழங்கிக் கொண்டிருக்கும் எஜமானியைப் போல ஊர்மிளா வெகு அதிகாரமாக சமையலறைக்குப் போவதாக அவள் நினைத்தாள்..

ஊர்மிளாவுக்கு அந்த நினைவெல்லாம் இல்லை.. அவள் என்னவோ அந்த இடத்தைவிட்டு அகன்றால் போதும்.. அகல்யாவின் முன்னால் நிற்கும் கொடுமையிலிருந்து தப்பித்தால் போதும் என்ற நினைவுடன்தான் அர்ச்சனாவை அழைத்துக் கொண்டு போனாள்..

பொதுவுடைமை பேசுகிறவரின் மகளுக்கு அதிகாரத்தின் மீது என்ன நாட்டம் இருக்கப் போகிறது..?

பூஜையறையின் முன்னால் தேங்கி நின்ற ஊர்மிளா உள்ளே போனாள்.. விளக்கேற்றி வணங்கினாள்.. அவளின் தீபாதரனை காட்டிய மணியின் ஒலியில் மாடியிலிருந்து வந்த அருண்குமார் ஆச்சரியப்பட்டான்..

"எங்க வீடா இது..?"

https://t.me/tamilpdfebooks

கணவரின் தம்பி என்பதினால் மரியாதையுடன் முறுவலித்த ஊர்மிளா.. தீபாதரனை ஒளியைத் தொட்டு வணங்கி.. நெற்றியில் குங்கும் இட்டுக் கொண்டு வெளியே வந்தாள்..

"ஏன் அப்படிச் சொல்கிறிங்க..?" என்று கேட்கவும் செய்தாள்..

"அம்மாவுக்கு இந்தப் பழக்கமெல்லாம் இல்லை அண்ணி.. வீட்டில வேலை செய்கிறவங்கதான் விளக்கேற்றி வைப்பாங்க.." அருண்குமார் குட்டை உடைத்தான்..

சற்றுமுன் அகல்யா பேசிய பேச்சை நினைவு கூர்ந்த ஊர்மிளா 'இப்படிப்பட்ட.. பேச்சைப் பேசுகிறவர்களிடம் இதுபோன்ற வளமைதானே இருக்கும்..?' என்று நினைத்துக் கொண்டாள்..

"நீங்க காபி சாப்பிட்டிங்களா..?"

பேச்சை மாற்ற நினைத்து அவள் கேட்டகேள்வியில் அகல்யா பொங்கினாள்..

"மாடியை விட்டு கீழே இறங்கி வந்ததில இருந்து எல்லாத்தையும் பார்த்து இந்த ஒரு கேள்வியைத்தான் நீயும் கேட்கிற.. எல்லாரும் இல்லைங்கிற பதிலைத்தான் சொல்கிறாங்க.. நீயும் காபி கலந்து கொடுத்த பாடா இல்லை.. நாங்களும் காபி குடிச்ச பாடாய் இல்லை.. எப்படி.. வெறும் வாய் பந்தலிலேயே தோரணம் கட்டி விடலாம்ங்கிற உத்தேசமா..?"

https://t.me/tamilpdfebooks

அகல்யாவின் பொங்கலுக்கு அர்ச்சனாவிடமிருந்து பதில் வந்ததுதான் ஆச்சரியம்..

“ஏம்மா.. எந்தக் காலத்திலே நீங்க காபி கலந்து கொடுத்தீங்க.. உங்களுக்கே பெட்காபி ரூமைத் தேடி வரனும்.. இன்னைக்கு என்னவோ அதிசயமா காலையி லேயே கண்விழிச்சு வந்து நிற்கறிங்க.. இல்லைன்னா உச்சிப் பொழுது வரைக்கும் தூங்கிக்கிட்டு இருப்பீங்களே.. நம்ம வீட்டிலே காபி கலந்து கொடுக்கத்தான் வனிதா இருக்காளே.. எதுக்காக நம்ம அண்ணி காபி கலந்து கொடுக்கனும்..?”

“அதானே..” அருண்குமாரும் சேர்ந்து கொண்டான்..

‘இதுக ரெண்டும் என் வயித்திலே பிறந்ததுகளா..?’ அகல்யா வெறுத்துப் போனாள்..

“ஆயிரம் தான் வீட்டிலே வேலையாளுக இருந்தாலும்.. நமக்கும் சமைக்கத் தெரிஞ்சிருக்கனுமில்ல.. உங்க அண்ணி அருமையா சமைப்பா.. காபி கலக்கிறது என்ன.. விருந்தையே ரெடி பண்ணிக் கொடுக்கிறதா இருந்தாலும் அயர மாட்டா..” என்றபடி காபிக் கோப்பைகள் அடங்கிய டிரேயுடன் சமையலறையை விட்டு வெளியே வந்தாள் பூங்குழலி..

“ஆண்ட்டி.. நீங்க எதுக்கு இதையெல்லாம் செய்கறிங்க..?” அவசரமாக ஒரு கோப்பையை எடுத்துக கொண்டாள் அர்ச்சனா..

“நம்ம வீட்டில செய்கிறதுக்கு கணக்குப் பார்க்கனுமா..?” இன்முகத்துடன் அருண்குமாரிடம் டிரேயை நீட்டினாள் பூங்குழலி.. அவனும் எடுத்துக் கொண்டான்..

https://t.me/tamilpdfebooks

"நம்ம வீடா..?" அகல்யா முகம் சுளித்தாள்..

"இது எங்க வீடுங்க.. நீங்க உங்க பெண்ணை நேற்றுக் காலையில என் மூத்தமகனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கீங்க.. விருந்தாளிகளெல்லாம் நம்ம வீடுன்னு சொன்னா வீடு தாங்காது.."

அகல்யாவின் பேச்சில் அருண்குமார் முகம் சுளித்தான்..

"அம்மா.. அவங்க ஒன்னும் இந்த வீட்டை விலை பேசி விற்கிறதுக்காக நம்ம வீடுன்னு சொல்லலை.. வேலை செய்கிறதுக்குத்தான் நம்ம வீடுன்னு சொன்னாங்க.. எல்லாத்தையும் குதர்க்கமாவே எடுத்துக்குவீங்களா..?" தாயை கடிந்து கொண்டவன் பூங்குழலியிடம்..

"சாரி ஆண்ட்டி.. அம்மாவுக்கு பேசத் தெரியலை.." என்று மன்னிப்புக் கேட்டான்..

'இதுக்கா பேசத் தெரியாது..?'

பூங்குழலிக்கும்.. ஊர்மிளாவுக்கும் ஒரே நேரத்தில் இந்தக் கேள்வி மனதில் எழுந்தது... தாயும்... மகளும் ஒருவரையொருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டார்கள்..

"இருக்கட்டும் தம்பி.. நான் இதையெல்லாம் மனசில வைச்சுக்க மாட்டேன்.." என்றாள் பூங்குழலி..

'என்னது.. இத்தனை பெரிய பேச்சைக் கூட இவ மனசில வைச்சுக்க மாட்டாளா..? இதை மனசில வைச்சுக் கலைன்னா வேற எதைத்தான் மனசில வைச்சுக்கப்

https://t.me/tamilpdfebooks

போறா..? பேச்சுப் பொறுக்காம ஒதுங்கி ஓடிப் போயிருவான்னு பாத்தா இவ அசர மாட்டேங்கிறாளே.. பேசற பேச்சில பெங்களூர் பக்கமே தலைகாட்டனும்கிற எண்ணம் இவளுக்கு வந்துரக் கூடாதுன்னு பார்த்தா இவ எதையும் மனசில வைச்சுக்க மாட்டேன்னு எந்தலையில கல்லைத் தூக்கிப் போடறாளே..'

அகல்யாவிற்கு தலை வலிக்க ஆரம்பித்தது.. அதை போக்கக் கொடுக்கும் அரு மருந்தாய் காபிக் கோப்பையை அவளிடம் நீட்டினாள் பூங்குழலி..

"காபி சாப்பிடுங்க அண்ணி.. முகமே வெடுவெடுன்னு இருக்கு.." பரிவாகச் சொல்லியவளை..

'இவ என்னைக் கிண்டல் பண்றாளோ..' என்று பற்றுப் பார்த்தாள் அகல்யா..

சலனமில்லாத பூங்குழலியின் சாத்வீகமான முகத்திலிருந்து அவளால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை..

'இது முகமே முள்ளைக் கட்டி விட்டதைப் போல வெடுவெடுன்னுதான் இருக்குது... இதைப் புதிசா சொல்லிட்டதைப் போல இந்தப் பார்வை பார்க்குதே..'

அங்கே வந்த சோமசுந்தரம் நினைத்துக் கொண்டார்.. அவர் கையிலும் காபிக் கப்பைக் கொடுத்த பூங்குழலி.. நீதமிருந்த இரண்டு கப் காபிக் கோப்பைகளுடன் டிரேயை மகளின் கையில் திணித்தாள்..

https://t.me/tamilpdfebooks

"மாப்பிள்ளைக்கு காபியைக் கொடுத்துட்டு... அப்படியே நீயும் குடிச்சிரும்மா.. மாப்பிள்ளையைக் கவனிச்சுக்க.. காபி குடிக்கிறப்ப பேப்பர் படிச்சாலும் படிக்கலாம்.. எதுக்கும் பேப்பரையும் எடுத்துக்கிட்டுப் போ.."

பூங்குழலியின் சாதுர்யத்தில் அகல்யா முள்ளின் மேல் உட்கார்ந்திருப்பதைப் போலத் தவித்துப் போனாள்..

'இந்தப் பொம்பளை மகளுக்கு என்னமா சொல்லிக் கொடுக்குது.. சும்மாவே இந்த ஊர்மிளா ஆட்டி வைக்கிறபடி நரேன் ஆட ஆரம்பிச்சிருக்கான்.. இதில அவனுக்கு வேண்டியதை பார்த்துப் பார்த்து செய்யவும் ஆரம்பிச் சுட்டான்னா.. வேற வினையே வேண்டாம்..'

அவசரமாக ஊர்மிளாவை தடுத்து நிறுத்தப் பார்த்தாள் அவள்.. "நரேனுக்கு ரூமுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்தா பிடிக்காது.. அவன் காலைக் காபியைக் குடிச்சுக்கிட்டே பேப்பர் பார்க்க கீழே ஹாலுக்குத்தான் வருவான்.."

அவள் பேச்சில் ஊர்மிளா தயங்கி நிற்க.. ஒரு கணவனுக்கு காலைக் காப்பியைக் குடுக்கக்கூட மனைவியாகப் பட்டவளுக்கு இத்தனை தடைகள் வர வேண்டுமா என்று நொந்து போனாள் பூங்குழலி..

"இல்லையே அம்மா.."

எதிர்பாராத விதமாக அருண்குமாரிடமிருந்து அவளுக்கு உதவி கிடைத்தது..

https://t.me/tamilpdfebooks

"அண்ணனுக்கு ரூமைவிட்டு வெளியே வரவே பிடிக்காதே.. அவர் ரொம்பவும் பிரைவஸி மெயின்டெயின் பண்ணுகிறவராச்சே.. இந்நேரத்துக்கு காபியும்.. பேப்பரும் அவர் ரூமுக்குப் போயிருக்கனுமே.. சமயங்களில டிபனைக் கூட அவர் ரூமுக்கு கொண்டு வரச் சொல்லிருவாரே.. டைனிங் ஹாலுக்கு ரொம்ப ரேராத்தானே வருவார்..?"

அருண்குமாரின் கண்டிப்பான பேச்சில் விடுதலை உணர்வுடன் அந்த இடத்தை விட்டு அகன்று மாடிப் படிகளில் தாவி ஏறினாள் ஊர்மிளா.. தாமதித்தால் அவள் கையில் இருக்கும் காபிக் கோப்பையை அகல்யா பறிமுதல் பண்ணி விடுவாளோ என்ற பயத்துடன் மாடியேறும் மகளைப் பார்த்த பூங்குழலியின் மனம் வலித்தது..

இனி தினந்தோறும் இந்தப் போராட்டத்தை அவளின் மகள் அனுபவிக்க வேண்டுமா..? கட்டிய கணவனுக்கு காபி கொண்டு போகக்கூட போராட வேண்டுமென்றால் அவள் மகளின் நிலை என்ன ஆவது..?

ஊர்மிளா கதவைத் திறந்து கொண்டு உள்ளே போன போது நரேன் எழுந்திருந்தான்.. குளியலறைக்குள் கேட்ட தண்ணீர் சப்தத்தில் ஊர்மிளா கையிலிருந்த காபி டிரேயை அங்கிருந்த டீப்பாயில வைத்து விட்டு கதவை அடைத்துத் தாழிட்டாள்..

யார் கண்டது..? அகல்யா பின் தொடர்ந்து வந்து அந்த அறைக்குள் பிரவேசித்தாலும் பிரவேசிக்கலாமல்லவா..? அவள் எதையும் செய்வாளே..

https://t.me/tamilpdfebooks

மாடியை விட்டு கீழே இறங்கிப் போய் திரும்பி வருவதற்குள் மனதளவில் களைத்துப் போயிருந்தாள் ஊர்மிளா.. சோர்வுடன் கண்களை மூடியிருந்தவளின் கன்னம் தொட்டு தடவின இரண்டு கரங்கள்..

'நரேன்..!'

ஊர்மிளாவின் சோர்வெல்லாம் பறந்து விட்டது.. புத்துணர்வுடன் அவள் கண்திறந்தாள்..

"என்னடி.. நைட் தூக்கமில்லையா..?"

நரேந்திரன் கண் சிமிட்டியதில் முகம் சிவந்தாள் அவள்..

"இதை நாங்களும் கேட்போமில்ல.." என்றபடி காபியையும் பேப்பரையும் அவனிடம் நீட்டினாள்..

"குட்.. அருமையான பெண்டாட்டிடீ நீ.. எனக்கு என்ன தேவையோ அதைக் கொண்டு வந்திருக்கிற.." மனைவியை மெச்சியபடி அவற்றை வாங்கிக் கொண்டான் நரேந்திரன்..

பூங்குழலியின் வழி காட்டுதலால்தான் இந்தப் பாராட்டு கிடைத்திருக்கிறது என்ற நன்றியுணர்வு ஊர்மிளாவின் மனதில் எழுந்தது.. இதையெல்லாம் அவல்யாதான் சொல்லியிருக்க வேண்டும்.. எங்கே.. அவள்தான் முதலிரவை கணவனுடன் கழித்ததிற்கே கோட்டையைப் பிடித்து கொடியை நாட்டி விட்டாயா என்று கேட்டு வைக்கிறாளே.. இந்த வளமையையெல்லாம் சொல்லிக் கொடுத்து விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பாள்..

https://t.me/tamilpdfebooks

"ஆனா.. நீ வர லேட்டாகிருச்சே.. ஏன்..?" பேப்பரில் இருந்து பார்வையை விலக்காமல் கேட்டான் நரேந்திரன்..

"ஊம்..? ஏழு கடலையும்.. ஏழு மலையையும் தாண்டி வரனுமில்ல.. அதுதான் லேட்.." அலுப்புடன் சொன்னாள் ஊர்மிளா..

"புரியலை.." பேப்பரிலிருந்து பார்வையை விலக்கி அவள் முகத்தில் பார்வையைப் பதித்தான் நரேந்திரன்..


ஊர்மிளா பெருமூச்சு விட்டாள்.. திருமணமாகி ஒருநாள் தான் ஆகியிருக்கிறது.. அதற்குள் கணவனின் சித்தியைப் பற்றி புகார் சொன்னால் அவள் கணவன் அவளை என்னவென்று நினைப்பான்..?

அவனுக்கும்.. அவளுக்கும் இடையே மாபெரும் அகழியாக அகல்யா இருக்கிறாள் என்ற உண்மையைச் சொல்ல முடியாமல்..

"ஒன்றுமில்லை.." என்று சொன்னாள் ஊர்மிளா..

அதுதான் அவள் செய்த மிகப்பெரிய தவறு.. அவள் சொல்லியிருக்க வேண்டும்.. அப்படிச் சொல்லியிருந்தால் ஒருவேளை அவள் நரேந்திரனைப் பிரிந்து செல்ல வேண்டிய நிலைமை வந்திருக்காதோ என்னவோ....

https://t.me/tamilpdfebooks



கனி கொய்ய வந்தவனின்
மனம் கொய்து மயக்கிவிட்ட...
அழகான ராட்சசி நீ....

"ஒன்றுமேயில்லையா..?"

ஊர்மிளாவை அருகே இழுத்து அவள் கண்களுக்குள் உற்றுப் பார்த்து ரகசியக் குரலில் நரேந்திரன் கேட்ட போது ஊர்மிளாவுக்கு அனைத்தும் மறந்து விட்டது.. அவன் மட்டுமே நினைவிலிருக்க.. அவள் கிறங்கிப் போனவளாக அவன் தோள் சாய்ந்தாள்.. அவள் கண்களில் தெரிந்த அந்தக் கிறக்கத்தில் அவன் கிறங்கிப் போனான்... அவளுடைய அழுதவாயில் இதழ் பதித்தவனின் அருகாமையில் ஊர்மிளாவின் மனதிலிருந்த சஞ்சலங்கள் அகன்று ஓடி விட்டன..

அவன் தோள்மீது சாய்ந்திருந்தவளின் ஈரக் கூந்தல்.. அவன் தோள் தழுவி அவன் கைமீது புரண்டது.. அந்த ஈர ஸ்பரிசத்தில் நரேந்திரனுக்குள் நூதனமான உணர்வுகள் ஏற்பட்டன.. அவள் கூந்தலின் மென்மையில் முகம் பதித்து புரட்டினான்.. அவள் தோள்மீது அவன் கரம் விழுந்து சுற்றிக் கொண்டது..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா உரிமையுடன் அவன் விரல்களோடு தன் விரல்களைப் பிணைத்தாள்.. சொல்ல அவளுக்கு ஏராளமான கதைகள் இருந்தன.. கேட்க அவனுக்குப் பிடித்திருந்தது.. நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தவர்கள் மணியைப் பார்த்து விட்டு சிரித்துக் கொண்டே எழுந்தார்கள்..

"இந்நேரம் நான் என் கம்பெனியில் இருந்திருக்கனும்.." என்றான் நரேந்திரன்..

"கிளம்பியிருக்க வேண்டியதுதானே... நானா வேண்டாம்ன்னு சொன்னேன்.." ஊர்மிளா மேல் பார்வையாய் அவனைப் பார்த்தபடி அவன் மார்பில் செல்லமாக குத்தினாள்..

"போக மனசில்லைடி.." நரேந்திரனின் விரல்கள் அவளுடைய ஈரக் கூந்தலுக்குள் நுழைந்து அதன் இழைகளுக்குள் அளைந்து விளையாடின.. ஊர்மிளா கண்மூடி அவன் மார்பில் சாய்ந்தாள்..

அந்த நொடிகளில் அவர்கள் உணர்ந்த நெருக்கத்தை நீடிக்க அவர்கள் விரும்பினார்கள்.. நரேந்திரன் ஊர்மிளாவின் காதுகளில் ரகசியமாக கிசுகிசுக்க.. அவள் முகம் சிவந்து அவனை செல்லமாகக் கிள்ள என்று அவர்களுக்கேயுரிய பிரத்யேகமான நொடிகளாக அவை அமைந்து கொண்டிருந்தன..

ஒரு வழியாக நரேந்திரன் குளியலறைக்குள் புகுந்தான்.. அவன் பண்ணிய அழிச்சாட்டியத்தை மனதுக்குள் நினைத்து ரசித்தபடி தன்னிச்சையாக

https://t.me/tamilpdfebooks

தலையை ஆட்டிய ஊர்மிளா உடைமாற்றும் அறையிலிருந்த அலமாரியைத் திறந்து.. அவனுக்கான உடைகளைத் தேர்ந்தெடுத்து வைத்தாள்..

குளியலறை கதவு திறந்தது.. ஈரத் தலையுடன் வெளியே வந்தான் நரேந்திரன்..

"என்ன இது..? இப்படியா சின்னப் புள்ளையாட்டம் தலையை நனைச்சுக்கிட்டு வருவீங்க..?"

செல்லமாக கடிந்தபடி.. துவாலையை எடுத்து அவன் தலையைத் துவட்டி விட ஆரம்பித்தாள் ஊர்மிளா.. இயல்பான அந்தச் செய்கையில் நரேந்திரன் நெகிழ்ந்து போனான்.. அவன் தலையைத் துவட்டி விட்ட அவளின் கனிவு அவனைக் கட்டிப் போட்டது..

அவனுக்காக அவள் தேர்ந்தெடுத்து வைத்திருந்த உடைகளை அவன் போட்டுக் கொண்டபோது மையலாக உதட்டைச் சுழித்தபடி சட்டையின் பொத்தான்களை அவள் போட்டு விடத் தொடங்கினாள்.. அவன் கழுத்தில் டையை மாலையாக அவள் போட்டு விட்டபோது..

"நான் உனக்குத் தாலி கட்டினேன்னு நீ எனக்கு டை கட்டி விடப் பார்க்கறியா..?" என்று கண்சிமிட்டினான் நரேந்திரன்..

"ஆஹா..! இவர் கட்டுக்குள் அடங்கிற ஆள்தான்.." அவ்வள் அழகு காட்டினாள்..

நரேந்திரன் ஊர்மிளாவின் இரு கைகளையும் பிடித்து இழுத்து.. அவன் இடுப்பைச் சுற்றி வளைக்க வைத்தான்..

https://t.me/tamilpdfebooks

என்னவென்று தெரியாதபோதும் அவன் இடுப்பைச் சுற்றி வளைத்து இறுக்கிக் கொண்டாள் ஊர்மிளா..

"இப்பச் சொல்லு.. உன் கட்டுக்குள் நான் அடங்கியிருக்கிறேனா.. இல்லையா..?" நரேந்திரன் மீண்டும் கண்சிமிட்டினான்..

"பெரிய ஆளுதான்.."

சிருங்காரமாய் அவனைப் பார்த்தபடி விலக மனமில்லாமல் விலகினாள் ஊர்மிளா.. அவள் பார்வையில் நரேந்திரனின் மனம் நிலை கொண்டிருந்தது.. அவனைக் கண்டதும் அவள் கண்களில் தெரிகின்ற மயக்கத்தில் அவன் மயங்கினான்..

"இனியாவது சாப்பிடப் போயிரலாம்.. இல்லேன்னா.. பிரேக் பாஸ்ட்.. லன்ச்சா மாறிடும்.." நரேந்திரன் சிரித்தான்..

அவன் சிரிக்கும் போது தெரிந்த வரிசையான பல்வரிசையில் அவள் பார்வை பதிந்தது..

"என்னவாம்.. என் அழகில் மயங்கிட்டயா..?" அவன் உல்லாசமாக கேட்டான்..

"அடேங்கப்பா.. என்ன ஒரு ஹெட்வெயிட்.."

கழுத்தைச் சாய்த்து அவனிடம் கேட்டபடி ஒய்யாரமாக பார்வையை சுழற்றினாள் ஊர்மிளா.. அதற்கு அவன் ரகசியமாக அவள் காதில் முணுமுணுக்க.. அவள் உதட்டைக் கடித்தபடி அவனைச் செல்லமாக அடித்தாள்..

https://t.me/tamilpdfebooks

மாடிப்படிகளில் இறங்கியபடி அவர்கள் இழைந்த இழைதலைப் பார்த்துக் கொண்டிருந்த அகல்யாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

அவளும் ஊர்மிளா காபியைக் கொண்டு போன வினாடியிலிருந்து மாடிப்படிகளை உற்று.. உற்று பாத்துக் கொண்டிருந்தாள்.. அருண்குமார் வந்தான்.. அர்ச்சனா வந்தாள்.. நரேந்திரனும், ஊர்மிளாவும் மட்டும் வருகின்ற சுவடே தெரியவில்லை..

"அம்மா.. கம்பெனிக்கு நேரமாச்சு.."

"ம்மா.. காலேஜிக்கு போக வேண்டாமா..?"

பிள்ளைகளின் குரலில் அகல்யா டைனிங் ஹாலுக்கு ஓடோடிப் போய்விடவில்லை.. மனதெல்லாம் மாடிப் படிகளில் இருக்க அவள் எப்படிப் பறிமாறப் போவாள்..?

"வனிதா.. அருணுக்கும்.. அர்ச்சனாவுக்கும் டிபன் எடுத்து வை.." சத்தமாக உத்தரவிட்டாள்..

"அதை நாங்க செய்துக்க மாட்டோமா..?"

அருண் கோபத்துடன் தட்டை எடுத்துப் போட்டு பூரிக்கிழங்கை எடுத்து வைத்துக் கொள்ள முனைந்த போது பூங்குழலி அவனுக்குப் பரிமாறினாள்..

"நீங்களா ஆண்ட்டி..?"

அவன் திகைத்து போனான்.. அண்ணியின் அம்மா.. விருந்தாளியாக வீட்டுக்கு வந்திருப்பவள்.. அவள் பறிமாற அவன் சாப்பிடுவதா..?

https://t.me/tamilpdfebooks

"உங்களுக்கு எதுக்கு சிரமம் ஆண்ட்டி..?"

சங்கடத்துடன் அவன் தடுத்தான்.. அர்ச்சனாவும் அதை ஆமோதித்தாள்..

"நீங்களும் உட்காருங்க ஆண்ட்டி.. நாம சேர்ந்தே சாப்பிடலாம் வனிதா பரிமாற வருவா.."

"ஏன்ம்மா.. நான் பரிமாறினா என்ன..? எனக்கு நீயும் ஊர்மிளாவும் ஒன்னுதான்.."

பரிவாகப் பேசியபடி பறிமாறிய பூங்குழலியின் பாந்தமான சேவையில் அருணும்.. அர்ச்சனாவும் நெகிழ்ந்து போனார்கள்..

இதுபோன்ற பரிவை அகல்யாவிடம் அவர்களால் காண முடியவில்லையே.. அது ஏன்..?

பூங்குழலி அவர்கள் இருவரின் வேலையைப் பற்றியும் படிப்பைப் பற்றியும் விசாரித்தாள்.. கூடவே திருச்சியைப் பற்றிச் சொன்னாள்.. சோமசுந்தரத்தின் கொள்கையைப் பற்றிப் பேசினாள்.. ஊர்மிளாவின் திறமைகளையும்.. ரசனைகளையும் பட்டியலிட்டாள்..

அவளுடைய குடும்பத்தைப் பற்றிய அனைத்தையும் அவள் தெரிந்து வைத்திருப்பதைக் கண்டவர்களுக்கு.. அவர்களைப்பற்றி அவர்களைப் பெற்ற தாயான அகல்யாவிற்கு என்ன தெரியும் என்ற கேள்வி நெஞ்சில் எழுந்தது.. ஊர்மிளா கொடுத்து வைத்தவள் என்ற ஒரே விதமான பொறாமை அவர்கள் இருவருக்குமே வந்தது..

https://t.me/tamilpdfebooks

"தேங்க்யூ ஆண்ட்டி.. பை.."

"தேங்க்ஸ் ஆண்ட்டி.. நீங்க சொன்ன கதையிலே ரெண்டு பூரி சேர்த்தே சாப்பிட்டுட்டேன்.. பை.."

அருணும்.. அர்ச்சனாவும் பூங்குழலியிடம் சொல்லி விட்டு அகல்யாவை மறந்து போனவர்களாக கிளம்பிப் போய் விட்டார்கள்..

அவர்கள் போனதைக் கூடக் கவனிக்காமல் மாடிப் படிகளையே கவனித்துக் கொண்டிருந்தாள் அகல்யா..

'இன்னும் என்ன பண்ணுதுக..?' கையைப் பிசைந்தாள்..

மாடிப்படிகளில் விரைந்து ஏறி.. நரேந்திரனின் அறைக் கதவைத் தட்டி அவனை அதட்டி வெளியே வர வைக்க அவளுக்கு விருப்பம்தான்..

ஆனால் நரேந்திரன் அதை அனுமதித்ததில்லை.. அவன் அறைக்கு அகல்யா வருவதை அவன் விரும்பிய தில்லை.. ஓர் முறை அகல்யா அவன் அறைக்கதவை தட்டியபோது..

"இதுவே லாஸ்டா இருக்கட்டும்.. இனிமே என் ரூம் கதவைத் தட்டாதீங்க.. ஐ டோன்ட் லைக் இட்.." என்று கண்டிப்பாக சொல்லி விட்டான்..

"இல்லேப்பா.. அது வந்து.." அகல்யா தடுமாறிய போது அவன் கொஞ்சம் கூட தயவு தாட்சண்யம் பார்க்கவில்லை..

https://t.me/tamilpdfebooks

"லிஸன்.. அப்பாவுக்காக நான் இங்கேயிருக்கேன்.. மத்தபடி எனக்கு என் பிரைவஸி ரொம்ப.. ரொம்ப.. முக்கியம்.. அதில் சின்னக்குறை வந்தாக்கூட என் வழியைப் பார்த்துக்கிட்டு நான் போய்கிட்டே இருப்பேன்.."

நரேந்திரனின் சீற்றத்தில் அரண்டு போனவள்தான் அகல்யா..

அன்றிலிருந்து இன்றுவரை அவனிருக்கும் அறைப் பக்கம் கூட அவள் போனதில்லை.. கூடுமானவரை மாடியேறுவதை தவிர்த்து விடுவாள்.. இயல்பாக அவள் மாடிக்குப் போகப்போய்.. அதை நரேந்திரன் வில்லங்கமாக எடுத்துக் கொண்டு எதையாவது பேசிவிட்டால்..?

'எதுக்கு வம்பு..?'

அகல்யா நரேந்திரனின் அறை இருக்கும் திசையில் தலை வைத்துக்கூடப் படுப்பதில்லை..

அன்றும் அதைப் போல அவன் அறைப்பக்கம் போகாமல் நகத்தைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்த வளை வினோதமாக பார்த்தார் சோமசுந்தரம்.. கையிலிருந்த பேப்பரில் ஒற்றை எழுத்தைக்கூட விடாமல் முழுமையாக பேப்பரில் இருந்த செய்திகளைத் திரும்பத் திரும்ப படித்துக் கரைத்துக் குடித்துக் கொண்டிருந்தவருக்கு.. பேப்பர் படிக்கும் சுவராஸ்யம் போய் விட்டது..

படித்ததையே திரும்பத்திரும்ப எத்தனை முறைதான் படிப்பது..?

https://t.me/tamilpdfebooks

பேப்பரைக் கடாசிவிட்டு அகல்யாவைப் பார்த்த வருக்கு.. அவளது பரபரப்பில் புருவங்கள் ஏறின..

"ஏண்டி.. பெத்த புள்ளைகளைக் கூட கவனிக்காம இந்தம்மா எதுக்காக இவ்வளவு டென்சனா இருக்குது..?" மனைவியிடம் கேட்டார்..

"யாருக்குத் தெரியும்..?" என்றாள் பூங்குழலி..

"இந்தம்மாவுக்கு கூட பதட்டம் வருமா..? ஆச்சரியமா இருக்குடி பூங்குழலி.."

சோமசுந்தரம் சுவராஸ்யமாக அகல்யாவை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டார்.. பூங்குழலிக்கு அகல்யாவின் பதட்டத்தில் பயம் வந்தது.. புதிதாய் திருமணமானவர்கள் மாடியைவிட்டு இறங்கி வரத் தாமதமாவது இயற்கை தானே.. அதில் எதற்காக அகல்யா பதட்டம் கொள்ள வேண்டும்..?

பூங்குழலியின் மனம் எழுப்பிய வினாவிற்கு கிடைத்த விடையில் அவள் அதிர்ந்திருந்தாள்.. பூப்போன்ற மனது கொண்ட ஊர்மிளாவின் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று அவள்மனம் கடவுளை வேண்டிக் கொண்டது..

மாடிப்படிகளில் காலடியோசையும்.. பேச்சுக் குரல்களும் கேட்டவுடன் அகல்யாவின் பார்வை ஆங்காரத்துடன் மாடிப் படிகளுக்கு தாவுவதைப் பார்த்த சோமசுந்தரம் முகம் மாறினார்..

https://t.me/tamilpdfebooks

"என்னடி கருமம் இது..? இந்தம்மா இவங்களைக் கானோம்ன்னுதான் இவ்வளவு டென்சனா இருந்ததா..?" என்று பூங்குழலியிடம் கேட்டார்..

அவள் யாருக்குத் தெரியும் என்று கேட்கவில்லை.. துயரத்துடன் மௌனம் சாதித்தாள்.. அர்த்தமுள்ள மௌனம் அது.. காலம் காலமாக இந்தியப் பெண்களைப் பெற்ற தாயார்கள் அனுஷ்டித்து வரும் மௌனம் அது.. பூமா தேவியின் பொறுமையையும்.. சகிப்புத்தன்மையையும் தன்னகத்தே அடக்கியிருக்கும் தாய்மார்களின் மௌனம் அது..

"வாப்பா.. நரேந்திரா.."

என்னவோ வெளியூருக்குப் போய்விட்டு வீடு திரும்பியிருப்பவனை வரவேற்பதைப் போல பரபரத்தாள் அகல்யா..

"பாருடி இந்தம்மாவ.. இவங்க வயித்தில பிறந்த பிள்ளைக சாப்பாடு போடச் சொல்லிக் கேட்டதுக்கு இந்தம்மா அசைஞ்சுகூட கொடுக்கலை.. இப்ப என்னடான்னா.. பெறாத மகனைக் கண்டதும் பாசத்திலே வழுக்கறாங்க.. காலக் கொடுமைடி.." முகம் சுளித்தார் சோமசுந்தரம்..

அதே முகச்சுளிப்பை நரேந்திரனும் சுளித்தான்..

"அவுட்டிங் போயிட்டு வருகிறவனை ரிஸீவ் பண்ணுகிறதைப் போல பேசாதீங்கம்மா.. அருணும்.. அர்ச்சனாவும் எங்கே..?"

https://t.me/tamilpdfebooks

"இவ்வளவு நேரமும் அவங்க கிளம்பிப் போகாம இருந்தா என்ன ஆகிறது நரேன்..? மணியைப் பாரு.. பத்துக்கு மேலாகுது.."


அவன் தாமதமாக வந்திருப்பதை நாசுக்காக சுட்டிக் காட்டினாள் அகல்யா.. நரேந்திரனின் முகம் சினத்தில் சிவந்தது..

"பத்துக்கு மேலே ஆனா என்ன..? எரிச்சலைக் கிளப்பாதீங்க.. அத்தையும்.. மாமாவும் சாப்பிட்டாங்களா..?"

அவனது கேள்வியில் பூங்குழலியும் சோமசுந்தரமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அவர்கள் மனதில் வேடிக்கைபார்க்கும் ஆவல் எழுந்தது..

அதுநேரம் வரை.. ஊர்மிளாவைப் பெற்றவர்கள் விருந்தினராக அந்த வீட்டில் இருக்கிறார்கள் என்ற நினைவே இல்லாமல் அலட்சியமாக இருந்த அகல்யா அந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறாள்..?

https://t.me/tamilpdfebooks



நீ செல்லும் பாதையிலே
எனைத் தொடர்ந்து வரவைத்த
அழகான ராட்சசி நீ....

பூங்குழலிக்குக் கூடச் சங்கடமாகத்தான் இருந்தது.. அகல்யா பாவம் என்று அவள் நினைத்தாள்.. இப்படியொரு கேள்வியை நரேந்திரன் கேட்பானென்று அவள் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டாள்.. இப்போது அவர்கள் இருக்கிறார்களா.. இல்லை.. திருச்சிக்குப் பெட்டியைக் கட்டிக் கொண்டு போய் விட்டார்களா என்று கூடத் தெரிந்து கொள்ளாமல் அகல்யா இருந்தாள் என்ற விவரம் வெளிப்படும்போது நரேந்திரன் அவர்கள் முன்னிலையிலேயே அகல்யாவைக் கோபித்துக் கொண்டால் அகல்யாவுக்கு துன்பமாக இருக்காதா..? பெண் கொடுத்த சம்பந்தகாரர்களின் முன்னிலையிலேயே மகனிடம் பேச்சுக் கேட்க வேண்டியதாகி விட்டதே என்று அவள் துயரப்பட மாட்டாளா..?

பூங்குழலியின் காருண்ய மனதுதான் இவ்வா றெல்லாம் நினைத்துப் பார்த்துச் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது.. சோமசுந்தரத்துக்கு அந்தக் கவலை யெல்லாம் இல்லை.. அவர் அகல்யாவின் சாதுர்யத்தை

https://t.me/tamilpdfebooks

தெள்ளத் தெளிவாக அறிந்து வைத்திருப்பவர்.. இந்தக் கேள்விக்கான அகல்யாவின் திரைக்கதை வசனம் எதுவாக இருக்கக்கூடும் என்பது மட்டுமே அவரின் எண்ணமாக இருந்தது.. அதை அவள் இட்டுக்கட்டிச் சொல்லும் நேர்த்தியைக் காணும் ஆவலோடு அவர் இருந்தார்..

அகல்யாவும் வாய் திறந்தாள்.. அடுக்கடுக்காக அவள் வாயிலிருந்து வெளிவந்த பொய்களின் கோர்வையில் பூங்குழலிக்கு நெஞ்சை அடைப்பதைப்போல ஆகி விட்டது..

"என்னத்தைச் சொல்லச் சொல்ற நரேன்..? அண்ணனும்.. அண்ணியும் என்னை ஒரு சொந்தமா நினைச்சாத்தானே ஆச்சு..? அவங்க என்னவோ நீ மட்டும் தான் சொந்தம்.. நான் அன்னியம்ங்கிறதைப்போல இல்ல நடந்துக்கிறாங்க.."

அகல்யாவின் முதல் பேச்சே வெடிகுண்டைப் போல வெடித்து வைத்தது.. அவள் கண்டு கொள்ளாததை கண்டு கொள்ளாமல்.. எதையும் பெரிது பண்ணாமல்.. அவள் பெற்ற பிள்ளைக்கு காலை உணவைப் பரிமாறி வேலைக்கும், கல்லூரிக்கும் அனுப்பி வைத்த பூங்குழலிக்கு தூக்கி வாரிப் போட்டது.. அவள் பதட்டத்துடன் சோமசுந்தரத்தைப் பார்த்தாள்.. அவர் பொறுமையாக இருக்கும்படி சைகை செய்தார்..

பூங்குழலி பொறுமையாக இருக்கக் கூடியவள்... சோமசுந்தரம் சொல்லித்தான் அவள் பொறுமையாக

https://t.me/tamilpdfebooks

இருப்பாள் என்றில்லை... அவள் வழக்கம் போலப் பொறுமையை கடை பிடித்தாள்..

"ம்ப்ச்.. நான் கேட்டது என்ன..? நீங்க பதில் சொல்றது என்ன..?"

சோமசுந்தரத்தின் முகக் கடினத்தில்.. முகம் மாறிப் போன நரேந்திரன்.. கோபப்பட்டான்..

அவனுக்கு சோமசுந்தரத்தின் மீதும்.. பூங்குழலியின் மீதும் மலையளவு மரியாதை உண்டு.. அவன் மட்டும் கோடிஸ்வரன் என்ற உண்மை அடையாளத்தைச் சொல்லிப் பெண் கேட்டிருந்தால் அவர்கள் நிச்சயமாக அவனுக்குப் பெண் கொடுத்திருக்க மாட்டார்கள் என்பதினாலேயே அந்த மரியாதை மலையளவுக்கு அதிகரித்திருந்தது.. சோமசுந்தரத்தின் நேர்மையிலும்.. அவர் வெளிப்படுத்தும் நியாயமான கோபத்திலும் அவன் தணிந்து போனான்.. அந்த வகையில் அவன் அவரின் ரசிகனாகவே மாறிப் போயிருந்தான்.. அவரது இடக்குப் பேச்சுக்களின் பிண்ணனியில் ஒளிந்திருக்கும் உண்மையின் ஜ்வாலை அவனைக் கவர்ந்திருந்தது..

"என்மேல் ஏன்ப்பா கோவிச்சுக்கற..? காலையிலேயே காபி கலந்ததும் அண்ணனுக்கும்.. அண்ணிக்கும்தான் முதலில் கொடுத்தேன்.."

அகல்யாவின் அசராத பொய்யில், ஊர்மிளா..

"ஸ்ஸ்ஸ்.." என்று பல்லைக் கடித்தாள்..

மனைவியின் அந்த அதிருப்தி ஒலியில் உண்மையைப் புரிந்து கொண்டான் நரேந்திரன்.. அவனுக்கு தலையிறக்க

https://t.me/tamilpdfebooks

மாக இருந்தது.. இப்படி பொய் சொன்னால் ஊர்மிளாவைப் பெற்றவர்கள் அவனைப் பற்றி என்ன நினைப்பார்கள்..?

"காபி..? நீங்க கலந்தீங்க..?"

நரேந்திரனின் கேள்வியில் எங்கே ஊர்மிளா அவனிடம் உண்மையைச் சொல்லியிருப்பாளோ என்று சுதாரித்தாள் அகல்யா..

"அதை அண்ணிதான் கலந்தாங்கப்பா.. நான் கூடச் சொன்னேன்.. இது திருச்சியில்லை அண்ணி.. பெங்களூர்.. தி பிக் மேன் நரேந்திரனோட வீடு.. இங்கே எல்லா வேலைகளுக்கும் ஆள் இருக்காங்க.. உங்களோட மிடில் கிளாஸ் பழக்கத்தை இங்கே கொண்டு வராதீங்கன்னு சொன்னேன்.. திடிர்ன்னு அந்தப் பழக்கத்தை இவங்களாலே மாத்திக்க முடியுமா என்ன..? பிறந்ததில இருந்து உம்பில ஓடற மிடில் கிளாஸ் ரத்தம் அவ்வளவு சீக்கிரத்தில நம்ம லெவலுக்கு வந்திராது தம்பி.."

காபி கலந்து கொடுத்தது பூங்குழலிதான்.. அகல்யா இல்லை என்ற விவரம் வெளிப்பட்டவுடன்.. அதையும் ஒரு குறையாகச் சொல்லிக் காண்பித்தாள் அகல்யா.. பூங்குழலிக்கு வெறுத்துப் போய் விட்டது.. கணவரைப் பார்த்தாள்.. அவர் இமைகளை மூடி அவளை அமைதிப் படுத்தினார்..

"நம்ம வீட்டு மனுசங்களுக்கு நாம காபி கலந்து கொடுத்தா நம்ம ஸ்டேட்டஸ் குறைஞ்சு போயிராதும்மா.. உடம்பில ஓடற ரத்தத்தை ஓ பாசிடிவ்.., பி நெகடிவ்ன்னு

https://t.me/tamilpdfebooks

தான் வகை பிரிச்சுருக்காங்க.. இது மிடில் கிளாஸ் ரத்தம், இது ஹை கிளாஸ் ரத்தம்ன்னு வகை பிரிக்கலை.. அதனால அபத்தமா உளருகிறதை விட்டுட்டு நான் கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லுங்க..."

நரேந்திரனின் கோபச் சிகப்பில் அவன் முகம் இன்னும் அதிகமாக மாறியது.. சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த வனிதா வெளியே வரப் பயந்து போனவளாக சமையலறைக்குள்ளேயே பதுங்கினாள்.. அகல்யாவோ எந்த பயமும் இல்லாமல் சரளமாக பேசிக் கொண்டிருந்தாள்..

"இருக்கட்டும்பா.. அதைப் பத்தி இனிப் பேசி என்ன ஆகப் போகுது.. அண்ணனுக்கும்.. அண்ணிக்கும் காபியைக் கொடுத்திட்டு.. உனக்கும், ஊர்மிளாவுக்கும் காபியை எடுத்துட்டுப் போகச் சொல்லி ஊர்மிளாவை மாடிக்கு அனுப்பி வைச்சேன்.."

அகல்யாவின் அதிரடியில் ஊர்மிளா வெறுத்துப் போய் விட்டாள்.. காலைக் காபியை கணவனுக்கு கொடுக்க அவள் நடத்திய போராட்டத்தை நினைத்து மனம் வெதும்பினாள்.. இப்படிப்பட்ட சின்ன மாமியாருடன் எப்படி அவள் குப்பை கொட்டப் போகிறாள் என்ற அச்சம் அவள் மனதில் எழுந்தது.. அதை அவளின் கண்கள் பிரதிபலித்ததில் சோமசுந்தரம் கண்சிவந்தார்.. பூங்குழலியோ மனம் பதறினாள்..

"ஏம்மா கதாகாலேட்சயம் பண்றீங்க..? ஊர்மிளா வோட அப்பாம்மா பிரேக்பாஸ்ட் சாப்பிட்டாங்களா.. இல்லையா..?"

https://t.me/tamilpdfebooks

"அதைத்தானே தம்பி சொல்லிக்கிட்டு இருக்கேன்.. அருண் வந்தான்.. அம்மா ஆபிஸீக்கு நேரமாகுது.. டிபன் எடுத்து வையுங்கன்னு சொன்னான்.. அத்தையும்.. மாமாவும் இன்னும் சாப்பிடலைடா.. அவங்களையும் கூப்பிடு.. உன்கூட சேர்ந்து சாப்பிடட்டும்ன்னு சொன்னேன்.. அவனும் கூப்பிட்டான்.. அண்ணன் பேப்பரில இண்ட்ரெஸ்டா அதைப் படிச்சுக்கிட்டு தலையை நிமிர்த்திக்கூடப் பார்க்கலை.. அண்ணி அதைவிட அதிகமா குனிஞ்சதலை நிமிராம அண்ணன் பக்கத்திலே கோந்து போட்டு ஒட்டினதைப் போல உட்கார்ந்திருக்காங்க.. அண்ணனாவது தலையை அசைத்தாரு.. இவங்க அதையும் செய்யலை.."

'கடவுளே..!' பூங்குழலியின் இமையோரம் கண்ணீர் அரும்பு கட்டி விட்டது..

சோமசுந்தரம் முகம் மாறாமல் அகல்யாவை பேச விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்..

"சரி.. அருண் கூப்பிட்டதுக்குத்தான் இவங்க எழுந்து வரலை.. சின்னப்பையன் கூப்பிடறான்னு நினைச்சுக் கிட்டாங்களோ என்னவோ.. வீட்டுக்கு எஜமானி, நான்தான் கூப்பிடனும்னு நினைக்கிறாங்க போல இருக்குன்னு நானும் போய் கூப்பிட்டேன்.. அண்ணனும்.. திரும்பிக்கூடப் பார்க்கலை.."

'ஈஸ்வரா..' பூங்குழலி மனம் நைந்தாள்..

நரேந்திரன் இதை உண்மையென்று நம்பி விட்டால்.. ஊர்மிளாவைப் பெற்றவர்களைப்பற்றி என்ன

https://t.me/tamilpdfebooks

வென்று நினைப்பான்..? அவனுடைய சித்தியை அவர்கள் உதாசீனப் படுத்தி விட்டதாக நினைத்து விட மாட்டானா..?

"அருணுக்கு நேரமாகிருச்சுன்னு சாப்பிட்டுட்டுப் போயிட்டான்.. அடுத்து அர்ச்சனா காலேஜ்க்கு நேரமாகுதுன்னு காலில சுடுதண்ணியை ஊத்திக்கிட்டு வந்தா.. அவகிட்டயும் அருண்கிட்டச் சொன்னதையே சொன்னேன்.. உன் தங்கை குணம்தான் உனக்குத் தெரியுமே.. சொந்த பந்தம் மேலே பாசத்தைக் கொட்டறவ அவ.. அண்ணியோட கையைப் பிடிச்சு இழுத்து சாப்பிடக் கூப்பிட்டா.. அண்ணனைக் கெஞ்சினா.. ரெண்டு பேரும் அசையலை.. நீங்க கூப்பிடுங்கம்மான்னு அவ சொன்னதில நான் திரும்பவும் இவங்களைக் கூப்பிட்டேன்.. வரலை.. அர்ச்சனாவுக்கு நேரமா கிருச்சேன்னு அவளை சாப்பிட வைத்து அனுப்பி விட்டேன்.."

'ராமா..'

பூங்குழலிக்கு முள்ளின்மேல் நிற்பதைப் போல இருந்தது.. அர்ச்சனா கையைப் பிடித்து இழுத்தும் அசையாத மாமனார் மாமியாரிடம் மருமகனுக்கு எப்படிப் பாசம் வரும் என்ற பயத்தில் அவள் இருந்தாள்..

சோமசுந்தரத்திற்கு அந்த பயமெல்லாம் இல்லை.. அவர் கல்லூளி மங்கனைப் போல தாடையைத் தடவியபடி அகல்யாவின் சொல்லாடலை ரசித்துக் கொண்டிருந்தார்..

"அர்ச்சனா கிளம்பிப் போன பின்னால நொடிக் கொருதரம் நான் அண்ணனையும்.. அண்ணியையும்

https://t.me/tamilpdfebooks

சாப்பிடக் கூப்பிட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்.. இவங்க தான் பதில் சொல்லாம எங்கேயோ பார்த்துக்கிட்டு இருக்காங்க... நம்ம உபசரிப்பில என்ன குறைன்னும் கேட்டுப் பார்த்துட்டேன்.. பதில் சொல்ல மாட்டேங் கிறாங்க.. என்ன.. ஏதுன்னு தெரியாம இத்தனை மணி நேரமா தவிச்சுக்கிட்டு இருக்கேன் நரேன்.. உன்னிடம் சொல்லலாம்ன்னு பார்த்தா நீ கீழே இறங்கி வரலை..”

பேச்சோடு பேச்சாக நரேந்திரன் விடிந்தவுடன் அறைக் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கி ஓடி வரவில்லையென்ற குற்றச்சாட்டையும் சேர்த்து வைத்தபடி கைகளைப் பிசைந்தாள் அகல்யா..

மறுவீட்டு விருந்துக்கு வரச் சொல்லி திருமண மண்டபத்திலேயே சொல்லி விட்டுத் திருச்சியைப் பார்த்துப் போயிருந்திருக்க வேண்டும் என்று பூங்குழலிக்குத் தோன்றியது.. அவ்வாறு அவளுக்குத் தோன்ற வேண்டும் என்பதற்காகத்தான் அகல்யா அப்படிக் கதை பிணைந்து கொண்டிருக்கிறாள் என்பதை அறியாமல் அவள் பரிதவிக்க.. அதை அறிந்து வைத்திருந்த சோம சுந்தரத்தின் விழிகளில் ஏளனப் பார்வை வந்து குடி கொண்டது.. அதில் நரேந்திரனின் புருவங்கள் சுருங்கின..

“நான்தான் உன்கூடச் சேர்ந்து சாப்பிட்டுப் பழகிட்டதாலே.. சாப்பாட்டு வேளை கடந்தாலும் உனக்காக காத்திருக்கேன்.. எட்டு மணிக்கெல்லாம் மாத்திரை போட்டிருக்கனும்.. சாப்பிடாததினாலே அதைப் போட்டுக்க முடியலை.. மயக்கம் வாரதைப் போலதான்

https://t.me/tamilpdfebooks

இருக்கு.. இருந்தாலும் பல்லைக் கடிச்சுக்கிட்டு மகன் வந்திரட்டும்ன்னு காத்திருக்கேன்.. இவங்களுக்கு அப்படியில்லையே நரேன்.. விருந்தாளியா வந்திருக்கிறவங்க நேரத்துக்கு சாப்பிட வேண்டாமா..? நீயே என்னன்னு கேளு.."

அகல்யாவின் பேச்சில் நநேரந்திரன் என்னவென்று எப்படிக் கேட்கப் போகிறான் என்பதைப் போல அவனை பார்த்து வைத்தார் சோமசுந்தரம்.. அகல்யா அவரையும், பூங்குழலியையும் மட்டும் குற்றவாளியாக்கவில்லை.. நரேந்திரனையும் சேர்த்துதான் குற்றவாளி ஆக்கியிருக்கிறாள் என்ற எண்ணத்தில் அவர் இதழ்களில் குறுநகை தவழ்ந்தது.. நரேந்திரன் எட்டு மணிக்கு வந்து அகல்யாவுக்கு டிபனை ஊட்டி விட்டு.. மாத்திரையை விழுங்க வைக்காத குற்றத்தினால் அகல்யா மயக்கமடையும் நிலைக்கத் தள்ளப்பட்டு விட்டாள் என்ற குற்றச்சாட்டை அவன் எப்படி எதிர்நோக்கப் போகிறான் என்பதை வேடிக்கை பார்க்கும் ஆர்வம் அவர் கண்களில் அப்பட்டமாகத் தெரிந்தது..

நரேந்திரன் மாமனாரை அறிந்தவன்.. அவரின் ஒவ்வொரு ஏளனப் பார்வையிலும்.. குறு நகையிலும் சங்கடமடைந்தான்.. அகல்யாவின் சாகசத்தில் பல்லைக் கடித்தான்.. போனை எடுத்தான்.. அருண்குமாருக்கு போனைப் போட்டான்..

"அருண்... காலையிலே அத்தையையும்... மாமாவையும் நீ சாப்பிடக் கூப்பிட்டியா..?"

https://t.me/tamilpdfebooks

"இல்லையே அண்ணா.. அத்தைதான் எனக்கும் அர்ச்சனாவுக்கும் பரிமாறினாங்க.. வேணாம்ன்னு நாங்க சொன்னோம்.. அவங்களையும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடச் சொல்லி அப்பத்தான் சொன்னோம்.. வனிதா பறிமாறட்டும்ன்னு சொன்னோம்.. அவங்க சிரிச்சுக் கிட்டே இருக்கட்டும்மா.. எனக்கு நீயும் ஊர்மிளாவும் ஒன்னுதான்னு அர்ச்சனாகிட்டச் சொன்னாங்க.. ஏண்ணா..? நான் அத்தையையும்.. மாமாவையும் சாப்பிடக் கூப்பிட்டிருக்கனுமா..? அப்படி ஒரு முறை இருக்குன்னு எனக்குத் தெரியாதுண்ணா.. ஐ ஆம் ஸாரி.. அம்மாவும் இதைப்பத்தி என்னிடம் சொல்லலையே.."

மறுமுனையில் அருண்குமார் சொன்ன பதிலை ஸ்பீக்கரில் அங்கிருந்த அனைவருமே கேட்டார்கள்.. அகல்யாவின் முகம் சிறுத்துப் போனது.. ஊர்மிளாவின் முன்னிலையிலும்.. ஊர்மிளாவைப் பெற்றவர்களின் முன்னிலையிலும் நரேந்திரன் அவளை அவமானப் படுத்தி விட்டதாக கொதித்துப போனாள்..

"என்ன செய்கிற நரேன்.. உன் தம்பியின் குணத்தைப் பத்தி உனக்குத் தெரியாதா..? அவன் எப்பவுமே மத்தவங்களை காட்டிக் கொடுக்க மாட்டான்.. பழியைத் தூக்கி தன் தலையிலே போட்டுக்குவான்.. அவன்கிட்டப போய் அவனோட அண்ணியோட பேரண்ட்ஸைப் பற்றிக் கேட்டால் அவன் இப்படித்தான் பதில் சொல்வான்..?"

அகல்யாவின் பேச்சை லட்சியம் செய்யாமல் நரேந்திரன் அர்ச்சனாவிற்கு போன் போட்டான்..

https://t.me/tamilpdfebooks


"அண்ணா.." என்றவளிடம்..

"அம்மாகூட ஏன் சண்டை போட்ட அர்ச்சனா..?" என்று கேட்டான்..

"யாருண்ணா இப்படிப் போட்டுக் கொடுத்தது..? அம்மாவா..? அவங்க பேச்சைக்கூட நீங்க நம்புவீங்களா..? நீங்களே சொல்லுங்கண்ணா.. அருணும்.. நானும் நேரமாச்சுன்னு பறக்கிறோம்.. டிபன் எடுத்து வையுங்கன்னு சொன்னா அம்மா இருந்த இடத்தை விட்டு அசையாம வனிதா.. டிபன் எடுத்து வைன்னு மெதுவாச் செல்கிறாங்க.. அவங்க சொன்னது அவங்க காதிலேயே விழுந்திருக்காது.. வனிதாவின் காதுகளில் எங்கே விழுந்திருக்கப் போகுது..? அதோட அவள் சமையலைக் கவனிப்பாளா.. இல்லை சர்வ் பண்ண வருவாளா..? ஸோ.. நானும், அருணும் செல்ப்-சர்வ் பண்ணிக்கலாம்ன்னு தட்டை எடுத்துப் போட்டுக்கிட்டு உட்கார்ந்தோம்.. அத்தை வந்து பரிமாறினாங்க.. அப்பவும் அம்மா அசையலை.. பட் அண்ணா.. அவங்க வராதது நல்லதுதான் தெரியுமா.. அத்தை நிறைய விசயங்களை கதை போலச் சொல்லிக்கிட்டே பரிமாறினதில நான் கூடுதலாவே சாப்பிட்டேன்.. அவங்களுக்கு வீட்டை உயிர்ப்பா வைத்திருக்கிற வித்தை தெரிஞ்சிருக்கு.. அதை அவங்க எப்படிச் செய்கிறாங்கன்னு கேட்டு அம்மாவையும் கத்துக்கச் சொல்லுங்க.. அதை விட்டுட்டு இப்படித் தேவையில்லாம போட்டுக் கொடுத்துக்கிட்டு இருக்கிறது வீட்டுக்குப் பெரியவங்களா இருக்கிற அம்மாவுக்கு அழகில்லை.."

https://t.me/tamilpdfebooks

ஸ்பீக்கரில்தான் அர்ச்சனாவின் குரல் ஒலித்தது.. அதைக் கேட்டபடியே நரேந்திரன் அகல்யாவைப் பார்த்தானே ஒரு பார்வை..! அந்தப் பார்வைக்கு மற்றவர்களாக இருந்திருந்தால் குன்றிப் போயிருப்பார்கள்.. ஆனால் அகல்யாவா மனம் குன்றுவாள்..?



ஏட்டினிலே எழுதிடாமல்
எண்ணத்திலே நான் வரைந்துவைத்த..
அழகான ராட்சசி நீ....

"நீயும், அருணும் சேர்ந்துதான் சாப்பிட்டிங்களா அர்ச்சனா..? தனித்தனியா சாப்பிடலையா..?"

நரேந்திரனின் இந்தக் கேள்வியில் அகல்யாவின் பொய்யான கதை பிணைதலின் அஸ்திவாரம் இருந்தது.. அர்ச்சனாவின் பதிலில் அது ஆட்டம் கண்டது..

"தனித்தனியாவா..? இல்லேயே.. அருணும்... நானும் சேர்ந்துதான் சாப்பிட்டோம்.. வகை தொகையா.. அத்தைதான் பார்த்துப் பார்த்துப் பறிமாறினாங்க... வேணும்னா அத்தையிடமே கேட்டுப் பாருங்க.. அவங்க உண்மையைச் சொல்வாங்க.. நம்ம அம்மா இருக்காங்களே.."

https://t.me/tamilpdfebooks

அர்ச்சனா பல்லைக் கடித்த ஓசையை ஸ்பீக்கர் படுதுல்லியமாக அங்கிருந்தவர்களுக்குத் தெரியப் படுத்தியது..

"ஓகே அர்ச்சனா.. லீவ் இட்.."

"ஊஹூம்.. வெறுமனே லீவ் இட்டுன்னு இதை விட்டிங்கன்னா நான் உங்ககூடப் பேசவே மாட்டேன்.. அம்மாவை என்னன்னு கேளுங்க.."

அர்ச்சனாவின் கோபத்தில் இப்படி ஒரு மகளைப் பெற யான் என்ன தவம் செய்து விட்டேன என்று பொருமிப் போனாள் அகல்யா..

'இப்படியும் ஒரு மகள் இருப்பாளா..?'

அவள் வயிற்றில் பிறந்து விட்டு அர்ச்சனாவும்.. அருண்குமாரும் குணக்குன்றாய் இருந்து தொலைத்தால் அவள் தனி மனுசியாக எத்தனையைத்தான் சமாளிப்பாள்..?

"ஆகட்டும் அர்ச்சனா.. அம்மாவை என்னன்னு கேட்கிறேன்.."

தங்கைக்கு வாக்குறுதி அளித்து விட்டு அகல்யாவையே ஊன்றிப் பார்த்தான் நரேந்திரன்..

சோமசுந்தரத்தையும், பூங்குழலியையும், அகல்யா கேட்கச் சொன்ன.. 'என்ன..?' என்ற வார்த்தை... சுழல் காற்றில் சுழன்று அவளை நோக்கித் திரும்பி விட்டதில் மலைத்துப் போனாள் அகல்யா.. தடாலடியாக நரேந்திரன் அருணிடமும்.. அர்ச்சனாவிடமும் போனில் பேசுவா

https://t.me/tamilpdfebooks

னென்றோ.. அதை ஸ்பீக்கரில் போட்டு விடுவானென்றோ அவள் எதிர்பார்த்திருக்கவில்லை..

"என்னங்கம்மா இதெல்லாம்..?"

நிறுத்தி.. நிதானமாக.. நரேந்திரன் அகல்யாவைப் பார்த்து 'என்ன' வென்று கேட்ட விதத்தை சோமசுந்தரம் ரசித்துப் பார்த்ததில் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

"இதெல்லாம் கொஞ்சம் கூட நல்லாயில்லை நரேன்.. பெண் கொடுத்த சம்பந்தகாரங்களை முன்னாலே வைத்துக்கிட்டு என்னை 'என்ன'ன்னா கேள்வி கேட்கிற..?"

"இதே கேள்வியைத்தானே அவங்களைப் பார்த்து நீங்க கேட்கச் சொன்னீங்கம்மா..?"

"அதுக்காகத்தான் இவ்வளவு தூரத்துக்கு நீ வேலை செய்தியா நரேன்..? உன் மாமனாரையும்.. மாமியாரையும் என்னன்னு கேட்டு விடக் கூடாதுன்னுதான் உன் தம்பிக்கும்.. தங்கைக்கும் போன் போட்டு ஸ்பீக்கர்ல இவங்களையெல்லாம் கேட்க வைச்சியா நரேன்..? ஒரே நாளில உன் வொய்பும்.. அவளோட பேரண்ட்ஸீம் உனக்கு உயர்த்தியாப் போயிட்டாங்க.. நான் தாழ்ந்து போயிட்டேனில்ல..? உன் அப்பா இருந்திருந்தா இந்த நிலைமை எனக்கு வந்திருக்குமா..?"

அகல்யாவின் கண்களில் இருந்து கரகரவென்று கண்ணீர் வழிய ஆரம்பித்ததில் பூங்குழலி தலையைப் பிடித்துக் கொண்டாள்.. அவளுக்கு ஆயாசமாக இருந்தது.. எங்கே சுற்றினாலும் எதிராளியின் பக்கமே கத்தியைத்

https://t.me/tamilpdfebooks

திருப்பி விட்டுவிடும் அகல்யாவின் சாகசத்தில் அவள் அதிர்ந்து போயிருந்தாள்.. அகல்யா கெட்டிக்காரியாக இருந்தாள்.. ஒன்று எதிராளியின் மீது குற்றம் சுமத்தி அவர்களை நெஞ்சைப் பிடித்துக் கொள்ள வைத்தாள்.. இல்லையென்றால் கண்ணீர் விட்டு மறுகி.. அவர்களை குற்றஉணர்ச்சிக்கு ஆளாக்கி நெஞ்சைப் பிடித்துக் கொள்ள வைத்தாள்.. எப்படியும் நெஞ்சைப் பிடித்துக் கொள்வது எதிராளியாகவே இருந்தார்கள்.. ஒரு போதும் அவள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்காரவில்லை..

சோமசுந்தரத்தின் முகத்தில் கடுமை படர்ந்தது.. அவருக்கு இந்த நாடகத்தைக் காணச் சகிக்கவில்லை.. இதுபோன்ற செயல்பாடுகளை அவர் ஆதரிக்க மாட்டார்.. அவர் பேச வாய் திறப்பதற்குள் நரேந்திரன் முந்தி விட்டான்..

“என் அப்பா இருந்திருந்தா.. நான் உங்ககிட்ட இப்படிப் பேசிக்கிட்டு இருக்கும் நிலைமை வந்திருக் காதுதான்..” என்றான்..

நிறுத்தி.. நிதானமாக.. அழுத்தம் திருத்தமாக அவன் சொன்னவிதத்தில் அகல்யாவின் முகம் வெளுத்து விட்டது.. அவசரமாக அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிரித்த முகமாக மாறினாள்..

“இப்ப என்ன ஆச்சுன்னு சந்தோசமான நேரத்தில நாம மூடை கெடுத்துக்கனும்..? நேற்றைக்குத்தான் கல்யாணமாகியிருக்கு... அதுக்குள்ளே குடும்ப பஞ்சாயத்தை நீ கூட்டிக்கிட்டு இருக்கனுமா..? வாப்பா..

https://t.me/tamilpdfebooks

நீயும் மருமகளும் சாப்பிட வாங்க.. அண்ணா.. அண்ணி.. எதையும் மனசில வைச்சுக்காதீங்க.. எனக்கு எந்த நேரம் எதைப் பேசறதுன்னு தெரியாமப் போச்சு.. நீங்க சாப்பிட வாங்க.. வனிதா.. எல்லோருக்கும் தட்டைப் போடு.. வாங்கண்ணி.. இது உங்க வீடு மாதிரி.. நான் சொல்லித்தான் நீங்க வரனுமா..?"

மறந்தும் இது உங்கள் வீடு என்று சொல்லாமல் மாதிரி வீட்டைச் சொல்லி போலியான கலகலப்புடன் முன்னே போனாள் அகல்யா.. பெண்ணைக் கொடுத்து விட்டோமே என்று பின்னால் போனாள் பூங்குழலி.. வாய்ப் பேச்சில் உபசரித்தாலும் முதல் ஆளாக தட்டைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டாள் அகல்யா.. முகம் மாறாமல் அமைதியாக மற்றவர்களுக்கு தட்டை எடுத்து வைத்தாள் பூங்குழலி..

"நீங்களும் உட்காருங்க.. வனிதா பரிமாறட்டும்.." நரேந்திரன் பிடிவாதமாகச் சொல்லி விட்டான்..

சோமசுந்தரத்தின் வாயிலிருந்து தப்பி விட வேண்டுமென்ற முனைப்பு அவனுக்கு.. அவரும் அவனை முறைத்து.. முறைத்துப் பார்த்துக் கொண்டு சாப்பிட்டாலும்.. அகல்யாவிடம் எதையும் பேசவில்லை..

'அப்பாடி.. தப்பித்தேன்..' ஆசுவாச பெருமூச்சுடன் ஒரு பாட்டில் குளிர் தண்ணீரை ஒருமிக்க தொண்டையில் சரித்தான் அவன்..

ஊரில்.. உலகத்தில்.. மாப்பிள்ளையைக் கண்டு தான்.. மாமனார் பயப்படுவார்.. இங்கே தலைகீழாக

https://t.me/tamilpdfebooks

இருக்கிறதே என்ற எண்ணம் அவனுக்கு.. சாப்பிட்டபடியே ஊர்மிளாவைப் பார்த்தான்.. அவன் பார்வையில் முகம் சிவந்து தலை கவிழ்ந்தாள்.. அவன் மனதில் பூமழை பெய்தது.. அவளுடைய கள்ளப் பார்வையை அவனுக்குப் பிடித்திருந்தது..

'எல்லாம்.. இவளுக்காக..' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்..

சாப்பிட்டு முடிந்ததும் அவர்கள் ஹாலில் அமர்ந்தார்கள்.. அகல்யா வெகு அக்கறையாக சுவர் கடிகாரத்தைப் பார்த்து விட்டு..

"நரேன்.. உனக்கு ஆபிசுக்கு நேரமாகலையா..?" என்று வினவி வைத்தாள்..

'இந்தம்மா அடங்கவே அடங்காதா..?'

சோமசுந்தரம் அகல்யாவை விட்டுவிட்டு நரேந்திரனை முறைத்தார்..

'போச்சுடா..' நரேந்திரன் மானசீகமாக தலையில் கை வைத்தான்..

எது நடக்கக்கூடாது என்று அவன் அரும்பாடு பட்டானோ.. அது நடந்தே விட்டது.. சோமசுந்தரம் தன் அழகுத்திருவாயை திறந்து விட்டார்..

"ஆமாங்க.. நீங்க ஆபிஸ்க்கு கிளம்புங்க.. நாங்க வாங்க பெண்ணை அழைச்சுக்கிட்டு திருச்சிக்கு கிளம்பறோம்.."

https://t.me/tamilpdfebooks

"என்னது..?!.."

நரேந்திரன் கடுப்பாக.. அகல்யா சந்தோசமாகிப் போனாள்..

"அப்படிங்களா அண்ணா.. உங்க பக்கத்தில அப்படியொரு சம்பிரதாயமிருந்தா தாராளமாக் கூப்பிட்டுக் கிட்டு போங்க.." வாயெல்லாம் பல்லாக அனுமதி வழங்கினாள்..

"உங்க வீட்டில பெண்ணைக் குடுத்திருக்கேனில்ல..? கல்யாணம் பண்ணிக் கொடுத்த கையோடு பெண்ணை பிறந்த வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போகிற சம்பிரதாயம் வரத்தான் செய்யும்மா.." என்றார் சோமசுந்தரம்..

"அம்மா.. கொஞ்சம் சும்மா இருக்கீங்களா..?"

நரேந்திரனின் கடுமையில் வாயில் ஒற்றை விரலை வைக்காத குறையாக அடங்கிப் போனாள் அகல்யா.. சோமசுந்தரத்தின் மீது இருந்த மொத்தக் கடுப்பையும் அவள்மீது காட்டினான் நரேந்திரன்..

"உங்களுக்கு என்ன வந்தது..? என் ஆபிஸ்க்கு எப்பப் போகனும்னு எனக்குத் தெரியாதா..? காலையில என்னன்னா ஆறுமணிக்கே நான் எழுந்து வரலைன்னு அழிச்சாட்டியம் பண்றீங்க.. இப்ப என்னடான்னா ஆபிஸ்க்கு நேரமாகலை யாங்கறிங்க.. வாட்'ஸ் ராங் வித் யு..? மேனர்ஸ்ன்னா கிலோ என்ன விலைன்னு கேட்பீங்களா..? இப்படியே போய்க் கிட்டு இருந்துச்சு.. நான் அப்பாவைப் பத்திக் கூட யோசிக்க மாட்டேன்.."

https://t.me/tamilpdfebooks

அகல்யா பேச்சு.. மூச்சைக் காட்டவில்லை.. ஊர்மிளாவுக்கே அவளைப் பார்க்க பாவமாக இருந்தது.. சோமசுந்தரம் அதையெல்லாம் வைத்துக் கொள்ளவில்லை.. அகல்யா போடுவதெல்லாம் வெளிவேசம் என்பதை நன்றாக புரிந்து வைத்திருந்தார் அவர்.. அவள் ஆயிரம் பேருக்கு பாவம் பார்ப்பாள்.. அவளாது.. ஐயோ பாவம் என்ற நிலைக்கு ஆளாகிறதாவது..

"சொல்லுங்க மாமா.." நரேந்திரன் அவரிடம் பேச ஆரம்பித்தான்..

"சொன்னாத் தாங்க மாட்டிங்க மாப்பிள்ளை.." என்று சொல்லி விட்டு பூங்குழலியின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானார் சோமசுந்தரம்..

"என்னடி.. உங்கப்பா இப்படி வறுத்தெடுக்கிறாரு..?" ஊர்மிளாவிடம் முணுமுணுத்தான் நரேந்திரன்..

"எங்கப்பாவைப் பார்த்தா உங்களுக்கு எப்படி இருக்கு..?" அவள் பதிலுக்கு முணுமுணுத்தபடி சண்டைக்கு வந்தாள்..

மூக்கை விடைத்தபோதும் அழகானவளாக இருந்து வைத்த மனைவியைப் பார்க்க.. பார்க்க அவனுக்குத் தெவிட்டவில்லை..

"உன்னைப் போல அழகான பெண்ணைப் பெத்துட்டாருல்ல.. அந்த தலைக்கனம்தாண்டி அவருக்கு.."

ஊர்மிளாவிடம் முணுமுணுத்துவிட்டு.. சோமசுந்தரத்தின் பக்கம் பவ்யமாக திரும்பி அமர்ந்தான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

"எதையும் தாங்கற இதயம்தான் மாமா எனக்கு.. ஆனாலும் பாருங்க.. நீங்க என்னோட அன்பான மாமனாராப் போயிட்டிங்க.. நான் தாங்க மாட்டேன்னு நீங்களே முடிவு பண்ணின பின்னாலே அதை நீங்க சொல்லியே ஆகனும்னு நான் அடம் பிடிச்சா அது நல்லாயிருக்காது.. ஸோ.. அதை நாம விட்டு விடலாம்.."

"எதை..?"

"என் மனசு தாங்காதுன்னு நீங்க முடிவு பண்ணினதை.. பை தி வே.. டிரைவர்கிட்டச் சொல்லியிருக்கேன்.."

"எதைப்பத்தி..? பெட்ரோல் விலை கூடிப் போயிருச்சே.. அதைப் பத்தியா..? அதை அவன்கிட்ட சொல்லி என்ன பண்ண..? எங்களை மாதிரி ஆளுககிட்டச் சொன்னா பொதுக்கூட்டம் போட்டு நாட்டையே புரட்டி எடுப்போம்.."

நொந்து போன நரேந்திரன்.. மனைவியை ஒரு மௌனப்பார்வை பார்த்து விட்டு..

"அதெல்லாம் வேணாம் மாமா.. நாடு இருக்கிற நிலைமையிலேயே இருக்கட்டும்.. நான் டிரைவர்கிட்டச் சொன்னது பெட்ரோல் விலையைப் பத்தியில்ல.." என்று சொன்னான்..

"அதானே பார்த்தேன்.. முதலாளித்துவத்திற்கும்.. சமூக அக்கறைக்கும் எத்தனையோ காத தூரமாச்சே.. ஆடு நனையுதேன்னு ஓநாய் எங்கேயாவது அழுகுமா..?" என்று கேட்டுவைத்தார் சோமசுந்தரம்..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் மனைவியைப் பார்த்த பார்வை..

'நான் ஓநாயாடி..?' என்று கேட்டு வைத்தது..

அடங்கியிருந்த அகல்யா.. மொச்சைக் கொட்டை கண்களை விரித்து வைத்துக் கொண்டு படு சுவராஸ்யமாக மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் நடந்த உரையாடலை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள்.. இவர்களைப் பிரிக்கவா அவள் வேலை மெனக்கெட்டாள் என்று தன்னைத்தானே மானசீகமாக குட்டிக்கொள்ளவும் செய்தாள்..

பூங்குழலிக்கு தலை வேதனையாக இருந்தது.. நல்ல வேளையாக ஒற்றைப் பெண்ணுடன் நிறுத்திக் கொண்டோம் என்று நினைத்துக் கொண்டாள்.. சோம சுந்தரம் பண்ணுகிற அராஜகத்துக்கு அவரை நம்பி இரண்டு மூன்று பெண்களைப் பெற்றுத் தொலைத்திருந்தால் அவள் கதி என்ன ஆவது..?

"இப்ப இங்கே மேடையா போட்டிருக்கு..? நீங்க தான் பொதுக்கூட்டத்தில பேச வந்திங்களா..?" காட்டத்துடன் கணவரை முறைத்தாள்..

மனைவியின் முறைப்பில் ஆண்புலி.. ஆண் எலியானது..

"அதில்லைடி குழலி..." என்று சோமசுந்தரம் மனைவிக்கு விளக்கம் சொல்லவும் முயன்றார்...

https://t.me/tamilpdfebooks

"மாப்பிள்ளை எதையோ சொல்ல வர்றார்.. அவரைச் சொல்ல விடுவேனான்னு கங்கணம் கட்டிக்கிட்டு பேசித் தள்ளறீங்களே.." பூங்குழலி பல்லைக் கடித்தாள்..

"கேட்டுட்டாப் போச்சு.. நீங்க சொல்லுங்க.." நரேந்திரனிடம் சமாதானத்துக்கு வந்தார் சோமசுந்தரம்..

"உங்களுக்கு பெங்களூரைச் சுற்றிக் காட்டச் சொல்லி டிரைவரிடம் சொல்லியிருக்கேன்.. போயிட்டு வாங்க.."

ஒருவழியாக சொல்ல வந்ததை நரேந்திரன் சொல்லி முடித்தான்..

"புதுசாக் கல்யாணம் கட்டிக்கிட்ட ஜோடி நீங்களா.. இல்லை நாங்களா..?" என்று அதற்கும் விதண்டாவாதமாக கேட்டு வைத்தார் சோமசுந்தரம்..

இவரிடம் எப்படிப் பேசினால்தான் தப்பிக்க முடியும் என்ற ஆயாசத்துக்கு ஆளானான் நரேந்திரன்.. இப்படியா ஒரு மனிதர் முன்னால் போனால் கடிப்பேன்.. பின்னால் போனால் உதைப்பேன் என்று மல்லுக்கட்டுவார்..?

"நாங்கதான் மாமா.." சிரிக்காமல் சொன்னான்..

"அதனால தேநிலவுக்கு எங்களை அனுப்பற வேலையை விட்டுட்டு நீங்களும் ஊர்மிளாவும் எப்பப் போறிங்க.. எங்கே போறிங்கன்னு சொல்லுங்க.." என்று சொல்லி விட்டு மனைவியின் மெச்சும் பார்வையில் சொக்கிப் போனார் சோமசுந்தரம்..

https://t.me/tamilpdfebooks

'பரவாயில்லை.. என்புருசன் சமத்துதான்.. இவரை நம்பி நான் இன்னும் இரண்டு பெண்பிள்ளைகளைப் பெற்றுப் போட்டிருக்கலாம் போல..' பூங்குழலி மகிழ்ந்து போனாள்..

அங்கே இருக்கும் நிலைமையை வைத்துப் பார்த்தால்.. அகல்யா.. நரேந்திரனும்.. ஊர்மிளாவும் தேநிலவுக்குப் போவதை தடுக்கப் பார்ப்பாள் என்று பூங்குழலிக்குத் தோன்றியிருந்தது.. அதே கவலை சோமசுந்தரத்தின் மனதிலும் இருக்குமென்றோ.. அவர் அதை உறுதிப் படுத்திக் கொள்ள மருமகனை கிடுக்கிப்பிடி கேள்வி கேட்பார் என்றோ அவள் நினைத்தும் பார்க்கவில்லை..

'என் புருசனா.. பொதுக்கூட்டத்தை மறந்து.. நாட்டு நடப்பை மறந்து.. வீட்டு நடப்பைப் பத்திப் பேசறார்..?'

அவள் விழிகளில் தெரிந்த காதல் அலைகள் சோமசுந்தரத்தை கல்லணைக்கு ஹனிமூன் போகலாம் வா என்று அழைத்தது.. சோமசுந்தரம் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு..

'எப்புடி..?' என்று மனைவியிடம் விழிகளால் வினவ.. அவள்..

'சூப்பர்..' என்று இமை மூடி அவரைப் பாராட்டினாள்.

அதைக் கவனித்த நரேந்திரன்.. 'செமத்தியான மாமனார்' என்று நினைத்துக் கொண்டான்..

https://t.me/tamilpdfebooks



என் நெஞ்சில் குடியிருந்து
என் ராத்தூக்கத்தை விரட்டிவிடும்
அழகான ராட்சசி நீ....

"**ஹ**னி மூனுக்கா..? நரேந்திரனா..? நோ சான்ஸ்.." என்றாள் அகல்யா..

இவள் வாயிலிருந்த ஒற்றை விரலை எப்போது எடுத்தாள் என்ற கேள்வியை கண்களில் தேக்கி முகச் சுளிப்புடன் அவளை ஓர் பார்வை பார்த்து வைத்தார் சோமசுந்தரம்..

'இப்படியா ஒரு மகராசி.. புதிதாக கல்யாணமான இளம் ஜோடியை சந்தோசமாக இருக்க விடக்கூடாது என்று கங்கணம் கட்டுவாள்..?'

அதை அகல்யா வெளிப்படையாக காட்டிக் கொண்டதுதான் சோமசுந்தரத்திற்கு ஆச்சரியமாக இருந்தது.. அந்த வகையில் அவள் நடிக்கவில்லை.. அவளுடைய அசாத்திய தைரியத்தை மனதுக்குள் மெச்சாமல் அவரால் இருக்க முடியவில்லை..

"நோ சான்ஸ்ன்னு நான் உங்களிடம் சொன்னேனா..?" நரேந்திரன் நிதானமாக அகல்யாவிடம் வினவினான்..

https://t.me/tamilpdfebooks

"இல்லேப்பா.. உனக்கே மூச்சு விடக்கூட நேரமில்லாத வேலை.."

"எப்பவும் அப்படியே இருக்க முடியாதும்மா.. நான் மேரேஜ்க்கு டேட் பிக்ஸ் பண்ணி மண்டபத்தை புக் பண்ணிய போதே ஹனிமூனுக்கும் டேட் பிக்ஸ் பண்ணி ஆஸ்திரேலியாவில் ஹனிமூன் சூட்டை புக் பண்ணிட்டேன்.."

'ஆஸ்திரேலியாவா..?'

அகல்யா பொறாமையுடன் ஊர்மிளாவை பார்த்தாள்.. அவள் மனதில் பொறாமையின் தீ சுழன்று கனன்றது.. அவளுக்குக் கிடைக்காத வெளிநாட்டுப் பயணம் ஊர்மிளாவுக்கு கிடைப்பதா..?

அகல்யா அதுநாள்வரை வெளிநாட்டிற்குப் போனதே இல்லை..

பூங்குழலி பெருமையுடன் மகளைப் பார்த்தாள்.. ஊர்மிளா லஜ்ஜையுடன் கைவிரல் நகங்களை ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருந்தாள்.. ஆஸ்திரேலிய பயணம் என்பது அரிதான ஒன்று என்றாலும் அதற்காக அவள் சந்தோசப்பட்டு விடவில்லை.. நரேந்திரனுடன் எங்கே யிருந்தாலும் அவள் சந்தோசமாகவே இருப்பாள்.. அது தமிழ்நாட்டிலுள்ள ஒரு குக்கிராமமாக இருந்தாலும் சரி..

அதைப்பற்றியெல்லாம் அகல்யாவுக்கு என்ன தெரியும்..? அவள் வாழ்க்கையை வசதிகளைக் கொண்டு அளவிடுபவள்.. ஊர்மிளாவின் மனதை அவள் எப்படி அறிவாள்..?

https://t.me/tamilpdfebooks

"பரவாயில்லை.. நான்கூட உங்களை என்னவோன்னு நினைச்சேன்.." என்றார் சோமசுந்தரம்..

'இப்படியொரு பாராட்டை நான் கேட்டேனா..?'

மனைவியைப் பார்த்து விழிகளால் கேட்ட நரேந்திரன்..

'இந்த மனிதர் என்னை எப்படின்னு நினைத்தார்..?' என்று குழம்பிப் போனான்..

அதை அவரிடம் நேரடியாகக் கேட்டு விடலாமென்றால் அவர் எக்குத்தப்பாக எதையாவது சொல்லி வைத்து விடும் அபாயம் இருந்ததால் மௌனமாக இருப்பதே சாலச்சிறந்தது என்று மௌனமாக அவன் பேச்சைக் கவனிப்பதைப் போல பாவனை செய்தான்..

"ஹனிமூனுக்கு நீங்க போகிறதில ரொம்ப சந்தோசம்.."

"நான் மட்டும் போகலைங்க.. உங்க மகளையும் கூட அழைத்துக்கிட்டுத்தான் போகிறேன்.."

"நீங்க மட்டும் தனியாப் போனா அது ஹனிமூன் இல்லைங்க.. அது பிஸினெஸ் டிரிப்... என் மககூடப் போனாத்தான் அது ஹனிமூன்.. என்ன குழலி நான் சொல்கிறது..?"

இதிலும் நரேந்திரனை வாரிவிட்டு சோமசுந்தரம் மனைவியிடம் அபிப்ராயம் கேட்க.. அவள் திருச்சிக்கு வாங்க.. அங்கே இருக்கு உங்களுக்கு என்று ஜாடை செய்தாள்..

https://t.me/tamilpdfebooks

பூங்குழலியின் ஜாடையில் சோமசுந்தரம் தற்காலிகமாக வாருதலை நிறத்தினார்.. இப்படிப்பட்ட மாமனாருடன் இன்னும் எவ்வளவு நேரத்துக்குத்தான் கலந்துரையாட வேண்டி வருமோ என்ற கவலையுடன் கூட்டிக் கொண்ட மனைவியை நரேந்திரன் பார்த்தான்.. அவளோ.. 'மூச்..' என்ற விழிகளால் அரட்டி அவனை இருந்த இடத்திலேயே அமர வைத்தாள்..

"ஆனாலும் பாருங்க.. நம்ம ஊரிலயே அழகழகா இடங்கள் இருக்க.. நீங்க எதுக்காக ஆஸ்திரேலியாவுக்கு போகனும்ங்கறேன்ன.. இதுதான் முதலாளித்துவ சிந்தனைங்கிறது.."

சோமசுந்தரம் ஆரம்பிக்க.. பூங்குழலி போச்சுடா என்று தலையில் கை வைத்தாள்..

'ஆரம்பிச்சுட்டாரா..?'

"இதிலே கூடவா முதலாளித்துவ சிந்தனையை தோண்டியெடுத்துப் பார்ப்பீங்க..?" முகம் மாறாமல் கேட்டு வைத்தான் நரேந்திரன்..

"பின்னே..? இதில பார்க்காம அண்ணன் வேற எதில பார்ப்பாரு..? இந்த விசயத்தில நான் அண்ணன் கட்சிதான்.. பெங்களூரில் இல்லாத எது ஆஸ்திரேலியாவில் இருக்கிறது..? என்ன அண்ணா நான் சொல்கிறது..?"

உற்சாகமாக உறவு கொண்டாடி சோமசுந்தரத்துடன் சகோதரத்துவ கூட்டணியைப் போட்டாள் அகல்யா..

https://t.me/tamilpdfebooks

"இங்கே இல்லாத எது ஆஸ்திரேலியாவில் இருக்குன்னு எனக்குத் தெரியாதுங்கம்மா.. ஆனா.. இங்கே இருக்கிற நீங்க.. அங்கே இருக்க மாட்டிங்க.. அது மட்டும் நிச்சயமாத் தெரியும்.." நமட்டுச் சிரிப்புடன் சொன்னார் சோமசுந்தரம்..

'இந்த ஆளுக்கு இருக்கிற நையாண்டியைப் பாரேன்.. இதான் நரிக்கு நாட்டாண்மை பதவி கிடைச்சா... கிடைக்கு ரெண்டு ஆடை கேட்கும்ங்கிறது..' அகல்யா பொருமினாள்..

"ஏங்க.. ஆஸ்திரேலியாவுக்குப் போனாலும்.. அமிஞ்சிக்கரைக்குப் போனாலும்.. அவங்கவங்க இஷ்டத்துக்கு போகிறாங்க.. இதில நாம தலையிடலாமா..? நீங்க வந்த வேலையைக் கவனிங்க.." எரிச்சலுடன் எடுத்துச் சொன்னாள் பூங்குழலி..

"அதைச் சொல்லு.. நான் சொன்னா மட்டும் கேட்டுக்கவா போறாங்க..? இதெல்லாம் வர்க்க பேதம் செய்கிற வேலை பூங்குழலி.. தொழிலாள வர்க்கத்தைச் சுரண்டி சேர்த்த பணத்தை முதலாளிவர்க்கம் எப்படி கரைக்கும்..? இப்படித்தான் கரைக்கும்.."

"வேணும்னா ஒரு மைக் செட்டைக் கொண்டு வரச் சொல்லட்டுமா..?"

"வேணாம்.. வேணாம்.. அது எதுக்கு தேவையில்லாம.. என்னதான் உடம்பெல்லாம் எண்ணெணையைப் பூசிக்கிட்டு.. மணல் மேலே விழுந்து உருண்டு புரண்டாலும்.. ஒட்டுகிற மண்தான் ஒட்டும் பூங்குழலி.."

https://t.me/tamilpdfebooks

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க..?"

"மைக் பிடிச்சுப் பேசினாலும்.. அது இல்லாம பேசினாலும் ஏத்துக்கிற மனுசங்கதான் என் கருத்தை ஏத்துக்குவாங்க.."

"ஏன்..? அண்ணிதான் உங்க கருத்தை ஏத்துக் கறாங்களே.. அவங்ககிட்டே உங்க கருத்தைச் சொல்லிப் பார்க்கிறதுதானே..?"

சோமசுந்தரம் பண்ணிக் கொண்டிருந்த அழிச் சாட்டியத்தில் பூங்குழலி பல்லைக் கடித்தபடி அகல்யாவை பார்த்து விட.. சோமசுந்தரம்

"ஏண்டி..?" என்றார்..

இதற்குப் பதிலாக என் முதுகில் நான்காயிரம் மொத்துக்களை மொத்தியிருக்கலாமே பூங்குழலி என்ற ஆற்றாமை அந்த ஒற்றை வார்த்தையான 'ஏண்டி'யில் ஒளிந்திருந்தது..

பூங்குழலி கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. அதற்கு மேலும் கொள்கைப் பேச்சைப் பேசிக் கொண்டிருக்க முடியாது என்பதை கண்டு கொண்ட சோமசுந்தரம்.. நரேந்திரனைப் பார்த்து..

"எப்ப வர்றீங்க..?" என்று கேட்டார்..

அந்தக் கேள்வியில் நரேந்திரன் திகைத்துப் போனான்.. அவர் எப்போது வருவீர்கள் என்று கேட்பதற்கு.. அவன் எங்கே கிளம்பிப் போனான்..?

https://t.me/tamilpdfebooks

அவன்தான் அவர் பண்ணுகிற அழும்புக்கெல்லாம் ஈடுகொடுத்தபடி ஆணியடித்ததைப் போல அவர் முன்னால் அசையாமல் உட்கார்ந்திருக்கிறானே..

"புரியலை.." என்றான் அவன்..

"உங்களுக்குப் புரியாதுதான்.. ஆஸ்திரேலியாவுக்கு ஹனிமூன் கொண்டாடப் போகனும்னு புரிஞ்சிருக்கு.. கல்யாணம் ஆனவுடனே மறுவீட்டு விருந்துக்கு மாமனார் வீட்டுக்கு வரனும்கிறது மட்டும் புரியலை.. இதுக்குத்தான் முதலாளி வர்க்கத்துக்கு, தொழிலாளர் வர்க்கம் பெண் கொடுக்க கூடாதுங்கிறது.."

"ஏண்டி.. உங்க அப்பா இந்த வர்க்க பேத போராட்டத்தை ஏறக்கட்ட மாட்டாரா..?" ஊர்மிளாவின் பக்கமாக சரிந்து முணுமுணுத்தான் நரேந்திரன்..

அவள் முறைத்தாள்..

"அதுசரி.. யாரு நீ..? கொள்கைக்காக கொடிபிடிக்கிற சோமசுந்தரத்தோட மகளாச்சே.. இப்படித்தான் முறைப்ப.. ஏண்டி.. யாராவது மருமகனை மறுவீட்டு விருந்துக்கு இந்த லட்சணத்தில் அழைப்பாங்களா..?" நரேந்திரன் சன்னக் குரலில் கேட்டான்..

"எங்கப்பா அழைப்பார்..." அதே குரலில் முணுமுணுத்தாள் ஊர்மிளா..

மகளும்.. மருமகனும் கலந்துரையாடியதில் சோம சுந்தரம் தாடையைத் தடவியபடி அவர்களைப் பார்த்து விட்டு..

https://t.me/tamilpdfebooks

"என்னம்மா சொல்கிறாரு..?" என்று மகளிடம் விசாரித்தார்..

"நீங்க எப்ப வரச் சொல்றீங்களோ.. அப்பவே வந்து விடுகிறோம்ன்னு உங்களிடம் சொல்லச் சொல்லி சொல்லிக்கிட்டு இருக்காருப்பா.." என்றாள் அவரின் அருமை மகள்..

"ஏன்..? அதை அவர் சொல்ல மாட்டாரா..?"

"ஏன்ப்பா..? அதை நான் சொன்னா நீங்க கேட்டுக்க மாட்டிங்களா..?"

ஊர்மிளா மடக்கியதில் சோமசுந்தரம் மடங்கி விட்டார்..

"ஏன் கேட்டுக்க மாட்டேன்..? தாராளமா கேட்டுக்கு வேன்.. நாங்க திருச்சிக்கு கிளம்பிப் போகிறோம்.. நாளைக்கு மறுநாள் நீயும் மாப்பிள்ளையும் மறுவீட்டு விருந்துக்கு கிளம்பி வந்துருங்க.. அங்கே ஒரு வாரம் இருந்தாகனும்... உன் வீட்டுக்காரர்கிட்ட சொல்லி வைச்சிரு... அப்புறமா அங்கேவந்து எனக்கு அங்கே வேலையிருக்க.. இங்கே வேலையிருக்குன்னு முதலாளித்துவ போச்சையெல்லாம் பேசக்கூடாது.. ஆமாம்.. சொல்லிட்டேன்.."

"வாயே திறக்க மாட்டார்ப்பா.. அதுக்கு நான் கேரண்டி.."

ஊர்மிளா அளித்த உத்திரவாதத்தில் திருப்தியுற்றவர் களாக சோமசுந்தரமும்... பூங்குழலியும் கிளம்பிப் போனார்கள்.. அவர்கள் கிளம்பிப் போய் விட்ட திருப்தியில்

https://t.me/tamilpdfebooks

அகல்யாவும் அவளுடைய அறையைத் தேடிக் கிளம்பிப் போனாள்.. ஊர்மிளா வாசல் பக்கமிருந்த தோட்டத்திற்கு நகர்ந்தாள் நரேந்திரன் அவளைத் தொடர்ந்து போனான்.. பூங்காவைப் போல அழகாக அமைக்கப் பட்டிருந்த தோட்டத்தில் நின்றிருந்தவளின் பின்னால் போய் வாசம் பிடித்தபடி..

"எந்த தைரியத்திலடி என் பேச்சுக்கு நீ கோரண்டி கொடுத்த..?" என்று கேட்டான்..

"நீங்க என் புருசன்ங்கிற தைரியத்திலதான்.." ஊர்மிளா அவனுடைய சட்டைக் காலரைப் பிடித்து தன் பக்கம் அவனை இழுத்தபடி அண்ணாந்து அவன் முகம் பாாத்தாள..

அழகான அவள் முகத்தின் நீள் வடிவக் கண்களிலும் அதன் மேலிருந்த அடர்ந்த குடை போன்ற இமைகளிலும் மனம் மயங்கிப் போனான் நரேந்திரன்..

அவனைக் கட்டி இழுக்கும் அந்த பேரழகியிடம் தன்னை ஒப்புக் கொடுத்தான் அவன்.. ஊர்மிளாவின் கைகள் அவன் கழுத்தை வளைத்தன.. அவள் எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்..

அவளது ஈர இதழ்களின் ஸ்பரிசத்தில் நரேந்திரன் கிளர்ந்தான்.. அவளைச் சுற்றி வளைத்து தன்னருகில் இழுத்துக் கொண்டு பிணைந்தான்..

"அழகிடி.. நீ.." அவள் காதருகில் முணுமுணுத்தான்..

https://t.me/tamilpdfebooks

"உங்களை விடவா..?" அவள் மயங்கும் குரலில் வினவினாள்.. அவளது மயக்கத்தை அவளது விழிகள் பிரதிபலித்ததில் நரேந்திரனுக்குள் அந்த மயக்கம் உற்பத்தி ஆனது..

"நான் அழகனா..?"

"ஆமாம்.. பேரழகன்.."

"ஊர்மி.."

"ம்ம்ம்..."

"உண்மையாவே என்னை உனக்குப் பிடிச்சிருக்காடி..?"

"பிடிக்காமலா என் அப்பா பேச்சை மீறி உங்களுக்கு முழுத்தை நீட்டியிருக்கிறேன்..?"

"ஏய்ய்.."

"ம்ம்ம்.."

"ஐ லவ் யு.."

"ஐ லவ் யு டூ.."

அவன் மார்பில் முகம் புதைத்து அவள் அவனுடன் பின்னிக் கொண்டாள்.. அவன் முதுகில் படிந்திருந்த அவளின் கரங்கள் பரவிப் படர்ந்து இறுக்கிக் கொண்டன.. நரேந்திரன் அவள் உச்சந்தலையில் முத்தமிட்டு.. தன் தோளோடு அணைத்துக் கொண்டான்.. அவள் தோள் மீது வைத்த கைகள் இறங்கி அவள் முதுகின் வழவழப்பில் படிந்து பரவி நிலைத்து இறுகின.. அந்த தொடு உணர்வில் ஊர்மிளா சிலிர்த்தாள்..

https://t.me/tamilpdfebooks

"ஸ்ஸ்ஸ்.." அவள் முணுமுணுக்க..

"என்னடி..?" அவன் ஏதும் அறியாதவனைப் போல வினவி வைத்தான்..

ஊர்மிளா தன் பின்னலின் நுனியால் அவனைச் செல்லமாக அடித்தாள்.. நரேந்திரன் அதை ரசித்து வாய் விட்டுச் சிரித்தான்.. அவள் விலக முயன்றாள்.. அவன் விடவில்லை.. அவள் நழுவியபோது அவளது முந்தானைச் சேலையை இழுத்துப் பிடித்து நிறுத்தினான்.. அவள் அடி உதட்டைக் கடித்தபடி கண்கள் மின்ன அவனை ஏறிட்டுப் பார்த்து...


"சேலை கட்டும் பெண்ணுக்கொரு..
வாசமுண்டு..
கண்டதுண்டா..? கண்டவர்கள்..
சொன்னதுண்டா..?"

என்று மெல்லிய குரலில் பாடினாள்..

"மத்தவங்க பேசறதை வைத்து எதையும் நான் முடிவு செய்கிறதில்லைடி.. நானே அதை உணரனும்.. அது தான் நரேந்திரன்.."

அவன் முரட்டுத்தனமாக அந்தச் சேலை கட்டிய பெண்ணை இழுத்து அழைத்து வாசம் பிடித்து.. அந்த வாசனையை உணர்ந்தான்..

https://t.me/tamilpdfebooks



நீயில்லாத வாழ்வு...
நிலவில்லாத வானமென்ற
அழகான ராட்சசி நீ....

மதிய உணவுக்கான மெனுவை அகல்யாவிடம் கேட்க வந்தாள் வனிதா.. அவளுக்கு முகம் காட்டி.. மாலில் இருந்த அகன்று நீண்ட ஜன்னலின் திரையை விலக்கி தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அகல்யா.. அதை பொருட்படுத்தாமல் இயல்பாக அவளருகில் போய் பேச வாய்திறந்த வனிதா பயந்து போனாள்..

'வீல்..'

தொண்டைக்கு வந்து விட்ட அலறலை தொண்டைக் குழியிலியே விரல் வைத்து.. திருநீலகண்டம் போல நிறுத்தி வைத்து விட்ட வனிதாவின் உடல் நடுங்கியது..

தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அகல்யாவின் முகம் அந்த அளவுக்கு பயங்கரமாக மாறியிருந்தது.. வனிதாவின் முதுகுத் தண்டு சில்லிட்டது.. அந்த நிலையில் அகல்யாவிடம் பேச்சுக் கொடுப்பது தவறு என்ற ஞானோதயத்துடன் அவள் சத்தமில்லாமல்

https://t.me/tamilpdfebooks

பின் வாங்கினாள்.. அதே மனநிலையுடன் அடுக்களையில் அவளால் வேலை செய்ய முடியாது என்று தோன்றி விட.. பின்பக்க வாசலுக்குப் போய் படிக்கட்டில் உட்கார்ந்து நீண்ட மூச்சுக்களை விட்டு தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்..

அந்த வீட்டில் அகல்யா வந்து போகாத இடம் அது..

வீட்டில் வேலை செய்பவர்களின் அறைகள்.. சமையலறையை ஒட்டிய பின்பக்க வாசலின் அருகில்தான் இருந்தன.. அங்கே வந்து நிற்பதினால் அவளது கௌரவம் குறையுமென்று நினைக்கும் ஆணவம் பிடித்தவள் அகல்யா..

"என்ன வனிதா.. இங்கே உட்கார்ந்திருக்கிற..?"

டிரைவர் ரமேஷ் ஆர்வமாக அவளை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை பார்வையிட்டபடி கேட்டான்.. வனிதா நிமிர்ந்து பார்த்தாள்.. லேசர் போல அவளைத் துளைத்த அவனது பார்வையில் முகத்தை கடுமையாக வைத்துக் கொண்டாள்.. மேயும் அவனது பார்வையில் அவளுக்கு விருப்பம்தான் என்றாலும்... அதை வெளிக்காட்டிக் கொண்டால் ரமேஷிற்கு அவளால் போக்குக் காட்ட முடியாது என்பதினால் அதில் விருப்பமில்லாதவளைப் போலக் காட்டிக் கொள்வாள்..

'இவனுக்கெல்லாம் உடனே 'ஊம்'ன்னு தலையை ஆட்டி கழுத்தை நீட்டிட்டா இளக்காரமா போயிடும்.. சுத்த விடனும்.. இந்த வனிதாதான் வேணும்னு ஏங்க விடனும்..

https://t.me/tamilpdfebooks

இவை கிடைக்கிறது பெரிய வரம்ன்னு நினைக்க வைக்கனும்.. அதுக்கப்புறம்தான் சம்மதம் சொல்லனும்.. அப்பத்தான் காலத்துக்கும் இவன்.. என் பொண்டாட்டியப் போல மண்டுமான்னு என்னைக் கண்ணுக்குள்ள வைச்சுப் பார்த்துக்குவான்..'

வனிதா கெட்டிக்காரி.. மனிதர்களை எடை போட்டு காய் நகர்த்துவதில் வல்லவள்.. அந்த வகையில் அவள் அகல்யாவைவிட திறமைசாலி.. ஒரு மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால் வனிதா தன் வாழ்க்கையில் மட்டுமே காய் நகர்த்துவாள்.. அதுவும் அடுத்தவரின் நலனைப் பாதிக்காமல்.. அவளது நலனை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு காய் நகர்த்துவாள்.. அகல்யா அப்படியல்ல.. அவளது நலனே பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை.. அடுத்தவரை வாழ விடக் கூடாது என்ற ஆங்காரத்தோடு காய் நகர்த்துவாள்..

வனிதாவுக்கு நல்ல மனது.. அகல்யாவோ.. அதை காலோ என்ன விலை என்று கேட்பவள்..

ரமேஷின் ஆசைப் பார்வையை விரும்பாதவளைப் போல முகத்தில் முள்ளைக் கட்டிக் கொண்டு..

"ஏனாம்..? இங்கே வந்து உட்காரக் கூடாதுன்னு சட்டம் போட்டிருக்கியா..?" என்று கேட்டாள்..

"நீ வந்து உட்கார இந்த வாசப்படி கொடுத்து வைச்சிருக்கனும் வனிதா.. அது கூடாதுன்னு சட்டம் போட்டிருந்தா.. உனக்காக அதை உடைக்கிற முத

https://t.me/tamilpdfebooks

ஆள் நானாத்தான் இருப்பேன்.. இதில நான் சட்டம் போட்டுட்டேன்னு ஒரு வார்த்தய சொல்லிட்டயே வனிதா.. என் மனசே தாங்கலை..” ரமேஷ் நெஞ்சைப் பிடித்துக் கொள்வதைப் போல நடித்தான்..

“போதும் போ..”

வனிதா மனதிற்குள் அவன் நடிப்பை ரசித்தபடி.. வெளியே சிடுசிடுத்தாள்.. அவன் அதை கண்டு கொள்ளாமல் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.. வனிதா நகர்ந்து உட்காருவதைப் போல உடலை அசைத்தாள்.. கடுகளவு இடம் கூட அவள் நகரவில்லை என்பதே உண்மை.. ஆனாலும் ரமேஷ் ஏக்கப்பட்டுப் போனான்..

“ஏன் வனிதா தள்ளி உட்காருகிற..?”

“பின்னே.. உன்கூட ஒட்டி உரசியா உட்கார முடியும்..?”

“உட்கார்ந்தாத்தான் என்ன..?”

“உனக்கு ஒன்னுமில்லேய்யா.. எனக்குத்தான் எல்லாம்..”

“எல்லாம்ன்னா..?”

“சேலையில முள்ளுப் பட்டாலும்.. முள்ளு மேலே சேலை பட்டாலும் சேதம் சேலைக்குத்தான்ய்யா..”

“கருப்பு.. வெள்ளை சினிமாவை அதிகமா பார்க்காதேன்னா கேட்கறியா வனிதா..”

https://t.me/tamilpdfebooks

"ஓஹோ..! ஐயா என்னை ஓட்டறிங்களாக்கும்.. இப்ப என்ன சொல்ல வர்ற..? என்னைப் பாத்தா பாட்டி மாதிரி இருக்குன்னு சொல்ல வர்றியா..?"

உஷ்ணமாக கேட்ட வனிதாவை ஊன்றிப் பார்த்தான் ரமேஷ்...

அவளின் தளதளப்பான தக்காளிப்பழம் போன்ற செழுமையான மேனியழகில் இஞ்சிதின்ற குரங்கைப் போல பல்லைக் கடித்தான்..

"உன்னப் பாத்தா பாட்டி போல இருக்குன்னு பாட்டன் கூடச் சொல்ல மாட்டான்.. அப்படியே தக்காளிப்பழம் போல செவசெவன்னு இருக்கே கண்ணு.."

"கண்ணு மூக்குன்ன.. எனக்கு கெட்ட கோபம் வரும்.. இதையெல்லாம் வேற எங்கேயாச்சும் வைச்சுக்க.."

"உன்கிட்ட வைச்சுக்காம வேற யாருகிட்ட வைச்சுக்குவேன் வனிதா..? நம்ம ஐயாவைப் பாரு.. காதல் கல்யாணம்.. தோட்டத்திலே சரசம் பேசிக்கிட்டு இருக்காரு.. ம்ஹீம்.. நீயும் இருக்கியே.. ஒரு வார்த்தை பேச மாட்டேங்கிற..?"

"இரு.. இரு.. இப்ப என்ன சொன்ன..?"

ரமேஷ் சொன்னதை திரும்பச் சொன்னான்.. வனிதா அவசரமாக எழுந்து போய் மறைவாக நின்று தோட்டத்தைப் பார்த்தாள்.. அங்கேயிருந்த சோபா ஊஞ்சலில் ஊர்மிளாவின் விரல்களைப் பற்றிச்

https://t.me/tamilpdfebooks

சொடுக்கெடுத்து விட்டபடி தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தான் நரேந்திரன்..

'இவங்களைத்தான் அந்தம்மா பாத்துக்கிட்டு இருந்துச்சா..?'

வனிதாவிற்கு 'திக்' கென்று இருந்தது.. அகல்யாவின் பயங்கரமான பார்வையை அவள் நினைத்துப் பார்த்தாள்... அவள் சும்மா பார்த்தாலே எதிராளியின் கதி அதோகதியாகிவிடும்.. அந்த அளவுக்கு வன்மத்துடன் பார்த்தால்..?

"பாவம்.. ஊர்மிளாம்மா..?"

வனிதாவின் இதழ்கள் தன்னிச்சையாக முணு முணுத்தன.. அவளை விசித்திரமாகப் பார்த்தான் ரமேஷ்..

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு வனிதா.."

"இந்த வீட்டில வேலை செஞ்சா இன்னும் கொஞ்ச நாளில அதுதான் பிடிக்கப் போகுதுய்யா.."

"உளராதே.. நல்ல சம்பளம்.. நிலையான வேலை.. இதைப் போய் குறைச்சுப் பேசறியே.."

"சம்பளம் கிடைச்சாப் போதுமா..?"

"வேறென்ன கிடைக்கனும்..?"

"நிம்மதி கிடைக்கனும்.."

வனிதாவின் கண்கள் லேசாக கலங்கின.. ரமேஷ் உருகிவிட்டான்.. அதுநாள்வரை வனிதா அவனிடம் அந்த

https://t.me/tamilpdfebooks

அளவுக்கு மனம் விட்டுப் பேசியதில்லை.. அவனைக் கண்டாலே சிடுசிடுப்பாள்..

"உன் மனசில என்னதான் இருக்கு வனிதா..? ஊர்மிளாம்மா இப்பத்தான் கல்யாணமாகி புதுப்பெண்ணா இந்த வீட்டுக்குள்ள காலடி வைச்சிருக்காங்க.. காதல் கல்யாணம்.. நம்ம ஐயா அவங்கமேலே உசிரா இருக்கிறாரு.. இப்பக்கூடப் பாரு.. ரெண்டுபேரும் தோட்டத்திலே டூயட் பாடிக்கிட்டு இருக்காங்க.. நீ என்னடான்னா ஊர்மிளாம்மாவை பாவம்ன்னு சொல்கிற.. அவங்க இந்த வீட்டுக்கு முதலாளியம்மா வனிதா.. நீ சமையல் வேலையை செய்கிறவ.. நீ போய் அவங்களைப் பாவம்ன்னு சொன்னா.. சிரிக்கிறதா.. இல்லை அழுகிறதான்னு தெரியலை வனிதா.. உன்னைக் குறைச்சுப் பேசறேன்னு நினைக்காதே.. உண்மை நிலைமையைச் சொன்னேன்.. அவங்க சம்பளம் கொடுக்கிறவங்க.. நாம அவங்ககிட்ட சம்பளம் வாங்கறவங்க.. இதில யார் மேல யார் பரிதாபப் படறது..?"

"போய்யா.. நீ வேற.."

வனிதா உதட்டைச் சுழித்து ஒரு விதமாக சிரித்தாள்.. அதில் சிருங்காரம் வெளிப்படவில்லை.. மாறாக.. பெண் சித்தர் போன்ற ஞானம்தான் வெளிப்பட்டது..

'என்ன இவ.. இப்படிச் சிரிச்சு வைக்கிறா..?'

ரமேஷீக்குள் பயம் தோன்றியது.. ஏதோ ஒரு திரைப்படத்தில் விவேக்.. கோவை சரளாவை திருமணம்

https://t.me/tamilpdfebooks

செய்து கொண்டு.. கடவுள்.. விரதம்.. பக்தி மார்க்கம் என்று.. புது மனைவியின்மீது விரல் கூடப் படமுடியாமல்.. முதலிரவு காணாமல் படும் பாட்டைச் சொல்லும் படக்காட்சிகள் அவன் மனதில் வரிசைகட்டிக் கொண்டு ஓடின..

'இவ கழுத்தில தாலியைக் கட்டினா எனக்கும் அந்தக் கதிதானா..?' ரமேஷ் அரண்டு போனான்..

"வேணாம் வனிதா.. இப்படிச் சிரிச்சு வைக்காதே.. இதுக்கு நீ முறைக்கிறதே நல்லா இருக்கு.." அவன் இறைஞ்சினான்..

"யோவ்..! ஊர்மிளாம்மா நமக்கு சம்பளம் கொடுக்கிற முதலாளியம்மாவா இன்னைக்கு இருக்கலாம்.. என்னைக்கும் அவங்க இதே நிலைமையிலேயே இருக்கனுமில்ல.. அது சந்தேகம்தான்.. அதே சமயம்.. அவங்ககிட்ட கைநீட்டிச் சம்பளம் வாங்கற நீயும்.. நானும் இதே வேலையிலே நிலைச்சு நிற்போம்.." வனிதா எங்கோ பார்த்தபடி சொன்னாள்..

"என்ன வனிதா.. என்னென்னவோ சொல்கிற..?"

"ஆமாய்யா.. உன்கிட்டேயும்.. என்கிட்டேயும்.. தொழில்திறமை இருக்கு.. நாம எங்கே போனாலும் பிழைச்சுக்குவோம்.. இவங்களைப் போல சம்பளம் கொடுக்கிற முதலாளிகள் ஆயிரம் பேரு நமக்குக் கிடைப்பாங்க.. ஆனா நம்மளைப் போல வேலை தெரிஞ்ச திறமைசாலிக இவங்களுக்கு கிடைக்க

https://t.me/tamilpdfebooks

மாட்டாங்க.. அதனால.. உனக்கும் எனக்கும்.. வேலை நிலைச்சிருக்கும்.. ஆனா.. ஊர்மிளாம்மா..?"

"அவங்களுக்கென்னடி.. அவங்க ஐயாவோட பெண்டாட்டி.."

"அதனாலதான்ய்யா சொல்றேன்.. அவங்களை இந்த வீட்டில முதலாளியம்மாவா நிலைச்சு வாழ அகல்யாம்மா விடுவாங்களா..?"

"வனிதா..!"

ரமேஷ் உறைந்து போனான்.. வனிதா சொன்னதைப் போல அந்த வீட்டில் எந்த வேலையாளும் நிலைத்து வேலை செய்ததில்லை.. ஏதாவது ஒரு காரணத்தால் அகல்யாவின் கோபத்துக்கு ஆளாகி விலக்கப்பட்டு விடுவார்கள்.. மற்ற வேலைகளுக்கு மாதத்திற்கு ஒரு ஆள் வர.. சமையலுக்கும்.. டிரைவர் வேலைக்கும் ஆள் மாற்றப்படாமல் வனிதாவும்.. ரமேஷீம் நிலைத்திருந்தார்கள்..

அவர்கள்மீது அகல்யாவிற்கு கோபம் வராமல் இருந்ததில்லை.. அவள் யார்மீதும் அன்பு கொள்ள மாட்டாள்.. பாசம் காட்ட மாட்டாள்.. வனிதாவின் சேவையையும்.. ரமேஷின் விசுவாசத்தையும் மெச்சி அவள் அவர்களை வேலையில் நீடிக்க விடவில்லை.. அவர்களின் வேலைத் திறமை அப்படிப்பட்டது..

வனிதாவின் சமையல் ருசியை வேறு எவராலும் கொடுத்து விட முடியாது.. ஒரே நேரத்தில் நூறு

https://t.me/tamilpdfebooks

பதார்த்தாங்களைச் சமைக்கச் சொன்னாலும் முகம் சுளிக்காமல் சமைப்பாள்.. திடிரென்று வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு பண்ணினாலும் மலைக்காமல் சமாளிப்பாள்.. அப்படிப்பட்ட சமையல்காரியை கை நழுவ விட அகல்யா என்ன முட்டாளா..?

ரமேஷ் திறமையான காரோட்டி.. பெங்களூரின் போக்குவரத்து நெரிசலிலும் சரி.. சென்னையின் போக்கு வரத்து நெருக்கடியிலும் சரி.. திறமையாக வளைந்து.. நெளிந்து விரைவாக காரை ஓட்டுவதில் வல்லவன்.. இரவு பகல் பார்க்காமல்.. இரண்டுநாள்கள் கூட தொடர்ந்து காரை ஓட்ட வேண்டி வந்தாலும் ஓட்டுவான்.. அப்பேற்பட்ட காரோட்டியை கழட்டி விட அகல்யாவுக்கு என்ன மறை கழண்டு விட்டதா..?

அவள் அவர்களை வேலையிலிருந்து ஒரு நாளும் தூக்க மாட்டாள்..

“என்னவோ போய்யா.. இவங்க செய்கிறதைப் பார்க்கப்பார்க்க மனுசங்க மேலேயே எனக்கு நம்பிக்கை அத்துப் போச்சு..”

“நீயும் மனுசிதான் வனிதா..”

“நானும் மாறிப் போயிருவேனோன்னு பயமாய் இருக்குய்யா.. காதிருந்தும் செவிடா.. வாயிருந்தும் ஊமையா.. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் காலம் கழிக்கிறது..? என் மனசும் ஈரமில்லாம வறண்டு போச்சுண்ணா.. நான் பொழைக்கிற பொழைப்புக்கே அர்த்தமில்லாம போயிரும்ய்யா..”

https://t.me/tamilpdfebooks

வனிதாவின் குரல் தழதழத்தது.. ரமேஷிற்கு அவளது மன நெகிழ்வை பார்க்கும் போது நெகிழ்வாக இருந்தது.. அவளை மார்பில் சாய்த்து ஆறுதல் சொல்ல அவன் ஆசைப்பட்டான்.. அவள் காதோரமாக தேறுதல் மொழிகளைக் கூற வேண்டுமென்று எண்ணம் கொண்டான்.. அவள் முடிகோதி அமைதிப்படுத்த வேண்டும்.. உன் மனதில் ஈரம் வற்றி விடாது என்று சொல்ல வேண்டும்.. என்னென்னவோ எண்ணம் கொண்டு அவளை நெருங்க முனைந்தபோது அவள் சுதாரித்துக் கொண்டு விலகி நின்றாள்..

"கொஞ்சம் நின்னு பேசிட்டாப் போதுமே.. சந்தடி சாக்கிலே சந்துக்குள்ள சிந்து பாட வந்துருவியே.."

"பாடினாத்தான் என்னவாம்..?"

"இதுக்குப் பதிலை அப்பவே சொல்லியாச்சு.. நகரு.. நான் போகனும்.."

"எங்கே வனிதா..?"

"ஊம்..? பெங்களூரில இருக்கோமில்ல.. பார்க்குக்குப் போகப் போறேன்.. ஆளைப்பாரு.. சமையல்காரி எங்கே போவா..? சமையல் ரூமுக்குத்தான் போவா.."

"இப்பவே போய் என்ன செய்யப் போற..?"

"சமையலைத்தான் செய்யப் போறேன்.."

வனிதா பின்னலை விசிறியபடி படிகளில் ஏறினாள்.. அவள் மனம் அவளை அங்கேயே தேங்கச் சொன்னது..

https://t.me/tamilpdfebooks

'அவனுடன் இன்னும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிரு' என்றது.. அவள் மனதை உணர்ந்தவனைப் போல.. அவன்..

"இன்னும் கொஞ்சநேரம்..
இருந்தாத்தான் என்ன..?
என்ன அவசரம்..? என்ன அவசரம்..?
சொல்லு புள்ள..?"


என்று பாடினான்.. வனிதாவின் மனதில் சாரல் அடித்தது.. அவள் இதழ்களில் உதித்த கள்ளச்சிரிப்பை அவன் அறிய மாட்டான்.. உல்லாசமாய் அவள் முகம் மாறியதை அவன் உணரா வண்ணம் முகம் திருப்பியபடி சமையலறைக்குள் சென்றவளின் மனதில் உற்சாகம் நிரம்பியிருந்தது..

ஏதோ ஒரு பாடலை வாய் முணுமுணுக்க.. தன் போக்கில் மதிய உணவை செய்து முடித்தவள்.. சமையலறையை விட்டு வெளியே வந்தபோது.. அகல்யா அதே இடத்தில் நின்று கொண்டிருப்பதை பார்த்தாள்..

'இன்னுமா ஐயாவும்.. ஊர்மிளாம்மாவும் தோட்டத்தில இருக்காங்க..?'

வனிதா நினைத்து முடிக்கவில்லை.. நரேந்திரனும்.. ஊர்மிளாவும் இனைந்து பேசிச் சிரித்தபடி உள்ளே வந்தார்கள்.. அங்கே அகல்யா நின்று கொண்டிருப்பதைக் கவனிக்காமல் மாடிப் படிகளில் ஏறினார்கள்.. வனிதா கண்களை இறுக மூடிக் கொண்டாள்.. அவள் மனதில் துயரம் வந்தது..

https://t.me/tamilpdfebooks



ஒரு கண்ணில் வெயில் தந்து..
மறுகண்ணில் குளிர் தரும்..
அழகான ராட்சசி நீ....

நரேந்திரனும்.. ஊர்மிளாவும் காரை விட்டு இறங்கிய போது அந்தத் தெருவே சோமசுந்தரத்தின் வீட்டு வாசலில் குழுமி நின்று அவர்களை வரவேற்றது.. அடிக்கடி அவனைப் பார்த்திருந்த எதிர் வீட்டுப்பெண் ஆரத்தி எடுத்தாள்.. அவள் கண்களில் பொறாமை வழிந்தது.. நரேந்திரன் இவ்வளவு பெரிய ஆளாக இருப்பான் என்று நினைத்துக்கூடப் பார்த்திராதவளின் மனதில் அது தெரிந்திருந்தால் அவனது கவனத்தைக் கவர முயற்சித் திருக்கலாமே என்ற நினைவு எழுந்தது.. அந்த நினைவை அவளது கண்கள் காட்டியதில் ஊர்மிளாவின் கை... நரேந்திரனின் கையோடு பிணைந்தது..

ஆரத்தி எடுத்த பெண்ணின் தட்டில் 1000 ரூபாய் தாளைப் போட்டான் நரேந்திரன்.. அவள் விழிகளில் வியப்புடன் எடுத்துக் கொண்டு வழி விட்டாள்.. அவளை முறைத்தபடி கணவனுடன் வீட்டுக்குள் பிரவேசித்தாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

வீட்டை அழகாக அலங்கரித்திருந்தாள் பூங்குழலி.. இரண்டு நாள்களுக்குள் இத்தனை வேலைகளை அவளுக்காக.. அவளுடைய பெற்றோர் செய்து முடித்திருக் கிறார்கள் என்ற நினைவில் நெகிழ்ந்தாள் ஊர்மிளா..

ஹாலில் புதிதாக சோபா செட் இறக்கப்பட்டிருந்தது.. நீண்ட சோபாவில் நரேந்திரனையும்.. ஊர்மிளாவையும் உட்காரச்சொல்லி பால்.. பழம் கொடுத்து பகிர்ந்து உண்ண வைத்தாள் பூங்குழலி..

அதுபோன்ற சம்பிரதாயங்கள் பெங்களூரில் கடை பிடிக்கப்படவில்லை என்ற நினைவில் பெருமூச்சு விட்டாள் ஊர்மிளா..

எந்த சம்பிரதாயம்தான் அங்கே கடைபிடிக்கப் பட்டது..?

திருமண மண்டபத்திலிருந்து திருச்சிக்கு கிளம்பி வந்து விடாமல்.. பெற்ற பெண் எந்த முகவரியில் வசிக்கப் போகிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் போய் விடக்கூடாது என்ற வைராக்கியத்துடன்.. அகல்யாவின் அனைத்துப் பேச்சுக்களையும் சட்டை செய்யாமல் முறியடித்து.. புதுமணத் தம்பதிகளுடன் ஊர்மிளாவைப் பெற்றவர்கள் பெங்களூரில் இருந்த நரேந்திரனின் வீட்டுக்கு வந்ததினால் மட்டுமே ஓரிரு சம்பிரதாயங்கள் நிறைவேற்றப்பட்டன..

பூங்குழலி மகளை பூஜையறையில் விளக்கை ஏற்றச்சொன்னாள்.. பால்.. பழம் கொடுக்க நரேந்திரனைத் தேடினால் அவன் ஓய்வெடுக்க என்று அவனுடைய

https://t.me/tamilpdfebooks

அறைக்குப் போயிருந்தான்.. அது போன்ற மத்திய தர வர்க்க சம்பிரதாயங்களை அந்த வீட்டில் கடை பிடிக்க மாட்டார்கள் என்று அகல்யா அறிவித்து விட்டாள்..

'போகுது.. போ..' என்று பூங்குழலி.. முதலிரவுக்கு பூக்களை அலங்கரித்து.. முறைப்படி அறைக்குள் விட்டு விட்டு வந்தாள்.. அதை மட்டும் அவள் செய்யாமலிருந்தால்.. ஊர்மிளாவுக்கு அந்தச் சம்பிரதாயமும் முறைப்படி நிறைவேறியிருக்காது..

புதுப்பெண்ணையும்.. மாப்பிள்ளையையும் பார்க்க.. விருந்தினர்கள் வந்து போன வண்ணம் இருந்தார்கள்..

"எப்படிடீ.. உன் அப்பா.. முதலாளித்துவத்தின் அடையாளமான சோபாவை வாங்கிப் போட்டார்..?" ஊர்மிளாவின் காதோரமாக சரிந்து சந்தேகம் கேட்டான் நரேந்திரன்..

"இருங்க.. என் அப்பாவையே உங்களுக்கு விளக்கம் சொல்லச் சொல்லி அனுப்பி வைக்கிறேன்.." மிரட்டினாள் ஊர்மிளா..

"அடிப்பாவி..! மறுவீட்டு விருந்துக்குப் போகலாம் 'வா'ன்னு ஆசைவார்த்தை காட்டி.. ஏய்த்துக் கூப்பிட்டுக் கிட்டு வந்துட்டு இப்ப உன் அப்பாவிடம் மாட்டி விடப் பார்க்கறியே.. சதிகாரி.." என்றான் நரேந்திரன்..

"பெண்டாட்டிக்கு 'சதி..'ன்னும் ஓர் பெயர் உண்டு தெரிஞ்சான்.." என்றாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

"மச்சானா..? ஏய்ய்.." நரேந்திரன் தேன் குடித்த சிங்கமானான்..

"மூச்.. இது ஹால்.." ஊர்மிளா ஒற்றைவிரலை வாயில் வைத்து அவனை அதட்டினாள்..

நரேந்திரனுக்கு அந்தச் சூழலை மிகவும் பிடித்திருந்தது... அந்த வீட்டிலிருந்த உயிர்ப்பை அவன் ரசித்தான்... மாளிகை போன்ற அவன் வீட்டில் இல்லாத உயிர்ப்பு... அவனது மாமனார் வீட்டில் இருந்தது.. இதுபோன்ற ஒரு வீட்டில் பிறந்து வளர்ந்ததினால்தான் ஊர்மிளா அவனைக் கவர்ந்தாளோ என்று அவன் எண்ணினான்..

பிறந்த வீட்டுக்கு வந்திருந்ததில் ஏற்பட்டிருந்த சந்தோசத்திலும், சுதந்திர உணர்விலும்.. ஊர்மிளாவின் சோபை அதிகாரித்துத் தெரிவதைப் போல இருந்தது.. அவள் குறும்பு கொப்பளிக்க நரேந்திரனை வம்புக்கு இழுத்தாள்.. மனைவியின் அழகிலும்.. பேச்சிலும் மயங்கிப் போனவன் அவளை விழுங்கி விடுவதைப்போல பார்க்க ஆரம்பித்தான்..

"மச்சானோ.. மாமாவோ..
யாரோ.. இவரு..
என்னை வைச்ச கண்ணு வாங்காம
பார்க்கிறாரு.."

ஊர்மிளா மெல்லிய குரலில் அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படி பாடி வைத்ததில் அவனது போதை அதிகரித்தது.. அவளைத் தொட்டு இழுக்கப் போனான்..

https://t.me/tamilpdfebooks

"அதோ.. அப்பா வர்றார்.." என்று அவள் ஆட்டம் காண்பித்தாள்..

"உங்க அப்பா என்ன பெரிய வஸ்தாத்தாடி..?"

நரேந்திரன் கேட்டுக் கொண்டிருந்த போதே அங்கே சோமசுந்தரம் வந்துவிட.. ஊர்மிளா..

"அப்பா.. இவர் உங்களிடம் ஏதோ சந்தேகம் கேட்கனுமாம்.." என்று கணவனை தந்தையிடம் மாட்டி விட்டாள்..

"தர்ம பத்தினின்னா அது நீதாண்டி.." ஊர்மிளாவிடம் ில்லைக் கடித்த நரேந்திரனிடம்..

"என்ன சந்தேகம் கேட்கணுங்க..?" என்று கேட்டு வைத்தார் சோமசுந்தரம்..

"உங்களிடம் போய் என்ன சந்தேகத்தைக் கேட்பேன்ங்க..? இந்த பொதுவுடைமைக் கொள்கையைப் ித்தி உங்க மகளுக்கு எதுவும் தெரியலையே.. ஏன்..? நீங்க அவளுக்கு எதையும் சொல்லிக் கொடுத்து வளர்க்கலையா..? எதைக் கேட்டாலும் பதில் சொல்லத் தெரியாம திருதிருன்னு முழிக்கிறாளே.." நரேந்திரன் ஊர்மிளாவை வகையாக மாட்டி விட்டு விட்டான்..

'போச்சுடா..' ஊர்மிளா மனதுக்குள் அலறினாள்.. அவளுக்கா பொதுவுடைமைக் கொள்கையைப் பற்றி துவும் தெரியாது..? அவளுக்கு விவரம் தெரிந்த நாள் முதலாய் பூங்குழலி அவளுக்கு பால் சோற்றை ஊட்டி

https://t.me/tamilpdfebooks

வளர்க்க.. சோமசுந்தரம் அவளுக்கு பொதுவுடைமைக் கருத்துக்களை புகட்டி வளர்த்தவராயிற்றே..

நின்றால் கொள்கை.. நடந்தால் கொள்கை.. ஓய்ந்து.. அக்கடாவென்று கால் நீட்டி உட்கார்ந்தால் அங்கேயும் வந்து கொள்கையென்று வகுப்பை எடுத்து ஊர்மிளாவை ஓட ஓட விரட்டிய ஆருயிர் அப்பாவாயிற்றே அவர்..

அவரிடம் அவள் திரும்பவும் பாடம் கேட்பதா..?

“ஊர்மிளா..”

“அப்பா..”

“இதுதான் அப்பாவுக்கு நீ பெயர் வாங்கிக் கொடுக்கும் லட்சணமா அம்மா..?”

“இல்லையப்பா..”

“உன் வீட்டுக்காரர் சொன்னதைக் கேட்டா யில்லையா..?”

“கேட்டேன்ப்பா..”

“அவர் முதலாளி வர்க்கத்தில் பிறந்து விட்ட சுரண்டல் காரர்..”

“அப்பர்..”

“தொழிலாளி வர்க்கத்தை காலடியில் போட்டு மிதித்து நசுக்கும் பாஸிச கொள்கைக்காரர்..”

“அப்பா..”

https://t.me/tamilpdfebooks

"ஏழைகளின் கண்ணீரிலும்.. உழைப்பாளிகளின் வியர்வையிலும் உல்லாசமாக.. மாட மாளிகை.. கூட கோபுரம் கட்டி வாழ்ந்து வரும் பணக்கார முதலை.."

"அப்பா.."

ஊர்மிளாவுக்கு அழுகையே வந்து விட்டது.. முதல் வீட்டு விருந்துக்கு வந்திருக்கும் மகளுக்கு.. அவளுடைய கணவனிடமிருந்து விவாகரத்து வாங்கித் தந்தே தீருவது என்ற கொள்கைப் பிடிப்புடன் முழங்கிக் கொண்டிருக்கும் தகப்பனாரின் சங்க நாதத்தை நிறுத்தும் வகை தெரியாமல் கைகளைப் பிசைந்தாள் அவள்..

'இந்தப்பா எனக்கு டைவர்ஸ் வாங்கிக் கொடுத்துட்டுத்தான் மறுவேலை பார்ப்பாரு போல இருக்கே..'

"இப்படி உட்காரும்மா.."

"எதுக்குப்பா..?"

"உனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கத்தான்.."

உச்சி வெயில் தலையைப் பிளக்கும் நேரத்தில் மகளை உட்கார வைத்து பொதுவுடைமை சித்தாந்தங்களைப் போதிக்கத் தொடங்கினார் சோமசுந்தரம்..

அழமாட்டாத குறையாய் தகப்பனாரின் முகத்துக்கு 'ஆமாம் சாமி' போட்டபடி கணவனை மனதில் வைத்துக் கொலை வெறியுடன் முறைத்துப் பார்த்தாள் ஊர்மிளா..

தலையில் ஆணியடிப்பதைப் போல வேதனையாக இருந்தது அவளுக்கு.. தெரிந்த விளக்கத்தைத் திரும்பவும்

https://t.me/tamilpdfebooks

கேட்க நேரிடுவதில் இருக்கும் கொடுமையை அனுபவ பூர்வமாக அனுபவித்துக் கொண்டிருந்தாள் அவள்..

"புரிகிறதாம்மா..?"

சோமசுந்தரத்தின் கேள்வியில்.. ஆஹா.. பாடம் முடிந்து விட்டது என்று மகிழ்ந்து போய் விட்டாள்..

"புரிஞ்சிருச்சுப்பா.."

தப்பித்து விட்ட சந்தோசத்தில் அவள் தலையை ஆட்ட..

"எங்கே.. நான் என்னென்ன விளக்கத்தைச் சொன்னேன்னு சொல்லு பார்ப்போம்.." என்று டெஸ்ட் வைத்து அவளை கதி கலங்க வைத்தார் அவளைப் பெற்ற தந்தை..

'விதியே..' என்று உட்கார்ந்திருந்த ஊர்மிளா என்ன விளக்கத்தைச் செப்புவாள்..?

'அகப்பட்டுக்கிட்டயா..?' நரேந்திரனின் விழிகள் அவளை கேலி செய்தன..

'இருக்கு.. உங்களுக்கு..' ஊர்மிளாவின் விழிகள் சூளுரைத்தன..

'என்னயாடி மாட்டிவிடப் பார்த்த..? இப்ப நீயே மாட்டிக்கிட்டயா..? இது எப்படி இருக்கு.. ஹா..ஹா..' நரேந்திரன் சைகையிலேயே அவன் பேச வந்ததை உணர்த்தினான்..

https://t.me/tamilpdfebooks

'ரொம்பத்தான் குதிக்காதீங்க..' ஊர்மிளா ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தாள்..

"என்னம்மா...?" அவளது ஒற்றை விரல் சைகையினைப் பார்த்து விட்ட சோமசுந்தரம் கேட்டார்..

"ஹி.. ஹி.. ஒன்றுமில்லைப்பா.." என்று அசட்டுச் சிரிப்பு சிரித்து வைத்தாள் ஊர்மிளா..

"என்னம்மா இப்படிச் சிரிக்கிற..? நம்ம வீட்டில இருக்கிறப்ப உன்சிரிப்பு எவ்வளவு அழகா.. கம்பீரமா.. இருக்கும்...? இப்ப என்னடான்னா கல்யாணமாகி பெங்களூரில் குடித்தனம் பண்ண ஆரம்பிச்ச ஒரே மாசத்திலேயே உன் சிரிப்பு மாறிப் போச்சே.." சோமசுந்தரம் நரேந்திரனைக் கண்டனப் பார்வை பார்த்தார்..

"உங்க மக இளைச்சிருந்தா என்னைக் குற்றம் சொல்லுங்க கேட்டுக்கறேன்.. அவ சிரிப்பு மாறியிருக்கிறதுக்கு குற்றம் சொன்னா நான் என்ன செய்ய..?" நரேந்திரன் நியாயம் கேட்டான்..

"முதலாளி வர்க்கமில்ல.. இப்படித்தான் பேசுவீங்க.." சோமசுந்தரம் விறைப்புடன் நரேந்திரனுடன் மோதிவிட்டு..

"நீ சொல்லும்மா.." என்று டெஸ்டில் கவனமானார்..

நரேந்திரனுடனான வர்க்க மோதலில் அவளுக்கு வைத்த டெஸ்டை அவர் மறந்து விட்டாரென்ற சந்தோசத்தில் இருந்த ஊர்மிளா.. விட மாட்டேன்

https://t.me/tamilpdfebooks

என்கிறாரே.. என்று வாடி.. வதங்கி விட்டாள்.. சோம சுந்தரத்திடம் மாட்டிக் கொண்டு விழிக்கும் கொடுமையை விட.. அதை நரேந்திரன் சுவராஸ்யமாக வேடிக்கை பார்ப்பது அவளுக்குப் பெருங்கொடுமையாய் இருந்தது..

அவளுக்கா.. அவளுடைய அன்புக்குரிய அப்பாவிட மிருந்து தப்பிக்கும் மார்க்கம் தெரியாது..?

"அப்பா..."

"ஊம்.. விளக்கம் சொல்லும்மா.."

"உங்களுக்கு நினைவிருக்காப்பா.."

"எதைம்மா...? உன் வீட்டுக்காரர் பசுத்தோல் போர்த்தின சிங்கமாக... தொழிலாளி வர்க்கம் போல வேசம் போட்டுக்கிட்டு வந்து உன்னைப் பெண் கேட்டாரே.. அதைச் சொல்கிறயாம்மா..? எப்படிம்மா மறக்கும்..? மறந்தால்தானேம்மா நினைக்கிறதுக்கு.."

'ஊஹூம்.. இந்த அப்பா.. என்னைத் திருச்சியிலேயே தேக்கி வைச்சுக்கனும்கிற முடிவோடதான் மறுவீட்டு விருந்துக்கு வர வைச்சிருக்காரு..'

"என்னம்மா யோசிக்கிற..?"

"எப்படி நீங்க அந்தப் பாட்டை மறந்தீங்கன்னு யோசிக்கிறேம்ப்பா.."

"எந்தப் பாட்டும்மா..?"

"சின்ன வயசில அம்மா என்னைத் தூக்கி வைச்சு கொஞ்சிப் பாடுவாங்க.. அப்ப நீங்க கொள்கையை எடுத்துச்

https://t.me/tamilpdfebooks

சொல்லி சேர்ந்து பாடுவீங்க.. அப்பவே எனக்குக் கொள்கை பாடம் சொல்லிக் கொடுத்த 'குரு'ப்பா நீங்க.."

சோமசுந்தரத்திற்கு நினைவு வந்து விட்டது.. ஊர்மிளாவின் உணர்ச்சிமயமான பேச்சில் அவர் நெகிழ்ந்து நெக்குருகிப் போனார்..

"பூஞ்சிட்டுக் கன்னங்கள்..
பொண்மணி தீபத்தில்
பால் பொங்கல் பொங்குது..
பன்னீரிலே.."

ஊர்மிளா பாட ஆரம்பித்தாள்.. டெஸ்ட் எழுத வேண்டியவள் பாட்டுக்கு தாவி விட்ட சாதுர்யத்தில் வியந்து போன நரேந்திரன் அவளது பாடலை ரசிக்க ஆரம்பித்தான்..

'எப்புடி..?' அவள் கண் சிமிட்டியதில் கள்ளூற... அதை அள்ளிப் பருகிய போதையில் அவளையே விழுங்கி விடுவதைப் போல தொடர்ந்து பார்க்க ஆரம்பித்தான் அவன்..

"பொங்கல் பிறந்தாலும்..
தீபம் எரிந்தாலும்..
ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே..
இந்த ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே.."


சோமசுந்தரத்தின் உருக்கமான பாடலில் அவனுக்கு தூக்கிவாரிப் போட்டது.. அந்தப் பாடலை அதற்கு முன்னால் அவன் கேட்டதில்லை.. ஊர்மிளாவைக் காதலிக்க

https://t.me/tamilpdfebooks

ஆரம்பித்த பின்புதான் திரையிசைப் பாடல்களையே அவன் ரசிக்க ஆரம்பித்தான்.. இதில் பழம் பெருமை வாய்ந்த.. மகோன்னதமான.. அந்தக் காவியப் பாடலைப் பற்றி எங்கே கேள்வி பட்டிருக்கப் போகிறான்..?

சோமசுந்தரம் அவனைச் சாடுவதற்காக பேசினாலும்.. அதில் ஓர் உண்மை இருக்கத்தான் செய்தது..

நரேந்திரன் முதலாளி.. ஊர்மிளாவைப் போல.. தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்தைப் பற்றி அவன் அறிந்திருக்கவில்லை...



எதிரெதிர் கரைகளில் இருந்தபோதும்..
எனை மயக்கி உன்பக்கம் இழுத்துக் கொண்ட
அழகான ராட்சசி நீ....

“மாணிக்கத் தேர் போல..
மையிட்டு பொட்டிட்டு..
மகராசன் பிள்ளைகள்..
வினையாடும்..”

ஊர்மிளாவின் அழகான விழிகளின் சுழற்சியில் நரேந்திரனுக்குள் அவனுக்குப் பிறக்கப் போகும் செல்வங்களைப் பற்றிய கனவு வந்தது..

https://t.me/tamilpdfebooks

“கண்ணாடி வளையலும்..

காகிதப் பூக்களும்..

கண்ணே உன் மேனியில்

விளையாடும்..

இல்லாத உள்ளங்கள் உறவாடும்..”

என்ற சோமசுந்தரத்தின் பாடல் வரிகளில் இனிய ராகவின் இடையில் இடறல் ஏற்படுவதைப் போல உணர்ந்தான் நரேந்திரன்..

‘இவர் ஒரு சினிக்..’ அவனுக்கு கோபம் கோபமாக வந்தது..

இப்படியா ஒரு மனிதர்.. சந்தோசப் பாட்டுக்கு இடையே சம்மட்டியைப் போடுவார்..?

“கண்ணுறங்கு.. கண்ணுறங்கு..

பொன்னுலகம் கண்ணில் காணும் வரை..

கண்ணுறங்கு..”

ஊர்மிளாவின் குரல் தழுதழுத்ததில் நரேந்திரன் மயங்கி விழுந்து விட்டான்..

“செல்வர்கள் இல்லத்தில்..

சீராட்டும் பிள்ளைக்கு..

பொன்வண்ணக் கிண்ணத்தில்..

பால் கஞ்சி..”

‘நீ யாருடி..?’ நரேந்திரனுக்கு வெறி வெறியாக வந்தது..

https://t.me/tamilpdfebooks

'தி கிரேட் நரேந்திரனின் பெண்டாட்டி செல்வச் சீமாட்டியில்லையா..? அவள் வாழும் வீடு செல்வர்கள் வாழும் வீடில்லையா..? அவள் பெறும் குழந்தைக்கு.. தங்கக் கிண்ணத்தில்தானே பால்சாதம் ஊட்டுவார்கள்.. '

'வேண்டாம் ஊர்மிளா.. பாட்டை நிறுத்திவிட்டு என்னுடன் வந்துவிடு..'

அவள் கைபிடித்து இழுக்கலாம் போல அவனுக்குள் வேகம் ஏற்பட்டது.. இப்போது பாடும் ஊர்மிளா.. ஒரு வார காலமாக அவனுடன் ஒன்றி வாழ்ந்த ஊர்மிளாவாக இல்லை என்று அவனது உள்மனது கூறியது..

"கண்ணீரில் உப்பிட்டு..
காவேரி நீரிட்டு..
கலயங்கள் ஆடுது சோறின்றி..
இதயங்கள் ஏங்குது வாழ்வின்றி.."

சோமசுந்தரத்தின் துயரம் சொல்லுக்குள் அடங்காத தாய் இருந்ததில் பூங்குழலி கைவேலையை போட்டு விட்டு ஹாலுக்கு ஓடி வந்தாள்.. புதுமணத் தம்பதிகளைப் பார்க்க வந்திருந்தவர்கள் ஆங்காங்கே வாகாக உட்கார்ந்து பாட்டுக் கச்சேரியை ரசித்துக் கொண்டிருந்ததைக் கண்டவளுக்கு சுவரில் தலையை 'ணங்..ணங்..'கென்று மோதிக் கொள்ளலாம் போல இருந்தது..

"ஏங்க.. என்னங்க நடக்குது இங்கே..?"

சேலை முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு மருமகளின் எதிரே வராமல் சுவர் மறைவிலிருந்த

https://t.me/tamilpdfebooks

படியே கணவரை அதட்டிய பூங்குழலியைப் பார்த்த நரேந்திரனுக்கு இறைவன் எப்படியெல்லாம் ஜோடி சேர்த்து வைக்கிறார் என்ற வியப்பு ஏற்ப்பட்டது..

பொதுவுடைமைக் கொள்கையையும்... சமத்துவத்தையும் பற்றிப் பேசும் சோமசுந்தரத்திற்கு இப்படியொரு சாத்வீகமான மனைவி..!

'மனிதர் கெட்டிக்காரர்..' நரேந்திரன் புல்லைக் கடித்தான்..

'இவர் மட்டும் பொறுமையின் பூசணமா இருக்கிற பெண்டாட்டியுடன் குடும்பம் நடத்துவாராம்... என் பெண்டாட்டியை மட்டும் கொள்கை.. கொள்கைன்னு உருவேத்தி வைப்பாராம்.. அந்தக் கொள்கையை என் மாமியாருக்கு இவர் சொல்லிக் கொடுக்க வேண்டியது தானே..'

பூங்குழலியின் கேள்வியில் பாடலில் இருந்து வெளிவந்த சோமசுந்தரம்... மனைவியைப் பார்த்து புன்னகைத்தார்..

"ஒன்னுமில்லை குழலி.. நாம சின்ன வயசில பாடின பாட்டை ஊர்மிளா ஞாபகப் படுத்திட்டாப்புல.."

"அதுக்கு..? பாட்டுக் கச்சேரி நடத்துவீங்களா..? பெங்களூரில இருந்து காரில வந்திருக்கிறவங்க ரெஸ்ட் எடுக்கட்டும்ன்னு நினைச்சுப் பார்க்க மாட்டிங்களா..?"

"நானாடி வேண்டாம்ன்னு சொன்னேன்..?"

https://t.me/tamilpdfebooks

"அதையும் சொல்லிப் பார்த்திருங்களேன்.."

பூங்குழலியின் ஆட்சேபத்தில்... சோமசுந்தரம் பாடத்தையும்.. பாட்டையும் விட்டு வெளியே வந்து ஊர்மிளாவை விடுவித்தார்.. வந்திருந்த விருந்தினரிடம் உபசாரமாக ஓரிரு வார்த்தைகள் பேசி அனுப்பிவைத்தாள் ஊர்மிளா..

"உனக்குத்தான் இது உன் வீடு.. மாப்பிள்ளைக்கு அப்படியா ஊர்மிளா..? இது அவருடைய மாமனார் வீடில்லையா..? நீதானே அவரைக் கவனிச்சுக்கனும்.. வந்தவரை அழைத்துக்கிட்டுப் போய் ரெஸ்ட் எடுக்க வைக்காம நீயும் உன் அப்பாகூடச் சேர்ந்துக்கிட்டு கூத்தடிக்கிற..?"

பூங்குழலி ஊர்மிளாவைக் கடிந்து கொண்டாள்.. சோமசுந்தரத்தின் பிரச்சாரத்தை அவள் 'கூத்தடிப்பது..' என்று சொன்ன ஒரே காரணத்திற்காகவே நரேந்திரனுக்கு அவள்மீது பெற்ற தாயைப் போன்ற பாசம் ஏற்பட்டு விட்டது..

"பாவம்டி உங்கம்மா.. உங்கப்பாகிட்ட மாட்டிக்கிட்டு விழிக்கிறாங்க.."

தனி அறைக்குப் போய் கதவை அடைத்ததும்.. விடுதலை உணர்வுடன் கட்டிலில் சரிந்த நரேந்திரன் கூறினான்..

"எப்படி..? நான் உங்களிடம் மாட்டிக்கிட்டு முழிக்கிறேனே.. அது போலவா..?" ஊர்மிளா நிதானமாக கேட்டாள்..

https://t.me/tamilpdfebooks

"நீ என்னிடம் மாட்டிக்கிட்டு முழிக்கிறயா..?" நரேந்திரன் கடுமையாக கேட்டான்..

"பின்னே..? இல்லையா..?"

அவன் முகம் பார்க்காமல் பெட்டியிலிருந்த அவனுடைய துணிகளை எடுத்து சுவர் அலமாரியில் அடுக்கியபடி சொன்னாள் ஊர்மிளா..

"நானும் அப்போப் பிடிச்சு உன்னை வாட்ச் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேண்டி.. நீ.. நீயாவே இல்லை.." குற்றம் சாட்டினான் நரேந்திரன்..

"நான் எப்பவுமே நானாத்தான் இருப்பேங்க... அதில உங்களுக்கு எந்தவிதமான டவுட்டும் வேண்டாம்... இங்கே வந்ததில இயல்பான என் குணங்கள் வெளியே வந்திருக்கலாம் இதை மாறிப் போனதா நீங்க சொல்வீங்களா..?"

சுவர் அலமாரியை மூடிவிட்டு அவள் திரும்பினாள்.. ஓட்டாத குரலில் பேசிய மனைவியை கோபத்துடன் நிமுத்தான் நரேந்திரன்.. அவன் கை வளைவில் அவள் விழுந்தாள்... அவன் குனிந்தான்.. அவள் முகத்தோடு முகம் வைத்த அவன் கோபத்தில் அவள் பேச்சிழந்து போனாள்..

"நீ என்னோட பெண்டாட்டி ஊர்மிளா.."

விலகிப் படுத்தவனின் கோபம் தனிந்திருந்தது.. ஊர்மிளா புரண்டு.. ஒருக்களித்துப் படுத்து அவன் முகம் பார்த்தபடி..

https://t.me/tamilpdfebooks

"இல்லேன்னு யார் சொன்னது..?" என்று கேட்டாள்..

"உனக்கெதுக்கு இந்தப் பாட்டெல்லாம்..?"

"புரியலை.. இது என் ரத்தத்தில் ஊறினது.. விட முடியாதது.."

"நரேந்திரனோட பெண்டாட்டியோட லெவலே வேற ஊர்மிளா.. இப்படிக் கண்ணாடி வளையலையும்.. கஞ்சியில்லாத கலயங்களையும் நீ பாடக்கூடாது.."

"அதை நீங்க சொல்லக் கூடாது.."

"ஊர்மிளா.."

"அப்பா கொள்கை சொல்கிற விதம் வேணும்னா முரட்டுத்தனமா இருக்கலாம்.. அவர் கொள்கையிலே குறையேதும் இல்லை.. இது வர்க்கப் போராட்டம்.. நீங்க மேல்தட்டு வர்க்கத்தில பிறந்து வளர்ந்தவங்க.. உங்களுக்கு உழைப்பாளிகளின் பட்டினிப் போராட்டத்தைப் பற்றி எதுவும் தெரியாது.."

"ச்சே..! நாம புதுசாக் கல்யாணமான ஜோடியாடி..?"

நரேந்திரனுக்கு வெறுத்துப் போய்விட்டது.. எல்லாம் தெரிந்துதான் அவன் ஊர்மிளாவைக் காதலித்தான்.. அவள்தான் வேண்டும் என்று உண்மையை மறைத்து திருமணமும் செய்து கொண்டான்.. இருந்தும்.. வாழ்ந்து பார்க்கும்போது எதிர்மறைத் துருவங்களின் மத்தியில் ஈர்ப்பை விட போராட்டமே அதிகமாக இருப்பதைப் போல அவனக்குத் தோன்றியது..

https://t.me/tamilpdfebooks

"அதுக்குள்ளே நான் அலுத்துப் போயிட்டேனில்ல..?"

ஊர்மிளா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. அவளைச் சமாதானப் படுத்தி இயல்பாக பேச வைப்பதற்குள் நரேந்திரனுக்கு போதும்.. போதுமென்று ஆகிவிட்டது..

"என்னடி இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிற..? அப்படி அந்தப் பாட்டில என்னதாண்டி இருக்கு..?"

"எவ்வளவோ இருக்கு.. உங்களுக்குத்தான் அந்தப் பாட்டோட சித்தாந்தம் என்னன்னு புரியலை.."

நரேந்திரன் அந்தச் சிந்தாந்தத்தைப் பற்றிய விளக்கம் ஏதையும் கேட்கவில்லை.. அப்போதைக்கு அவள் வழியில் விட்டுப் பிடிப்பதுதான் போர் நிறுத்தத்திற்கான ஒரே வழி என்று எதுவும் பேசாமல் இருந்து விட்டான்..

பூங்குழலி விதம்.. விதமாக அவர்களுக்கு விருந்து சமைத்துப் போட்டாள்.. நரேந்திரனும்.. ஊர்மிளாவும்.. ஏற்கனவே அவர்கள் இருவரும் சேர்ந்து சுற்றிய திருச்சியை திரும்பவும் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தார்கள்.. மச்சிப் பிள்ளையார் கோவிலுக்குப் போனபோது..

"இங்கதாண்டி உன்னை முதன் முதலா பார்த்தேன்.." என்றான் நரேந்திரன்..

ஊர்மிளாவின் விழிகளிலும் அந்த நினைவு மிதந்தது.. அவளது பார்வை.. அங்கே அவர்கள் அமர்ந்திருந்த ஒவ்வொரு இடத்தையும் வருடிக் கொடுத்தது..

https://t.me/tamilpdfebooks

மென்மையாகி விட்ட மனைவியின் முகம் பார்த்தவன்..

"நீ என்னைக் காதலிக்கிறதானே ஊர்மிளா..?" என்று கேட்டு வைத்தான்..

ஊர்மிளா அவனை முறைத்தாள்.. அதில் தெரிந்த உரிமையான கோபத்தில் அவன் மனம் ஊஞ்சலாடியது..

கல்லணையில் அவளுடன் கை கோர்த்து நடந்த போது அவள் அவன் தோள்மீது சாய்ந்து கொண்டாள்..

"இந்த உலகத்திலேயே நான் அதிகமாக நேசிக்கிறது யாரைன்னு தெரியுமா..?" என்று கேட்டாள்..

"தெரியுமே.. உங்க அப்பா.. அதற்கடுத்து உன் அம்மா.." என்றான் நரேந்திரன்..

"இல்லை.." ஆழ்ந்த குரலில் சொன்னாள் ஊர்மிளா..

"பின்னே..?" நரேந்திரனின் முகத்தில் வெளிச்சம் பரவியது.. அவன் அவளையே ஊன்றிப் பார்த்தான்.. அவள் விழிகளில் தெரிந்த அளவு கடந்த காதல் அவனுக்கு இனிப்பானதாக இருந்தது.. அந்த கொள்கை பேசும் பிடிவாதக்காரியின் மனதில் எந்த அளவுக்கு அவன் இடம் பிடித்திருக்கிறான் என்பதை அவன் அறிய விரும்பினான்..

"இந்த உலகத்திலேயே நான் அதிகமா நேசிக்கிறது உங்களைத்தான் நரேன்.. இந்த பிரபஞ்சத்தை விடப்

https://t.me/tamilpdfebooks

பொறாமைதாக நான் நினைப்பது உங்கள் மேல் நான் வைத்திருக்கும் காதலைத்தான்.."

"போடி.. முதலாளி வர்க்கத்தை தொழிலாள வர்க்கம் காதலிக்குதாம்.. இதை என்னை நம்பச் சொல்கிறயா..?"

"நம்பித்தான் ஆகனும்.. நீங்க முதலாளி வர்க்கம்ன்னு தெரியாமல்தான் நான் காதலிச்சேன்.. நீங்க தொழிலாள வர்க்கம்ன்னு நினைச்சுத்தான் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சேன்.. ஆனா நரேன்.. அது பொய்யாய் போனபின்னாலும் உங்களை பொய்காரன்னு என்னால நினைக்க முடியலை.. அதுதான் உங்கள்மேல் நான் வைத்திருக்கும் அளவு கடந்த காதல்.."

அதைச் சொல்லிய போது ஊர்மிளாவின் விழிகளில் மின்னிய அந்த அளவு கடந்த காதலை உணர்ந்தான் நரேந்திரன்..

அவனைவிடவும் அதிகமாக அவளால் காதலிக்க முடியும் என்பதை அந்த நொடியில் அவள் அவனுக்கு உணர்த்தினாள்.. பெங்களூருக்குத் திரும்பிய பின்னால் அவன்மீதான அவளது காதல் அதிகரித்தது..


நரேந்திரன் அவளது ஆழ்ந்த காதலுக்கு அடிமையானான்.. அவள் போட்டு விடும் சட்டையின் பொத்தான்களைத் தொட்டு பார்ப்பதில் உள்ள இன்பத்தை அவனது ஸ்டேட்டஸ் கூடத் தந்து விடவில்லை..

அவள் கலைத்து விடும் தலைமுடியை வாரிவிட அவன் விரும்பியதில்லை.. கலைந்த தலை முடியில்

https://t.me/tamilpdfebooks

அவனது கவர்ச்சி அதிகமாகி விட்டதாக அவள் சொக்கிப் போகும் போது அவனுக்குள் ஆண்மையின் கர்வம் பிரவாகமெடுத்தது..

அவன் கழுத்தை மாலையாக அவள் கரங்கள் வளைத்து இழுக்கும் போதெல்லாம் அவளிடம் தன்னை ஒப்புக் கொடுத்தான் நரேந்திரன்.. அவளின் காதலில் ஓர் ஆளுமை இருப்பதை உணர்ந்தான்..



உன் காதலால் எனைக்
கட்டிப் போட்ட..
அழகான ராட்சசி நீ....

வெளிச்சமில்லாத வெளிச்சம்.. இருட்டில்லாத இருட்டு... ஆங்காங்கே ஏற்றி வைக்கப்பட்டிருந்த மெழுகு வர்த்தியின் ஒளியில்.. கண்ட அந்த நீண்ட குகையை பலமுறை தன் கனவுகளில் கண்டிருக்கிறாள் ஊர்மிளா..

ஆழ்ந்த தூக்கத்தில் அடிக்கடி அந்தக் கனவு அவளுக்கு வரும்.. நீண்டு செல்லும் குகைப்பாதையில் அவள் போய் கொண்டிருப்பதைப் போல உணர்வாள்.. சட்டென்று விழிப்பு வந்து விடும்..

https://t.me/tamilpdfebooks

வெகுநாள்கள்வரை அந்தக் கனவுக்கான பொருள் புரியாமல் மனதைப் போட்டு உழட்டிக் கொண்டாள் ஊர்மிளா.. தத்ரூபமாக.. கண்ணுக்கு முன்னால் நடப்பதைப் போல அவள் கண்ட குகையின் நீண்ட பாதை திரும்பத் திரும்ப அவள் மனதுக்குள் சுற்றிச் சுற்றி வந்தது.. எதற்காக அந்தக் கனவு திரும்பத்திரும்ப அவளுக்கு வருகிறது என்று தெரியாமல் சில சமயங்களில் மிரண்டிருக்கிறாள்..

சோமசுந்தரத்திடம் கனவைப் பற்றிய விளக்கம் கேட்க முற்பட்டால், அவர் அதனுடன் தொடர்புடைய பொதுவுடைமைக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் விளக்க முற்படுவார் என்பதினால் அவரிடம் அதைக் கேட்காமல் தவிர்த்தாள்..

பூங்குழலியிடம் கேட்டால், அவள் புராணங்களில் இருந்தும்.. ஆண்மீகத்தில் இருந்தும் அந்தக் கனவைப் பற்றிச் சொல்லப் படுவது என்ன என்று ஆய்ந்து அறிய முற்பட்டு விடுவாள் என்பதால் தாயிடமும் அதை மறைத்தாள்..

அப்படி அவள் தூக்கத்தின் கனவில் மீண்டும்.. மீண்டும் வந்த குகைப்பாதையை நேரில் கண்டபோது அவள் பிரமித்தாள்..

'இது எப்படி சாத்தியம்..??!!!...'

கனவு என்பது வருங்கால நிகழ்வுகளின் அறிவுறுத்தலா..?

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவிற்குத் தெரியவில்லை.. நரேந்திரனிடம் விழி விரித்து அதைக் கூறிய போது.. அவன்..

“ஈஸீட்..?” என்று கேட்டபடி அகன்ற அவளின் நீள்விழிகள் விரிந்த அழகை ரசித்தபடி அவள் தோளில் கைபோட்டு அருகே இழுத்துக் கொண்டான்..

“இதுதான் நீங்க என் ஃபீலீங்கை ஷேர் பண்ணிக்கிற லட்சணமா..?” ஊர்மிளா சிணுங்கியபடி அவன் மார்பில் செல்லமாக குத்திவிட்டு முகத்தைப் புதைத்துக் கொண்டாள்..

மங்கிய வெளிச்சத்துடனிருந்த அந்தக் குகையில் அங்கொருவரும் இங்கொருவருமாக இருந்த ஆஸ்திரேலியவாசிகள் அவர்களை விட அதிகமான நெருக்கத்தில் இருந்ததினால்.. அவர்களுடைய அந்தத் தழுவலை யாரும் கண்டு கொள்ளவில்லை..

‘ஜெனலோன் குகைகள்..’

ஆஸ்திரேலியாவில் இருந்த அந்தக் குகைகளுக்குப் பெயர் இதுதானாம்.. எப்படி ஆஸ்திரேலியாவின் ‘ஜெனலோன் குகை’.. திருச்சியில் காவிரியின் ஒரு கரையில் உச்சிப் பிள்ளையார் கோவிலும்... மறுகரையில் ஸ்ரீரங்கப் ரங்கநாதரின் கோவிலுமாக இருந்த ஊரில்.. ஆன்மீகமும்.. பகுத்தறிவும்.. தாய்.. தந்தையராக வாய்த்து.. அவர்களின் நிழலிலும்.. தெய்வங்களின் பாதுகாப்பிலும் வாழ்ந்த ஊர்மிளாவின் கனவில் தோன்றியது என்ற மர்மத்தின் முடிச்சு ஊர்மிளாவிற்கு பிடிபடவே இல்லை..

https://t.me/tamilpdfebooks

"விடுடி.."

நரேந்திரன் நெருக்கத்தை அதிகப்படுத்துவதிலேயே குறியாக இருந்தான்.. கட்டவிழ்ந்த சுதந்திரம் போல.. அன்னிய தேசத்தில் தேநிலவு கொண்டாடிக் கொண்டிருக்கும் உல்லாசம் ஊர்மிளாவை ஆக்ரமித் திருந்ததில் அவள் நரேந்திரனின் விருப்பங்களுக்கு ஏற்ப வளைந்து கொடுத்ததில் அவனுக்குள் கள்ளுண்ட போதை கிளர்ந்து விட்டிருந்தது..

"உஷ்.. அத்தை.. அர்ச்சனா.. அருண்.."

பெங்களூரில் தனியறையைத் தவிர மற்ற இடங்களில் அவனை அடிக்கடி எச்சரித்துக் கொண்டே விலகிக் கொண்டே இருப்பாள் ஊர்மிளா.. தோட்டத்தில் அவளைத் தொட்டு இழுத்துக் கொண்டால்.. அவன் கைகளுக்குள் புகுந்து கொள்பவள்.. யாரேனும் பார்த்து விடுவார்களோ என்று விழிகளைச் சுழல் விட்டுக் கொண்டே இருப்பாள்..

திருச்சியில் கேட்கவே வேண்டாம்.. பகுத்தறிவு சிங்கம் சோமசுந்தரத்தின் மகளாக எட்ட நின்று வெட்டி விடுவதைப் போல முறைத்துக் கொண்டே இருப்பாள்.. பூங்குழலி அழைத்து அறிவுரை சொன்னால்.. மாதர்குல மாணிக்கமாக.. பால் சாப்பிடுகிறீர்களா.. பழம் சாப்பிடு கிறீர்களா என்று அவன் வயிற்றுக்குள் பூங்குழலி கொடுத்தனுப்பும் பதார்த்தங்களைக் கொட்டி விடுவதிலேயே குறியாக இருப்பாள்..

https://t.me/tamilpdfebooks

'என்னடா இது..! இதுக்கா இவளிடம் பொய்வேடம் போட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..'

நரேந்திரனுக்கு முட்டிக்கொள்ள வேண்டும் போல இருக்கும்.. படுக்கையறைக்குள் வருகிறவள்.. பாரதி தாசனின் 'குடும்ப விளக்கு' புத்தகத்துடன் வந்து.. அதன்படி வாழ வேண்டும் என்று.. சோமசுந்தரமும்.. பூங்குழலியும் அவளுக்கு அறிவுரை சொல்லி அனுப்பியிருக் கிறார்கள் என்று சொல்லி.. அதற்கான தெளிவுரை.. பொழிவுரை.. என்று எல்லா உரைகளையும் கையில் மைக் இல்லாமலேயே உரைக்க முற்பட்டபோது.. அவன் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்..

"முதல்ல நாம குடும்பம் நடத்த ஆரம்பிக்கலாம்.. வாடி.. குடும்ப விளக்கைப் பற்றி அப்புறமா தெரிஞ்சுக் கலாம்.."

அவன் அவளை ஆக்ரமித்தபோது அவளுக்கு கோபம் வந்து விட்டது.. நரேந்திரன்.. ஊர்மிளாவைப் பெற்ற அப்பா சோமசுந்தரம் சொன்னதைப் போல முதலாளித்துவ சிந்தனை கொண்டவன் என்று அவள் சாடினாள்..

"ஏய்ய்..! பெண்டாட்டி கூட சந்தோசமா இருக்கனும்ன்னு தொழிலாளியும் நினைப்பாண்டி.."

நரேந்திரன் அவளுக்குப் புரிய வைக்கப் போராடிக் களைத்து விடுவான்..

அப்படிப்பட்ட இக்கட்டுகளும்.. இடையூறுகளும் இல்லாமல் ஊர்மிளா அவனை அணுகியதில்.. அவளை

https://t.me/tamilpdfebooks

அணுகவிட்டதில், நரேந்திரனுக்குள் மடைதிறந்த உற்சாகம் பெருக்கெடுத்தது..

அதைவிட.. அவன்மீது அவள் காட்டிய உரிமையுணர்வும்.. ஆளுமையும்.. ஆழ்ந்த காதலும்.. வெறித்தனமான நேசமும்.. அவனைக் கட்டிப் போட்டன.. ஆஸ்திரேலியாவின் அழகிகளை அவன் திரும்பிப் பார்த்தால்கூட அவள் போர்கொடியை உயர்த்தினாள்..

"என்னடி இது... உங்கப்பா எல்லாத்திலயும் பொதுவுடமை பேசறாரு.. அவரு பெத்த பொண்ணு நீ.. இப்படி தனி உடைமை பேசற.." நரேந்திரன் சீண்டினான்..

ஊர்மிளாவுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு கோபம் வந்ததோ.. அவள் முகம் கோவைப்பழமாய் கோபத்தில் சிவந்து விட்டது..

"என்ன சொன்னீங்க..?" ஆக்ரோசமாய் சீறினாள்..

நரேந்திரனே அவளுடைய அந்த கோபத்தில் அரண்டு விட்டான்..

"ஹி.. ஹி.. ஒரு ஆர்வக்கோளாறில சந்தேகம் கேட்டுட்டேண்டி.." விளையாட்டைப் போல பேசி சமாளிக்க முயன்றான்..

"கேட்பீங்க.. கேட்பீங்க.. ஏன் கேட்க மாட்டிங்க..? 'பொய்..'ன்னாலே பிடிக்காதவ.. நீங்க பொய் சொல்லி என்னைக் காதலிச்சு கல்யாணம் வரைக்கும் கொண்டு வந்து நிறுத்தினீங்கன்னு தெரிஞ்ச பின்னாலும் உங்களை வெறுக்க முடியாம.. மறக்க முடியாம.. கட்டினா

https://t.me/tamilpdfebooks

உங்களைத்தான் கட்டுவேன்னு பிடிவாதமாய் உங்களுக்கு கழுத்தை நீட்டினேனில்ல..? நீங்க இதையும் சொல்வீங்க.. இதுக்கு மேலேயும் சொல்வீங்க.."

"இல்லைடி.."

"பேசாதீங்க.. நீங்க பொதுவுடைமையா..? கொன்னு போட்டிருவேன்.."

"யாரைடி..?" நரேந்திரன் மிரண்டு விட்டான்..

கொலையும் செய்வாள் பத்தினியென்று இதைத்தான் சொல்லி வைத்தார்களா..?

"உங்களை திரும்பிப் பாக்கறவளை.."

"அப்பாடி.." நரேந்திரன் நிம்மதியாக மூச்சுவிட்டான்..

அவன் தப்பித்தான்.. ஆக.. திரும்பிப் பார்த்த அவனை விட்டு விட்டு.. அவன் திரும்பிப் பார்த்ததினால் திரும்பிப் பார்க்கும் காரிகைகளைத்தான் அவன் மனைவி போட்டுத் தாக்குவாள்..

'உத்தமம்..'

அப்படியெல்லாமில்லை என்பதை அடுத்து வந்த ஊர்மிளாவின் வார்த்தைகள் அவன் செவிகளில் சொல்லிப் போயின..

"அடுத்து உங்களைப் போட்டுத் தள்ளிட்டு நானும் உங்க கூடவே செத்துப் போயிருவேன்.."

தேம்பி அழுதவளை இழுத்து இறுக்கிக் கொண்ட நரேந்திரனுக்கு ஆச்சரியமாக இருந்தது..

https://t.me/tamilpdfebooks

காதல் எப்பேற்பட்ட புத்திசாலியையும்.. முட்டாளாக்கி.. தேம்பி அழ வைக்குமா..?

ஊர்மிளா முட்டாளாகத்தான் இருந்தாள்.. நரேந்திரனின் முன்னிலையில் அவளுடைய அத்தனை புத்திசாலித்தனங்களையும் மறந்து போனாள்.. எதுவும் அறியாத அறியாமையை விழிகளில் தேக்கியவளாய்.. அவனை மட்டுமே அறிந்த வெளிச்சத்தை விழிகளில் பிரதிபலித்தவளாய் அவனை அவள் ஆரத்தழுவிக் கொள்ளும்போது.. இந்த உலகில் உள்ள அத்தனையையும் வென்று அவள் காலடியில் போட்டுவிட அவன் சித்தமானான்..

ஊர்மிளா நரேந்திரனின்மீது பைத்தியமாக இருந்தாள்.. அதை உணர்ந்திருந்த நரேந்திரன்.. அந்த ஒரு காரணத்தினாலேயே அவள்மீது பைத்தியமாகிப் போனான்..

நீண்டிருந்த ஜன்னலோன் குகையை விட்டு வெளியே வந்து ஆஸ்திரேலியாவின் அழகிய தெருவில் அவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள்..

இதமான குளிர்காற்று அவர்களைத் தீண்டிக் கொண்டிருந்தது.. கனமான பட்டுப் போன்ற பருத்திச் சேலையைக் கட்டி.. ஓவர்கோட்டைப் போட்டிருந்த ஊர்மிளாவின் பின்னல் ஓவர் கோட்டுக்கு வெளியே அசைந்து ஆடியது..

அவள் நெற்றியிலிருந்த வட்டப் பொட்டில் மனம் லயித்தான் நரேந்திரன்.. அவளிடம் ததும்பிய தமிழகத்தின்

https://t.me/tamilpdfebooks

பெண்மை மிளிரும் அழகில் சொக்கிப் போனான்.. அவன் பார்வையை உணர்ந்தவள் புருவங்களை வினவும் பாவனையில் உயர்த்திய விதத்தில் வசீகரிக்கப் பட்டான்..

எல்லையற்ற பிரபஞ்ச வெளியினைப் போல.. எல்லையற்ற வசீகரம் அவளிடம் பொங்கித் ததும்பியது.. அவளது பேச்சில்.. சிரிப்பில்.. காதலான பார்வையில்.. நடையுடை பாவனைகளில் என்று அனைத்து வகைகளிலும் அவள் அவனை வசீகரித்தாள்.. அவளிடம் ததும்பிய வசீகரத்தில் அவன் மயங்கிப் போயிருந்தான்..

"அழகா இருக்கேடி.." ஜொள்ளினான்..

"உங்களை விடவா..?" அவள் மீண்டும் புருவங்களை உயத்தி அவனை வசீகரித்தாள்..

"ஊர்மிளா.." போதையுடன் அழைத்தான்..

"ம்ம்ம்.." அவளது முணுமுணுப்பு கூட அழகான சங்கீதமாக இருந்தது..

"ஐ லவ் யு டி.." கிறக்கத்துடன் அவன் சொன்னான்..

"என்னை விடவா..?" இதிலும் அவள் அவனை வீழ்த்தினாள்..

இரு மலை முகடுகளின் இடையினிலும் சென்ற கேபிள் கார் பயணத்தில் ஊர்மிளா நடுங்கிப் போனாள்.. கீழே பார்த்தால் அகன்ற.. மிகப் பெரிய பள்ளத்தாக்கு..

https://t.me/tamilpdfebooks

அவளது நடுங்கிய உடலை வளைத்து தன் மடியில் அடக்கிக் கொண்ட நரேந்திரனின் கரங்கள் அவளைத் தனக்குள் பொருத்திக் கொண்டன.. அவனது கரங்கள் அவளைச் சுற்றி வளைத்துக் கொண்டதில் அவனுக்குள் அவள் புதைந்து போனாள்.. கங்காருவின் மடியிலிருக்கும் குட்டியைப் போல தன்னை பாதுகாப்பாய் உணர்ந்தவள்.. அவன் தோளில் தலை சாய்த்து.. சுற்றுப்புறத்தைப் பார்த்தாள்..

கேபிள் காரில் அவர்கள் இருவர் மட்டுமே இருந்தார்கள்.. தொங்கும் ஊஞ்சலில் இருப்பதைப் போல தன்னை உணர்ந்தாள் ஊர்மிளா.. கேபிள்காரின் கண்ணாடிக் கதவுகளின் வழியாக வானத்தைப் பார்த்தவளுக்கு.. தானும் ஒரு மேகமாக அதில் மிதப்பதைப் போல இருந்தது.. தொலைவில் தெரிந்த பனி படர்ந்த மலைச்சிகரங்கள் அவள் கைக்கு எட்டும் தூரத்தில் வா.. வா.. என்று அருகே அழைத்தன..

"கீழே மட்டும் பார்க்காதே.." அவள் காதோரமாக குனிந்து காதுக்குள் கிசுகிசுத்தான் நரேந்திரன்..

"ஏன்..?" அவனது உதடுகள் பட்ட காது மடல்கள் உணர்ந்த வெப்பத்தின் ஸ்பரிசத்தில் கிளர்ச்சி கொண்டவளாக அவனுக்குள் இன்னும் அதிகமாக ஒன்றியபடி கேட்டாள் ஊர்மிளா..

"பயப்படுவடி.."

அவளுடைய ஒன்றுதலை உணர்ந்த இறுக்கிப் பிணைத்தலுடன் சொன்னான் நரேந்திரன்.. அவனது அதீத

https://t.me/tamilpdfebooks

அக்கறையில் அவளது பயம் பறந்து போனது.. அவனது கைகளுக்குள் இருக்கும் போத பாதுகாப்பு வளையத்துக்குள் பத்திரமாக இருப்பதைப் போல உணர்ந்தாள் ஊர்மிளா..

"இப்ப பயமாயில்லை.."

கீழே பார்த்தாள்.. அகன்ற பள்ளத்தாக்கு இப்போது அவளை அச்சுத்தவில்லை.. வளைந்து நெளிந்து ஓடும் நதிகளின் வெள்ளி மின்னல் கோடுகள்.. திருச்சியில்.. அவள் வீட்டு வாசலில்.. தினந்தோறும் பூங்குழலி போடும் கோலத்தில் வளைந்து.. நெளிந்து பின்னும்.. வெள்ளி மின்னல் கோடுகளைப் போலவே இருந்தன..

"ஹை நைஸ்.." ஊர்மிளா கண்கிறங்கச் சொன்னாள்..

அதுபோன்ற பனிபடர்ந்த மலை முகடுக்களுக் கிடையே.. கேபிள் காரின் மூடிய கண்ணாடிக் கதவு களுக்குள்ளே.. வசதியான இருக்கையில் சாய்ந்து அமர்ந்து அதைவிட வசதியான இருக்கையாக.. தனது மடியையும்.. கதகதப்பான உடல் வெப்பத்தையும் தந்து.. தனக்குள் அவளை பொதிந்து கொண்ட காதலனின் அருகாமை அவளைக் கிறங்கடித்ததில் பயம் அத்தனையும் பஞ்சாகப் பறந்து விட்டன..

"எது..?"

அவளது முகத்தைத் திருப்பி.. அவள் உதடுகளில் தனது உதடுகளைப் பொருத்திக் கொண்ட நரேந்திரன் கிசுகிசுத்தபோது பதில் சொல்ல விடை கிடைக்காமல் தடுமாறிப்போனாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

தேகமெங்கும் தீப்பற்றியதைப் போன்ற தித்திப்பான அந்த அனுபவத்தில் திளைத்து மூழ்கி எழுந்தவளுக்கு.. கேபிள் காரில் பயணித்ததைக் குறித்த அச்சமே எழவில்லை...

அங்கிருந்த புளூ மவுண்டெயின் கல்ச்சுரல் செண்டரில் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்த போது நரேந்திரனின் கை வளைவுக்குள் தன் கையைப் பிணைத்து அவன் தோளில் தலை சாய்த்திருந்தாள் ஊர்மிளா..

இயல்பாக அவள் காட்டிய நெருக்கத்தில் நரேந்திரனின் மனதுக்குள் இதம் பரவியது.. மேடையில் நடந்த நடன நிகழ்ச்சியில் ஆழ்ந்து போயிருந்தவளின் ரசிப்பைக் கலைக்க மனமில்லாமல்.. அவளுக்கு மிக நெருக்கமாக நகர்ந்து அமர்ந்து.. அவளுக்குள் தன்னைப் பிணைத்தபடி கலை நிகழ்ச்சியை வேடிக்கை பார்த்தான்..

நிகழ்ச்சி முடிந்ததும் அவர்கள் ட்ரெசர்டு டூ பாட்டுக்கு வந்தார்கள்.. ஆஸ்திரேலியா முழுவதும் அதுபோன்ற உணவகங்கள் நிறைந்திருப்பதைக் கவனித்த ஊர்மிளா..

“நம்ம ஊர் டூ ஷாப்புகளைப் போல இருக்குதில்ல..” என்று கேட்டாள்..

“எனக்குத் தெரியலை..” நரேந்திரன் தோளைக் குலுக்கினான்..

“உங்களுக்கு எப்படித் தெரியும்..? நீங்கதான் ஸ்டார் ஹோட்டல்களில வாசம் செய்கிற ஆளாச்சே.. எனக்குத் தெரியும்..” என்றாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

"ஆரம்பிச்சுட்டியா..?" அரண்டு போனான் நரேந்திரன்..

"எதை..?"


ஊர்மிளாவின் கண்களில் இருந்த அறியாமையில் ஈர்க்கப் பட்டான் நரேந்திரன்.. அவள் இப்போதெல்லாம் அவனிடம் கொள்கை.. கோட்பாடுகளைக் குறித்து விவாதிப்பதில்லை என்ற உண்மை அவனுக்குப் புலப்பட்டது..

அவளிடம் இருந்ததெல்லாம் அவன் மீதான மயக்கம் மட்டுமே..

"ஒன்னைக் கவனிச்சீங்களா நரேன்.. இந்த கல்ச்சுரல் டான்ஸில.. ஆஸ்திரேலியாவோட கல்ச்சர் அப்படியே தெரிஞ்சது.. ஒரு நாட்டோட கல்ச்சரை உலகத்துக்கு தெரியப்படுத்தறது.. இலக்கியங்களும்.. நடனங்களும்.. நாடகங்களும்.. சினிமாக்களும்தான்.. அந்தந்த வட்டாரத்தின் பேச்சுவழக்கு.. வாழ்க்கை முறை அத்தனையையும் இவைகள் சொல்லி விடும்.."

இதைச் சொல்லிய ஊர்மிளாவிடம் பகிர்வுதான் இருந்தது.. சொற்பொழிவு இல்லை.. நரேந்திரனின் அருகில் அவள் முற்றிலும் மாறுபட்டவளாக இருந்தாள்..

https://t.me/tamilpdfebooks



நெருஞ்சி முள்ளில் நடந்தாலும்
நெஞ்சினிலே இனிப்பை சேர்க்கும்..
அழகான ராட்சசி நீ....

நரேந்திரனுக்கு கையசைத்தாள் ஊர்மிளா.. அவளது கையசைவில் அவன் முகம் மலர்ந்து போவதை அவள் உணர்ந்திருந்தாள்.. அதற்கு மட்டும்தான் என்றில்லை.. அவள் காபிக் கோப்பையுடன் அவன் பக்கத்தில் உட்கார்ந்து உரையாடினால் அவன் முகம் மலர்ந்தான்.. அவனுடைய சட்டையின் பொத்தான்களை போட்டுவிட்டு அவன் இடுப்பை வளைத்து அவன் மார்பில் முகம் புதைத்தால் முகம் மலர்ந்தான்.. அவன் கழுத்தில் டையைக் கட்டிவிட்டு.. அவள் அழகு பார்க்கும் போதும் முகம் மலர்ந்தான்.. அவனுடன் பேசியபடி இறங்கி வந்து டைனிங் டேபிளில் அவனை உட்காரவைத்து.. அவன் முகம் பார்த்து அவனுடைய தேவையை அறிந்து அவள் பறிமாறிய போதும் முகம் மலர்ந்தான்.. சாப்பிட்டு முடித்தவனுக்கு கை துடைக்க ரகசியமாக சில சமயம் அவள் சேலை முந்தானையை நீட்டும் போதும் முகம் மலர்ந்தான்.. அலுவலகத்துக்கு கிளம்புகிறவனுடன் வாசல் வரை வந்து போர்டிகோவில் நின்று அவனுடைய கார் கிளம்பும் போது அவள்

https://t.me/tamilpdfebooks

கையசைத்து வழியனுப்பும் போது அதிகமாக முகம் மலர்ந்தான்..

இவை எதையும் ஊர்மிளா உணர்த்தும் வரை அவன் அறிந்ததில்லை.. நளினி உயிரோடு இருந்த வரை அவளுடைய கண்காணிப்பில் வேலையாள்கள்தான் அவனைக் கவனித்துக் கொண்டார்கள்.. அவள் உடல்நலம் சரியில்லாதவள்.. பெரும்பான்மையான நேரங்களை படுக்கையிலேயே கழித்தவள்.. அவளுக்குப் பின்னால் அவனுக்கு வேலையாள்கள் எல்லா வேலைகளையும் சரிவரச் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்கக் கூட ஆளில்லாமல் வளர்ந்தவன் அவன்.. நளினியின் தாய் சித்ரலேகா மனதளவில் தளர்ந்திருந்தாள்.. அவளால் வேலை செய்ய முடியவில்லை..

அகல்யா அவனுக்கு ஒரு நாளும் பரிமாறியதில்லை.. அவளைச் சொல்லிக் குற்றமில்லை.. அவள் பெற்ற பிள்ளைகளுக்கே அவள் தட்டை எடுத்துப் போட்டு பரிமாற மாட்டாள்..

தன்னைத்தானே கவனித்துக் கொண்டு வளர்ந்தவன் அவன்.. ஊர்மிளா அவன் வாழ்வில் வந்தபின் அவள் உணர்த்திய வாழ்வின் இனிமைகள் அனைத்திலும் கரைந்து போனான் நரேந்திரன்..

"இன்னைக்கு மொட்டை மாடியிலே சாப்பிடலாம் வர்றீங்களா..?"

"ஏன்..? டைனிங் ஹால்தான் பெஸ்ட்.. டிபன் அயிட்டங்களை இரண்டு மாடி தாண்டி.. மொட்டை மாடிக்கு கொண்டு வந்து.. உட்கார்ந்து சாப்பிட இடம்

https://t.me/tamilpdfebooks

செட்பண்ணி.. சொல்லும் போதே மூச்சிரைக்குது பார்.. வேலை மெனக்கெட்டு தேவையில்லாத வேலைகளைப் பண்ணனுமா..? நமக்கு டைமும் வேஸ்ட்..”

இப்படிச் சொல்பவனை ஊன்றிப் பார்த்த ஊர்மிளாவின் விழிகளில் இருந்த ஏதோ ஒன்றில் அவன் ஈர்க்கப்பட்டான்..

“என்னடி...?”

“எல்லாத்தையுமே வார்த்தைகளால் உணர்த்தி விட முடியாது நரேன்.. அனுபவிச்சு அதை உணரனும்.. நம் காதலைப் போல..! எனக்கு உங்ககூட ஸ்பெண்ட்பண்ணும் ஸ்பெசலான நிமிடங்கள் வேணும்.. ஆஸ்திரேலியாவில் எனக்குக் கிடைத்ததைப் போல..”

இப்படிச் சொல்பவளை எப்படி மறுத்துச் சொல்வான் நரேந்திரன்..

“உன் இஷ்டம் போல செய்..” என்று சொல்லி விட்டான்..

“மொட்டை மாடியா.. ஐய்யே..” அகல்யா முகம் சுளித்து விலகி விட்டாள்..

அருண்குமாருக்கும்.. அர்ச்சனாவிற்கும் வேறு வேலைகள் இருந்ததால் அவர்களும் மொட்டை மாடிக்கு வர முடியாது என்று தயக்கத்துடன் சொல்லி விட்டார்கள்..

“நோ பிராப்ளம்.. நீயும்.. நானும் மட்டுமே சாப்பிடலாம்.. இதுகூட ஒரு ஸ்பெசல் டின்னர்தான்..” நரேந்திரன் கண்சிமிட்டினான்..

https://t.me/tamilpdfebooks

அவளுக்காக அவன் மொட்டை மாடி விருந்தை நிறுத்தாமல் தொடர்ந்ததில் ஊர்மிளாவிற்கு உவகையாக இருந்தது..

வனிதாவின் உதவியுடன் சமைத்த பதார்த்தங்களில்.. அவளுக்கும்.. நரேந்திரனுக்கும் தேவையானதை மொட்டை மாடிக்கு கொண்டு வந்து விட்டாள் ஊர்மிளா.. ரமேஷின் உதவியுடன் மடக்கு டேபிளும்.. இரண்டு சேர்களும் வந்து சேர்ந்தன..

மொட்டை மாடியின் நடுவில் அந்த டேபிளை விரித்துப் போட்டு.. அதில் வெண்மையான டேபிள் விரிப்பை விரித்து.. சமைத்த பதார்த்தங்களை வைத்திருந்த மூடியிட்ட பாத்திரங்களை பரத்தி வைத்தாள் ஊர்மிளா..

இரண்டு பக்கமும் எதிரெதிரே சேர்கள் போடப் பட்டன.. டேபிளின் மையப் பகுதியில் மலர்க் கொத்துக்களுடன் பூஜாடி..

அதிகமாக மெனக்கெடாமல் அழகாக டேபிள் தயாராகிவிட்டது.. கம்பெனியிலிருந்து திரும்பி வந்த நரேந்திரன்.. குளித்து உடைமாற்றி புத்துணர்வுடன் மாடிக்கு வந்து பார்த்து விட்டு..

“வாவ்..” என்று ரசனையாக சொன்னான்..

சிலுசிலுவென வீசிய இயற்கைக் காற்று உடல்மீது படிந்து தழுவுவதை கண்மூடி அனுபவித்தவன்..

“நீ சொன்னது உண்மைதான ஊர்மி..” என்றான்..

https://t.me/tamilpdfebooks

"நானென்ன.. ஒன்னு ரெண்டையா சொல்லி யிருக்கேன்..? எக்கச்சக்கமா சொல்லியிருக்கேன்.. அதில எதை நீங்க சொல்கிறீங்கன்னு தெரியலையே.." ஊர்மிளா அவனுக்கு எதிரே உட்கார்ந்து டேபிளில் கையூன்றி அதில் முகத்தைப் பதித்தபடி சொன்னாள்.. .அவள் முகம் ஆஸ்திரேலியாவில் அவர்கள் இருந்த போது ரகசியச் சிரிப்புடன் அவனை நோக்கிய அந்த நாள்களில் .அவன் பார்த்த முகமாக மாறியிருந்தது...

சன்னமான விளக்கு வெளிச்சம் மட்டும் ஒளிர்ந்த .அந்த பரந்த மொட்டை மாடியில்.. அவனும்.. அவளும் ாட்டும் இருந்த அந்தச் சூழல் அவனைக் கவர்ந்தது.. .ஆஸ்திரேலியாவில் அப்படித்தான் இருந்தார்கள்.. பெங்களூர் வந்ததும் லேசாக அது குறைந்திருந்தது..

அழகான அவனது மனைவியை ஊன்றிப் பார்த்தான்.. ஊர்மிளா சன்னக் கரையிட்ட ஷிபான் சேலையை ுடுத்தியிருந்தாள்.. அதற்குப் பொருத்தமான ஜாக்கெட்.. தலைமுடியை தளர்வாக பின்னலிட்டிருந்தாள்.. நீண்ட வைர முகப்புடன் கூடிய தங்கச் சங்கிலியை சேலையின் ீது போட்டிருந்தாள்.. கனத்த தங்கத்தாலிச் சரடு.. சேலையின் உள்ளே மறைவாக இருந்தது.. காதில் வைரக் ும்மல்.. கைகளில் இரு வளையல்கள்.. கண்களில் மட்டும் .அவனுக்கான.. அவனிடம் மயங்கிய மயக்கத்தை ுணர்த்தும் பிரத்யேகப் பார்வை..

அதிகமான ஒப்பனையோ.. அலங்காரமோ இல்லை.. .அவள் போட்டிருந்தது வைர அணிகலன்கள் என்றாலும்..

https://t.me/tamilpdfebooks

அவற்றை அதிகமாக அவள் சுமக்கவில்லை.. அளவாக.. அழகாக.. போட்டிருந்தாள்..

மொட்டவிழ்ந்து மணம் பரப்பிய மல்லிகை மலரின் வாசனை அவனை மயக்கியது.. அவனை ஆழ்ந்து பார்த்தபடி பேசிக் கொண்டிருந்த அழகோவியமான அவன் மனைவியின் தோற்றம் அவனை ஈர்த்தது.. வசீகரமான அந்த இரவுப் பொழுதை மனம் விட்டு ரசித்தான் நரேந்திரன்..

"நல்லா இருக்குடி.." சுற்றிலும் பார்த்தபடி சொன்னான்..

"அப்படியா..?" லேசாக புருவங்களை உயர்த்தி இறக்கினாள் ஊர்மிளா..

"யெஸ்.. டேபிளின் மத்தியில ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றி வைச்சிருந்தா.. அச்சு அசல் ஸ்டார் ஹோட்டல் டின்னர்தான்.."

"அதுக்காகத்தான் மெழுகுவர்த்தியை ஏற்றி வைக்கல நரேன்.."

நிதானமாக சொன்னவளை புரியாமல் பார்த்தான் நரேந்திரன்..

"ஏன்டி..?"

"இது இயற்கையை அனுபவிக்கும் விருந்து.. இங்கே செயற்கை வேணாம்.. இப்ப வீசுது பாருங்க குளிர்ந்த காற்று.. இதை ஏஸி கூட கொடுத்து விட முடியாது நரேன்..

https://t.me/tamilpdfebooks

நான் ஸ்டார் ஹோட்டல் டின்னரை உங்களுக்கு அறிமுகப் படுத்த இங்கே கூப்பிட்டுக்கிட்டு வரலை நரேன்.. மூன்லைட் விருந்தை அறிமுகப் படுத்த கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கேன்..”

“மூன் லைட் விருந்தா..?”

நரேந்திரன் வியப்புடன் கேட்டான்.. அதுநாள்வரை அப்படியொரு விருந்தை அவன் உண்டதில்லை..

“ம்ம்ம்.. மூன்லைட் விருந்துதான் நரேன்.. இதை ‘நிலாச்சோறு..’ன்னு எங்கம்மா சொல்லுவாங்க..”

“நிலாச்சோறு..?”

“நிலாச்சோறுதான் நரேன்.. வானத்தைப் பார்த்தீங்களா.. இன்னைக்கு பௌர்ணமி.. முழுநிலா தெரியுதில்ல.. நிலா வெளிச்சம் பட்ட பகலைப் போல அடிக்குதில்ல...”

ஊர்மிளா சொன்னபின்னால்தான் முழுநிலவை நரேந்திரன் பார்த்தான்.. அந்த முன்னிரவுப் பொழுதில் பூமியை பட்டப் பகலாக்கிக் கொண்டு முழுநிலவு தன் பவனியை துவங்கியிருந்தது..

“இதுதான் நிலா வெளிச்சம் நரேன்..”

ஊர்மிளா அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.. அது நாள்வரை நிலாவை ஒரு கோளாகக் கண்டவன்.. உற்ற நண்பனாக கண்டது அந்த இரவில்தான்..

https://t.me/tamilpdfebooks

கண்ணைக் கூச வைக்கும் செயற்கை வெளிச்சத்துக்குள் மூழ்கியிருந்தவன்.. அதிலிருந்து வெளிவந்து நிலா வெளிச்சத்தைக் கண்டு உணர்ந்தது அந்த இரவில்தான்..

காரைக் கூட இறுக மூடி வைத்து செயற்கைக் குளிரில் தன்னை வைத்திருந்தவன்.. இயற்கைக் காற்றின் குளுமையை உணர்ந்தது அந்த இரவில்தான்..

அவன் ஊர்மிளாவைக் காதலித்த காலத்தில் அவளுக்காக திருச்சியில் தங்கியிருந்தான்.. அவன் தங்கியிருந்தது ஓட்டு வீட்டிலல்ல.. நட்சத்திர ஹோட்டலில்..

ஊர்மிளாவை அவன் சந்திக்கப் போகும்போது அவள் வரச்சொல்லும் இடத்திற்கு ஏஸி காரில் போய் இறங்கி விடுவான்.. அவள் வந்து கேட்கும்போது சோர்வாக முகத்தை வைத்துக் கொண்டு பஸ்ஸில் வந்ததாகச் சொல்வான்..

அவளருகில் இருந்தபோது அவளை கைபிடிக்க என்ன சொல்ல வேண்டும்.. அதை எப்படிச் சொல்ல வேண்டும் என்பதில்தான் அவனுடைய கவனம் இருந்ததே தவிர.. சுற்றுப்புற இயற்கையழகை ரசிக்க வேண்டும் என்பதில் அவனது கவனம் இருந்ததில்லை..

அவனது கவனத்தை இயற்கையின் மீது திருப்பி விட்டவள் ஊர்மிளாதான்.. பெங்களூரில் கம்யூட்டர் கம்பெனிகள் மட்டுமே இருக்கவில்லை.. பூங்காங்களும்

https://t.me/tamilpdfebooks

இருக்கின்றன என்பதை அவள்தான் அவனுக்கு உணர்த்தி விட்டாள்..

"எப்பப் பார்த்தாலும் மெஷின்கூடவே மல்லுக்கட்டிக் கிட்டு இருக்கனும்னு அவசியமில்லை நரேன்.. கொஞ்சம் செடி கொடிகளின் மீதுகூட உங்க பார்வையைத் திருப்பலாம்.."

கிண்டல் போலச் சொல்லி.. அவனை இயற்கையை ரசிக்க வைத்தாள்.. தினந்தோறும் ஒரு பூங்கா என்று அவனுடன் விரல் கோர்த்து அங்கே உலா வந்தாள்.. அப்படி வரும் போது அவள் காட்டும் செடிகளையும்.. பூக்களையும்.. பறவைகளையும் ஊன்றிப் பார்க்கும் நரேந்திரனுக்கு இவை இருந்த பூமியில்தான் இத்தனை நாளும் அவனிருந்தானா என்ற கேள்வி நெஞ்சில் எழுந்தது..

செடிகளையும்.. பூக்களையும்.. பறவைகளையும் அவனுக்கு அறிமுகப் படுத்திய ஊர்மிளாதான் நிலா வெளிச்சத்தையும்.. அதில் நனைந்தபடி உண்ணும் நிலாச்சோற்றையும் அவனுக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள்..

"எங்க வீட்டில ஒவ்வொரு பௌர்ணமியிலேயும் நாங்க நிலாச்சோறு சாப்பிடுவோம் நரேன்.. அம்மா ராத்திரி சாப்பாட்டை மொட்டை மாடிக்கு கொண்டு வந்திடுவாங்க.. பட்டப் பகல்போல் வீசும் நிலா வெளிச்சத்தில நாங்க நிலாச்சோறு சாப்பிடுவோம்.. அதை வார்த்தைகளில் சொல்லி விட முடியுமா..?"

https://t.me/tamilpdfebooks

கடந்த காலத்தின் நினைவுகளை அவனிடம் பகிர்ந்து கொண்டாள் ஊர்மிளா.. அதை கவனமாக கேட்டுக் கொண்ட நரேந்திரன்..

"எனக்கு இதெல்லாம் தெரியாதுடி.. அம்மா எனக்கு சர்வ் பண்ணினாலே அதிசயம்.. அவங்க பேசண்ட்.. பெட் ரெஸ்டிலேயே இருப்பாங்க.." என்று வருத்தத்துடன் சொன்னான்..

"அப்பா..?" சட்டென்று கேட்டு விட்டாள் ஊர்மிளா..

அவளை நிமிர்ந்து பார்த்த நரேந்திரனின் விழிகள் பளபளத்தன.. அது எதற்காக என்று குழம்பிப் போனாள் ஊர்மிளா.. அவனுடைய தாய் கோடிஸ்வரி என்று அவனே அடிக்கடி சொல்லியிருக்கிறான்.. அப்படிப்பட்ட வசதி படைத்த மனைவியுடன் நரேந்திரனின் அப்பா தனது நேரத்தை செலவளித்திருப்பார்தானே..

நரேந்திரனின் அம்மா எப்படிப்பட்டவள் என்று அவளுக்குத் தெரியாது.. அவள் எப்படிப்பட்டவளாக இருந்திருந்தாலும் அகல்யாவை விடவும் குறைவான குணங்களைக் கொண்டவளாக இருந்திருக்க மாட்டாள் என்பதில் அவளுக்கு நிச்சயம் இருந்தது..

"இல்லை.. அம்மா உயிரோடு இருந்தபோது அப்பா எப்போது வீட்டுக்கு வருவார்.. எப்போது போவார்ன்னு யாருக்குமே தெரியாது.. அம்மா போனபின்னாலே, அவர் வீட்டுக்கு வருகிறது நின்னு போச்சு.."

"வாட்..?"

https://t.me/tamilpdfebooks

கோர்வையாக பேசிக் கொண்டிருந்த நரேந்திரனின் வார்த்தைகளை ஊர்மிளாவின் ஆச்சரியமான கேள்வி வேகத்தடையைப் போட்டது..

"என்ன சொல்கிறீங்க நரேன்..? உங்கப்பா வீட்டுக்கு வருகிறது நின்னு போச்சுன்னா.. எனக்குப் புரியலையே.. இந்த வீட்டில்தானே நீங்களும்.. அத்தையும் இருந்தீங்க..?"

"இல்லை..." வறண்ட குரலில் பதில் சொன்னான் நரேந்திரன்..

"நானும்.. அம்மாவும் இந்த வீட்டில் இருந்ததில்லை.. இது புதிதாக நான் வாங்கிய வீடு.. இன்னும் சொல்லப் போனா.. அப்பா செகண்ட் மேரேஜ் பண்ணின பின்னாலே.. சித்தியுடன் இந்த வீட்டில் குடும்பம் நடத்தலை.. அவர் தனிக் குடித்தனமாக வாடகை வீட்டில்தான் இருந்தார்.. அதிக வாடகை கொடுத்த பங்களா டைப் வீடு.. அங்கேதான் அருண்குமாரும்.. அர்ச்சனாவும் பிறந்தாங்க.. அந்த வீட்டில் நான் இருந்ததில்லை..."

"நீங்க எங்க இருந்தீங்க..?"


"என் அம்மாவோட வீட்டில்.. அதாவது எனக்கு மட்டும் சொந்தமான.. எனக்கு உரிமையான வீட்டில் இருந்தேன்.."

"அப்படின்னா.. உங்க அப்பாகூட எப்ப வந்து சேர்ந்தீங்க..?"

"இல்லை ஊர்மிளா.. என்னால அப்பாவை மன்னிக்க முடியலை.. என் அம்மா இறந்தவுடன் என் அப்பா செகண்ட்

https://t.me/tamilpdfebooks

மேரேஜ் பண்ணிக்கிட்டு வீட்டை விட்டு வெளியேறியதை என்னால ஏற்றுக்க முடியலை... அவர் உயிரோடு இருந்தவரைக்கும் நான் அவரைச் சேர்த்துக்கவே இல்லை.. கம்பெனியில ஒரு வொர்க்கரா அவர் இருந்தார்.. அதுக்கான சம்பளத்தை வாங்கிக் கிட்டார்.. அதில்தான் அவர் குடும்பம் நடத்தியிருக்கனும்.. ஆனா.. கோடிஸ்வரன்னு பொய் சொல்லி சித்தியை செகண்ட் மேரேஜ் பண்ணிக்கிட்டாருல்ல..? அதை மெயிண்டெயின் பண்ண கடன்மேல் கடனா வாங்கி கடனாளியாகி அதை வெளியே சொல்ல முடியாம மனசுக்குள்ளேயே வைத்துப் புழுங்கி.. ஒருநாள் அவரும் போய் சேர்ந்துட்டார்..”



நெடுநாள்களாய் நான்கொண்டிருந்த..
நெருஞ்சிமுள் துயர் கலைந்த
அழகான ராட்சசி நீ....

நாடாளும் வேந்தனாக இருந்தாலும் அவனுக்கும் மனத்தை அழுத்தும் உணர்வுகள் இருக்கும்.. பகிர்வதற்கு ஆளில்லாமல் அவன் தவிக்கக் கூடும்.. அதைப் பகிரவே முடியாமல் வாழ்ந்து முடிந்து போனவர்களும் இந்த உலகத்தில் உண்டு.. நரேந்திரனும் அவ்வாறே வாழ்ந்து முடிந்திருப்பான்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா என்றொரு தேவதை அவனது வாழ்வில் வராத வரைக்கும் அவனும் அவ்வாறுதான் இருந்தான்.. வாதையும் யாரிடமும் சொல்லாமல் எல்லாவற்றையும் மனதுக்குள் போட்டுப் புதைத்துக் கொண்டு.. இரும்பு மனிதனாக.. எல்லாத்துயர்களையும் ஜீரணம் பண்ணிக் கொண்டு.. எல்லோரையும் தாங்கும் வலிமையானவனாக வாழ்ந்து கொண்டிருந்தான்..

அவன் மனதில் உள்ளே புகுந்து.. மனக்கதவைத் தட்டி.. உள்ளே இருக்கும் உணர்வுகளை வெளியே கொண்டுவர யாராலும் முடிந்ததில்லை.. அந்த அளவுக்கு யாரையும் அவன் அருகே நெருங்க விட்டதில்லை.. ஊர்மிளா அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து அவன் மனக் கதவைப் புயலாய் திறந்து உள்ளிருக்கும் ரகசியங்களையும், துயர்களையும் வெரிக் கொணர்ந்தாள்..

மனதுக்கு நெருக்கமானவர்களிடம் மனதுக்குள் புதைந்து கொண்டிருக்கும் துக்கங்களையும்.. குமுறல் களையும் கொட்டி விடும் தருணம் கூட அருமையான தருணம்தான்..

நரேந்திரனுக்கு அன்று அந்தத்தருணம் வாய்த்திருந்தது..

மெலிதான நிலவொளியில் அவனும்.. அவளும்.. மட்டுமே இருந்த அந்தத் தனிமையான பொழுதில் நரேந்திரனின் மனக்கதவு திறந்தது..

"என் தாத்தா.. அதாவது.. என் அம்மாவின் அப்பா.. இந்த பெங்களூரிலேயே நம்பர் ஒன் பணக்காரர்...

https://t.me/tamilpdfebooks

கோடிஸ்வரர்.. அவருடைய பூர்வீகம் தர்மபுரி.. அவரோட தாத்தா காலத்திலேயே பிஸினெஸ்ன்னு பெங்களூருக்கு வந்து செட்டிலாகிட்டாங்களாம்.."

"உங்க அப்பா வழித்தாத்தா..?"

"இருந்தால்தானே சொல்கிறதுக்கு.."

வெறுமையான குரலில் சொன்னான் நரேந்திரன்.. அவனைப் பேச விட்டு அமைதி காத்தாள் ஊர்மிளா.. புரையோடிய நினைவுகளை வெளிக் கொணர்ந்தால்தான் அவற்றை ஆற்றிவிட வழி கிடைக்கும்..?

"அப்பா அநாதை.. ஒரு வகையில் நான் உன்னிடம் எனக்கு யாருமில்லைன்னு சொன்னதுக்கு அடிப்படை இதுவாக இருக்கக்கூடுமோ என்னவோ.. அப்பா தன்னோட கடைசி நிமிசங்களில இப்படித்தான் என்னிடம் சொன்னார் ஊர்மிளா... அவர் ஒரு அநாதை... அவருக்குன்னு யாருமில்லைன்னு சொன்னார்.. ஒன்றைச் சொல்லவா.. இந்த வார்த்தைகளை அவர் என்னிடம் சொன்னப்ப.. அவரோட முதல் மனைவியின் மகனா நானிருந்தேன்.. அவரோட இரண்டாவது மனைவியா சித்தி இருந்தாங்க.. அவங்க பெற்ற அருணும்.. அர்ச்சனாவும் இருந்தாங்க.. இருந்தும் அப்பா என்னிடம் அப்படிச் சொன்னார்.."

நரேந்திரனின் வார்த்தைகளில் மனதின் வலி தெரிந்தது.. ஊர்மிளா அவன் கைகளைப்பற்றி ஆறுதல் படுத்த முனைந்தாள்.. அது அவனுக்கு ஆறுதலாகவும் இருந்தது..

https://t.me/tamilpdfebooks

அகல்யாவின் முன்னிலையிலும்.. அவளுடன் பேசும் போதும் மட்டுமே நரேந்திரன் அவளை அம்மா என்று அழைப்பதையும்.. மற்ற தருணங்களிலும்.. அவளைப் பற்றிக் குறிப்பிடும் போதும் அகல்யாவை சித்தி என்றே சொல்வதையும் ஊர்மிளா கவனித்திருந்தாள்..

அப்போது அதைப்பற்றி அவள் கேட்டே ஆக வேண்டியிருந்தது... இரட்டைவேசம் போடுவது தவறென்றால்.. அவளது நரேந்திரன் போடுவதும் இரட்டை வேடம்தானே..? அதை ஏனென்று அவள் அறிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமல்லவா..?

"என்னால் அவங்களை அம்மான்னு ஏத்துக்க முடியாது ஊர்மிளா.." என்றான் நரேந்திரன்..

ஏனென்று அவளால் கேட்க முடியவில்லை.. எப்படி அவள் கேட்பாள்..? யாராலும் இட்டு நிரப்ப முடியாத இடம் அம்மாவெனும் இடமல்லவா..?

"என் அம்மாவுக்கு என்னைக் கவனிக்க முடியாம அவங்க பேசண்டா இருந்திருக்கலாம்.. அதோட... அவங்களோட பழக்கப்படி.. வேலையாள்களை வைத்தே எல்லா வேலைகளையும் செய்ய வைத்திருக்கலாம்.. ஆனா அவங்கதான் என் அம்மாங்கிறதை ஒரு பார்வையாலே அவங்க உணர்த்தி விடுவாங்க.. ஒரு பேச்சில தெரியப் படுத்திருவாங்க.. அவங்களோட செய்கை அத்தனை யிலேயும் பாசம் கொட்டிக்கிடக்கும்.. என் அம்மா என்மேலே உயிரையே வைத்திருந்தாங்க ஊர்மிளா.. ப்ச்.. எனக்குத் தான் கொடுத்து வைக்கலை.. என் சின்ன வயசிலேயே

https://t.me/tamilpdfebooks

அவங்க என்னை விட்டுட்டுப் போயிட்டாங்க.. அவங்க இடத்திலே என்னால வேற ஒருத்தரை ஏற்றுக்க முடியலை.. என் அப்பாவை நான் தள்ளி வைத்ததுக்கு இதுதான் முக்கிய காரணம்.. பெண்டாட்டி செத்துட்டா புருசன்காரன் இன்னொரு மேரேஜ் பண்ணிக்கிட்டுத்தான் ஆகனுமா..? எப்படிடீ..? பெண்டாட்டி இடத்தில இன்னொருத்தியை வைத்துப் பார்க்க எப்படிடீ முடியும்..?"

அந்த நொடியில் அகில உலகத்துக்கும் தான் அரசியாகி விட்டதைப் போல ஊர்மிளா உணர்ந்தாள்.. தான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பதை உணராதவனாக நரேந்திரன் தன் மனதிலிருந்ததைக் கொட்டிக் கொண்டிருந்தான்..

"எப்படி என்னால் அம்மாவோட இடத்தில வேறு ஒருத்தங்களை நினைச்சுப் பார்க்க முடியலையோ.. அப்படித்தானே அப்பாவுக்கும் இருந்திருக்கனும்..? பெண்டாட்டியோட இடத்தில வேறு ஒரு பெண்ணை நினைத்துப் பார்க்க முடியாதவன்தான் உண்மையான புருசன் ஊர்மி.."

அந்த உண்மையான புருசனை தனக்கு அளித்த கடவுளுக்கு மனதிற்குள் நன்றி சொன்னாள் ஊர்மிளா..

'இவனல்லவா உண்மைக் காதலன்..!'

அவனை இறுக்கிக் கட்டி முத்தமிட வேண்டும் போல அவளுக்கு இருந்தது.. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.. அது போன்ற சூழலில்.. அவளின் அருகாமை

https://t.me/tamilpdfebooks

வேறு விதமான உணர்வுகளை அவனுக்குள் தூண்டி விடக்கூடும்.. அது கூடாது.. அவன் பகிர நினைக்கும் ரகசியங்களை, பகிர்ந்து முடிக்கும் வரை அவள் குறுக்கிடக் கூடாது..

"நான் இவங்களை சித்தின்னுகூட நினைச்சதில்லை ஊர்மிளா.. அதுக்கான அவசியமும் எனக்கு ஏற்படலை.. அம்மா இறந்தபின்னாலே அப்பா வீட்டை விட்டுப் போயிட்டாரு.. செகண்ட்மேரேஜ் பண்ணிக்கிட்டு தனிக்குடித்தனத்தை ஆரம்பிச்சிட்டாரு.. கம்பெனியில அவர் பார்த்து வந்த ஜெனரல் மேனேஜர் வேலையில இருந்து அவரைத் தூக்கிக் கடாசிரனும்னு தாத்தா முடிச்சாரு.. நான் விடலை.."

"அப்பாங்கிற பாசம்.."

"ஊஹூம்.. அது அற்றுப் போயிருச்சு.. என் அம்மாவுக்கு மட்டும் புருசனா இல்லாதவர்மேலே அப்பாங்கிற பாசம் எப்படி வரும்..? எனக்கு வரலை.. பட்.. அவரை வேலையிலிருந்து தூக்கிட்டா அவருக்கு யார் வேலை கொடுப்பாங்க..? இந்த வயசில.. இவ்வளவு சம்பளத்தோட வேலை அவருக்கு நிச்சயமா வேலை கிடைக்காது ஊர்மிளா.. அட்டெண்டர் வேலை கூடக் கிடைக்காது.. அதனால்தான் வேணாம்ன்னு சொன்னேன்.."

"ம்ம்ம்.."

"அப்பா அநாதை ஆசிரமத்தில வளர்ந்திருக்காரு ஊர்மிளா.. அவரோட பெத்தவங்க யாருன்னு அவருக்குத்

https://t.me/tamilpdfebooks

தெரியாது.. அதனால் அவர் அநாதைன்னு ஒரு காலத்திலே சொல்லியிருக்கலாம்.. ஆனா அவர் சாகிறப்ப அப்படிச் சொன்னார்.. அவருக்குன்னு யாருமில்லைன்னு ஒன்றுக்கு இரண்டாய் பெண்டாட்டிகளைக் கட்டி குடும்பம் நடத்தி.. அவங்களில ஒருத்தங்களை உயிரோட வைத்துக்கிட்டு அவர் அப்படிச் சொன்னார்.. மூத்த மனைவியின் மகனா நானிருக்க.. இளைய மனைவியின் பிள்ளைகளா அருணும், அர்ச்சனாவும் இருக்கும் போது அப்படிச் சொன்னார்.. அதுதான் என் மனசை வேதனைப் படுத்துச்சு.."

"நரேன்.."

"யார் மனசில என்ன துயரம் இருக்குன்னு யாருக்குத் தெரியும் ஊர்மிளா..? வெளியில சிரிச்சுக்கிட்டு மனசுக்குள்ளே அழுதுகிட்டிருக்கிற எத்தனை மனுசங்க இந்த உலகத்திலே வாழ்கிறாங்களோ.. யாருக்கு அது தெரியும்..?"

ஊர்மிளா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. இது போன்ற கேள்விகளுக்கு விடை சொல்வது கடினமென்று அவளுக்குத் தோன்றியது..

விடை சொல்ல முடியாத இது போன்ற கேள்விகள் தான் மனித வாழ்க்கைக்கு தளையிட்டிருக்கின்றன..

'சிலர் சிரிப்பார்..

சிலர் அழுவார்..

https://t.me/tamilpdfebooks

நான் சிரித்துக் கொண்டே..
அழுகின்றேன்..'

பழைய காலத்து திரைப்படத்தின் பாடல் வரிகள் அவள் மனதில் ஓடின.. அதைப் போன்ற ஓர் மனநிலையுடன் தான் நரேந்திரன் அவள் முன்னால் அமர்ந்து அவனது மன பாரங்களை இறக்கிக் கொண்டிருந்தான்..

"அத்தனை நாள் வரைக்கும் நான் என் பக்கத்தை மட்டுமே பார்த்துக் கிட்டு இருந்த குற்ற உணர்ச்சி என் மனசை தாக்குச்சு ஊர்மிளா.. அவர் பக்கம் என்ன இருக்குன்னு நான் கேட்காம விட்டுட்டேனோங்கிற குற்ற உணர்வு அதிகமாச்சு.."

"நீங்க உங்க அப்பாகிட்ட பேசியிருக்கலாம்.."

"முடியலை.. அதுக்காக காரணத்தையும் நான் சொல்லிட்டேன்.. அநாதை ஆசிரமத்தில வளர்ந்த என் அப்பா.. படிச்சு.. எம்.பி.ஏ பட்டம் வாங்கி.. ஒரு மேனேஜரா என் தாத்தாவோட கம்பெனியில நுழைஞ்சிருக்கார்.."

"ம்ம்ம்.."

"என் தாத்தா கஜேந்திரன் இந்த பெங்களூரிலேயே நம்பர் ஒன் கோடிஸ்வரர்ன்னு சொன்னேனில்லையா..?"

"ம்ம்ம்.."

"என் பாட்டி.. சித்ரலேகாவும் அவரோட பணத்துக்கு ஈடுகொடுக்கிற குடும்பத்தில பிறந்து வளர்ந்தவங்கதான்.."

"ம்ம்ம்.."

https://t.me/tamilpdfebooks

"இப்படிக் கோடிஸ்வரப் பரம்பரையிலே பெண் கொடுத்து.. பெண் எடுத்துக்கிட்டு இருந்த எங்க தாத்தாவோட மகள்.. அதாவது என் அம்மா நளினி.. அவங்க கம்பெனியில வேலைபார்த்த சாதாரண மேனேஜரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.."

"காதல் கல்யாணமா..? நம்ம காதலைப் போலவா..?"

கேட்கும் போதே அந்தக் கேள்வியிலிருந்த அபத்தத்தை உணர்ந்தாள் ஊர்மிளா..

"என்ன பேசற நீ.." முகம் சுளித்தான் நரேந்திரன்..

"உன்னை நினைச்ச மனசில வேற யாரையும் என்னால நினைக்க முடியாதுடி.. நம்ம காதலைப் போய் நீ அவரோட கல்யாணத்துக்கு இணையாப் பேசற..?"

சிறகுகள் விரித்து வானத்தில் பறப்பதைப் போல உணர்ந்தாள் ஊர்மிளா..

இதுபோன்ற துயரமான தருணத்தில்தானா அவன் இப்படியெல்லாம் பேசியாக வேண்டும் என்றிருந்தது அவளுக்கு..

அவன் சொன்னதைக் கேட்டதும் சிறகடிக்கும் மனது.. அவனைக் கட்டிக் கொள்ளத் துடிக்கிறதே.. அவள் என்ன செய்வாள்..?

கட்டவிழும் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவரப் போராடினாள் ஊர்மிளா.. இனிமையான நிலாவிருந்தில்.. ஆஸ்திரேலியாவில் அவர்கள் இருந்த

https://t.me/tamilpdfebooks

காலத்தை அருகில் அழைத்துக் காட்ட வேண்டும் என்று மனதுக்குள் எழுந்த தாபத்தை திரையிட்டு மறைத்தபடி கணவனின் மனப்பாரத்தை கேட்டுக் கொண்டிருந்தாள் அந்த அன்புக் காதலி..

"தாத்தாதான் அப்பாவை மாப்பிள்ளையா செலக்ட் பண்ணியிருக்கார்.. அம்மாவை பெண் பார்க்கக் கூட அவர் அப்பாவை அனுமதிக்கலையாம்.. என் பெண்ணுக்கு உன்னைக் கல்யாணம் பண்ணி வைத்து வீட்டோடு மாப்பிள்ளையாய் ஆக்கிக் கொள்ளப் போகிறேன்னு என்னவோ கம்பெனிச் செய்தியைச் சொல்கிறதைப் போலச் சொன்னாராம்.. அப்பாவிடம் சம்மதம் கூடக் கேட்கலையாம்.."

"உங்க அப்பா அதை வலியுறுத்தியிருக்கலாமே.. பெண்ணைப் பார்க்கிறேன்.. பிடித்திருந்தா கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லியிருக்கலாமே.. யார் அவரைத் தடுத்தாங்க..?"

"அவரோட நிலைமை அவரைத் தடுத்திருக்கு.. வேலை கிடைத்ததும் அநாதை ஆசிரமத்தை விட்டு அவரை வெளியே அனுப்பிட்டாங்க... அந்த வேலை போச்சுன்னா அவர் பிளாட்பாரத்திலதான் நின்றாகனும்ங்கிற நிலைமையில அவராலே மறுத்துப் பேச முடியலை.. அது அப்பாவின் மனசில ஆழப் பதிஞ்சிருச்சு.. என்னதான் அவரோட கல்யாணத்துக்குப் பின்னாலே அம்மாவோட அழகிலும்.. அன்பிலும் அவர் மயங்கினாலும்..

https://t.me/tamilpdfebooks

அவங்களைத் தேர்தெடுக்கும் உரிமை அவருக்கு மறுக்கப் பட்டு விட்டதை நினைச்சு மனசுக்குள் குமுறியிருக்கார்.."

"ஓ.. அதனாலதான் அத்தை இறந்ததும் அவர் தானாய் தேர்ந்தெடுக்கனும்னு உங்க சித்தியைத் தேர்ந்தெடுத்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டாரோ..!"

ஊர்மிளாவின் வார்த்தைகளில் ஆச்சரியமாக அவளைப் பார்த்தான் நரேந்திரன்..

"எப்படிடீ இவ்வளவு கரெக்டாச் சொன்ன..? அப்பாவும் அதைத் தான் சொன்னார்.."

"ம்ஹீம்.. உங்க அப்பாவுக்கு தேர்ந்தெடுக்கிற திறமை ரொம்பவும் கம்மிங்கிறதினாலதான் கடவுளாப் பார்த்து அவருக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் கொடுத்திருந்திருக்கிறார்.. உங்க அப்பா அது தெரியாம புதைகுழியில போய் இறங்கிட்டாரே.."

வருத்தத்துடன் சொன்ன ஊர்மிளா சிறு மனத்திடுக்கிடலுடன் நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

இப்படியா அவள் வாயில் வந்ததை வைத்துத் தள்ளுவாள்..?

"ஸாரி.." என்றாள்..

"இட்ஸ் ஆல் ரைட்.. இதுக்குப் போய் ஏன் ஸாரின்னு கேட்கிற..? நான் இவங்களை சித்தின்னு கூடக் கூப்பிட்டதில்லை.. அப்பா போனபின்னாலே இவங்களைப் பார்த்துக்க வேண்டிய பொறுப்பு எனக்கு வந்திருச்சு..

https://t.me/tamilpdfebooks

இந்த வீட்டை வாங்கி இவங்களையும்.. அருண், அர்ச்சனாவையும் அழைத்துக்கிட்டு வந்து குடியிருக்க வைத்தேன்.. ஆரம்பத்தில இங்கே வந்து இவங்களைப் பார்த்துட்டு மட்டும்தான் போவேன்.. தாத்தாவுக்கு அது பிடிக்கலை.. எதிர்த்தார்.. மொத்தமா வீட்டை விட்டு வெளியில் வந்து.. இந்தக் குடும்பத்தோடு சேர்ந்து இருக்க ஆரம்பித்தேன்.."

"அருண்.. அர்ச்சனா..?"

"இப்பத்தான்.. நான்கு வருசங்களுக்கு முன்னாலே தான் இவங்களை நான் பார்த்தேன்.. வளர்ந்து நிற்கிற தம்பி... தங்கையிடம் என்ன ஒட்டுதல் வரும்..? அருணும், அர்சனாவும நலல பசங்க.. அவவளவுதான.. அருண மரியாதையாய் ஒதுங்கி நிற்பான்.. அர்ச்சனா அண்ணான்னு ஒட்டிக்குவா.. ரெண்டு பேரையும் தள்ளி வைக்க எந்தக் காரணமுமில்லையே.. அதேசமயம் வலுக்கட்டாயமா பாசத்தைக் கொட்டனும்னா அது ஆர்ட்டிபிஷியலா இருக்காதா..? அவங்க மேலே.. என் அப்பாவுக்கு பிறந்தவங்க முறையில தம்பி, தங்கைங்கிற பாசம் லேசா இருக்குது.. அர்ச்சனா மேலே அதிகப்படியா அது உண்டு.. தங்கையாச்சே.."

அவன் சொன்னதை ஆமோதிப்பதைப் போல தலையை அசைத்துச் சிரித்தாள் ஊர்மிளா.. புரிதலுடன் கூடிய புன்னகை அது..

"அர்ச்சனா அருமையான பெண்.."

https://t.me/tamilpdfebooks


"ம்ம்ம்.. அந்த வகையில் அவள் அவளோட அம்மா மாதிரி இல்லை.."

"உங்களுக்கு அவங்களைப் பிடிக்காதா..?"

ஆழ்ந்த குரலில் கேட்டாள் ஊர்மிளா.. அதுவரை அப்படியொரு கேள்வியை அவள் கேட்டதில்லை.. நரேந்திரன் தலையை அசைத்தான்..

"ஆமாண்டி.. அவங்களை எனக்குப் பிடிக்காது.."

அப்படிச் சொன்ன நரேந்திரன் தான் பிறிதொரு நாளில் யாரை அவனுக்குப் பிடிக்காது என்று சொன்னானோ.. அந்த அகல்யாவின் பேச்சுக்கு மரியாதை கொடுத்து.. ஊர்மிளாவை வீட்டு ஹாலில் நிற்க வைத்து கேள்வி கேட்டான்...



எண்ணமெல்லாம் நிறைந்திருந்தும்
எனைவிட்டு நீங்கிட்ட..
அழகான ராட்சசி நீ....

வருங்காலத்தில் என்ன நிகழப்போகிறது என்பதை நிகழ்காலத்தில் கணித்துச் சொல்லக் கூடிய திறமை படைத்தவர் யார்..? தேர்ந்த ஆருடக்காரர்களால் கூட ஓரளவிற்கு மேல் அதைக் கணித்துச் சொல்ல முடியாது..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் தேர்ந்த ஆளுடக்காரன் அல்ல..

அவன் தேர்ந்த பிஸினெஸ் மேன்.. உலகம் சுற்றி வியாபாரம் செய்யத்தான் அவனுக்குத் தெரியும்.. எதிர்கால நிகழ்வுகளை கணித்துச் சொல்லத் தெரியாது..

அதனால்தான்.. அகல்யாவின் மீது அவனுக்கு அதிகப்படியான அன்போ.. நல் அபிப்ராயமோ கிடையாது.. அவனுக்கு அவளைப் பிடிக்காது என்பதை வெளிப்படையாக ஊர்மிளாவிடம் ஒப்புக் கொண்டான் அவன்..

"அப்பாவோட செகண்ட் வொய்ப்ங்கிறதினால நேச்சராவே எனக்கு அவங்க மேல வெறுப்புதான்.. பட்.. அப்பாவோட இறப்புக்குப் பின்னால அவங்களுக்குன்னு யாரிருக்கான்னு பரிதாபம் வந்தது.. அந்த பரிதாபம் இவங்களை நேரில பார்த்ததும் சொல்லாம.. கொள்ளாம ஓடியே போயிருச்சு.. ம்ஹீம்.. அப்பா போனதுக்கு இவங்க கொஞ்சம்கூட வருத்தப்படலை.. அதுக்குப் பதிலா அப்படி அவர் போனதினாலதான் இப்படியொரு லக்சரி லைப் அவங்களுக்கு கிடைச்சிருக்குங்கிறதைப் போல பேசினதில எனக்கு வெறுத்துப் போயிருச்சு.."

அகல்யா பேசும் விதத்தை அறிந்து வைத்திருந்த ஊர்மிளா மௌனமாக நரேந்திரன் சொல்வதைக் கேட்டுக் கொண்டாள்.. ஒரே வீட்டில் மாமியார் என்ற உறவுடன் அகல்யா கூட வசித்துக் கொண்டிருக்கும் போது

https://t.me/tamilpdfebooks

அவளைப் பற்றிய அபிப்ராயத்தை ஊர்மிளா பேசுவது ரசக்குறைவானது என்பது அவளின் எண்ணம்..

"என்ன சொல்லி என்ன பண்ண..? அம்மா ஹார்ட் பேசண்ட்.. எங்க தாத்தாவோட ஸ்டேட்டஸீக்கு ஈக்குவலான இடத்தில அவங்களை மேரேஜ் பண்ணிக் குடுத்தா போகிற வீட்டில தன்மகள் பாதுகாப்பா.. நிம்மதியா வாழ்வாங்களான்னு தாத்தாவுக்கு பயம்.. எந்த கோடிஸ்வர மாப்பிள்ளை நோயாளி மனைவியை பெட்டில் படுக்க வைத்து.. மருந்து மாத்திரை கொடுத்துப் பார்த்துக் கொள்வான்..?"

"உங்க அப்பா பார்த்துக்கிட்டாரா..?"

"இல்லை.. அதுதான் வேதனையான விசயம்.. எங்க தாத்தாவும் பாட்டியும் பாத்துக்கிட்டாங்க.. அந்த வகையில என் அப்பாவுக்கு அம்மாவை மேரேஜ் பண்ணிக் குடுத்தது அவங்களுக்கு வசதியான ஒன்னாத்தான் அமைஞ்சு போனது.. வீட்டோடு மாப்பிள்ளையாய் என் அப்பா இருந்ததினால்தான் என் அம்மாவை கண்ணுக்குள் வைத்து என் தாத்தா.. பாட்டியால் பார்த்துக் கொள்ள முடிஞ்சது.. அதுவே என் அம்மாவை வேறு இடத்தில மேரேஜ் பண்ணிக் கொடுத்திருந்தா அது முடிஞ்சிருக்காதில்ல...?"

"உண்மைதான்.. உங்க தாத்தா.. பாட்டியோட நினைப்பில தவறு இல்லை நரேன்... ஒற்றைப் பெண்ணைப் பெற்றவங்க இப்படித்தான் நினைப்பாங்க.. வசதியில்லைன்னாலும் பரவாயில்லை.. சொந்தபந்தம்ன்னு

https://t.me/tamilpdfebooks

யாருமில்லாத அநாதையா இருந்தாலும் பரவாயில்லை.. வீட்டோடு மாப்பிள்ளையாய் இருந்தால் போதும்.. அப்போதுதான் நம்ம மகளை நாம கவனிச்சுப் பாதுகாத்து வைத்தியம் பண்ணிப் பார்த்துக்க முடியும்ன்னு உங்க தாத்தா பாட்டி நினைச்சிருக்காங்க..”

“யு ஆர் கரெக்ட் ஊர்மிளா.. அதை அப்பா புரிஞ்சுக்கலை.. மாறா.. அவரோட சூழ்நிலையை என் தாத்தாவும்.. பாட்டியும் யூஸ் பண்ணிக்கிட்டாங்கன்னு மருகியிருக்கிறார்..”

“உங்க அம்மாவோட அன்பும் காதலும் அவர் மனசை மாற்றலையா..?”

“அதுதான் என் கோபம் ஊர்மிளா.. ஆயிரம்தான் என் தாத்தாவும்.. பாட்டியும் செஞ்சது தப்பாவே இருக்கட்டும்.. அவங்க செய்ததுக்கு என் அம்மா என்ன பண்ணுவாங்க..? எப்படி என் அப்பாவின் சம்மதம் கேட்காமலேயே அவரோட மேரேஜை தாத்தா முடிவு பண்ணினாரோ.. அதைப் போலத்தான் என் அம்மாவோட சம்மதத்தையும் கேட்காம மேரேஜை முடிவு பண்ணியிருக்காரு.. இவர்தான் உனக்கு வரப் போகிற மாப்பிள்ளைன்னு மணமேடையில ஏறுகிற வரைக்கும் அம்மாவுக்கு.. அப்பாவை.. என்னோட தாத்தா அடையாளம் காட்டவேயில்லையாம்.. அம்மா அதைப் பெரிதாய் நினைத்திருக்கலாமே.. நான் ஹார்ட் பேசண்ட்ங்கிறதினாலதானே... என் கணவரை தேர்ந்தெடுக்கிற உரிமை எனக்கு மறுக்கப் பட்டிருக்குன்னு மனசுக்குள்ளே புழுங்கியிருக்கலாமே.. அம்மா அதைச்

https://t.me/tamilpdfebooks

செய்யலையே.. ஒன்று சொல்லவா.. என் அம்மாவோட அழகுக்கும்.. குணத்துக்கும்.. அப்பாதான் அவங்களுக்கு மேட்சா இருக்க மாட்டார்.."

ஊர்மிளா கனிவுடன் புன்னகை செய்தாள்.. கணவனின் மனம் அவளுக்கும் புரிந்தது.. எல்லாக் குழந்தைகளும் மண்ணில் பிறந்தவுடன் முதலில் பார்ப்பது தாய் முகத்தைத்தான்... தாய்ப்பாசத்தை என்றுமே தந்தை பாசம் முந்தியதில்லை..

நரேந்திரன் மட்டும் அதற்கு விதிவிலக்காக இருந்து விட முடியுமா..?

"அம்மா அழகா இருப்பாங்கடி.. உன்னைப் போலவே அழகு.."

கணவனின் இந்த வார்த்தைகள் அவளைத் தாலாட்டின.. அவளுடைய சொந்த மாமியார் எப்படி இருப்பாள் என்று காணும் ஆவல் அவள் மனதில் எழுந்தது.. அடிக்கடி அவள் கேட்பாள்..

"உங்க அம்மா எப்படியிருப்பாங்க நரேன்..? போட்டோ இருக்குமே.. காட்டுங்களேன்.."

நரேந்திரன் பேசாமல் இருப்பான்.. அவள் கேட்டதற்கு சரியென்றும் சொன்னதில்லை.. மறுத்தும் சொன்னதில்லை.. அந்த வீட்டில் நளினியின் படமோ.. செழியனின் படமோ இருக்கவில்லை..

அதையெல்லாம் நினைவு படுத்திக் கேட்க இதைவிட சிறந்த தருணம் வாய்க்கப் போவதில்லை என்று

https://t.me/tamilpdfebooks

அவளுக்குத் தோன்றியது... அவர்கள் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள்.. அவர்களுக்கு இடையில் இருந்த மேஜையில் சூடு குறையாமலிருக்க.. ஹாட் பாக்ஸ்களில் நிரப்பப்பட்ட பதார்த்தங்கள் மூடி திறக்கப்படாமல் வரிசை கட்டியிருந்தன..

சாப்பிடும் மனநிலையில் அவர்கள் இருவருமே இல்லை.. நிலவொளியில் சோறுண்ணுவது மட்டும் பேரானந்தம் கிடையாது.. மனதிலிருப்பதை அதை மதித்துத் கேட்பவரிடம் பகிர்ந்து கொள்வதும் பேரானந்தமே..

நரேந்திரன் அதைத்தான் செய்து கொண்டிருந்தான்.. அத்தனை காலமாக கணவனின் மனதில் அழுத்திக் கொண்டிருந்த பாரத்தை அவன் கொட்டித்தீர்க்க.. செவி மடுப்பதின் மூலம்.. அவனை அந்த பாரத்திலிருந்து மீட்டெடுத்து ரட்சிக்க முயன்று கொண்டிருந்தாள் ஊர்மிளா..

"அத்தையோட படத்தைக்கூட நீங்க எனக்குக் காட்டலை.."

ஊர்மிளாவின் மெல்லிய குற்றம் சாட்டும் வார்த்தைகளில் நரேந்திரன் தனது செல்போனை எடுத்தான்.. அதிலிருந்த அவனுடைய அம்மாவின் புகைப்படத்தைக் காட்டினான்..

நளினி அழகாக இருந்தாள்.. சோகையாக.. மெலிதான கொடிபோன்ற தோற்றத்துடன் அமைதி தவழும் சாந்தமான முகத்துடன் தெய்வீகமான அழகுடன் இருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

'இப்படிப்பட்ட ஒரு பெண்ணுடன் வாழ இவருடைய அப்பா கொடுத்து வைத்திருக்கனும்ன்னு இவர் சொல்வதில் ஒன்னும் மிகையில்லை..'

"அத்தை படத்தையும்.. மாமா படத்தையும் இந்த வீட்டில் மாட்டி வைக்கலையே.. ஏன்..?"

"விட்டால்தானே.." நரேந்திரனின் முகம் மாறியது..

புருவங்கள் முடிச்சிட.. அண்ணாந்து முழுநிலவை வெறித்துப் பார்த்தவனின் புருவ மத்தியிலிருந்த சுளிப்பை வருடிக் கொடுத்து போக்கி அன்னையாய் அவனை மார்போடு அரவணைக்க அவளது உள்ளம் துடித்தது.. மனக் குதிரைக்கு கடிவாளமிட்டாள்..

"அம்மா படம் இங்கே இருந்தால்.. நான் வேறு.. இவங்க வேறுன்னு அருண், அர்ச்சனாவுக்கு தோணிப் போயிருமாம்.. வேலையாள்கள் இவங்களை மதிக்க மாட்டாங்களாம்.. இப்படிச் சொல்லியே இவங்களை அம்மான்னு கூப்பிடவும் வைச்சாங்க.."

"ஓ.."

"அப்பா படத்தைப் பார்த்தா.. அவர் ஏமாற்றி இவங்களை இரண்டாம் மனைவியாக மேரேஜ் பண்ணிக் கிட்டது ஞாபகம் வந்திருமாம்.. பொட்டுன்னு போய் சேர்ந்திருவாங்களாம்.."

அகல்யாவாவது.. பொட்டென்று போய் சேர்வதாவது.. என்று தோன்றிய போதும் ஊர்மிளா அதைப்பற்றி எதையும் பேசாமல் அமைதியாக இருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"அப்பா ஒரு வகையில வாழத் தெரியாதவர்டி.. .ட்சய பாத்திரம் போல அள்ள அள்ளக் குறையாத .ன்பைக் கொடுக்கிற என் அம்மா அவருக்கு மனைவியாக் கிடைச்சாங்க.. அந்த வாழ்க்கையை நிம்மதியா வாழ .வருக்குத் தெரியலை.."

"அவங்க சந்தோசமாத்தானே இருந்தாங்க..?"

"ஆரம்பத்தில் அப்பா ஒட்டாமல் இருந்தாலும்.. போகப் போக அம்மாவின் அழகில் மயங்கிப் போயிருக் கிறார்.. அவங்களோட சந்தோசமா குடும்பம் நடத்தியிருக் கிறார்.. அப்போதெல்லாம் அம்மா ஹார்ட் பேசண்ட்ங்கிற விவரம் அவருக்குத் தெரியாது.."

"ஓ.."

"அது தெரிய வந்தப்ப.. அவரையும் அறியாம ஒரு வார்த்தையை விட்டுட்டார்.."

என்ன வார்த்தையென்று கேட்டும் தைரியம் ஊர்மிளாவுக்கு வரவில்லை... அருமையான பெண்ணொருத்தி மனைவியாகிடைத்தும் அவளுடன் மனமொப்பி வாழாமல் வாழ்க்கையை தொலைத்து விட்ட மனிதர் என்ன மாதிரியான வார்த்தையைச் சொல்லியிருப்பார் என்று கேட்டறிய அவள்மனம் துணிய வில்லை...

"அவர் அனாதையா.. அம்மாவோட அப்பா கொடுத்திருக்கிற வேலையை நம்பி இருக்கிறவன்ங்கிற தினாலதான.. அம்மாவைப் போல ஒரு நோயாளிப்

https://t.me/tamilpdfebooks

பெண்ணை அவர் தலையில் அம்மாவின் அப்பா கட்டி விட்டார்ன்னு கேட்டிருக்கார்.."

"கடவுளே..!"

ஊர்மிளா மனம் பதைத்தாள்.. ஒரு பெண்ணாக நளினியின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை அவளால் உணர முடிந்தது..

"அவர் செய்தது தியாகம்ன்னும் அப்பா சொல்லி யிருக்கார்.. அம்மாவுக்கு அதைக் கேட்டதும் ஹார்ட் பெயின் வந்திருச்சு.. ஹாஸ்பிடலில் சேர்த்திருக்காங்க.. அப்ப நான் மூன்று மாதக் குழந்தையாம்.. அம்மா டிஸ்ஜார்ஜ் ஆகி வந்தவுடன் அப்பா கில்ட்டியாய் ஃபீல் பண்ணி அவங்ககிட்ட ஸாரி சொல்லப் போயிருக்கார்.. அம்மா அவங்களோட ரூம் கதவை அடைச்சிட்டாங்களாம்.."

ஊர்மிளா பேச்சிழந்தாள்.. அவருடைய காதல் கணவனின் அம்மாவிற்கு எல்லாமும் இருந்திருக்கிறது.. இருந்தும்.. எதுவும் இல்லாத அநாதை போல அவளைத் திருமணம் செய்து கொண்டதை தியாகமென்று அவளுடைய கணவர் சொல்லியிருக்கிறார்..

எந்தப் பெண்ணால் அதைத் தாங்க முடியும்..?

"அம்மாவோட டெலிவரி டயத்திலதான் அவங்க ஹார்ட் பேசண்ட்ங்கிற உண்மையே அப்பாவுக்கு தெரிய வந்திருக்குது.. அம்மா மறைக்கனும்னு நினைக்கலை.. அவங்க அதை பெரிதாகவே நினைத்துக்க மாட்டாங்க.. அதோட தாத்தா சொல்லியிருப்பார்ன்னு நினைச்

https://t.me/tamilpdfebooks

சிட்டாங்க.. அதை என் அப்பா வினயமா மனதில போட்டு வைச்சிருந்து.. நான் பிறந்த மூன்றாம் மாதத்திலே அப்படி ஒரு வார்த்தையை அவர் கேட்டுட்டார்.. அம்மா அப்போதிலிருந்து அப்பாகிட்ட முகம் பார்த்து ஒரு வார்த்தை கூட பேசாம தள்ளி வைச்சுட்டாங்க..”

“ம்ம்ம்...”

“அப்பா அதை எதிர்பார்த்திருக்கலை.. அம்மாவோட அன்பையும்.. காதலையும் மட்டுமே பார்த்திருந்தவர்.. அவங்களோட ரோசத்தையும், கோபத்தையும் பார்க்க வேண்டி வந்திருச்சு.. அம்மா கடைசிவரைக்கும் அப்பாவை மன்னிக்கலை.. அவர் கூட சேர்ந்து வாழலை.. ஒரே வீட்டில் இருந்தாலும்.. ரெண்டு பேருமே தனித்தனி ரூமில் இருந்திருக்காங்க..”

“ம்ம்ம்...”

“அம்மாவோட கடைசி நொடிகளில தாத்தாகிட்ட சொன்னாங்களாம்.. அப்பாவை விடுவிச்சு வீட்டை விட்டு அனுப்பி வைச்சிருங்க.. அவருக்கு மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கையை வாழட்டும்ன்னு கேட்டுக்கிட்டாங்களாம்.. அப்போக்கூட அவங்க அப்பாவோட முகத்தைப் பார்க்கலையாம்.. அவங்க போன பின்னாலே.. தானாவே அப்பா வீட்டை விட்டு வெளியே போயிட்டார்.. அப்போ நான் ஸ்கூலில் படிச்சுக்கிட்டு இருக்கேன்.. அவர் வீட்டை விட்டுப் போன மறுமாதமே அவரோட செகண்ட் மேரேஜ்க்கான இன்விடேசன் எங்கள தேடி வருதுடி.. எனக்கு எப்படியிருந்திருக்கும்..?”

https://t.me/tamilpdfebooks

துயரமாகத்தான் இருந்திருக்கும்.. அப்படிப்பட்ட தகப்பனை வெட்டிச் சாய்த்தாலென்ன என்ற வேகம் இருந்திருக்கும்..

ஊர்மிளாவின் விழிகளில் நீர் திரையிட்டது..

"அவர் மட்டும் அம்மாகிட்ட அப்படிப் பேசாம இருந்திருந்தா இன்னும் கொஞ்ச காலத்துக்கு என் அம்மா உயிரோடு இருந்திருப்பாங்கடி.. அவங்க வாழ்கிற வாழ்க்கையை சந்தோசமா வாழ்ந்திருப்பாங்கடி.. அவர் அதைச் செய்யலை.. அவரும் வாழாம.. அம்மாவையும் வாழ விடாம.. சீக்கிரமா அவங்களை மேலோகத்துக்கு அனுப்பி வைச்சார்.. அந்தப் பாவம்தாண்டி அவருக்கு செகண்ட் வொய்பா வந்து வாட்டுச்சு.. அவர் வாழ்ந்த வாழ்க்கையிலே எங்கம்மா சொர்க்கத்தைக் காண்பித்தாங்க.. இவங்க நரகத்தைக் காண்பிச்சு வைச்சு.. எங்கம்மாவை அவர் சீக்கிரமா மேலோகத்துக்கு அனுப்பி வைச்சதைப் போல.. அவரையும் அனுப்பி வைச்சாங்க.. இதை நான் சொல்லலைடி.. அவர்தான் சொன்னார்.."

"அவருக்கு உடம்பு சரியில்லையா..?"

"ம்ம்ம்.. சொன்னா ஆச்சரியப்படுவ.. அவரும் ஹார்ட் அட்டாக்கிலதான் போய் சேர்ந்தாரு.."

"என்னது..?..!"

ஊர்மிளாவுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.. மனைவிக்கு இதய நோய் இருப்பதை குத்திக்காட்டிப் பேசியவருக்கே இதயநோய் வந்து இறந்தாரா..?


https://t.me/tamilpdfebooks

"ஆமாண்டி.. இதைத்தான் கடவுளோட ஜட்ஜ் மெண்ட்டுன்னு சொல்கிறது.. ஆரோக்கியமான மனிதன்.. அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்குது.. எதனால தெரியுமா..? எல்லாம் இவங்க பேசின பேச்சினாலே.. ஒருவகையில் இவங்க பேசினதையும் குற்றம்ன்னு சொல்ல முடியாதுடி.. கோடிஸ்வரன்.. கம்பெனிக்கு முதலாளின்னு சொல்லிப் பெண் கேட்டு.. செகண்ட் மேரேஜ் பண்ணிக்கிட்டு வந்தபின்னால.. இல்லை யில்லை.. நான் கோடிஸ்வரியோட புருசன்தான்.. அவளோட கம்பெனியில சம்பளம் வாங்கற ஜெனரல் மேனேஜர்தான்னு சொன்னா எந்தப் பெண்ணுக்குத்தான் கோபம் வராது..?"

மற்றவர்களுக்கு வருகிறதோ இல்லையோ.. அகல்யாவிற்கு நிச்சயமாக வரும் என்று புரிந்து வைத்திருந்ததினால் ஊர்மிளா ஒன்றும் சொல்லவில்லை.. அகல்யாவைப் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் அவளால் எதையும் பேச முடியவில்லை..

அந்த அளவுக்கு அகல்யாவைக் குறித்த எச்சரிக்கை யுணர்வு அவள் மனதில் இருந்தது.. என்ன இருந்து என்ன பண்ண..? அவளால் அகல்யாவின் சூழ்ச்சியிலிருந்து தப்பிக்க முடியாமல் போய் விட்டதே..

https://t.me/tamilpdfebooks



அரிதான குறிஞ்சி மலராய்..
ஆக்ரமித்து விலகி நிற்கும்..
அழகான ராட்சசி நீ....

"இவங்க பக்கமும் ஓட்டையிருக்கு ஊர்மிளா.. இவங்களுக்கு ஜாதகம் சரியில்லைன்னு மேரேஜ் தள்ளிப் போயிருக்குது.. இவங்களுக்கு முன்னாடியே இவங்களோட தம்பிக்கு மேரேஜ் ஆகிருச்சாம்.. முப்பத்திரண்டு வயது வரைக்கும் மேரேஜ் ஆகாமல் வீட்டிலிருந்தவங்க.. செகண்ட் மேரேஜா இருந்தா பெட்டர்ன்னு தரகர்கிட்ட சொல்லி வைத்திருந்தாங்களாம்.. பர்ஸ்ட் மேரேஜ்ன்னா பெண் பார்க்க வருகிறவங்க வயதில குறைந்த பெண்ணாத்தானே பார்ப்பாங்க..?"

"உண்மைதான்.."

"வயது கூடிருச்சுங்கிறதினால இவங்க செகண்ட் வொய்பாத்தான் போக முடியும்ங்கிற முடிவுக்கு வந்திட்டாங்க.. அப்பாவுக்கு அம்மா போன துக்கம்.. அதுநாள்வரை இன்னாரோட மருமகன்.. இன்னாரோட ஹஸ்பெண்டுன்னு இருந்து வந்த அடையாளம் பறி போயிருச்சுங்கிற ஆவேசம்.. எதனால் அந்தத்

https://t.me/tamilpdfebooks

தீ அணையும்ன்னு தேடியவர் எண்ணைக்கிணறில குதிச்சிட்டார்.."

அதிபயங்கரமான உவமானம் என்றாலும் அது பொருத்தமான உவமானம் என்பதால் ஊர்மிளா உதட்டைக் கடித்தாள்..

"இன்னொரு மேரேஜ் பண்ணி அந்த இன்விடேசனை தாத்தாவுக்கு அனுப்பி வைக்கனும்ங்கிற வெறி அப்பாவோட மனசில வந்துருச்சு.. அவர் தரகரைப் பார்த்திருக்கார்.. தரகர் இவங்களைப் பத்திச்சொல்லியிருக்கார்.. உடனே அப்பா பெண் பார்க்கப் போயிட்டார்.."

"ம்ம்ம்.."

"சித்தி வீட்டிலதான் எப்ப.. எப்பன்னு இருந்தாங்களே.. அப்பா பெண் கேட்டுப் போனதும் அழுக்கிட்டாங்க.. கோடிஸ்வரருக்கு மனைவியாகப் போகிறோம்ன்னு சித்தியும் பெருமை பேசிக்கிட்டு அப்பாவை மேரேஜ் பண்ணிக்கிட்டாங்க.. அதுக்கப்புறமா உண்மை தெரிஞ்சதும் இவங்க சொரூபத்தைக் காண்பிச்சுட்டாங்க.."

"ம்ம்ம்..."

"அம்மா.. அப்பாவுக்குன்னு ஒரு அடையாளத்தைக் கொடுத்தாங்க... அவர் கனவிலேயும் நினைத்துப் பார்க்காத வாழ்க்கையைக் கொடுத்தாங்க.. அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தவருக்கு.. பணத்தைக் கொண்டு போய் கொட்டினால்தான் மனைவியுடன் வாழ முடியும்ங்கிற நிலைமை வந்திருச்சு.. அப்பா தகுதிக்கு

https://t.me/tamilpdfebooks

மீறின வாழ்க்கையை வாழ கடன் மேலே கடனா வாங்க ஆரம்பிச்சார்..”

“முடியாதுன்னு சொல்லியிருக்கலாமே.. ஜெனரல் மேனேஜர் வேலைக்குக் கிடைக்கிற சம்பளம் அதிகமானதா இருக்குமே.. அந்தப் பணத்திலேயே வசதியாய் வாழ்ந்திருக்கலாமே..”

“கோடிஸ்வரனோட பெண்டாட்டின்னு சொல்லிக் கிட்டவங்க.. லட்சாதிபதியோட பெண்டாட்டின்னு சொல்லிக்கிறதை விரும்புவாங்களா..? அப்பா அம்மாவுக்கு செய்ததை.. இவங்க அப்பாவுக்கு செய்ய ஆரம்பிச்சாங்க..”

“எதைச் சொல்கிறிங்க..?”

“சொல்லிக் காட்டறதைச் சொல்றேன்.. அப்பா அம்மாவோட நோயைச் சொல்லிக் காட்டினார்.. சித்தி அப்பாவுக்கு இரண்டாம் தாரமாய் வந்துட்டதை சொல்லிக் காட்டினாங்க.. அவர் சொன்ன பொய்யைச் சொல்லிக் காட்டினாங்க.. அவர் கோடிஸ்வரர்ன்னு சொன்னதினால தான்.. ஒரு விடோயருக்கு இரண்டாம் மனைவியாய் வர அவங்க சம்மதிச்சாங்கன்னு சொல்லிக் காட்டினாங்க.. இல்லைன்னா.. அப்பாவுக்கு கழுத்தை நீட்ட அவங்களுக்கு என்ன தலைவிதியான்னு கேள்வி கேட்டாங்க.. அப்பாவுக்கு வேலை கொடுத்திருக்கிற தாத்தாகிட்டேயே போய் நியாயம் கேட்கப் போகிறதா பயமுறுத்தினாங்க..”

“ஓ...”

https://t.me/tamilpdfebooks

"வேற எதுக்குப் பயந்தாரோ இல்லையோ.. அப்பா தாத்தாகிட்ட இவங்க நியாயம் கேட்கப் போகிறேன்னு சொன்னதும் பயந்துட்டார்.. தாத்தா ஏற்கனவே கோபத்தில் இருக்கிறார்.. இப்படி ஒரு வழக்கு அவர்கிட்டப் போனா அப்பாவை வேலையை விட்டுத் தூக்கிருவார்.. அதுக்கப்புறம்.. இந்த வேலைகூட அவருக்கு இருக்காது.. கடன் வாங்கின பணத்துக்கு வட்டி கட்ட சம்பளம் வேண்டாமா..? அதற்கு அப்பா எங்கே போவார்..?"

என்ன மாதிரியான வாழ்க்கை இது என்று ஊர்மிளாவுக்கு ஆயாசமாக இருந்தது.. எதைத் தேடி செழியன் அலைந்தார்..? அவரைப் புறக்கணித்த அன்பு மனைவியை மறக்க முடியாமல் அவர் கொண்ட ஆவேசம் அவரை எங்கே போய் நிறுத்திவிட்டது..! அவரின் உறவை முறித்து வீட்டை விட்டு வெளியேற வைத்த மாமனாரின் மனதை நோக வைப்பதற்காக.. அவரேயல்லவா மீளமுடியாத நோவில் விழுந்து விட்டார்..!

"கடமைக்காக வாழ்ந்த வாழ்க்கை அவரை அருணுக்கும்.. அர்ச்சனாவுக்கும் அப்பாவாக ஆக்கியது.. கூடவே கோடிக்கணக்கான ரூபாய்களை வாங்கியிருக்கும் கடனாளியாகவும் ஆக்கியது.. துரத்தும் வாழ்க்கை அவரை ஹார்ட் அட்டாக்கில் கொண்டு போய் நிறுத்தியது.. அவரோட கடைசி நிமிடங்களில என்னைப் பார்க்க விரும்பியதா ஹாஸ்பிடலில் இருந்து போன் வந்தது.. அதுவரைக்கும் அவரிடம் அப்பான்னு நான் முகம் கொடுத்துப் பேசியதில்லை.. அம்மா போன பின்னாலே

https://t.me/tamilpdfebooks

அவருக்கும் எனக்கும் இடையே இருந்த உறவும் அறுந்து போய் விட்டதுன்னுதான் நான் நினைச்சேன்.. எனக்கு எல்லாமே என் தாத்தாவும்.. பாட்டியும்தான்.. ஆனால்.. கடைசி நிமிடங்களில இருக்கிற என்னைப் பெற்றவரோட கோரிக்கையை என்னால் நிராகரிக்க முடியவில்லை.."

"ஐ கேன் அன்டர்ஸ்டாண்ட்.."

"ஹாஸ்பிடல் ரூமில் அவரும் நானும் மட்டுமே இருந்தோம்.. என் கையைப் பிடிச்சுக்கிட்டு பாவ மன்னிப்பு கேட்டார்.. அவர் மனசில இருந்த எல்லாத்தையும் கொட்டினார்.. அம்மாமேலே அவருக்கிருந்த காதல் அழியாம அப்படியே பொக்கிசமா இருந்தது ஊர்மிளா.. அவரிடம் மட்டும் தாத்தா உண்மையைச் சொல்லி.. அம்மாவைப் பார்க்க வைத்து.. அவங்களை கல்யாணம் பண்ணிக்க முடியுமான்னு ஒரு வார்த்தை கேட்டிருந்தால் மறுக்காம உடனே சரின்னுதான் சொல்லியிருப்பார்ன்னு சொன்னார் ஊர்மி.. அநாதைகளுக்கு முடிவெடுக்கிற உரிமை கிடையாதான்னு அவர் கேட்டப்ப அவர் மனசு எந்த அளவுக்கு காயப்பட்டிருந்ததுன்னு என்னாலே புரிஞ்சுக்க முடிஞ்சதுடி.."

"ம்ம்ம்.."

"இவங்களைப் பத்திச் சொன்னார்.. அவர் பேசின வார்த்தைகள் அத்தனையிலும் வெறுப்பும்.. கசப்பும்தான் இருந்தது ஊர்மிளா.. அருணையும்.. அர்ச்சனாவையும் காப்பாத்துன்னு கேட்டுக்கிட்டார்டி.. ஒருவார்த்தைகூட

https://t.me/tamilpdfebooks

இவங்களைப் பத்திச் சொல்லலை.. இவங்களைக் காப்பாத்துன்னு கேட்கலை.. என் கையைப் பிடிச்சுக்கிட்டு கண்ணீர் விட்டவர்.. உயிரையும் விட்டு விட்டார்.."

"நரேன்.."

ஊர்மிளாவுக்குள் அந்த காட்சி வந்து நின்றது.. அவருடைய கணவன்.. சிறுவயதிலிருந்து பேசியறியாத.. வளர்ந்த பின்னால் வேண்டாம் என்று விலக்கி வைத்து விட்ட தந்தையை அவரின் மரணப்படுக்கையின் போது மீண்டும் சந்திக்கிறான்.. அவர் தரப்பு நியாயங்களை சொல்லி விட்டு அவர் மகனின் கையைப் பிடித்தபடி இறக்கிறார்..

அந்த நொடியில் அவளுடைய நரேந்திரன் எப்பேற்பட்ட மனவேதனையை அனுபவித்திருப்பான்..!

அவளுடைய கட்டுப்பாடு உடைந்தது.. கடிவாளமிட்ட மனக்குதிரையை அவள் பறக்க விட்டாள்.. தன்முன் அமர்ந்திருந்த அந்த கோடிஸ்வரனை இமைக்காமல் பார்த்தாள்..

அவள் கண்களுக்கு வெற்றி பெற்ற பிஸினெஸ்மேன் தெரியவில்லை.. தாயில்லாத.. தந்தையிருந்தும் இல்லாத நிலையில் வளர்ந்த சிறுவன் ஒருவனே தென்பட்டான்..

"என் நரேன்.."

ஊர்மிளா தாய்மைப் பெருக்குடன் எழுந்தாள்.. டேபிளைச் சுற்றி நரேந்திரனின் பக்கத்தில் போனாள்..

https://t.me/tamilpdfebooks

அவன் முகத்தை கைகளில் ஏந்தி அவன் முடியைக் கோதி விட்டாள்.. அவள் மனம் விம்மியது..

நரேந்திரனின் கரங்கள் அவள் இடுப்பை வளைத்தன.. அவள் வயிற்றில் முகம் புதைத்து.. கண்மூடினான் நரேந்திரன்.. அலையடிக்கும் அவன் மனதை அவளது தாய்மைப் பெருக்குடன் கூடிய அணைப்பு அமைதிப் படுத்தியது..

அவர்கள் பேசவில்லை... பேசாமல் இருந்தார்கள்.. மௌனம் அங்கே வந்து அழகாக அமர்ந்து கொண்டது.. பேச்சுக்கள் தேவையற்ற மௌனம் சில நேரங்களில் மனிதருக்குத் தேவைப்படுகின்றது.. அப்போது அது நரேந்திரனுக்கும்.. ஊர்மிளாவுக்கும் தேவைப்பட்டது..

வார்த்தைகள் கொடுக்க முடியாத ஆறுதலை வருடல்கள் கொடுத்து விடும்.. பேசி ஆற்ற முடியாத மனக் காயத்தை.. சின்னஞ் சிறு ஸ்பரிசம் ஆற்றி விடும்..

ஊர்மிளாவும் அதைத்தான் செய்தாள்.. அவள் வயிற்றில் முகம் புதைத்திருந்த நரேந்திரனின் முடிகோதி.. அவன் தோளை வருடிக் கொடுத்தாள்.. அவன் முதுகில் தட்டிக் கொடுத்து இதமான ஸ்பரிசத்தை உணரச் செய்தாள்.. கொஞ்சம்.. கொஞ்சமாக.. அந்த நிலையிலிருந்து மீண்டு.. நரேந்திரன் அவள் இடுப்பை விடுவித்தான்.. மனைவியைப் பார்த்து லேசாக சிரிக்க முயன்றான்..

"சாப்பிடலாமா..?" ஊர்மிளா பேச்சை மாற்ற முயன்றாள்..

https://t.me/tamilpdfebooks

"கொஞ்ச நேரமாகட்டும்.." நரேந்திரனுக்கு சொல்ல வேண்டியது இன்னும் இருந்தது..

அதை உணர்ந்தவளாக அவனருகே சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு.. அவன் விரல்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள் ஊர்மிளா..

"அப்பாவை நான் பார்க்கப் போனப்ப அவர்கூட யாருமே இல்லைடி..."

அவன் சொன்ன செய்தியில் உறைந்து போனாள் ஊர்மிளா..

"என்னங்க சொல்கிறீங்க..? உங்க சித்தி.. தம்பி, தங்கை.. இவங்கள்ளாம் எங்கே போனாங்க..?"

"எனக்குத் தெரியாது.. முதல் இரண்டு நாள் சித்தி மட்டும் வந்து போனாங்களாம்.. அதுக்கப்புறமா ஹாஸ்பிடல் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கலையாம்.."

"கடவுளே.. அருணும் அர்ச்சனாவும் கூடவா வரலை..?"

"அவங்க சின்னப் பசங்கடி.. இவங்க விட்டாத்தானே அவங்களாலே வரமுடியும்..?"

"ஆமாமில்ல.. அது ஒன்னு இருக்கில்ல.."

"ம்ம்ம்.. அப்படிப் போட்டுட்டுப் போனவங்க.. அப்பாவைப் பார்க்க நான் வந்திட்டேன்ங்கிற செய்தி தெரிஞ்சதும்.. ஹாஸ்பிடலுக்கு ஓடி வந்திட்டாங்க.. அப்பாமேல விழுந்து அழுது புரண்டு ஆர்ப்பாட்டம்

https://t.me/tamilpdfebooks

பண்ணினாங்க.. என் மகன் வருவான்.. உங்களையெல்லாம் பார்த்துக்குவான்னு வாக்குக் கொடுத்தீங்களே.. இப்படிப் போகப் போறிங்கன்னு தெரிஞ்சுதான் அப்படியொரு வாக்கைக் கொடுத்தீங்களான்னு டிராமா போட்டாங்க.."

அகல்யா எதையும் சொல்வாள் என்ற நினைவில் ஊர்மிளாவின் இதழோரம் சிரிப்பு அரும்பியது.. அந்த நிலையில் சிரிக்கக் கூடாதுதான்.. ஆனால்.. அகல்யாவின் நாடகத்தைப் பற்றிக் கேட்கும்போது சிரிப்பு வந்து தொலைக்கிறதே..

"அப்பாவோட கடைசிக் காரியங்களை ஒரு குறைவுமில்லாம செய்தேன்.. அவர் பட்டிருந்த கடன்களை அடைத்தேன்.. இவங்க குடும்பத்தோட வாழ்க்கையை நடத்த இந்த வீட்டை வாங்கிக் கொடுத்தேன்.. மாதா மாதம் இவங்க செலவுக்கு போங்கில் பணம் போட்டேன்.. ஆனாலும் எதையாவது சொல்லி போனில் அழுது என்னை இந்த வீட்டுக்கு வர வைச்சிருவாங்க.."

"என்ன சொல்லுவாங்க..?"

"அருணோட ஸ்கூலில பிரின்ஸிபால் என்னைப் பார்க்கனும்னு சொன்னார்.. அர்ச்சனாவோட ஸ்கூலில ஸ்போர்ட்ஸ்டே நடக்குது.. அதில பேரண்ட்ஸ் சார்பா நான் போய் நிற்கனும்.. இப்படி எதையாவது சொல்லுவாங்க.. அதில ஒருதிட்டம் ஒளிஞ்சிருக்கும்டி.. இவங்க நினைச்சுக்கு வாங்க... அது எனக்குத் தெரியாதுன்னு... எனக்கு இவங்களைப் பத்தின எல்லாமும் தெரியும்ன்னு இவங்களுக்குத் தெரியாதுடி.."

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவுக்கும் அது தெரிந்தது.. அது ஒரு தந்திரம்... அருண்குமாருக்கும்... அர்ச்சனாவிற்கும்... நரேந்திரன்தான் கார்டியன்.. என்று உலகத்துக்கு காட்டும் முயற்சி அது..

"எனக்கு எரிச்சலாய் வரும்.. ஆனா.. அருணும்.. அர்ச்சனாவும் பாவம்ங்கிற நினைப்பு மனசில வரும்.. அதனாலே இவங்க கேட்டதைச் செய்வேன்.. தாத்தாவுக்கு அது பிடிக்கலை..."

'யாருக்குத்தான் பிடிக்கும்..?' என்று ஊர்மிளா நினைத்துக் கொண்டாள்..

அவளுடைய கண்ணான மகளின் மனதைப் புண்ணாக்கி.. அதிவிரைவில் மேலோகத்திற்கு அனுப்பி விட்ட புண்ணியவானின் சாகசக்கார இரண்டாம் மனைவியையும் அவள் பெற்ற பிள்ளைகளையும் அவர் மகள் பெற்ற பேரன் பார்த்துக் கொள்வதை புத்தர்கூட அனுமதிக்க மாட்டார்.. கஜேந்திரன் எப்படி அனுமதிப்பார்..?

"இங்கே வரக்கூடாதுன்னு தடுத்தார்.. இவங்களை சென்னைக்கு அனுப்பி விடச் சொல்லிச் சொன்னார்.. என்னால் அது முடியலை.. அப்பா சித்தியைப் பார்த்துக்கச் சொல்லி என்னிடம் சொல்லலை.. ஆனா.. அருணையும்.. அர்ச்சனாவையும் காப்பாத்துன்னு கேட்டுக்கிட்டாரே.. அந்தக் கடமையிலிருந்து எப்படி நான் விலகி நிற்பேன்..? ஸோ.."

"ஸோ..?"

https://t.me/tamilpdfebooks

"நான் தாத்தா.. பாட்டியைப் பிரிந்து இவங்க வீட்டுக்கு வந்துட்டேன்.."

"அவங்களைப் பார்க்கப் போக மாட்டிங்களா..?"

"போவேன்... தாத்தாவைத்தான் தினமும் கம்பெனியில பார்த்துருவேனே.. பாட்டியைப் பார்க்க வேணாமா..? அதான்.."

நரேந்திரனின் கனிந்த முகத்தில் தெரிந்த பாசத்தில் இவன் அன்னையைப் பெற்ற அன்னையை.. அன்னைக்கு இணையாக நினைக்கிறான் என்று நினைத்துக் கொண்டாள் ஊர்மிளா..

"நம்ம கல்யாணத்துக்கு ஏன் அவங்க வரலை..? அவங்களைப் பார்க்க ஏன் என்னை நீங்க அழைத்துக்கிட்டுப் போகலை..."

ஊர்மிளா கேட்டு விட்டாள்.. அதைக் கேட்காமலிருக்க அவாளல் முடியவில்லை.. அவளுடைய கணவனைப் பெற்ற அன்னையின் வீட்டை விட்டு.. அவனின் சிற்றன்னையுடன் அவள் சேர்ந்து வசிக்கிறாள்.. ஏன் நரேந்திரன் அவளை அவனுடைய சொந்த அன்னையின் வீட்டுக்கு அழைத்துச் செல்லவில்லை..?

இந்தக் கேள்விக்கான விடை அவளுக்குத் தேவைப்பட்டது..

https://t.me/tamilpdfebooks

58

ஆழ்மனதில் என்மீது..
அளவுகடந்த ஆசை கொண்ட..
அழகான ராட்சசி நீ....

நரேந்திரனுக்கும் ஊர்மிளாவுக்கும் நடந்த திருமணத்திற்கு ஏன் அவனுடைய தாத்தாவும்.. பாட்டியும் யாரவில்லை என்ற ஊர்மிளாவின் கேள்வியில் ஒரு நியாயம் இருந்தது.. அதை உணர்ந்தவனாக அவன் ஓரிரு நிமிடங்கள் மௌனமாக வான்வெளியை வெறித்துக் கொண்டிருந்தான்..

ஊர்மிளா காத்திருந்தாள்... அவளுடைய கேள்விக்கான பதில் கிடைத்தாலும்... கிடைக்கா விட்டாலும் அவள் குழப்பப்படப் போவதில்லை.. கேள்வியை கேட்டு விட்டாள்.. பதில் சொல்ல அவனுக்கு விருப்பமிருந்தால் சொல்லட்டும்.. இல்லையென்றால் விட்டு விடட்டும் என்ற எண்ணம் அவளுக்கு..

ஊர்மிளா நரேந்திரனின் உணர்வுகளை மதித்தாள்.. அந்த நொடிகளில் அவனுக்கான அற்புதமான சிநேகியாக உடனிருந்தாள்.. அவளுடைய அந்த இதமான பரிவே அவன் மனதிலிருப்பதைக் கொட்ட வைத்துக் கொண்டிருந்தது.. அன்பான மனைவி, ஆசையான

https://t.me/tamilpdfebooks

காதலியாக மட்டுமல்ல, அற்புதமான சிநேகிதியாகவும் பரிமளிக்கக் கூடும் என்பதை அந்த நொடிகளில் அவள் அவனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தாள்..

"கூப்பிட்டேன்.. கூப்பிடாம இருப்பேனா..?"

நரேந்திரனின் குரலில் வருத்தம் தோய்ந்திருந்தது.. 'ம்ம்ம்' என்ற முணுமுணுப்புக்கூட அவன் பேச்சுக்கு இடையூறாக அமைந்து விடக் கூடும் என்பதால் ஊர்மிளா அதைத் தவிர்த்து அவன் பேசுவதை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தாள்..

"பாட்டிக்கு மேரேஜை முன்னால நின்று நடத்தி வைக்கனும்னு கொள்ளை ஆசை.. இருக்காதா பின்னே..? எனனைத தாயககுத தாயா வளாததவங்க அவங்க.. அவங்களோட சொந்தப் பேரனோட கல்யாணத்தில அவங்கதான் முன்னாலே நின்றிருக்கனும்.."

'ஏன் நீ நிற்க வைக்கலை..?'

"தாத்தா கோபப்பட்டார்.. அவரைக் கலந்துக்காம நானா என் மேரேஜை முடிவு பண்ணிட்டேன்னு சப்தம் போட்டார்.."

'உன்னைப் போல ஒருத்தியை நீ கல்யாணம் பண்ணிக்கலைங்கிற கோபமா இருக்கும்.. உன் ஸ்டேட்டசை விட்டுவிட்டு காவேரிக்கரையில இருந்த ஒருத்தி மேலே காதல் வந்து கல்யாணம் வரைக்கும் நீ போனா உன் தாத்தா உன்னைச் சத்தம் போடாம கொஞ்சுவாரா..?'

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவுக்கு நரேந்திரனின் மீதான காதல் பெருகியது.. இவன்தான் எப்பேற்பட்டவன் என்று அவள் மனம் வியந்தாள்..

"உங்கப்பாவோட ஸ்டேட்டஸ் பத்தியெல்லாம் அவர் கோபப்படலை.."

அவள் மனதிலிருப்பதைப் படித்ததைப் போல இளநகையுடன் அவன் சொன்னான்.. ஊர்மிளா உதட்டைச் சுழித்தாள்.. அவன் மனம் மயங்கியது..

"நிஜமாத்தாண்டி சொல்றேன்.. தாத்தாவுக்கு அந்தக் கோபமெல்லாம் இல்லை.. மேரேஜைப் பத்தி யோசித்துப் பார்க்காமலிருந்தவன் மேரேஜ் பண்ணிக்கப் போறேன்னு வந்து நின்றதில அவருக்கு இமாலய சந்தோசம்.. என்ன ஒன்று.. அவர்தான் உன்னைப் பெண் கேட்டு வந்திருக்கனும்னு குதிச்சார்.."

"நியாயம்தானே..."

அமைதியாக இருந்த ஊர்மிளா வாய்திறந்தாள்.. நரேந்திரன் உரக்கச் சிரித்தான்.. அதுவரை அவனிடமிருந்து விடை பெற்றிருந்த சிரிப்பு மீண்டு விட்டதில் ஊர்மிளாவின் மனம் நெகிழ்ந்தது..

"நல்லாச் சொன்னே போ.. கஜேந்திரன் பென்ஸ் காரையே அவர் ஸ்டேட்டஸீக்கு ஈக்குவலான காரான்னு கேட்பார்.. முன்னாடி பத்து கார்.. பின்னாடி பத்து கார்ன்னு ஊர்வலம் இல்லாம வெளியூருக்கு போகவே மாட்டார்.. சாதாரண பிஸினெஸ் டிரிப்புக்கே அப்படின்னா.. உன்னைப்

https://t.me/tamilpdfebooks

பெண் கேட்டு வருகிறப்பக் கேட்கவே வேணாம்... திருச்சியையே கார்களால நிறைச்சுருவார்.. அதுக்கப்புறம் உன் அப்பா என்னை கிட்டச் சேர்த்துக்குவாரா சொல்லு..?"

"அதைச் சொல்லுங்க..."

சோமசுந்தரத்தின் நினைவில் அவன் சொன்னதை ஆமோதித்துச் சிரித்தாள் ஊர்மிளா..

"அதில வேற என்னோட தாத்தா.. உன் அப்பா சொல்கிறதைப் போல.. அச்சு அசல் முதலாளித்துவத்தின் மொத்த உருவமா இருப்பார்.. அவரைப் போயி பெண் கேட்க அழைச்சுக்கிட்டு வந்தா உங்க வீட்டில மேரேஜ் பத்தின பேச்சு நடந்திருக்காது.. முதலாளித்துவமும்.. பொதுவுடைமையும் மோதிக்கிற பேச்சுத்தான் நடந்திருக்கும்.."

"போதும்.. போதும்.."

"இதனாலதான் அவங்களைப் பெண் கேட்க அழைத்துக்கிட்டு வரலை.. உங்க அப்பா பண்ணின அடாவடியில ரகசியமாத்தான் நான் மேரேஜ் ஹாலை புக் பண்ணினதில இருந்து.. இன்விடேசன் அடிக்கிற வரைக்கும் எல்லாத்தையும் பண்ணினேன்.. லோசா விவரம் கசிஞ்சாக்கூடப் போதும.. கஜேந்திரன்.. தும்பிக்கை இல்லாம கர்ஜனை பண்ணிக்கிட்டு.. என் பேரனை மேரேஜ் பண்ணிக்கப் போகிற குலவிளக்கு யாருன்னு நான் பார்த்தாகனும்னு திருச்சிக்கு கிளம்பி வந்துடுவார்.. ஆசாமி

https://t.me/tamilpdfebooks

அந்த அளவுக்கு டெர்ரரானவர்.. அவரைக் கட்டுப் படுத்தறது கஷ்டம் ஊர்மிளா..”

“அருமையான தாத்தா இல்ல..”

ஊர்மிளா ஆர்வத்தோடு கேட்டாள்.. அவளுக்கு அப்போதே நரேந்திரனின் தாத்தாவையும்.. பாட்டியையும்.. பார்க்க வேண்டும்போல இருந்தது..

“ரொம்ப அருமையானவங்க..” தாத்தா பாட்டியின் நினைவில் வந்த கனிவுடன் அவன் சொன்னான்..

“அவங்களை நீங்க பிரிஞ்சிருக்கக் கூடாது..” பேச்சு வாக்கில் மனதில் பட்டதை ஊர்மிளா சொல்லி விட்டாள்..

சொன்னபின்புதான் அது தவறோ என்று அவளுக்குத் தோன்றியது.. நரேந்திரன் என்ன நினைத்துக் கொள்வானோ என்ற தயக்கத்துடன் அவன் முகம் பார்த்தாள்.. அவன் எதுவும் நினைத்துக் கொள்ளவில்லை என்பதைப் போல கனிவாக சிரித்ததுமில்லாமல் தலையை வேறு ஆட்டி வைத்தான்..

“உண்மைதாண்டி... நான் அவங்களைப் பிரிஞ்சிருக்கக் கூடாது.. என் அம்மாவுக்காக வாழ்ந்தவங்க.. அம்மா போன பின்னாலே எனக்காக வாழ்கிறவங்க.. அவங்களை நான் பிரிஞ்சிருக்கிறது அவங்களுக்குச் செய்கிற அநியாயம்தான்.. ஆனாலும் ஊர்மிளா.. தாத்தா அவங்களை நான் ஆதரிக்கறதை விரும்பலை..”

“ம்ம்ம்...”

https://t.me/tamilpdfebooks

"அதுக்காகத்தான் ஒரு கோபத்தில நான் இங்கே வந்து தங்கினேன்.. மத்தபடி என் மனசெல்லாம் தாத்தா, பாட்டிகிட்டத்தான் இருக்குடி.. அவங்க நினைவுதான் எப்போதும்.."

"ம்ம்ம்..."

"அருணும், அர்ச்சனாவும் நல்ல பசங்கதான்.. என் அப்பாவுக்கு பிறந்ததினால எனக்கு தம்பி, தங்கையா நிற்கிறவங்கதான்.. ஆனாலும் ஊர்மிளா.. இவங்களை இப்பத்தான் நான் பார்த்தேன்.. புதுசா பாக்கற உறவில என்ன ஒட்டுதல் வந்திரும்..? சொல்லு.."

"ம்ம்ம்..."

"தாத்தாவும், பாட்டியும் அப்படியில்லை.. நான் பிறந்ததும் என்னைக் கையிலெடுத்துக்கிட்டது என் பாட்டி தானாம்.. அப்போதிருந்து இப்போவரைக்கும் எனக்கான எல்லாத்தையும் பாத்துப் பாத்து செய்வாங்க.. அவங்க பாசத்துக்கு நிகரில்லை ஊர்மிளா.."

"ம்ம்ம.."

"தாத்தா மேரேஜ்க்கு வர முடியாதுன்னு சொல்லிட்டார்.."

"ஏன்..? அதான் அவருக்குப் பெரிதா கோபம் எதுவுமில்லைன்னு சொன்னீங்களே.."

ஊர்மிளா பதட்டத்துடன் கோட்டாள்.. ஏன் அந்தப் பதட்டம் வந்தது என்று அவளுக்கே புரியவில்லை..

https://t.me/tamilpdfebooks

எதனாலோ நரேந்திரனின் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் பிரியமானவளாக அவள் இருக்க வேண்டும் என்று அவள் மனதார விரும்பினாள்..

"உன்னை மேரேஜ் பண்ணிக்கிறதில அவருக்கு எந்தவிதமான அப்ஜெக்சனும் இல்லைடி.. அவர் அப்ஜெக்ட் பண்ணிய விவரமே வேற.." நரேந்திரனின் குரலில் மர்மம் ஒளிந்திருந்தது.. அதை அறியும் ஆர்வம் ஊர்மிளாவுக்கு வந்தது..

"என்னங்க..?" அவள் கேட்டாள்...

"சித்தியும்.. அவங்களோட பிள்ளைகளும் மேரேஜ் ஆறால் பக்கமே வரக்கூடாதுன்னு சொன்னார்.. மேரேஜ் முடிந்ததும் நான்... உன்னோடு தாத்தா வீட்டுக்கே போயிடனும்னு கண்டிசன் போட்டார்.. இதை எப்படி நான் எத்துக்கிறது..? நீயே சொல்லு.."

ஊர்மிளா என்னத்தைச் சொல்லுவாள்...? அகல்யாவைப் போன்ற குறுகிய மனம் படைத்த, சாகசக்காரியுடன்தான் அவள் வசிக்க வேண்டும் என்று விதித்திருக்கும் போது அவள் எதைச்சொல்லி என்ன ஆகப் போகிறது..?

நரேந்திரனுக்குப் பதில் சொல்வதைவிட வெந் நிலவை உற்றுப்பார்ப்பது சாலச்சிறந்தது என்று அவள் வெந்நிலவைப் பார்க்கத் தொடங்கி விட்டாள்..

அவளுடைய பதிலுக்கு காத்திருக்காமல் நரேந்திரனே பேச்சைத் தொடர்ந்தான்..

https://t.me/tamilpdfebooks

"தாத்தா பாட்டி வீட்டுக்கு உன்னோடு ரிடர்ன் ஆகிறதில எனக்கு எந்தவிதமான பிராப்ளமும் இல்லைன்னு தான் நான் சொன்னேன்.."

"என்னது..?!..."

ஊர்மிளாவால் அவள் காதுகளை நம்ப முடியவில்லை.. அவளுடைய கணவன் அப்படியொரு வாக்குறுதியை தாத்தாவுக்குக் கொடுத்தானா..? அவனுடைய அன்பான அம்மா பிறந்து.. வளர்ந்த வீட்டில் ஊர்மிளாவை வாழ வைக்க நினைத்தானா..? அவனை வளர்த்த அவனுடைய தாத்தா பாட்டிக்கு அவள் சேவை செய்யும் வாய்ப்பை அளிக்க முனைந்தானா..?

"ஆமாண்டி.. நம்ம மேரேஜ்க்கு அப்புறம் தாத்தா பாட்டி கூடப் போயிடலாம்ன்னுதான் நான் பிளான் பண்ணியிருந்தேன்.. ஆக்சுவலா ஊர்மிளா.. எனக்கு எங்க வீட்டைத் தவிர வேற எங்கே தங்கினாலும் பிடிக்காது.. இந்த வீட்டுக்கு வந்ததே தாத்தாவை மிரட்டத்தான்.. இவங்களுக்கு ஹெல்ப் பண்றதை நீங்க தடுத்தீங்கன்னா நான் உங்களை விட்டுட்டு இவங்க கூடவே வந்திருவேன் என்று பயமுறுத்தத்தான்.. மற்றபடி இந்த வீட்டை என் வீடா என்னைக்குமே நான் நினைத்ததில்லை.."

ஊர்மிளா இமை கொட்டி விழித்தாள்.. நரேந்திரனின் மனதில் இப்படியொரு எண்ணம் இருக்கக் கூடும் என்று தெரிய வந்ததில் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது..

"எதுக்கு இப்படிப் பார்க்கிற..? இந்த வீட்டில நான் இருந்தாலும் எனக்கான பிரைவஸியில கவனமா

https://t.me/tamilpdfebooks

இருப்பேன்.. என் ரூம் மாடியிலதான் இருக்கும்.. அர்ச்சனாவுக்கும், அருணுக்கும், மாடியில ரூம் இருந்தாலும்.. அது தள்ளித்தான் இருக்கும்.. என் ரூம் பக்கம் யாருமே வரக் கூடாதுன்னு கண்டிசனா சொல்லியிருக்கேன்.. நான் எப்போ போவேன்.. எப்போ வருவேன்னு யாரும் கேட்கக் கூடாது.. எங்கே போகிறேன், என்ன செய்கிறேன்னு தோண்டித் துருவக் கூடாது.. இப்படி.. அருண் படிப்பை முடிச்சதும் என் கம்பெனியில அவனுக்கு வேலை போட்டுக் கொடுத்திட்டேன்.. நல்லா வேலை செய்கிறான்.. அர்ச்சனாவுக்கு மேரேஜை பண்ணிக் கொடுத்துட்டா என் கடமை முடிஞ்சிரும்.. அதுக்கப்புறம் நான் இந்த வீட்டுப் பக்கமே வரமாட்டேன்.."

"ஓ.. ஆனா, உங்க சித்தி உங்களைக் கேள்வி கேட்கத்தானே செய்கிறாங்க..? உங்க வேலைகளில மூக்கை நுழைக்கத்தானே செய்கிறாங்க..?"

"அதனாலதான் நான் இந்த வீட்டுப் பக்கமே வரக் கூடாதுங்கிற முடிவுக்கு வந்திருக்கிறேண்டி.. சித்தியோட நோக்கம் என்ன தெரியுமா..? அவங்களை என் அம்மாவா நான் காட்டிக்கனும்கிறது.."

"அம்மான்னுதானே அவங்களை கூப்பிடறிங்க.."

"அது இப்ப.. வேலையாள்கள் அவங்களை நிதிக்கலை.. வெளியாள்கள் அவங்களுக்கு மரியாதை கொடுக்கலைன்னு அழுதாங்க.. நீ மட்டும் என்னை அம்மான்னு அவங்க முன்னாலே கூப்பிட்டிருந்தா

https://t.me/tamilpdfebooks

இந்தத் துணிச்சல் அவங்களுக்கு வந்திருக்குமான்னு கேட்டாங்க.. ஸோ.. அம்மாங்கிறதை அவங்களோட பெயராத்தான் நினைச்சுக் கூப்பிடறேன்.. உறவாய் நினைச்சுக் கூப்பிடலை.. மனசில இருந்து அந்த வார்த்தை எப்பவும் வந்ததில்லைடி.. எனக்கு அம்மா ஒருத்தங்கதான்.. அவங்க பெயர் நளினி.. என்னைப் பெற்ற தாய்.."

ஊர்மிளா கைநீட்டி மீண்டும் நரேந்திரனின் விரல்களைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள்.. அவன் குரல் கரகரத்தது..

"என்னை அம்மான்னு கூப்பிட வைக்கிறதின் மூலமா.. 'நரேன் குருப் ஆஃப் கம்பெனி'யில அருணுக்கும், அர்ச்சனாவுக்கும் ஷேர் கிடைச்சிரும்ன்னு இவங்க எதிர்பார்க்கிறாங்க.. என் அத்தனை சொத்துக்கும்.. அவங்க இரண்டு பேரையும் நான் வாரிசாக் கூட்டுச் சேர்த்துக்குவேன்னு ஆசைப்படறாங்க.. அது எப்படி முடியும் ஊர்மிளா..? என் பெயரில் இருக்கிற சொத்தும்.. கம்பெனியும் என் அம்மா எனக்குக் கொடுத்தது.. எனக்கு குருவா இருந்து பிஸினெஸ்ஸை சொல்லிக் கொடுத்தது என் அம்மாவோட அப்பா.. அவர் சொல்லிக் கொடுக்கலைன்னா நான் இவ்வளவு பெரிய பிஸினெஸ் மேனா உயர்ந்திருக்க முடியாது.. நான் பிஸினெஸ்ஸில் சம்பாதிக்கிற அத்தனை கோடி பணமும்.. அவங்க கொடுத்த மூலதனத்திலும்.. பயிற்சியிலும் வந்தது.. இதுக்கு வாரிசா என் அம்மாவின் மகனான நான் மட்டும்தான் இருக்க முடியும்.. என்

https://t.me/tamilpdfebooks

அம்மாவின் மனதை சல்லடையாக்கி அவங்களை வேதனைப் படுத்தி சாகவிட்டு.. இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்ட என் அப்பாவின் இரண்டாவது மனைவியும்.. அவங்க பெற்ற பிள்ளைகளும் வாரிசா வரவே முடியாது.. அப்படி நான் செய்தா என் அம்மாவின் ஆத்மா என்னை மன்னிக்கவே மன்னிக்காது.. இது சொத்தைப் பற்றிய பேச்சல்ல.. மனித மனங்களின் உரிமையுணர்வைப் பற்றிய பேச்சு.. நான் என் அப்பாவின் வேண்டுகோளை ஏற்றுக்கிட்டு அவரோட கடன்களை அடைத்தது அவர் என்னைப் பெற்ற கடனை அடைப்பதற்காக.. அதற்கு மேலேயும் அவர் பெத்த பிள்ளைகளுக்கு உதவி செய்கிறது சாகும் நிலையில இருந்தவர் கேட்டுக்கிட்டாரே என்கிறதுக்காக.. என் அப்பாவே என் சொத்தில் பங்கு கேட்டு வர முடியாதுங்கிறப்ப.. அவரோட இரண்டாவது மனைவிக்கும்.. அவங்க பெத்த பிள்ளைகளுக்கும் எங்கிருந்து அந்த உரிமை வரும்..?”

‘என்னங்கடா இது..’

ஊர்மிளா தலையைப் பிடித்துக் கொண்டாள்.. இது போன்ற சுழல்களைப் பற்றி அவள் அறிந்தவளல்ல... சோமசுந்தரம் இதனால்தான் பணக்காரர்களிடமிருந்து ஒதுங்கி நின்றாரோ என்று அவளுக்குத் தோன்றியது..

“அருணுக்கும், அர்ச்சனாவுக்கும் அவங்க லெவல் என்னன்னு தெரியும்.. அருணோட படிப்புக்கு அவனுக்குக்


https://t.me/tamilpdfebooks

கிடைத்திருக்கிற ஜெனரல் மேனேஜர் போஸ்டுங்கிறது எட்டாக் கொம்புதான்.. அப்பா பார்த்த வேலையை அவனுக்குக் கொடுத்திருக்கேன்.. அதிலேயே அவன் பிரமிச்சுப் போயிருக்கான்.. அர்ச்சனாவுக்கு பெரிய இடத்தில மேரேஜ் பண்ணி வைப்பேன்ங்கிறது அவளுக்கே நல்லாத் தெரியும்.. நாலு வருசங்களுக்கு முன்னால் வரை இதெல்லாம் அவங்களுக்கு எட்டாக் கனியா இருந்தது.. இப்ப கிடைச்சிருக்குங்கிறப்ப.. அவங்க அதில் சந்தோசப்பட்டுப் போறாங்க.. சித்தி அப்படியில்லை.. அவங்க பேராசை பிடிச்சவங்க.. அவங்களுக்கு உரிமையில்லாத சொத்துமேலே ஆசைப்படறவங்க.. இவங்க கிட்ட இருந்து தள்ளித்தான் இருக்கணும்டி..”

இதைத்தானே உன் தாத்தாவும் சொன்னார் என்று மனதில் நினைத்ததை வெளியில் கேட்க முடியாமல் மௌனமானாள் ஊர்மிளா..

வெந்நிலவின் தண்ணொளியில் மூடப்பட்ட பாத்திரங்கள் திறக்கப் படாமலே இருந்தன.. நரேந்திரனின் திறந்த மனது மூட மறந்து பேச்சைத் தொடர்ந்தது..

https://t.me/tamilpdfebooks



நிலவொளியில் விருந்துவைத்து..
நினைவலையை தட்டி எழுப்பிய
அழகான ராட்சசி நீ....

"என்னாலே இவங்களையும்.., அருண், அர்ச்சனாவையும் மேரேஜ்க்கு வராதீங்கன்னு சொல்ல முடியுமா..? மேரேஜ் முடிந்ததும் உன்னோடு தாத்தா வீட்டுக்கே போய்விட நான் ரெடியாத்தான் இருந்தேன்.. அதுக்கென்ன தாத்தா.. ஊர்மிளாவோட நான் நம்ம வீட்டுக்கே வந்திடறேன்னு சொன்னேன்.. பட், அவரோட பர்ஸ்ட் கண்டிசனை ஏத்துக்க முடியாதுன்னு சொல்லிட்டேன்.. தாத்தா அதில கோபமாயிட்டாரு.."

"அப்ப அவங்க நம்ம கல்யாணத்துக்கு வரவேயில்லையா..?"

•"வந்தாங்க.. மூகூர்த்த நேரத்தில வந்து கெஸ்டைப் போல ஓரமா உட்கார்ந்து பார்த்துட்டுப் போயிட்டாங்க.. நான் ஆசிர்வாதம் வாங்க வர்றதுக்குள்ள எஸ்கேப் ஆகிட்டாங்க.. தாத்தா அதிலெல்லாம் கில்லாடி.."

"என்கிட்டச் சொல்லவேயில்லையே.."

https://t.me/tamilpdfebooks

"உன்னிடம் சொன்னா.. உன் அப்பாவிடமும் சொல்ல வேண்டியிருக்கும்.. பொதுவுடைமை தலைவர் சும்மா இருப்பாரா..? அதற்கும் சண்டை போட ஆரம்பிச்சுருவார்.. அதனாலதான் சொல்லலை... ஓகே... நிறையப் பேசிட்டோம்... இப்பத்தான் எல்லாத்தையும் சொல்லிட்டேனே.. இனிமேலாவது டிபனை கண்ணில காட்டுவயா.. மாட்டயா..?"

நரேந்திரன் சிரித்தான்.. பழைய நினைவுகளில் இருந்து மீண்டு அவன் இலகுவான மனநிலைக்கு வந்து விட்டதை புரிந்து கொண்ட ஊர்மிளாவிற்கு நிம்மதியாக இருந்தது.. அவளும் பேச்சை வேறுதிசையில் திருப்பி விட்டபடி பரிமாற ஆரம்பித்தாள்..

"ஹௌ நைஸ்.." ரசித்துச் சாப்பிட்டான் நரேந்திரன்..

மொட்டை மாடியின் நிலா விருந்தை அவனுக்குப் பிடித்துப் போய் விட்டது.. இதமான தென்றல்காற்றின் குளுமையும்.. பட்டப் பகலைப் போல ஒளிர்ந்த நிலா வெளிச்சமும் காணக் கிடைக்காதவையாக அவனுக்குத் தோன்றின.. உணர்வு பூர்வமாக அதை உணர்ந்து அனுபவித்து ரசித்தான் நரேந்திரன்..

"வெந்நிலவே..! தண்மதியே..!
என்னுடனே வாராய்..
நிலவே..! நிலவே..!
வாராய்..!"

ஊர்மிளா மெல்லிய குரலில் பாடியதில் நரேந்திரன் வியந்து போனான்..

https://t.me/tamilpdfebooks

"பொருத்தமான பாட்டுடி.. அதுவும் இந்த நேரத்திலே.. நிலா வெளிச்சத்திலே நீ பாடும்போது கேட்கிறதுக்கு ரொம்பவும் நல்லா இருக்கு.. ஸ்வீட் வாய்ஸ்டி உனக்கு.." பேசியபடியே குனிந்தவன் அவள் எதிர்பார்க்காத சமயத்தில் அவள் உதட்டில் முத்தமிட்டு விட்டு கண் சிமிட்டினான்..

"ஸ்வீட் வாய்ஸாச்சே.. அதான்.. முத்தம் இனிக்குதான்னு செக் பண்ணினேன்.."

அவன் அடித்த கிளுகிளுப்பான லூட்டியில் ஊர்மிளா மையல் கொண்டாள்.. அவன் காலரைப் பிடித்து இழுத்து அவன் கழுத்தில் முத்தமிட்டு விட்டு..

"நீங்க இரும்பு மனிதன்னு பீத்திக்குவீங்களே.. அது உண்மையா.. பொய்யான்னு செக் பண்ணினேன்.." என்று கிசுகிசுத்தாள்...

நரேந்திரன் கிளர்ந்தான்.. சாப்பிட்டபடியே அவர்கள் தாழ்ந்த குரலில் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.. சில சமயங்களில் ஊர்மிளா வெட்கத்துடன்..

"ச்சீய்.." என்று அவனைக் கிள்ளினாள்..

சில சமயங்களில் நரேந்திரன்..

"ஏய்ய்.." என்று அவளை நெருங்கினான்..

சாப்பிட்டு முடித்தவர்கள் மொட்டை மாடியின் ஓரமாக இருந்த வாஷ்பேசினில் கை கழுவினார்கள்.. ஊர்மிளா செல்போனில் அழைத்ததில் வனிதா வந்து

https://t.me/tamilpdfebooks

பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போனாள்.. தரையில் விரிக்கப்பட்டிருந்த மெத்தையில் கால் நீட்டி சரிந்து படுத்த நரேந்திரன்.. ஊர்மிளாவையும் கைநீட்டி இழுத்துக் கொண்டான்.. அவன்மீது விழுந்த ஊர்மிளா அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டதில் கிறங்கிப் போனான்..

"இன்னைக்கு ஒரு மார்க்கமாத்தாண்டி இருக்க.. இதுக்காகவே அடிக்கடி நிலாச்சோறு விருந்துன்னு மொட்டை மாடிக்கு வந்துரலாம் போல இருக்கு.." அவள் கன்னத்தில் மூக்கை உரசியபடி சொன்னான்..

"ஹலோ.. மிஸ்டர் நரேந்திரன்.. நிலாச்சோறு விருந்தை பெயர்ணமியிலதான் சாப்பிட முடியும்.. அடிக்கடி சாப்பிட முடியாது.. மனசிலாயி.." அவன் மூக்கைப் பிடித்து ஆட்டியபடி அவள் சொன்னாள்..

"என்னடி இது அராஜகமா இருக்கு.."

"எது அராஜகம்..?"

"பௌர்ணமி அன்னைக்குத்தான் நிலாச்சோறு சாப்பிடனுமா..?"

"பின்னே, அம்மாவசையிலயா சாப்பிடுவாங்க..?"

ஊர்மிளாவின் கேலியில் அவள் முகத்தோடு முகம் வைத்து முட்டினான்.. அவள் வலிப்பதைப் போல பாவனை செய்ததில்..

"நடிக்காதேடி.." என்றான்..

https://t.me/tamilpdfebooks

"ஆஹா.. இதை நடிகர் திலகமில்ல சொல்கிறாரு.. தி பேமஸ் இண்டஸ்ட்ரியலிஸ்ட் நரேந்திரன்.. திருச்சியில் வந்து ஓசுரில் வேலை பார்க்கிற மில் தொழிலாளியா நடித்த கதையை மறந்து போனாரா..? நினைவு படுத்த என் அப்பாவை வேண்டும்னா கூப்பிட்டுக் கேட்டுப் பார்க்கலாமா..?"

"எதுக்குடி இந்த கொலைவெறி..?"

"அஃது.. அந்த பயம் இருக்கட்டும்.. யாருகிட்ட..?"

ஊர்மிளா கை முஷ்டியை உயர்த்திக் காட்டினாள்.. அவளை மிக எளிதாக வீழ்த்தி அவள்மீது பரவிப் படர்ந்த நரேந்திரன்..

"யாருகிட்டயா..? என் பெண்டாட்டிகிட்டடி.. இப்ப என்ன செய்வ..?" என்று பதிலுக்குச் சவால் விட்டான்..

ஊர்மிளா மயங்கிப் போனாள்.. அவளது கை தானாக நரேந்திரனைத் தழுவிக் கொண்டது.. அவன் மீதான அவளது மயக்கத்தில் அவன் போதை கொண்டான்.. அவள் காதருகே..

"பாடுடி.." என்றான்..

"என்ன பாட..?" அவள் கிசுகிசுப்பாக வினவினாள்..

"ஏதாச்சும் பாடு.. இந்த நிலாவைப் பத்தி.. மொட்டை மாடியைப் பத்தி.. உன்னையும், என்னையும் பத்தின்னு எதையாச்சும் பாடு.."

https://t.me/tamilpdfebooks

உல்லாசமான மனநிலையில் அவன் இருந்தான்.. ஊர்மிளா புரண்டு அவன் மார்பின்மீது தலை வைத்துப் படுத்து அவன் முகம் பார்த்தாள்.. அந்த நிலவின் வெளிச்சத்தில் ஒரு ரோமானிய சிற்பம் போல இருந்தவன் அவளின் ஆசைக்குரிய கணவன் என்பதில் மனதுக்குள் கர்வம் பொங்க.. பாட ஆரம்பித்தாள்..

“வெந்நிலா நேரத்திலே..
வேணு கானம்..
மேல்மாடி முற்றத்திலே..
நீயும் நானும்..”

நரேந்திரன் மயங்கிப் போனான்.. மயக்கும் அந்த நிலவுப் பொழுது அவனையும்.. அவளையும் மயங்க வைத்து பின்னிப் பிணைத்தது.. நரேந்திரனின் நெற்றியிலிருந்து ஒற்றை விரலால் கோடு போட்டு இழுத்தபடி ஊர்மிளா மெல்லிய குரலில் கேட்டாள்..

“என்னை உங்க தாத்தா, பாட்டிகிட்ட ஆசிர்வாதம் வாங்கக் கூப்பிட்டுக்கிட்டுப் போவீங்களா..?”

நரேந்திரன் அவளை அணைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டபடி பதில் சொன்னான்..

“ஆகட்டும்.. கட்டாயமாக நான் கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்.. நாளைக்கு ஃபாரின் போக வேண்டியிருக்கு.. அங்கே முடிக்க வேண்டிய வேலைகளை முடிச்சுட்டு திரும்பி வந்தவுடனே முதல் வேலையா நாம தாத்தா, பாட்டியைப் பார்க்கப் போய்விடலாம்.. அவங்களும் சந்தோசப் படுவாங்க..”

https://t.me/tamilpdfebooks

"நானும் சந்தோசப்படுவேன்.."

"ஊஹூம்..? அப்ப நான் சந்தோசப்பட வேணாமா..?" நரேந்திரன் கேட்டதில் ஊர்மிளா விழித்தாள்..

"புரியலை.."

"மக்கு.. இதைக்கூடப் புரிஞ்சுக்கலைன்னா நீயென்ன பெண்டாட்டி.. என்னைச் சந்தோசப் படுத்துடி.."

நரேந்திரன் அவள் காதோடு சொன்ன வார்த்தைகளில் அவள் உடலில் உஷ்ணம் பரவியது.. சங்கேத வார்த்தைகள் அதிகரிக்க.. அதிகரிக்க.. அவளது ரத்த நாளங்கள் சூடேறின.. அவனிடமிருந்து புரண்டு விலகி எழுந்தாள்..

"எங்கேடி போற..? வா.." அவன் வேட்கையுடன் அழைத்தான்..

"இங்கே வேணாம்.." அவள் முகம் சிவக்க படிகளுக்குத் தாவினாள்..

நரேந்திரன் வருகிறானா என்று பார்த்தபடி தாவிக் குதித்து ஓடி வந்தவள் அப்படியே நின்று விட்டாள்..

அங்கே மடமடவென்று இறங்கிப் போய் கொண்டிருந்தது..

அகல்யா..!

ஊர்மிளாவிற்கு தூக்கி வாரிப் போட்டது.. விழிகளை விரித்தவளால் அதை நம்ப முடியவில்லை.. கணவனும், மனைவியும்.. அந்தரங்கமாகப் பேசிக் குழாவுவதை

https://t.me/tamilpdfebooks

ஒளிந்திருந்து பார்த்துக் கேட்கும் ஜென்மம் என்ன ஜென்மம்..?

"உன்னை.." சிரித்தபடி அவளருகில் வந்த நரேந்திரன்.. அசைவற்று நின்ற ஊர்மிளாவின் அதிர்ந்த பார்வையில் திகைத்தான்..

"ஊர்மிளா..? என்னடி ஆச்சு..?"

'சொல்லி விடலாமா..?'

ஊர்மிளாவால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.. பேச முடியாமல் விதிர்த்துப் போய் நின்றிருந்தவளை உலுக்கினான் நரேந்திரன்..

"என்னன்னு சொல்லுடி.."

ஊர்மிளாவால் சொல்ல முடியவில்லை.. அதுநேரம் வரை அவளும் நரேந்திரனும் என்னவெல்லாம் பேசிக் கொண்டார்கள்.. எப்படியெல்லாம் பின்னிப் பிணைந்தார்கள் என்பதைப் பற்றியே அவளது சிந்தனை இருந்தது..

அவளுக்கும்.. அவளுடைய கணவனுக்கும் மட்டுமே சொந்தமான அந்தரங்க பரிபாசைகளை அகல்யா கேட்டுக் கொண்டிருந்தாளா..?

அருவெறுப்பில் முகம் சுளித்தாள் ஊர்மிளா.. வீட்டு விவரங்களைப் பற்றி நரேந்திரன் அவளிடம் சொன்னதை அகல்யா கேட்டுக் கொள்வதில் அவளுக்கு எந்தவிதமான மன உறுத்தலும் இல்லை..

https://t.me/tamilpdfebooks

'அதுக்குப் பின்னால் நானும் அவரும் பேசிக் கிட்டது.. தொட்டுக்கிட்டது... கட்டிக்கிட்டது... இது அத்தனையையும் இந்தம்மா கவனிச்சுச்சா..'

அவளுக்கு உயிர்துடித்தது.. உடல் கூசியது.. மனதிலிருந்த கிளர்ச்சியும், மயக்கமும் சொல்லாமல் கொள்ளாமல் விலகி ஓடியதில் பதுமை போல அவள் படிகளில் இறங்கினாள்..

நரேந்திரனின் புருவங்கள் சுருங்கின.. மனைவியின் தோள் தொட முயன்றான்.. நெருப்புப் பட்டதைப்போல அவள் பதறி விலகிட்டதில் அவனுக்குள் கேள்வி வந்தது..

மாடி ஹாலுக்கு அவர்கள் வந்தபோது.. அப்போது தான் படியேறி வந்ததைப் போன்ற பாவனையுடன் மாடிக்கு வந்து நின்றாள் அகல்யா.. ஊர்மிளாவின் வெறித்தபார்வை அவளைக் கண்டதும் பதறியது.. அகல்யாவின் இதழோரமாக வளைந்து நெளிந்த சுறுஞ்சிரிப்புக்கான அர்த்தம் என்னவென்பதை அவளால் அறியமுடியவில்லை..

"என்ன..?"

நரேந்திரன் அம்மா என்று அழைப்பதை தவிர்த்தான்.. அதை வெகு நுணுக்கமாகக் கவனித்த அகல்யாவின் முகம் அதிபயங்கரமாய் மாறியது.. சிரமப்பட்டு பவ்யமாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

"இல்லேப்பா.. காலையிலே நீ பாரின் கிளம்பிருவ.."

"ஸோ வாட்..?"

https://t.me/tamilpdfebooks

"அதுக்குள்ள அர்ச்சனாவைப் பற்றி ஒரு விவரம் பேசனும்ப்பா.. கீழே ஹாலில் காத்துக்கிட்டு இருந்தேன்.."

அகல்யா சொல்லிக் கொண்டிருக்க.. ஊர்மிளா அவள் முகத்தையே ஊன்றிப் பார்த்தாள்.. ஊர்மிளாவின் நேரடியான பார்வையினைச் சந்திப்பதைத் தவிர்த்தாள் அகல்யா..

'இவளா கீழே காத்துக்கிட்டு இருந்தாள்..?'

ஊர்மிளாவினால் அகல்யாவை மரியாதையாக நினைக்க முடியவில்லை.. அவள் செய்து வைத்திருந்த காரியத்தில் ஊர்மிளாவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது..

"இப்ப நீங்க இறங்கி வர்ற சப்தம் கேட்டு அவசரமாக மாடிக்கு வந்தேன்.. நீங்க தூங்கப் போன பின்னாலே கதவைத் தட்டினா அது நாகரிமில்லை பாரு.."

'கடவுளே..!' ஊர்மிளா இமை மூடித் திறந்தாள்..

நாகரிகத்தைப் பற்றி யார் பேசுவது என்ற வரைமுறையே இல்லையா..?

நரேந்திரன் முகம் சுளித்து விட்டு கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான்..

"மொட்டை மாடியிலே டின்னர் முடிச்சுட்டு... கொஞ்ச நேரம் காற்றாட பேசிவிட்டு வரக்கூட இந்த வீட்டில் சுதந்திரம் இல்லையா..?" நறுக்கென்று கேட்டுவிட்டான்..

https://t.me/tamilpdfebooks

"நரேன்.." இரு காதுகளையும் பொத்தாக குறையாக மூடிதுடிப்பதைப் போல பாவனை காட்டினாள் அகல்யா..

"உன் வாயாலே இப்படிப் பேசலாமா நரேன்..?"

"வேற யார் வாயாலே பேசச் சொல்கிறிங்க..? அர்ச்சனாவைப் பற்றிப் பேசனும்னா ஈவினிங் நான் வீட்டுக்கு வந்தப்பவே பேசியிருக்கனும்.. அதை விட்டுட்டு நைட் நைட்டில பேசனும்னு மாடிக்கு வந்து நிற்கறிங்க.. என்ன பழக்கம் இது..?"

"நரேன்.."

"போங்க.. போய் தூங்குங்க.. நான் பாரின் போய் வந்த பின்னாலே அர்ச்சனாவைப் பத்திச் சொல்லுங்க.. கேட்டுக்கறேன்.. இப்ப எனக்குத் தூக்கம் வருது.."

"அர்ச்சனா உனக்குத் தங்கைப்பா.."

"நான் இல்லேன்னா சொன்னேன்..? என்னதான் உங்க பிரச்னை..? சொல்லுங்க.. அர்ச்சனாவைப் பற்றி என்ன பேசனும்..?"

"அவளுக்கு கல்யாணா வயசு வந்திருச்சுப்பா.. நல்ல இடத்தில மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கனும்.."

நரேந்திரனுக்கு கோபத்தில் முகம் சிவந்து விட்டது.. அகல்யா போடும் நாடகத்தில் அவன் மனம் வெறுத்து விட்டான்..

https://t.me/tamilpdfebooks

"இதைச் சொல்லத்தான் இந்த நேரத்தில மாடிப் பக்கம் வந்தீங்களா..? நான் என்னவோ.. ஏதோன்னு நினைச்சுட்டேன்.. போங்க.. போய் தூங்கற வேலையைப் பாருங்க.. ஊர்மிளா.. வா.."

நரேந்திரன் அறைக் கதவை படாரென்று சாத்திய வேகத்தில் அவனுடைய கோபத்தின் பரிணாமம் தெரிந்தது.. வேறு ஒருவராக இருந்திருந்தால் முகம் சிறுத்துக் கூனிக் குறுகிப் போயிருப்பார்கள்.. அகல்யா அந்த கவரிமான் வகையைச் சேர்ந்தவள் அல்லவே..

அவள் நிஷ்டூரமாக ஊர்மிளாவை முறைத்தாள்.. அவள் முகத்தில் அந்த அதிபயங்கரம் மீண்டிருந்தது.. ஊர்மிளாவுக்கு அவள் முகத்தைப் பார்க்கும் போது முதுகுத் தண்டு ஜில்லிட்டது..

"என்னடி.. நரேந்திரனை இந்த வீட்டை விட்டுப் பிரிக்கத் திட்டம் போடறயா..? இப்பச் சொல்றேன் எழுதி வைத்துக்க.. இந்த வீட்டை விட்டுப் பிரியப் போகிறது நரேந்திரன் இல்லைடி.. நீதான்.. நீ மட்டும்தான்.."

https://t.me/tamilpdfebooks

60

என் நிழலாக நீயிருந்தும்..
நினைவிலிருந்து ஒதுக்கி வைத்த
அழகான ராட்சசி நீ....

நல்லவர்களின் வாக்குத்தான் பலிக்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள்.. அதை விடுத்து.. தீயவர்கள் சொல்லும் வாக்கும்.. நினைவும் பலிக்குமென்றால் இந்த உலகில் நல்லவர்கள் வாழ்வது எவ்வாறு..?

அகல்யா சொன்ன வார்த்தைகள் பலித்து விடும் என்று ஊர்மிளா நினைத்தும் பார்க்கவில்லை.. அது ஒருநாள் பலிக்கும்.. ஊர்மிளா தானாகவே அந்த வீட்டை விட்டு வெளியேறுவாள் என்று அறியாத பேதையாய் ஊர்மிளா அந்த இடத்தை விட்டு அகன்று நரேந்திரனுக்கும் அவளுக்குமான அவர்களின் அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டு விட்டாள்..

அகல்யாவின் முகத்தில் தீயின் ஜ்வாலை தெரிந்தது.. அவள் ஆங்காரத்துடன் அப்படியே நின்றாள்.. அவள் முன்னால் மூடிய நரேந்திரனின் அறைக்கதவு தெரிந்தது..

மொட்டை மாடியில் தன்னந்தனிமையில் ஊர்மிளாவும் நரேந்திரனும் 'நிலாச்சோறு' சாப்பிடப் போவதாகச் சொன்னதும் தானும் அங்கே இருக்க

https://t.me/tamilpdfebooks

வேண்டுமென பற்பல பிரயத்தனங்களை செய்து பார்த்தாள்.. பலன்தான் கிடைக்காமல் போய் விட்டது.. அருண்குமாரும்.. அர்ச்சனாவும் கலந்து கொள்ளாத நிலா விருந்திற்கு அகல்யாவும் வரவேண்டாம் என்று நரேந்திரன் சொல்லி விட்டான்.. அதில் அகல்யாவின் மனதில் பிரளயம் உண்டானது..

எப்போதுமே நரேந்திரன் அகல்யாவிடம் முகம் கொடுத்துப் பேசமாட்டான்.. அருண் குமாரையும்.. அர்ச்சனாவையும் முன்னிருத்தியே அவர்களுக்குள் பேச்சு நடக்கும்.. அவளுக்கென்ற தனி மரியாதையையோ.. அங்கீகாரத்தையோ நரேந்திரன் அவளுக்குத் தந்ததில்லை..

நரேந்திரன் ஊர்மிளாவுடன் உல்லாசமாக பேசியபடி மாடிப்படிகளில் ஏறியதை மறைந்திருந்து பார்த்த அகல்யாவின் மனம் பதைத்தது.. அவன் அப்படி உல்லாசமாக பேசும் பேர்வழியல்ல.. கண்டிப்பை மட்டுமே காட்டும் அவன் கண்களில் ஊர்மிளாவைக் கண்டதும் காதல் பெருக்கெடுப்பதில் அகல்யாவுக்கு சம்மதமில்லை.. ஊர்மிளாவிடம் அவன் இழைசிமிட்டும் போது.. அவன் ஊர்மிளாவுக்குச் சொந்தமானவனாக மாறிக் கொண்டிருப்பதை அகல்யா இனம் கண்டு கொண்டாள்..

ஊர்மிளாவின் ஒரு வசீகரப் பார்வையில் நரேந்திரன் மயங்கிப் போய் விடுவதையும்.. அவள் பேச்சுக்கு மறுபேச்சு பேசாமல் அவள் சொன்னதை செய்து

https://t.me/tamilpdfebooks

விடுவதையும் ஊன்றிக் கவனித்த அகல்யாவுக்கு குளிர் காய்ச்சலே வந்தது..

தன் கண்பார்வையில் நரேந்திரனை வசியம் பண்ணி வைத்திருந்தாள் ஊர்மிளா.. அதை கண்டு கொண்ட நாள் முதலாய் அகல்யாவுக்கு உணவும் பிடிக்க வில்லை.. உறக்கமும் வரவில்லை.. ஊன் கரைய அவள் ஊர்மிளாவை அந்த வீட்டிலிருந்து விரட்டுவதற்கு என்ன மார்க்கம் அகப்படும் என்பதை யோசிக்க ஆரம்பித்து விட்டாள்..

நரேந்திரன் ஊர்மிளாவிடம் உதடுகளைச் சுழித்துச் சிரித்து விட்டு.. அகல்யாவிடம் மட்டும் கனலாய் கோபத்தைக் காட்டும் போதெல்லாம் அகல்யாவின் மனதில் ஊர்மிளாவின் மீதான வன்மத்தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது..

அவளுடைய சொல் கேட்டு நடக்கும் வேலை யாள்கள்.. ஊர்மிளாவின் சொல் கேட்டு நடக்க ஆரம்பித்ததில் ஊர்மிளா அந்த வீட்டின் எஜமானியாக ஆகி விட்டாளோ என்ற கலவரம் அகல்யாவின் மனதுக்குள் வந்தது..

மொட்டை மாடியில் நிலா விருந்தை உண்ணப் போன நரேந்திரன், ஊர்மிளாவின் பின்னாலேயே சப்தம் எழுப்பாமல் போனாள் அகல்யா.. படிக்கட்டுக்களில் நின்றபடி மறைந்திருந்து நரேந்திரனும், ஊர்மிளாவும் பேசிக் கொள்வதை ஒட்டுக் கேட்டு, வேவு பார்க்க ஆரம்பித்தாள்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா நரேந்திரனின் தாத்தா, பாட்டியைப் பற்றிக் கேட்டதும் அவளுக்குள் கோபம் கொந்தளித்தது..

'அவனே சும்மாயிருக்கிறான்.. இவ என்னத்துக்கு தூண்டி விடறா..' என்று வெகுண்டாள்..

நரேந்திரன் ஊர்மிளாவிடம் அகல்யாவை பிடிக்காது என்றும்.. வேறு வழியில்லாமல்.. அம்மா என்று அழைக்க நேர்வதையும் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு பற்றி எரிந்தது..

'இவன் அம்மான்னு கூப்பிடனும்னு நான் தவமா கிடக்கிறேன்..? இவன் மட்டும் கோடிஸ்வரனா இல்லாம இருந்திருந்தா.. இவனை திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டேனே..' வெறுப்பினால் அவள் முகம் கோணியது..

அகல்யாவைப் பற்றிய அத்தனை செய்திகளையும் ஊர்மிளாவிடம் நரேந்திரன் பிட்டுப் பிட்டு வைத்ததும்..

'அடப்பாவி..! எல்லாத்தையும் தெரிஞ்சு வைச்சுக்கிட்டே ஏதும் தெரியாததைப் போல இருந்தியா..?' என்று மனதுக்குள் புழுங்கினாள் அகல்யா..

அது தெரியாமல் அவனிடம் அன்பான அன்னையின் வேடம் போட முயன்றதை நினைத்துப் பார்த்தவளுக்கு ஆற்றாமையாக இருந்தது.. அது அத்தனையும் விழலுக்கு இறைத்த நீரா..?

நரேந்திரனின் தாத்தா பாட்டியிடம் ஆசி வாங்க வேண்டுமென்று ஊர்மிளா கேட்டுக் கொண்டதும்

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் சரியென்று சொல்லி விட்டதில் அகல்யாவுக்கு யெறி பிடித்து விட்டது..

நரேந்திரனின் எல்லாச் சொத்துக்களும் அவன் தாய் ழி அவனுக்கு வந்த சொத்துக்கள் என்ற உண்மையை அவன் ஊர்மிளாவுக்குத் தெரியப்படுத்தி விட்டதில் அகல்யாவின் மனக் கோட்டை சரிந்து விட்டது..

'கடைசியில் என் மகனையும்.. என் புருசனைப் போல வேலைக்காரனாத்தான் இவன் வைச்சிருக்கப் போகிறானா..? இவன் சொத்தில என் மகனுக்கும், களுக்கும், எனக்கும் பங்கு கிடைக்காதாமா..?' நினைத்து னைத்து புலம்பினாள்..

அதை ஊர்மிளாவிடம் நரேந்திரன் சொன்னதில் அகல்யாவுக்கு நெஞ்சு வலியே வந்து விட்டது..

'இவ ஏற்கனவே என்னை ஒத்த ரூபாய்க்கு கூட திக்க மாட்டா.. இதில இந்த விவரமும் தெரிஞ்சிருச் ன்னா எப்படி என்னை மதிப்பா..? இவ அப்பன் சும்மாவே ா பாயிண்டா பேசுவான்.. இந்த விவரத்தை இவ அப்பன் காதிலே போட்டு வைச்சா என்னை வீட்டை யிட்டு வெளியே அனுப்பிட்டுதானே அந்த ஆள் வேறு வேலை பார்ப்பான்..'

ஊர்மிளா புத்திசாலி என்பதில் அகல்யாவுக்கு ாள மாட்டாத துன்பம் இருந்தது.. இதில் நரேந்திரனை அவள் கஜேந்திரனின் வீட்டுக்குப் பிரித்து அழைத்துப் போய் விட்டால் அங்கேயே நரேந்திரனை ஒட்ட

https://t.me/tamilpdfebooks

வைத்து விடுவாள் என்பதில் அகல்யாவுக்கு கொஞ்சம்கூட சந்தேகமே இல்லை..

அவர்கள் பேசிய அனைத்துப் பேச்சுக்களையும் ஒட்டுக் கேட்டபடி.. மறைந்திருந்து வேவு பார்த்தவளை ஊர்மிளா பார்த்து விட்டாள் என்பதில் அகல்யா பயப்படவே இல்லை...

'பார்த்தா பார்க்கட்டுமே.. எனக்கென்ன இவகிட்ட பயம்..? இவதான் என்னைப் பார்த்து பயப்படனும்..'

ஊர்மிளாவிடம் நேருக்கு நேராக சவால் விட்ட அவளின் அசாத்திய தைரியத்தில் ஊர்மிளா அரண்டு போயிருப்பாள் என்று நினைத்துக் கொண்டாள் அகல்யா..

அறைக்குள் போன ஊர்மிளாவிற்கு மிரட்சியாகத் தான் இருந்தது.. அவள் மனதில் பாரதியாரின் பாடல் வந்தது..

'பாதம் செய்பவரைக் கண்டால் -நீ
பயம் கொள்ளலாகாது பாப்பா..
மோதி மிதித்து விடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா..'

ஊர்மிளாவின் மனதில் உறுதி வந்தது.. அந்த உறுதிவந்த பின்னால் நரேந்திரனின் அணைப்பில் அடங்குவதில் அவளுக்குத் தயக்கம் வரவில்லை.. அவள் அவன் கைகளுக்குள் புகுந்து ஒட்டிக் கொண்டதில் நரேந்திரனிடமிருந்து விலகிப் போயிருந்த வேட்கை வந்து ஒட்டிக் கொண்டது..

https://t.me/tamilpdfebooks

"ஏண்டி என்னவோ போல இருந்தே..?"

நரேந்திரன் மீண்டும், மீண்டும் கேட்டான்.. ஊர்மிளா அவனிடம் சொல்லியிருக்கலாம்.. நடந்ததைக் கணவனிடம் பகிர்ந்து கொள்ளாமல் வேறு யாரிடம் அவள் பகிர்ந்து கொள்வாள்..?

'வேண்டாம்.. இப்ப எதையும் சொல்ல வேண்டாம்..'

ஊர்மிளா முடிவு செய்தாள்.. மறுநாள் வெளி நாட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் கணவனிடம் எதைப் பற்றியும் பேச வேண்டாம் என்று அவளது அறிவு சொல்லியது.. அந்த நேரம் அகல்யாவைப் பற்றிப் பேசுவதற்கான நேரமல்ல..

'பிஸினெஸ் டிரிப்பை முடித்து விட்டு வரட்டும்.. மொத்தமாக எல்லாத்தையும் சொல்லி.. இதுக்கொரு முடிவு கட்டறேன்..'

கணவனின் மனநிலை உற்சாகமானதாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவள் வலிய வரவழைத்துக் கொண்ட உற்சாகத்துடன் அவன் முகத்தில் இழைந்தாள்..

"என்னவோ போலன்னா..? என்னவாம்..?"

அவளது ரகசியக் கேள்வியில் அவன் புலன் விசாரணையை மறந்தான்.. அவளை ஆக்ரமித்தான்.. அவனிடம் தன்னை ஒப்புக் கொடுத்த ஊர்மிளா அப்போதைக்கு நடந்ததை கொஞ்சம் மறந்தாள்..

https://t.me/tamilpdfebooks

கணவன் ஆசைப்பட்டதைக் கொடுக்க ஆரம்பித்தாள்.. அன்றைய இரவு.. மற்றுமொரு முதலிரவாக அவர்களுக்கு இருந்தது..

மறுநாள் காலையில் அவன் அவளிடம் விடை பெற்று வெளிநாட்டிற்குக் கிளம்பிய போது ஏனோ அவள் மனம் பதைத்தது.. மனதுக்குள் இனம் புரியாத பயம் உண்டானது..

கண்ணாடியின் முன்னால் நின்று கோட்டை சரி செய்து கொண்டிருந்த நரேந்திரன் கண்ணாடியின் வழியே தெரிந்த மனைவியைப் பார்த்துக் கண்ணடித்தான்.. முதல் நாள் இரவின் நிகழ்வுகள் அவன் விழிகளில் முத்திரையாக வெளிவந்தன.. அந்த இமை சிமிட்டல் சொல்லிய சங்கேத மொழியில் ஊர்மிளாவுக்குள் 'குப்' பென்ற ஒரு உணர்வு பரவியது.. அவள் தடுமாறினாள்.. அவனை அணைத்துக் கொள்ளும் வேகம் பிரவாகமாக அவளுக்குள் எழுந்ததில் மூச்சுத் திணறினாள்.. அவளது போராட்டத்தை நரேந்திரன் கண்டு கொண்டான்..

கண்ணாடியிலிருந்து திரும்பியவன் ஒரே எட்டில் அவளை நெருங்கி முத்தங்களால் அவளை குளிப் பாட்டினான்..

"நரேன்.. என் நரேன்.."

அவன் முகத்தை இரு கைகளாலும் பிடித்து பரிதவித்த ஊர்மிளாவின் மனதுக்குள் சஞ்சலம் காடாக வளர்ந்து பயமுறுத்தியது.. வர வழைத்துக் கொண்ட தைரியத்தை அது ஆட்டிப் பார்த்தது..

https://t.me/tamilpdfebooks

பிரிவுத்துயரும், சஞ்சலமும் சேர்ந்து கொண்டதில் கலக்கம் விஸ்வரூபமெடுத்து அவள் விழிகளில் மண்டியது..

"என்னடி..?" நரேந்திரன் தவித்துப் போனான்..

"நரேன்.." சொல்ல முடியாமல் ஊர்மிளா விம்மினாள்..

மனைவியை மார்போடு அணைத்துக் கொண்ட நரேந்திரனுக்கு அந்த வெளிநாட்டுப் பயணத்தை கேன்சல் செய்து விடலாமா என்று கூடத் தோன்றியது.. அதைச் சொல்லவும் செய்தான்..

"வேண்டாம்.." பலவீனமான குரலில் மறுத்தாள் ஊர்மிளா..

"உன்னை இந்த நிலைமையில விட்டுட்டு எப்படிடி நான் ப்ளைட்டில ஏறுவேன்..?" நரேந்திரன் அவள் விழி நீரைத் துடைத்து விட்டான்..

"நம்ம கல்யாணத்துக்குப் பின்னாலே நீங்க போடப் போகிற முதல் வெளிநாட்டு ஒப்பந்தம் இதுதான்.. இதைக் கேன்சல் பண்ணினா செண்டிமெண்டா நான் ஃபீல் பண்ணுவேன்.. என்னாலே நீங்க முன்னேறின தாகத்தான் இருக்கனும்.." ஊர்மிளா அவனது மனைவியாக பொறுப்புணர்வுடன் பேசினாள்..

நரேந்திரனுக்கு கிளம்பவும் முடியவில்லை.. இருக்கவும் முடியவில்லை.. பயணத்தை கேன்சல் பண்ணுவதை ஊர்மிளா தடுத்தாள்.. அதே சமயத்தில்

https://t.me/tamilpdfebooks

நடுங்கும் கரங்களால் அவன் முகத்தைத் தடவித்தடவி பரிதவித்தாள்.. அந்த பரிதவிப்பு அவன் மனதைக் கசக்கிப் பிழிந்தது..

பின்னாளில் அவள் அவனைப் பிரிந்து சென்ற பின்னால் அந்தக் கண்ணீர் முகம்தான் அவன் கனவிலும், நனவிலும் வந்து அவனை வாட்டியது..

'என்ன சொல்ல நினைத்தா..? அவ மனசில என்ன இருந்தது..?' எதையும் சொல்லாமல் ஒரு கேள்வியில் அனைத்து சொந்தத்தையும் பந்தத்தையும் அறுத்துக் கொண்டவளாக அவனைவிட்டு விலகிச் சென்று விட்டவளை நினைத்து நினைத்து மனம் குமுறியிருக்கிறான்..

ஊர்மிளா அவனுக்கு அநியாயம் செய்து விட்டதாகத் தான் அவன் நினைத்தான்.. அன்னையில்லாமல்.. தாத்தா, பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்தவனுக்கு யாதுமாக வந்தாளே.. வந்தவள் அவனுடன் வாழ்ந்த ஒரு வருடத்திற்குள் வாழ்வின் அனைத்து இன்பங்களையும் அவனுக்கு அடையாளம் காட்டி விட்டு பிரிந்து சென்றால் அது நியாயமாகுமா..?

நதிநீர் கானல் நீரானால் வாழ்வின் அனைத்து நம்பிக்கைகளும் அர்த்தமற்றுப் போய் விடாதா..?

ஊர்மிளா நரேந்திரனின் நம்பிக்கையை உடைத்து விட்டதாக பிற்காலத்தில் அவன் நினைக்கப் போகிறான் என்பதை அறியாதவளாக அவன் மார்பில் ஒன்றிக் கொண்டிருந்தாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

வெடவெடத்த அவளின் தளிருடலை தழுவிக் கொண்டவன்.. அவள் முகம் நிமிர்த்தி அவள் விழிகளுக்குள் ஊற்றுப் பார்த்தான்.. அதில் தெரிந்த கடலளவு கலக்கத்தில் அவன் கண்களில் கேள்வி வந்தது..

"ஏதோ இருக்கு.. அது என்னன்னு சொல்லு ஊர்மிளா.."

ஊர்மிளா சொல்லவில்லை.. அவன் வெளி நாட்டிற்குப் போய் விட்டுத் திரும்பி வந்ததும் சொல்லிக் கொள்ளலாம் என்று அதைத் தள்ளிப் போட்டு அகல்யாவின் சதுரங்க விளையாட்டிற்கான அவகாசத்தை அளித்து விட்டாள்..

'அன்னைக்கு மட்டும் அவர் கேட்டபோது நான் அத்தனையையும் சொல்லியிருந்தா..?'


பெருமூச்சுடன் அவள் நினைக்காத நாளில்லை.. அவனை விட்டுப் பிரிந்து வந்த பின்னால் இந்த எண்ணம் தான் அவளைத் துரத்தியது.. அவளுக்கு உயிரானவனைப் பிரிந்து வந்துவிட நேர்ந்த கொடுமையில் அழுது புலம்பியது..

'சொல்லியிருக்கனும்.. அவனிடம் அத்தனையையும் சொல்லியிருக்கனும்.. பர்ஸ்ட் நைட் முடிந்து வந்த காலையிலேயே அந்த அகல்யா கேட்ட அநாகரிகமான கேள்வியையும், விட்ட சவாலையும் சொல்லியிருக்கனும்.. பொட்டைமாடியிலே நாங்க புருசனும், பெண்டாட்டியுமா பேசிக்கிட்டு இருந்த பேச்சுக்களை அந்த அகல்யா

https://t.me/tamilpdfebooks

ஒளிந்திருந்து ஒட்டுக்கேட்டு, வேடிக்கை பார்த்ததைச் சொல்லியிருக்கனும்.. அதைப் பார்த்து விட்ட என்னைப் பார்த்து வீட்டை விட்டு விரட்டப் போறேன்னு ஆங்காரப் பட்டதையும் சொல்லியிருக்கனும்..'

எதையும் சொல்லாமல் நரேந்திரனை வழியனுப்பி வைத்தாள் ஊர்மிளா.. எதுவந்தாலும் எதிர்கொள்ள வேண்டுமென்று மனதுக்குள் உருப்போட்டுக் கொண்டாள்..



உன் பார்வை வரமென்ற
பக்தனான எனைப் பிரிந்த
அழகான ராட்சசி நீ....

சில நிமிடங்களுக்குள் சொல்லி விட முடிந்த விவரங்களா அவை..? அதைச் சொல்ல அரை நாளாவது வேண்டாமா..? அப்படியே அவள் சில நிமிடங்களில் சொல்லியிருந்தாலும்.. அதைக் கேட்ட பின்பு.. 'அப்படியா..?' என்ற ஒற்றைக் கேள்வியுடன் நரேந்திரன் வெளிநாட்டிற்குக் கிளம்பிப் போய் விடுவானா..? வெளிநாட்டுப் பயணத்தையே கேன்சல் பண்ணிவிட்டு அகல்யாவை உண்டு, இல்லையென்று பண்ணி விட மாட்டானா..?

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா அது போன்ற அதிரடி நடவடிக்கைகளுக்குப் பழக்கப் படாதவள்.. நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பேச்சுமாக பாரதியின் புதுமைப் பெண்ணாக சோமசுந்தரத்தால் வளர்க்கப்பட்டவள்..

அதே தருணத்தில்.. உதடு அசையாத சப்தமில்லாத பேச்சையும், அமெரிக்கையான அமைதியான சுபாவத்தையும், காருண்யத்தையும், சாத்வீகத்தையும் பூங்குழலியின் மகளாக அவளிடமிருந்து போதனையின்றிப் பெற்றவள்..

ஒரு கண்ணில் சூர்யனும்.. மறுகண்ணில் வெந்நிலவும் குடி கொண்டிருந்தது ஊர்மிளாவிடம் மட்டும் தான்..

அவள் புயல்..! அவளே தென்றல்..! அவள் வெயில்..! அவளே பனி..! அவள் அருவி..! அவளே நதி..!

அவளின் இந்த மாறுபட்ட இருவேறு குணங்களை சரியாக கணித்து வைத்திருந்தான் நரேந்திரன்.. அவள் மீதான அவனது காதல் ஆலமரமாக அகன்று விரிந்து வேரூன்றி நின்று விட்டதற்குக் காரணம் அவளது இந்த அதிசயத்தக்க குணாதியம்தான்..

அவனுக்கும் அவளுக்குமான காதல் ஆழமானது.. அதன் உன்னதத்தைப் பற்றி அகல்யாவைப் போன்ற ஆள்களுக்கு எப்படித் தெரியும்..?

நரேந்திரன் கிளம்பிப் போகும் வரையில் சாதுப்பூனை வேடம் தரித்திருந்த அகல்யா அவன் போனபின்பு

https://t.me/tamilpdfebooks

அவளது சுயரூபத்தைக் காண்பித்தாள்.. ஊர்மிளாவைப் பார்த்த அவளின் முகம் சூன்யக்காரியின் முகமாக இருந்தது.. அதில் பயங்கொள்ளாமல் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ஊர்மிளா.. 'என்ன திமிர்..' அகல்யா கோபம் கொண்டாள்..

நரேந்திரன் சொன்ன கடந்த காலக் கதைகளால் அகல்யாவை ஊர்மிளா துச்சமாக நினைப்பதாக அகல்யா நினைத்தாள்..

நரேந்திரன் திரும்பி வரும்வரைக்கும் அகல்யாவிடம் எந்தவிதமான வம்பையும் வைத்துக் கொள்ளாமல் ஒதுங்கி இருக்க வேண்டும் என்ற நினைவில் கூடுமானவரை அகல்யாவின் கண்களில் படாமல், அவள் இருக்கும் இடத்தில் நிற்காமல் ஒதுங்கிப் போக ஆரம்பித்தாள் ஊர்மிளா.. அதற்கும் உனக்கெல்லாம் என்ன கணக்கு என்று கண்டு கொள்ளாமல் அலட்சியமாக ஊர்மிளா இருக்கிறாளோ என்று ஆத்திரம் பட்டாள் அகல்யா..

அகல்யாவின் அடி மனதில் கஜேந்திரனைக் குறித்த பயம் எப்போதுமே உண்டு.. அவளைக் கண்டாலே முகம் சுளித்து கடுமையாக பேசும் மனிதர் அவர்.. அகல்யாவை விரட்ட நினைக்கும் அவர் வீட்டுக்குப் போக வேண்டும் என்று ஊர்மிளா சொல்வதா என்ற கோபம் அகல்யாவின் மனதுக்குள் கனன்று கொண்டே இருந்தது..

என்னதான் ஊர்மிளா விலகி விலகிப் போனாலும் அவளுக்கான சோதனைகள் அவளை விட்டு விலக வில்லை..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் வெளிநாட்டிற்குக் கிளம்பிப் போன மறுநாளில் ஊர்மிளாவின் செல்போன் காணாமல் போய் விட்டது.. ஊர்மிளா தவித்துப் போனாள்.. எல்லா இடங்களிலும் தேடினாள்.. அவளுக்கும் நரேந்திரனுக்கும் இடையிலான பாலம் அது.. அந்தப் பாலம் இல்லாமல் அவன் வரும் வரை வரும் நாள்களை எப்படி அவள் கழிப்பாள்..?

வீட்டிலிருந்த லேண்ட் லைன் போனின் ஞாபகம் வந்தது.. ஓடிப் போய் எடுத்து நரேந்திரனின் போன் நம்பர்களை அழுத்தினாள்.. அந்த வசதி அந்த தொலை பேசியில் இல்லையென்ற பதில் வந்தது.. திகைத்துப் போய் போனை வைத்தவளிடம் கல்லூரிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த அர்ச்சனா காரணம் கேட்டாள்..

"ஒன்னுமில்லை.. லேண்ட்லைனில் ஒரு கால் பண்ணினேன்.. கிடைக்க மாட்டேங்குது.."

"அது கிடைக்காது அண்ணி.. போனை அம்மா லாக் பண்ணி வைச்சிருக்காங்க.. இல்லைன்னா வீட்டில் வேலை செய்கிறவங்க போனை எடுத்துப் பேசி லக்கச்சக்கமா சார்ஜை ஏத்தி விடுவாங்களாம்.. இப்பத்தான் இந்தக் கூத்து.. அண்ணனுக்கு இதெல்லாம் பிடிக்காது.. அவர் வந்தவுடனே இதையெல்லாம் கட் பண்ணிடுவாரு பாருங்க.. லாக் கோட் நம்பர்ஸ் அம்மாவுக்குத்தான் தெரியும்.. பை அண்ணி.."

அர்ச்சனா போய் விட்டாள்.. கணவனுக்குப் போன் பண்ண முடியாமல் தவிப்பதை அவளிடம் எப்படிச்

https://t.me/tamilpdfebooks

சொல்வது என்ற சங்கடத்துடன் ஊர்மிளா திரும்பினாள். கூண்டில் மாட்டிக் கொண்ட புலியை வேடன் பார்ப்பதைப் போல ஓர் பார்வை பார்த்தபடி இகழ்ச்சிச் சிரிப்புடன் அங்கே நின்றிருந்தாள் அகல்யா..

'இவளிடம் என்ன பேச்சு..'

கொதிப்புடன் ஊர்மிளா உள்ளே செல்லப் போன போது.. ஹாலில் இருந்த டீப்பாயில் இருந்த தூசி அவள் கண்ணில் பட்டது.. அதனடியில் பேப்பர் துண்டுகளும் கிடந்தன..

வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்த வேலைக்காரப் பெண்ணிடம் ஊர்மிளா அதைக் காட்டினாள்..

"வீட்டைச் சுத்தமா வைத்துக்கிறதுதான் உன் வேலை.. குப்பையை ஒழுங்காப் பெருக்கலைன்னா அது வீட்டுக்குள்ளேதானே கிடக்கும்..? தூசியைத் தட்டிச் சுத்தம் பண்ணலைன்னா.. இன்னும் கொஞ்சம் தூசியும், தும்பும் வந்து அடைத்துக் கொள்ளத்தானே செய்யும்..? குப்பையையும், தூசியையும் பெருக்கி அள்ளி வெளியே கொண்டு போய் கொட்டுறதுக்குத்தானே நீ சம்பளம் வாங்கற..? செய்கிற வேலையைச் சரியாச் செய்ய வேணாமா..?"

அதட்டாமல் மென்மையாக வேலைக்காரப் பெண்ணின் கவனக்குறைபாடை ஊர்மிளா சுட்டிக் காட்டிய விதத்தில் அந்தப் பெண் மன்னிப்புக் கேட்டு விட்டு

https://t.me/tamilpdfebooks

உடனடியாக ஹாலை திரும்பவும் பெருக்கிக்கித் துசியைத் தட்டிச் சுத்தம் செய்தாள்..

ஊர்மிளா மாடிப்படிகளில் சோர்வாக ஏறினாள்.. நரேந்திரனுக்குப் போன் பண்ண என்ன செய்வது என்ற யோசனையுடன் மாடி ஹாலில் அவள் கால் வைத்த போது..

"நில்லுடி.." என்ற அகல்யாவின் அகங்காரக் குரல் கேட்டது..

'இது வேறயா..?' ஊர்மிளாவுக்கு அலுப்பாக இருந்தது..

பேசாமல் போய்விடவும் மனம் வரவில்லை... கணவனின் சித்தியாயிற்றே என்ற நினைவுடன் நின்றாள்..

"என்னடி... ஜாடை பேசறயா...?" அகல்யா முண்டைக்கு வந்தாள்..

"ஜாடையா..?" ஊர்மிளாவிற்குப் புரியவில்லை..

அவள் நேருக்கு நேராகப் பேசிப் பழக்கப்பட்டவள்.. இந்த ஜாடைப் பேச்செல்லாம் அவளுக்கு சரிவராது..

"அது எதுக்கு..?" நேரடியாகவே கேட்டாள்..

"அது எதுக்குன்னா.. என்ன அர்த்தத்திலே கேட்கிற..?" அகல்யாவின் முகம் கோபத்தில் கோணியிருந்தது..

"எனக்கு எந்த அர்த்தமும் தெரியலைங்க.. உங்களுக்குத் தெரிஞ்சிருந்தா சொல்லுங்க..?"

https://t.me/tamilpdfebooks

"என்ன..? உன் புருசன் சொன்னதில குளிர் விட்டுப் போச்சா..? அந்தக் கிழவன் சொன்னதை மனதில வைச்சுக்கிட்டுப் பேசிப் பார்க்கிறயா..?"

"எந்தக் கிழவன்..?"

"அதாண்டி.. உன் புருசனோட தாத்தா.. அவன் கிழவனில்லாம குமரனா..?"

'இந்தம்மா நரேனோட தாத்தாவைச் சொல்லுதா..?'

ஊர்மிளாவுக்கு கோபம் வந்துவிட்டது... அவளைப் பேசினால் அவள் பொறுத்துக் கொள்வாள்... நரேந்திரனையும்.. அவனுடைய தாத்தா, பாட்டியையும் பேசினால் எப்படி பொறுத்துக் கொள்வாள்..?

"பார்த்துப் பேசுங்க.. யாரை என்ன வார்த்தை சொல்கிறிங்க..? வயசில பெரியவர்ங்கிற மட்டு மரியாதை வேண்டாம்..?"

"உனக்கு அது இருக்கில்ல..? அதை நீயே வைச்சுக்க.. எனக்கு அது வேணாம்.."

"உங்களுக்குக்கூட நான் மரியாதை கொடுத்துத்தான் பேசறேன்.. நினைவிருக்கட்டும்.."

"திமிராடி..?"

"உண்மையைச் சொல்ல திமிர் வேணுமா..? ஆமாம்.. அதென்ன புதிதா வாடி.. போடின்னு பேசியாகிறது.. மரியாதை கொடுத்து மரியாதையை வாங்கனும்.."

"இல்லேன்னா..?"

https://t.me/tamilpdfebooks

"இதே வாடி போடியை உங்களைப் பார்த்து நான் சொல்லுவேன்.. வசதி எப்படி..?"

ஊர்மிளாவின் நிமிர்வான பேச்சில் நிலைகுலைந்து போனாள் அகல்யா.. அவளின் வன்மம் அதிகரித்தது..

"நேத்து வந்தவ நீ.. என்னைத் தூக்கி வெளியில போடனும்னு ஜாடை பேசற.. எல்லாம் அந்தக் கிழவன் என்னை விரட்டச் சொன்னதை தெரிஞ்சுக்கிட்டதால வந்த தைரியம்.. நீ என்னைத் தூக்கி வெளியில போடுறயா.. இல்லை.. நான் உன்னைத் தூக்கி வெளியில போடறேனான்னு போகப் போகப் பார்க்கலாம்.."

அகல்யா திட்டிக் கொண்டே இருந்தாள்.. அங்கே நின்றால் வார்த்தைதான் வளரும் என்பதால் ஊர்மிளா அவளுடைய அறைக்குள் போய் கதவை அடைத்துக் கொண்டாள்.. அதை அகல்யாவின் முகத்தில் ஊர்மிளா அடித்து விட்டதைப் போல அவள் கொதித்துப் போனாள்..

'அன்னைக்கு இவ புருசன் என் முகத்தில அடிச்சதைப் போலக் கதவைச் சாத்தினான்.. இன்னைக்கு இவ அதையே செய்து வைக்கிறா.. என்னை முன்னால வைச்சுக்கிட்டு வேலைக்காரிகிட்ட வீட்டில இருக்கிற குப்பையைத் தூக்கி வெளியிட போடனும்னு சொல்லறா.. இதை வளரவிட்டா இவ சொன்னதை செஞ்சு காட்டிருவா..'

ஊர்மிளா ஆபத்தானவள் என்று ஆபத்தின் மறு அவதாரமான அகல்யா முடிவு கட்டினாள்..

https://t.me/tamilpdfebooks

'இவளைத் தொலைச்சுக் கட்டிரனும்..'

அவள் இடுப்பில் செருகியிருந்த ஊர்மிளாவின் செல்போனை எடுத்துப் பார்த்தாள்.. அவள் முகத்தில் குரூரம் வழிந்தது..

'இருடி.. இந்த போனை வைச்சே உனக்கும், உன் புருசனுக்கும் இடையில பள்ளம் வெட்டறேன்.. இந்த அகல்யா யாருன்னு இப்ப உனக்குத் தெரியாதுடி.. தோத்துப் போய் இந்த வீட்டை விட்டு வெளியில ஓடுவ பாரு.. அப்பத் தெரியும் உனக்கு..'

அகல்யா கருவியபடி படி இறங்கிப் போனாள்.. அறைக்குள் அடைந்து கிடந்த ஊர்மிளா... மதிய உணவுக்காக கீழே இறங்கிப் போனாள்.. ஹாலில் கால்மேல் கால் போட்டு உட்கார்த்தபடி யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டிருந்த அகல்யாவை, அப்படி ஒருத்தி அங்கே இல்லாததைப் போன்ற கண்டு கொள்ளாத முகபாவனையுடன் கடந்து போனாள்..

அகல்யாவுக்கு தாளவில்லை... அவள் முகம் கோணியது..

"ஊம்.. ஒன்னுமில்ல சியாமி.. இங்கே ஒரு சுண்டெலி.. ரொம்பத்தான் துள்ளிக் குதிக்குது.. தடியெடுத்து அடிச்சுப் போட நாளைக் குறிச்சுக்கிட்டு இருக்கேன்.."

அவள் போனில் சத்தமாகப் பேச.. ஊர்மிளா அவளை சுண்டெலியைப் பார்ப்பதைப் போல பார்த்து வைத்து அகல்யாவின் ரத்த அழுத்தத்தை எகிற வைத்தாள்..

https://t.me/tamilpdfebooks

'என்ன ஜாடை பேச்சைப் பேசினாலும் எனக்கென்னன்னு அசையா மரமாய் நிற்கிறாளே...'

அகல்யா பல்லைக் கடித்தாள்.. ஊர்மிளா சாப்பிடத் தட்டைப் போட்டுக் கொண்டு பரிமாற ஆரம்பித்தாள்.. பக்கத்தில் நின்ற வனிதாவிடம்..

"தினமும் அசைவம் சமைக்கனுமா வனிதா..? இதைச் சாப்பிட்டா கொலஸ்ட்ரால் கூடும்.. அது உடம்புக்கு நல்லதில்லை.. வாரத்துக்கு ரெண்டு தடவையோ.. மூணு தடவையோ சமைச்சா போதாதா..?" என்று கேட்டு வைத்தாள்..

"அதுவாம்மா.." வனிதா தயங்கியபடி அகல்யாவை பார்த்தாள் அதைக் கவனிக்காத ஊர்மிளா சாப்பிட்டபடி..

"கொலஸ்ட்ரால் குறையனுமுன்னா அசைவச் சாப்பாட்டையும் குறைக்கனும் வனிதா.." என்று சொல்லி வைத்தாள்..

வனிதா சமையலறைக்குள் ஓடி விட்டாள்.. ஊர்மிளா இயல்பாக சாப்பிட்டு முடித்து கை கழுவி விட்டு தோட்டத்துப் பக்கமாகப் போனாள்... நரேந்திரன் இல்லாத தனிமை அவளை அச்சுறுத்தியது... தொட்டதற்கெல்லாம் குற்றம் கண்டு பிடிக்கும் சின்ன மாமியாரிடம் இருந்து எப்படித் தப்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த வளிடம்..

"கொழுப்பு.. எனக்கா.. இல்லை உனக்கா..?" என்று கேட்டபடி வந்து நின்றாள் அகல்யா..

https://t.me/tamilpdfebooks

'இபப என்ன..?' ஊர்மிளாவுக்கு ஒன்றும் புரிய வில்லை..

"என்ன..?" என்று கேட்டாள்..

"ஆஹா.. இவளுக்கு ஒன்னுமே தெரியாதாம்.. இந்த வித்தாரத்தனத்தை உன் புருசன்கிட்டக் காட்டு.. அவன் நம்புவான்.. என்கிட்டப் பசப்பாதே.."

"இங்கே பாருங்க.. இந்தப் பசப்பற வேலையெல்லாம் உங்களுக்குத்தான் வரும்.. எனக்குச் சுட்டுப் போட்டாலும் அது வராது.."

"ஆமாமா.. நம்பிட்டேன்.. உனக்கு ஒன்னுமே வராதுதான்.. அதைத்தான் மொட்டை மாடியில பார்த்தேனே... என்னமா சிலுக்கிக்கிட்டுப் பேசின.. இந்த மயக்கற மேனாமினுக்கி வேலையெல்லாம் எனக்குத் தெரியாமப் போச்சே.."

அகல்யாவின் பேச்சில் அதிர்ந்து போனாள் ஊர்மிளா..

"நிறுத்துங்க.."

அவள் உடல் கோபத்தில் ஆடியது.. ஒற்றைவிரலை உயர்த்தி அகல்யாவிடம் எச்சரிக்கை செய்தாள்..

"ஜாக்கிரதை.. நான் எப்பவும் ஒரே மாதிரி இருக்க மாட்டேன்.."

"அதைத்தான் அன்னைக்கு ரத்திரி பார்த்தேனே.."

"ச்சீ.. நீங்கள்ளாம் ஒரு மனுசப்பிறவி..? புருசனும் பெண்டாட்டியும் தனிச்சு பேசறதை ஒளிஞ்சிருந்து

https://t.me/tamilpdfebooks

பார்த்துட்டு அதைப் பத்தி வெட்கமில்லாம வெளியில பேசவும் செய்கிறீங்களே.. உங்களுக்கு வெட்கமா யில்லை..? அதுசரி.. நீங்கதான் வெட்கம், மானம், சூடு, சொரணைன்னா கிலோ என்ன விலைன்னு கேட்பீங்களே..”

“ஊர்மிளா..” அகல்யா அலறினாள்..

“பேசாதீங்க.. என் பெயரைச் சொல்லக் கூட உங்களுக்கு அருகதை கிடையாது.. சின்ன மாமியாராச் சேன்னு பொறுமையாப் போனேன்.. இல்லேன்னா நீங்க செஞ்சு வைச்ச காரியத்தை அன்னைக்கே நரேனிடம் சொல்லியிருப்பேன்.. அப்படிச் செய்யாமல் விட்டதுதான் தப்பாப் போச்சு..”

ஊர்மிளாவின் கோபத்தில் அகல்யா ஆடிப் போய் விட்டாள்..

‘சொல்லி விடுவாளோ..’ அவள் மனதில் பயம் எழுந்தது..

ஊர்மிளா மட்டும் அகல்யா ஒளிந்திருந்து பார்த்ததை நரேந்திரனிடம் சொல்லி விட்டால் அவன் ஆயுளுக்கும் அகல்யா இருக்கும் திசைப்பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டான் என்பது நிச்சயம்...


“போனாப் போகுதுன்னு பார்த்தா நீங்க தலைமேல ஏறுகிறீங்க.. இப்ப என்னத்துக்காக கொழுப்பு.. அது.. இதுன்னு வந்து நிற்கறிங்க..?”

“எனக்கு கொழுப்பு கூடிருச்சுன்னு வனிதாகிட்ட நீ சொல்லலை..? என் கொழுப்பைக் குறைக்கனும்னு ஜாடை பேசலை..?”

https://t.me/tamilpdfebooks

அகல்யாவின் வியாக்கினத்தில்

'அட ராமா..' என்று ஆகி விட்டது ஊர்மிளாவிற்கு.. ஊர்மிளா வாயைத்திறந்து எதைப் பேசினாலும் அதில் அகல்யா குற்றம் கண்டு பிடித்து சண்டைக்கு வருவாளா..?



நான் சிரிக்க நீ சிரித்தும்..
என் நிழலைவிட்டு நீங்கிவிட்ட
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் அருகில் இல்லாமல் ஊர்மிளாவுக்கு பைத்தியம் பிடித்து விட்டதைப் போல இருந்தது.. திருமணமான தினத்திலிருந்து அவளை விட்டு அவன் பிரிந்ததில்லை.. குட்டி போட்ட பூனையாக அவளையே சுற்றிச்சுற்றி வருவான்... மறுவீட்டு விருந்துக்கென திருச்சியில் இருவாரங்கள்... தேநிலவு பயணத்துக்கு என் ஆஸ்திரேலியாவில் இரண்டு மாதங்கள் என்று இமைப்பொழுதும் அவளைவிட்டு அகலாமல் கூடவே இருந்தான்.. இரண்டு மாதங்கள் முடிந்த பின்பும் ஆஸ்திரேலியாவை விட்டு அவன் கிளம்பவில்லை.. பிஸினெஸ் மீட்டிங் அது.. இது என்று வேலையை நீடித்துக் கொண்டு மேலும் ஒரு மாதம் அங்கேயே இருக்க வைத்தான்.. திரும்பி வந்ததும் தேநிலவு பயணத்தைப் பற்றிச் சொல்ல திருச்சிக்குப் பயணம்..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனுடன் அவள் கழித்த நாள்களை ஆனந்த மயமாக்கி காட்டியவன் இன்று அவளை ஆதரவில்லாத நடுக்காட்டிற்குள் விட்டு விட்டுப் போனதைப் போல அல்லவா அந்த வீட்டில் விட்டு விட்டுப் போயிருக்கிறான்..

அவன் திரும்பி வரும்வரை அகல்யாவை எதிர் கொள்ளும் தைரியத்தைக் கொடு கடவுளே என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டாள் ஊர்மிளா..

நரேந்திரனுடன் போனில் கூட பேச முடியாமல் போனதில் அவள் கண்களில் கண்ணீர் பெருகியது.. விடியும் வரை ஏதேதோ யோசனைகள்.. மன உளைச்சல் களுடன் போராடியவள் விடியும் போதுதான் தூங்கவே ஆரம்பித்தாள்.. அவள் விழித்து எழுந்த போது மணி பத்துக்கு மேல் ஆகி விட்டிருந்தது..

அன்று அவள் அர்ச்சனாவிடம் போனை வாங்கி நரேந்திரனிடம் பேசலாம் என்றிருந்தாள்.. அதற்கு வழியில்லாமல் அவள் கல்லூரிக்குக் கிளம்பிப் போயிருப்பாளே..

சோர்வுடன் குளித்து உடைமாற்றி கீழே இறங்கி வந்தவள் ஹாலில் நின்றிருந்த அருண்குமாரை பார்த்தாள்.. அவன் கையில் செல்போன் இருந்தது..

'இந்த போனை வாங்கி பேசலாமா..?'

மனது ஏங்கியது.. அடுத்த கணம் அதை வேண்டா மென்று அழித்தாள்.. அகல்யா அதற்கும் எதையாவது சொல்லி வைப்பாள்.. எதற்கு வம்பு..? அர்ச்சனாவாக

https://t.me/tamilpdfebooks

இருந்தால் பரவாயில்லை.. அதுவே அருண்குமார் என்றால் வேண்டுமென்றே எதையாவது சொல்லி வைத்து விட மாட்டாளா..?

அகல்யா எதையும் சொல்வாள் என்பதில் ஊர்மிளாவின் தேகம் நடுங்கியது.. ஏதோ நடக்கப் போகிறது என்று அவள் மனம் சொல்லியது.. அதுநாள்வரை அவளின் ஆழ்மனதின் அச்சுறுத்தல்கள் பொய்யாகிப் போனதாக சரித்திரம் இல்லை..

ஊர்மிளாவைக் கண்டதும் அருண்குமார் மரியாதையாக சிரித்தான்.. பதிலுக்கு சிரிப்பதா வேண்டாமா என்ற குழப்பத்துடன் ஊர்மிளா லேசாக தலையை மட்டும் அசைத்து வைத்தாள்..

அருண்குமாரிடம் அவள் சகஜமாக நின்று பேசிய தில்லை.. எப்போதும் நரேந்திரனின் பின்னாலே ஆட்டுக் குட்டியைப் போல தொடர்ந்து கொண்டே இருப்பவள்.. மற்ற நேரங்களில் அர்ச்சனாவுடன் சிரித்துப் பேசுவாள்.. தோட்டத்தில் செடி நடுவாள்.. வீட்டுக்குள் இருக்கும் பொருள்களை அழகாக அடுக்கி வைப்பாள்.. சமையலறையில் புகுந்து வனிதாவின் உதவியோடு எதையாவது சமைப்பாள்.. வேலையாள்களின் வேலையைக் கண்காணிப்பாள்..

மறந்தும் அகல்யாவுடன் பேச மாட்டாள்.. அருண் குமாரைக் கண்டால் லேசான தலையசைவுடன் நகர்ந்து விடுவாள்..

https://t.me/tamilpdfebooks

அருண்குமாரும் அவளிடம் பேச நினைக்க மாட்டான்.. அண்ணி என்ற மரியாதை அவன் கண்களில் மின்னும்.. நரேந்திரனிடம் தள்ளி நின்றே பேசிப் பழகுபவன்.. நரேந்திரனின் மனைவியிடம் அதே இடைவெளியை கடைபிடித்தான்..

அவன் கையிலிருந்த செல்போனை ஏக்கத்துடன் பார்த்தபடி அவனைக் கடந்தாள் ஊர்மிளா..

"என்னங்க அண்ணி..?" புரியாமல் வினவினான் அருண்குமார்..

"ஒன்றுமில்லை.." ஊர்மிளா சொல்லிக் கொண்டிருக்கும் போதே..

"ஏண்டா அருண்.. உங்க அண்ணன் இல்லாதப்ப நம்ம கம்பெனியை நீதானே பொறுப்பாக் கவனிச் சுக்கனும்..? அதை விட்டுட்டு இங்கே நின்னு இவகூட அரட்டையடிச்சுக்கிட்டு இருக்கிற..?" என்று சத்தமாக நான்கு தெருக்களுக்கு கேட்கும்படி கூவிக் கொண்டே வந்து சேர்ந்தாள் அகல்யா..

'தேவையா எனக்கு..?'

ஊர்மிளாவின் முகம் கன்றி விட்டது.. அவள் டைனிங் ஹாலுக்கு போய் விட்டாள்.. அருண்குமார் கோபத்துடன் தாயை கடிந்து கொண்டான்..

"அறிவோடதான் பேசறிங்களா..? இங்கே யாரு, யாருகிட்ட அரட்டையடிச்சாங்க..? நாங்க அரட்டையடிக் கிறதை நீங்க பார்த்தீங்களா..? இனியொரு முறை

https://t.me/tamilpdfebooks

இப்படிப் பேசினா நான் ரொம்ப பொல்லாதவனா இருப்பேன்ம்மா..”

“இல்லேடா அருண்.. நான் என்ன சொல்ல வந்தேன்னா...”

“ஒரு விளக்கமும் வேணாம்.. ச்சை..! காலையிலேயே மூட்அவுட் பண்றீங்க.. வீடா இது..?”

அருண் கோபமாக கிளம்பிப் போய் விட்டான்.. அவனிடமிருந்து செல்போனை வாங்கிப் பேசும் யோசனையை அறவே துறந்து விட்டாள் ஊர்மிளா.. அதற்கும் ஏதாவது கதை பிணைந்து விடுவாள் அகல்யா..

யாராவது கொள்ளிக்கட்டையை வைத்துத் தலையை சிக்கல் எடுப்பார்களா என்ன..?

‘என்ன செய்யலாம்..?’

பலத்த யோசனையுடன் சாப்பிட்டு முடித்தவளின் மனதில் ஐடியா ஒன்று உதயமானது..

‘பேசாம புது செல்போன் ஒன்னை வாங்கிட்டா என்ன..?’

இந்த நினைவு வந்ததுமே அவள் முகத்தில் மலர்ச்சி வந்து விட்டது.. ‘ஓசி வாங்கனும்னு நினைச்சவளுக்கு புதிதா ஒன்னை வாங்கிக்கலாம்ன்னு தோணாம போச்சே..’

தெளிந்த முகத்துடன் அவசரமாக தட்டைக் காலி பண்ணி விட்டுக் கிளம்பியவளை அகல்யாவின் குரல் தடுத்து நிறுத்தியது..

https://t.me/tamilpdfebooks

"எங்கே போற..?"

இவளுக்கு ஏன் நாம் பதில் சொல்ல வேண்டும் என்று தோன்றினாலும்.. ஊர்மிளாவால் பதில் சொல்லாமல் அசட்டையாக நகர முடியவில்லை..

"வெளியே போறேன்.."

"ஊர் சுத்தப் போறியா..?"

"அதை நீங்க செய்வீங்க.. நான் ஷாப்பிங் போறேன்.."

"உன் அப்பன் வீட்டுப் பணம் குவிந்து கிடக்குது பாரு.. அதைக் கரைக்க ஷாப்பிங் போக கிளம்பிட்ட.."

"உங்க அப்பா வீட்டுப் பணமும் குவிந்து கிடக்கலை.. ஷாப்பிங் போய் அதைக் கரைத்துருவேன்னு நீங்க ஒன்னும் பயப்பட வேணாம்.."

பதிலுக்குப் பதில் சலனமில்லாத முகத்துடன் ஊர்மிளா போட்டுத் தாக்கியதில், சமையலறையில் இருந்த வனிதா மனதிற்குள் 'சபாஷ்' என்று சொல்லிக் கொண்டாள்..

'சின்னம்மா அமைதியா இருந்தாலும் படு புத்திசாலியா இருக்காங்க.. யோசிக்காம பதிலடி கொடுக்கிறாங்களே..'

அகல்யாவின் முகம் சிறுத்துப் போனது.. அவளுடைய பேச்சில் ஊர்மிளா சங்கடப்பட்டுப் போவாள் என்று அவள் நினைத்தால் ஊர்மிளாவோ அகல்யாவை சங்கடப்பட வைத்து விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

'இவளை வெளியே போக விடக்கூடாதே..'

அகல்யா அடுத்து எதைப் பேசி அவளைத் தேக்கி வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது.. வாசலில் இருந்து செக்யூரிட்டியின் போன் வந்தது..

"சின்னம்மாவைப் பார்க்க அவங்களோட சிநேகிதி வந்திருக்காங்க.."

போனை எடுத்துப் பேசிய அகல்யா திமிராக..

"சின்னம்மாவா..? யாரைச் சொல்கிற..? நம்ம அர்ச்சனாதான் காலேஜீக்குப் போயிட்டாளே.." என்றாள்..

ஊர்மிளா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. சின்னம்மா என்று அர்ச்சனாவைத்தான் அழைக்க வேண்டுமாம்.. ஊர்மிளாவை அழைக்கக் கூடாதாம்..

'யாருக்கு வேணும் இந்த சின்னம்மா பட்டம்..?'

போனில் பேசிய செக்யூரிட்டியோ படு தெளிவாக பேசினான்..

"இல்லைங்கம்மா.. நான் சொல்கிறது நம்ம அம்மாவைம்மா... நீங்க போனை எடுத்ததாலே சின்னம்மான்னு சொன்னேன்.."

அகல்யாவின் காதுகளில் இடி இறங்கியது.. அந்த வீட்டிற்கான எஜமானியாக ஊர்மிளாவைத்தான் வேலையாள்கள் நினைக்கிறார்கள் என்பதில் அவள் ஆடிப் போய் விட்டாள்.. அவளுடைய ராஜாங்கம் காணாமல் போய் விட்டதை அதிர்ச்சியுடன் அவள் உணர்ந்தாள்..

https://t.me/tamilpdfebooks

'இவ அம்மான்னா.. இந்த வீட்டில நான் யாரு..?'

அன்று வரை அவளுக்குச் சொந்தமாக இருந்த வீட்டில் ஊர்மிளாவின் வரவுக்குப் பின்னால் அவள் அன்னியமாகி விட்டாளா..?

அகல்யாவை போன் பேச விட்டால்தானே வம்பு என்று ஊர்மிளா வந்திருப்பது யாரென்று பார்க்க வாசலுக்குப் போய் விட்டாள்..

முரட்டு ஜீன்ஜீம்.. தொள தொள வென்ற முழுக்கை சட்டையும்.. அகன்ற கூலிங்கிளாஸீம்.. விரிந்த கூந்தலுமாக.. உடலில் ஒரு பொட்டு நகையில்லாமல் நின்றிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்ததும்..

"ஹேய்.. ராதா.." என்று குதூகலித்தாள்..

"ஊர்மிளா.." அவள் விரித்த கைகளுடன் சிநேகிதியின் அருகே வந்தாள்..

"எப்படி.. நியுயார்க்கில இருந்து வந்த..?" ஊர்மிளா சிநேகிதியை அணைத்துக் கொண்டாள்..

"லாஸ்ட் வீக் வந்தேன்.. தஞ்சாவூருக்குப் போயிருந்தேன்.. உனக்கு மேரேஜாகிருச்சுன்னு அமிர்தா சொன்னா.. ஸோ.. உன் அட்ரஸை அவகிட்ட கேதர் பண்ணிக்கிட்டு பறந்து வந்திட்டேன்.." ராதா கைகளை விரித்துத் தோள்களைக் குலுக்கினாள்..

பலமாதங்கள் கழித்து சந்தித்த தோழியின் வரவில் புதிதாக போன் வாங்க வேண்டும் என்பதை மறந்து

https://t.me/tamilpdfebooks

போனாள் ஊர்மிளா.. ராதாவை வீட்டுக்குள் அழைத்துப் போனாள்.. வனிதாவிடம் ஸ்பெசலாக சமைக்கச் சொல்லி விட்டு ராதாவை அழைத்துக் கொண்டு மாடிக்குப் போய் விட்டாள்..

ஹாலில் குத்துக்கல்லைப் போல உட்கார்ந்திருந்த அகல்யாவிடம் ராதாவை அவள் அறிமுகம் செய்து ைவக்கவில்லை..

அவளுக்குத் தெரியும்.. அறிமுகம் செய்து வைத்தால் வேண்டுமென்றே அநாகரிகமாக எதையாவது அகல்யா பேசி வைப்பாள்.. ராதா படு புத்திசாலி.. அந்த வீட்டில் ஊர்மிளாவுக்கு இருக்கிற பிரச்னையை கண்டுபிடித்து விடுவாள்.. அது எதற்கு என்ற எண்ணம் ஊர்மிளாவுக்கு..

அதை உணராத அகல்யாவோ.. இவளுக்கெல்லாம் என்ன கணக்கு என்று அகல்யாவிடம் ராதாவை அறிமுகப் படுத்தாமல் திமிராக ஊர்மிளா அழைத்துக் கொண்டு போய் விட்டாள் என்று கொந்தளித்தாள்..

‘எவளோ வருகிறா.. இவ அவளை கட்டியணைச்சு வீட்டுக்குள்ள கூப்பிட்டுக்கிட்டு வர்றா.. ஹாலில் குத்துக் கல்லாட்டம் வீட்டுக்கு பெரிய மனுசி உட்கார்ந்திருக்கேன்.. கொஞ்சம் கூட என்னை மதிக்காம அவளுக்கு ஸ்பெசலா சமைக்கச் சொல்லிட்டு மாடிக்கு அழைசசுக்கிட்டுப் போறா.. இவ மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கிறா..?’

https://t.me/tamilpdfebooks

கொதிப்புடன் அவளுடைய அறைக்குப் போன போது அங்கே செல்போன் அலறிக் கொண்டிருந்தது..

அந்த போன்.. காணாமல் போய் விட்டதாக ஊர்மிளா நினைத்துக் கொண்டிருக்கும் அவளுடைய செல்போன்..!

'இந்த போனில சிரிச்சுச் சிரிச்சுப் பேசித்தானே உன் புருசனுடன் குடும்பம் நடத்துவ..? போனை ஒளிச்சு வைச்சுட்டா என்ன பண்ணுவ..?'

இந்த குரூரத்துடன்தான் அவள் ஊர்மிளாவின் போனைக் கைப்பற்றி ஒளித்து வைத்தாள்.. போனில் பேச முடியாமல் ஊர்மிளா படும் பாட்டில் அவளுக்கு ஊட்டிக் குளிரில் இருப்பதைப் போல சில்லென்று இருந்தது.. ஊர்மிளாவின் தவிப்பில் இன்பம் கண்டு கொண்டிருந்தவளுக்கு ஊர்மிளாவின் போனில் 'நரேந்திரன் அழைக்கிறான்..' என்ற எழுத்துக்களைக் கண்டதும் குறுக்குவழியில் புத்தி போனது..

அகல்யா ஊர்மிளாவின் போனை சுவிட்ச் ஆப் தான் செய்து வைத்தாள்.. அன்று யதேச்சையாக அதை உயிர்ப்பித்து அந்த போனில் யார்யாரின் பெயர்கள் இருக்கின்றன.. யாருடன் அவள் பேசுகிறாள்.. நரேந்திரனுடன் பேசும் போது எத்தனை மணித்துளிகள் வரை பேசியிருக்கிறாள் என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்தாள்.. மற்ற கால்கள் சில நொடிகளுடன் முடிவடைந்து.. நரேந்திரனுடனான கால் மட்டும் மணித்

https://t.me/tamilpdfebooks

துளிகளைக் கடந்து மணிக்கணக்கில் நீண்டிருந்ததைக் கண்டவளின் கண் சிவந்தது..

'கைகரி.. என்ன மாய்மாலம் பண்ணி அவனைக் கைக்குள்ள போட்டுக்கிட்டாளோ.. தெரியலையே..'

மனதுக்குள் புலம்பியவள் செல்போனை அணைக்க மறந்து அப்படியே விட்டு விட்டு ஹாலுக்குப் போய் விட்டாள்..

திரும்பி வந்த போது ஒலித்த போனைப் பார்த்தவள்.. கண்கள் பளீரிட அதை எடுத்துக் காதில் வைத்தாள்..

"என்ன நரேன்.. எப்படிப்பா இருக்க..? ஊர்மிளாவா..? இப்பத்தானே இங்கேயிருந்தா.. எங்கே போனான்னு தெரியலையே.. செல்போனை வேற வீட்டில் தூக்கிப் போட்டுட்டுப் போயிருக்கா.. இங்கே பகல்ன்னாலும் நீ போயிருக்கிற இடத்திலே நைட்டாகியிருக்குமே நரேன்.. கொஞ்சமாவது நீ போன் பண்ணுவன்னு அவ நினைச்சுப் பார்க்க வேணாமா..? உன்கிட்டச் சொல்ல யோசனையாய் இருக்கு நரேன்.. அடிக்கடி ஊர்சுத்தப் போயிடறா..." என்று பற்ற வைத்தாள்..

அடுத்து அவன் பேசியபோது...


"யாரு..? நரேந்திரனாப்பா.. உன் பெண்டாட்டி செய்கிறது கொஞ்சம் கூட சரியில்லைப்பா.. செல்போனைக் கூடக் கவனிக்காம ஓட்டமா ஓடிப் போயிட்டா.. யாரோ பேசுகிறாங்கன்னு பார்த்தா நீ பேசற.. கண்றாவிப்பா.. வெளியே தலைகாட்ட முடியலை.." என்ற ரீதியில்

https://t.me/tamilpdfebooks

எதையெதையோ பேசிவிட்டு போனை அணைத்து விட்டாள்..

அறையை விட்டு வெளியே வந்தாள்.. டைனிங் ஹாலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஊர்மிளாவும்.. ராதாவும் பால்யகால நினைவுகளில் வாய் விட்டுச் சிரித்தார்கள்.. அதில் அகல்யாவின் முகம் கடுத்தது.. அவள் மனம் வஞ்சம் கொண்டது..

'சிரிக்கிறயாடி.. சிரி.. இந்தச் சிரிப்பு எத்தனை நாளைக்கு நிலைக்குதுன்னு பார்க்கலாம்..'



என் விரலோடு விரல் பிணைந்தும்..
விரல்விட்டு நகர்ந்து விட்ட..
அழகான ராட்சசி நீ....

ராதாவுடன் பேசிக் கொண்டிருந்ததில் ஊர்மிளாவின் மன ரணம் கொஞ்சம் கொஞ்சம் ஆறுவதைப் போல இருந்தது..

ராதாவும்.. அமிர்தாவும்.. ஊர்மிளாவின் பள்ளிப் பருவ தோழிகள்.. எல்.கே.ஜியிலிருந்து பிளஸ் டூ வரை ஒரே செக்சனில்.. ஒரே பள்ளியில்.. ஒரே பெஞ்சில் அருகருகே அமர்ந்து ஒன்றாகப் படித்தவர்கள்.. அவர்கள் மூவருக்கும்..

https://t.me/tamilpdfebooks

'மூவர் குழு..'

என்று பள்ளியில் பட்டப் பெயரே இருந்தது.. பிளாஸ்டூ முடித்தவுடன் அமிர்தா தஞ்சை மருத்துவ கல்லூரியில் சேர்ந்து விட்டாள்.. ராதாவோ.. சென்னை ஐ.டி.ஐயில் என்ஜினியரிங் படிக்கப் போய் விட்டாள்.. ஆசிரியை வேலையில் ஆர்வமுள்ள ஊர்மிளா பட்டப் படிப்பில் காலடி வைத்தாள்.. அங்கே வீணா போல பல தோழிகள் கிடைத்தாலும்.. எவராலும் அமிர்தா, ராதாவின் இடத்தை இட்டு நிரப்ப முடியவில்லை..

அந்த மூன்று தோழிகளுக்கும் இடையே நிலவிய நட்பு ஆத்மார்த்தமானது.. அருமையானது.. ஆழமானது..

ஒரு கண்ணில் அடிபட்டால் மறு கண்ணுக்கு வலிக்கும்.. இங்கேயோ.. ஒருத்திக்கு அடிபட்டால்.. மற்ற இருவருக்கும் வலிக்கும்.. அப்பேற்பட்ட நட்பு அவர்களுடைய நட்பு...

அவ்வளவு நெருக்கமான தோழி.. வெளி நாட்டிலிருந்து ஊர்மிளாவைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறாள் எனும் போத அவளுக்கான சிறப்பான வரவேற்பை ஊர்மிளா தர வேண்டாமா..? அது அவள் வாழும் வீடல்லவா..? அங்கே அவளுடைய தோழியை உபசரிக்கும் உரிமையும், கடமையும் அவளுக்கு இருக்கிறதல்லவா..?

இந்த நினைவில்தான் ஊர்மிளா ராதாவுக்காக விருந்து சமைக்கச் சொன்னாள்.. அவளுடன் உட்கார்ந்து சிரித்துப் பேசியபடி சாப்பிட்டாள்.. ராதாவுடன் அன்றைய பொழுதைக் கழித்தாள்..

https://t.me/tamilpdfebooks

"இங்கே.. நம்ம வீட்டிலேயே தங்கிக்கடி ராதா.. நான் உனக்கு ஊரைச் சுற்றிக் காட்டறேன்.." ஊர்மிளா சொல்லிப் பார்த்துவிட்டாள்..

"இல்லைடி.. இங்கே என்னோட ஆண்ட்டி வீடு இருக்கு.. வந்தவுடன் உன் வீடு எங்கேயிருக்குன்னு தெரியாம அங்கே ஸ்டே பண்ணிட்டேன்.. இப்பக் கிளம்பி வந்தா.. சரியாயிருக்காது.." ராதா மறுத்து விட்டாள்..

"நியுயார்க்கிலேயே செட்டிலாகிட்டயா..?"

"ம்ம்ம்.. அங்கே சிட்டிசன்ஷிப் கிடைச்சிருச்சு.."

"எப்படி..?"

"அங்கே சிட்டிசனா இருக்கிறவரை மேரேஜ் பண்ணிக்கிட்டேன்.."

இலகுவாக் சொல்லி விட்டு ராதா சிரித்தாள்.. எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் அவளது தன்மையில் ஊர்மிளாவுக்கு ஏக்கமாக இருந்தது.. இதைப் போல அவளால் ஏன் இருக்க முடியவில்லை.. நடக்க இயலாமல் கால்களில் இரும்புக்குண்டைக் கட்டி விட்டதைப் போல தளைகளால் அவளை சிறை படுத்தியது யார்..?

"ராபிட்சன் இஸ எ வெரி குட் மேன்.. எ பெண்டாஸ்டிக் ஹஸ்பெண்ட்.." ராதா சொல்லிக் கொண்டே போனாள்..

வெள்ளைக்காரரை திருமணம் செய்து கொள்வதில் இந்த அளவுக்கு சந்தோசம் கொள்ள முடியுமா என்று ஊர்மிளா யோசித்தாள்..

https://t.me/tamilpdfebooks

காதலுக்கு நாடேது.. மொழியேது.. மதமேது.. இனமேது..?

"அப்பா எப்படியிருக்கிறார்..?"

வாஞ்சையுடன் விசாரித்தாள் ராதா.. அவளை சோமசுந்தரத்திற்கு மிகவும் பிடிக்கும்.. ராதா ஒரு வகையில் பொதுவுடைமை வாதி.. சோமசுந்தரத்திடமிருக்கும் தடித்தடியான கனம் மிகுந்த புத்தகங்களை அவள் பள்ளிப் பருவ நாள்களிலேயே விரும்பிப் படிப்பாள்.. ஊர்மிளாவின் வீட்டுக்கு வரும்போதெல்லாம் சோமசுந்தரம் ஆற்றுகிற சொற்பொழிவை உன்னிப்பாக கேட்பாள்..

மற்றவர்களிடமிருந்து ராதா வித்தியாசப்பட்டவளாக இருந்தாள்.. கழுத்து.. கை.. காதுகளில் நகை அணிய மாட்டாள்..

"நகைங்கிறதும் ஒரு வகையில் பெண்களை அடிமை செய்ய உபயோகப்படுத்தும் தளைதான்.." என்பாள்..

என்ஜினியரிங் படித்து விட்டு.. முதலாளித்துவத்தின் ஒட்டு மொத்த பிறப்பிடமான நியுயார்க்கில் ஒரு மல்ட்டி இண்டர்நேசனல் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து லட்சம்.. லட்சமாய் சம்பாதிப்பவள்.. அங்கேயே பிறந்து வளர்ந்த வெள்ளைக்கார ராபிட்சனைத் திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்துகிறவள் சோசலிசத்தை விடாமல் கெட்டியாக பிடித்துக் கொண்டிருப்பதில் ஊர்மிளாவுக்குள் ஆச்சரியம் வந்தது.

ராதாவுடன் பேசும்போது அவளுக்கு சோம சுந்தரத்துடன் பேசுவதைப் போலவே இருந்து வைத்ததில்..

https://t.me/tamilpdfebooks

அவள் இருட்டும் வரை தோழியுடன் பேசிக் கொண்டிருந்தாள்.. இருட்டிய பிறகு கிளம்பியவளை காரில் விட்டுவிட்டு வரச்சொல்லி ரமேஷிடம் சொன்னாள்..

"உன் அப்பா உன்னைக் கொடி பிடிக்கிற வருக்குத்தான் மேரேஜ் பண்ணி வைப்பாருன்னு நினைச்சேன்.. நீ என்னடான்னா முதலாளித்துவத்தின் முதல் படியிலே நிற்கிற.." ஆங்கிலத்தில் சொன்னாள் ராதா..

அதை ரசித்துச் சிரித்தாள் ஊர்மிளா.. தோழியின் கைவிரல்களோடு தன் விரல்களைப் பிணைத்துக் கொண்டாள் ராதா.. அவர்களின் அன்பில் ஆச்சரியப்பட்ட அர்ச்சனாவிடம்..

"உன் அண்ணியை நியுயார்க்குக்கு 'கடத்திக்கிட்டுப் போகப் போறேன்.." என்றாள்..

"நீ என்னடி கடத்தறது..? நானே உன்கூட ஓடி வந்து விடமாட்டேனா..?" ஊர்மிளா சொன்னாள்..

மறுநாள் வருவதாக சொல்லி விட்டு ராதா கிளம்பிப் போனவுடன் தள்ளி நின்ற தனிமையுணர்வும், வெறுமையும் ஊர்மிளாவைச் சூழ்ந்து கொண்டன..

'அடடா..! புது போன் வாங்கனும்னு கிளம்பியவ .அதை மறந்திட்டேனே.. ராதாகிட்ட சொல்லியிருந்தா .அவ நாளைக்குக் காலையிலே வரும் போது புதிதா ஒரு போனை வாங்கிட்டு வந்திருப்பாளே.. முட்டாள் போல இருந்திட்டேனே..'

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவுக்கு துக்கமாக இருந்தது.. புது போன் கூட இருக்கட்டும்.. ராதா அன்று முழுவதும் ஊர்மிளாவின் பக்கத்தில்தானே இருந்தாள்..? அவளுடைய போனை வாங்கி அதிலிருந்து நரேந்திரனுக்குப் பேசியிருக்கலாமே.. அதைக்கூட ஊர்மிளா செய்ய மறந்து விட்டாள் என்றால்.. அவளுக்கு நரேந்திரனின் மீது நினைவே வரவில்லையா..?

ஊர்மிளாவுக்கு அழ வேண்டும் போல இருந்தது.. அவள் விம்மி அழுதாள்.. நரேந்திரன் அருகில் இல்லாத தனிமையையும், வெறுமையையும்.. ராதாவின் அண்மை விரட்டுகிறது என்பதினால்தானே அவள் தோழியுடன் அன்றைய பொழுதை கழித்தாள்..?

முதல்நாளைப் போலவே இரவெல்லாம் உறக்க மில்லாமல் கழித்து விட்டு விடியும் போது உறங்கி வைத்தாள் ஊர்மிளா..

மறுநாள் விழிக்கும் போதே.. இன்று எப்படியாவது நரேந்திரனிடம் பேசிவிட வேண்டும் என்ற எண்ணமே அவளுக்குள் தகித்தது..

ஒன்று ராதாவின் போனில் பேசிவிட வேண்டும்.. இல்லையென்றால் புதிதாக ஒரு போனை வாங்கியாவது பேசிவிடவேண்டும்..

'இதுக்கு மேலே தாங்காது..'

நரேந்திரனைப் பார்க்காமலிருப்பதே பெருங் கொடுமை.. அவன் குரலைக் கேட்கவும் முடியாமலிருப்பது

https://t.me/tamilpdfebooks

கொடுமையிலும் கொடுமை.. ஊர்மிளாவுக்குள் உத்வேகம் வந்தது..

முதல்நாளைப் போல இல்லாமல் அன்று அதிகாலையிலேயே விழிப்பு வந்துவிட்டதில்.. அர்ச்சனா கல்லூரிக்கு கிளம்பிப் போவதற்கு முன்னால் அறையை விட்டு வெளியே வந்துவிட்டாள் ஊர்மிளா..

"ஹாய் அண்ணி.."

அப்போதுதான் ஜாகிங் முடிந்து வந்த அர்ச்சனா உற்சாகமாக காலை வணக்கம் சொன்னாள்..

"என்ன இன்னைக்கு இவ்வளவு சீக்கிரமாவே ரெடியாகிட்டிங்க..?"

அர்ச்சனாவின் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் வாயில் வந்ததை சொல்லி வைத்தாள் ஊர்மிளா..

"என் பிரண்ட் வரேன்னு சொல்லியிருக்கா.. இன்னைக்கு அவுட்டிங் போகிறதா இருக்கோம்.. அதான்.."

வேறு என்ன சொல்ல முடியும்..? என் போன் தொலைந்து விட்டது.. என் கணவனுடன் பேச முடியாமல் நான் தவியாய் தவிக்கிறேன்.. உன்னிடம் கேட்க முடியவில்லை.. வீட்டிலிருக்கும் லேண்ட் லைனிலும் பேச முடியவில்லை.. அதானல் என் தோழியின் போனை இரவல் வாங்கிப் பேசப் போகிறேன்.. அவளுடன் போய் புதிதாக ஒரு போனை வாங்கிக் கொள்ளவும் போகிறேன்.. அந்த நினைவிலேயே இரவு முழுவதும் தூக்கமில்லாமல் இருந்ததால் அதிகாலையிலேயே நான் குளித்துத் தயாராகி விட்டேன் என்றா சொல்ல முடியும்..?

https://t.me/tamilpdfebooks

அர்ச்சனா திருமண வயதில் இருக்கும் பெண்.. அவளிடம் போய் இந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியுமா..?

"ஓ.. அவங்க உங்களோட திக் பிரண்டா அண்ணி..?" உதடுகளைக் குவித்ததாள் அர்ச்சனா..

"ஆமாம்.." மென்மையான முறுவலித்தாள் ஊர்மிளா..

கீழே இறங்கி வந்தவளின் மனம் பரபரப்பாக இருந்தது.. நரேந்திரன் அவளுடைய கணவன் என்பது மறந்து போய் காதலனுடன் பேசத்துடிக்கும் துடிப்புடன் இருந்தாள் ஊர்மிளா.. தோழி வரும்வரை பொறுமை காக்க முடியாது என்று தோட்டத்தில் சுற்றிப் பொழுதைக் கழித்தாள்..

அவளுடைய நடமாட்டங்களைக் கண்காணித்துக் கொண்டிருந்த அகல்யா.. அருண்குமாரைக் கண்டதும்..

"என்னவோ.. குட்டி போட்ட பூனையைப் போல இல்ல இவ தோட்டத்துக்குள்ள ரோந்து சுத்தறா.." என்று வியாக்கினம் படித்தாள்..

"உங்களுக்கு வேற வேலையே இல்லையா..?" அவன் சுள்ளென்று எரிந்து விழுந்து விட்டுச் சாப்பிடப் போய் விட்டான்..

வாசலில் கார் சப்தம் கேட்டது.. ஊர்மிளா ஓடிப் போய் பார்த்தாள்.. ராதா இறங்கிக் கொண்டிருந்தாள்..

"ஏண்டி.. இவ்வளவு நேரம்..?" என்று பரபரத்த தோழியை விசித்திரமாகப் பார்த்துவிட்டு கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள் ராதா..

https://t.me/tamilpdfebooks

அது எட்டு என்றது.. ஊர்மிளாவின் முகத்துக்கு நேரே கையை உயர்த்திக் காட்டினாள்..

"எட்டு மணிக்கெல்லாம் வந்துட்டேன்.. நீ என்னடான்னா ஏண்டி இவ்வளவு நேரம்ங்கிற.. என்னடி ஆச்சு உனக்கு..?"

"சும்மா.." ஊர்மிளா அசடுவழிந்தாள்..

"பொறு கால்டாக்ஸிக்கு பணத்தைக் கொடுத்துட்டு வர்றேன்.."

ராதா கைப்பையிலிருந்து பணத்தை எடுத்து கொடுத்து விட்டு தோழியுடன் நடந்தாள்.. முதல் நாள் போல ஜீன்ஸீம், தொளதொள சட்டையுமாக இல்லாமல்.. ஜீன்ஸீம், குர்தாவுமாக இருந்தாள்.. இன்று விரித்து விடப் பட்டிருந்த முடி குதிரை வாலாக ஒரு கிளிப்பில் அடங்கியிருந்தது.. மற்றபடி எப்போதும் போல பொட்டு கூட வைக்கையில்லாமல் இருந்தாள்..

துடைத்து விட்டதைப் போன்ற முகம்... வெண்மை கலந்த சந்தன நிறத்தில் மாசு மருவில்லாமல் பளிச்சென்று இருந்தது.. மாடியிலிருந்து இறங்கி வந்த அர்ச்சனா.. ராதாவைக் கண்டதும்..

"வாவ்.." என்றாள்..

அவளது 'வாவ்' என்ற ஆச்சரியத்தில் சாப்பிட்டு விட்டு வந்த அருண்குமார் ராதாவைப் பார்த்தான்.. நேருக்கு நேரான பார்வையுடன் இயல்பாக புன்னகை செய்தாள் ராதா.. பதிலுக்கு அவனும் சிரித்து வைத்தான்.. அகல்யா

https://t.me/tamilpdfebooks

கல்லுக்குண்டைப் போல சோபாவில் உட்கார்ந்தபடி அவர்களை நாடகம் பார்ப்பதைப் போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்..

"எதுக்கு இந்த 'வாவ்..?'" அர்ச்சனாவிடம் கேட்டாள் ராதா..

"எந்த மேக்கப்பும் இல்லாம எப்படிங்க இவ்வளவு அழகா இருக்கீங்க..? டிரஸ்ஸீம் கேசுவலா பண்ணிக் கறிங்க.. ஜ்வல்ஸ் போட்டுக்கறதில்லை.. ஆள் மட்டும் அட்ராக்டிவ்வா இருக்கீங்க.. எப்படிங்க..?"

அர்ச்சனாவின் வியப்பில் அருண்குமார் ராதாவை ஊன்றிப் பார்த்து வைக்க..

"எனக்கு மேரேஜ் ஆயிருச்சு.." என்றாள் ராதா..

ஊர்மிளாவுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அருண் குமாருடன் அவள் நின்று பேசியதே இல்லை எனும் போது.. சிரித்து எங்கே பேசியிருக்கப் போகிறாள்..? முதன் முறையாக அவன் முன்னால் நின்று சிரித்தவளை வெட்கத்துடன் பார்த்தான் அருண்குமார்..

"நான் சும்மாதான் பார்த்தேன் அண்ணி.." விளக்கமும் சொன்னான்..

இப்போது பெண்கள் மூவரும் சேர்ந்து கொண்டு சிரித்ததில் அவன் முகம் சிவந்து விட்டது.. அங்கிருந்து வேக நடையுடன் அகன்று விட்டான்..

"இப்படித்தான் எதையாவது பேசி வைப்பான்.." அர்ச்சனா செல்லமாக சொன்னாள்..

https://t.me/tamilpdfebooks

தோழிகள் இருவரும் வெளியே கிளம்பினார்கள்.. ஊர்மிளா செல்போன் வாங்க வேண்டும் என்று சொல்ல முனைந்தபோது ராதாவிற்கு நியுயார்க்கிலிருந்து போன் வந்து விட்டது.. போன் பேசி முடித்தவள் ஊர்மிளாவிடம்..

"என் டெபுடேசன் முடிந்து விடும்போல இருக்கு.." என்று சொன்னாள்..

'ராதா கிளம்பிருவாளா..?'

நரேந்திரன் இல்லாத தனிமையில் நிராதரவாக நிற்பதைப் போன்ற உணர்வுடன் இருந்த ஊர்மிளா செல்போனை மறந்து போனாள்.. ராதாவின் நியுயார்க் பயணத்தைப் பற்றிப் பேசியபடி அன்றைய நாள் ஓடிவிட்டது.. மாலையில் வீடு திரும்பியவர்கள் அகல்யாவைப் பார்த்ததும் தள்ளிப் போனார்கள்..

ஊர்மிளாவும், ராதாவும் அகல்யாவின் காதுகளுக்கு எட்டாத வண்ணம் தாழ்ந்த குரலில் பேசியபடி சற்றுத் தள்ளியிருந்த சோபாவில் உட்கார்ந்தார்கள்.. அகல்யா காதைத் தீட்டி அவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்க முயன்றாள்.. அதை பார்த்தும் பாராததைப் போல பேசிய ராதா..

"உன் மேரேஜ் அரேன்ஜீடு மேரேஜா இருந்திருக்க முடியாதுதான்.." என்று சொன்னாள்...

"நோ.. நோ.. நரேன் என்னிடம் காதல் சொன்னதும் அப்பாவிடம் பேசச் சொல்லி நான்தான் சொன்னேன்.. இது அப்பா முடிவு பண்ணிய மேரேஜ்தான்.." என்றாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

"ஐ..ஸீ.. இப்படிப்பட்ட சம்பந்தி இந்த வீட்டில இருக்கிறாங்கன்னு தெரிந்தும் அப்பா இந்த மேரேஜ்க்கு ஓகேன்னு சொல்லியிருக்காருன்னா.. ஆச்சரியம்தான்.." தோள்களைக் குலுக்கினாள் ராதா..

ஊர்மிளா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அகல்யாவிடம் பேசிக் கொண்டிருந்த அர்ச்சனா பசிப்பதை உணர்ந்தவளாக டைனிங் ஹாலுக்குப் போனாள்.. அவள் கடந்து போகும் போது மிகச் சரியாக லேண்ட்லைன் போனின் மணியொலிக்க அவள் போனை எடுத்துக் காதுக்கு கொடுத்து.


"ஹலோ.." என்றாள்..

"அர்ச்சனா.." என்றான் மறுமுனையில் நரேந்திரன்..

சிலசமயங்களில் கடவுள் ஆடும்.. விளையாட்டிற்கான காரணம் யாருக்கும் பிடிபடு வதில்லை.. பிடிபட முடியாத ஆன்மீகம்தானே பரபிரம்மம்..? எந்த நரேந்திரனின் குரலைக் கேட்க முடியாமல்.. அவனோடு பேச முடியாமல்.. அவன் நினைவாகவே அவனுடைய காதல் மனைவி கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாளோ.. அந்த நரேந்திரன் அவளுடன் பேச லேண்ட்லைன் போனில் அழைக்கிறான்.. கைக்கெட்டும் தொலைவில் போனிருந்தும்.. அதை அறியாதவளாக அன்றாவது கணவனுடன் பேசி விட முடியுமா என்ற ஏக்கத்துடன் தோழியிடம் பேசிக் கொண்டிருக்கிறாள் ஊர்மிளா..

இறைவன் நடத்தும் இதுபோன்ற விளையாட்டுக்களில் அலைமேல் துரும்பாக அலைக்கழிக்கப்படுவது ஏழைமனம் கொண்ட ஜீவன்கள் தான்..

https://t.me/tamilpdfebooks



மன்னிப்பை யாசித்தும்..
மன்னிக்கத் தெரியாத..
அழகான ராட்சசி நீ....

"அண்ணா..."

அர்ச்சனாவின் வாயசைவை அருகிலிருந்த ஊர்மிளா கவனிக்கவில்லை.. தொலைவிலிருந்த அகல்யா கவனித்து விட்டாள்.. புருவங்கள் சுருங்க.. அவள் ஊர்மிளாவை கவனிப்பதை விட்டுவிட்டு.. அர்ச்சனாவை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்து விட்டாள்..

நரேந்திரன் அர்ச்சனாவிடம் நலம் விசாரித்து விட்டு..

"அண்ணி எங்கேம்மா..?" என்று கேட்டான்..

"இங்கேதான் இருக்காங்க அண்ணா.. அவங்க பிரண்டோட பேசிக்கிட்டு இருக்காங்க.." என்றாள் அர்ச்சனா..

"அண்ணி போன் ஸ்விட்ச் ஆஃப்ன்னு வருது.. என்னன்னு தெரியலை.. நீ அண்ணியை கூப்பிடறயா.. அவகிட்ட நான் பேசனும்.." என்றான் நரேந்திரன்..

"அவங்க பிரண்டோட பேசிக்கிட்டு இருக்காங்க அண்ணா.."

https://t.me/tamilpdfebooks

"பிரண்டா..? எந்த பிரண்ட்..?"

"எனக்குத் தெரியாதுண்ணா.. நேற்றுப் பூரா அவங்க இங்கேதான் இருந்தாங்க.. இப்ப வந்திருக்காங்க.. லைன்ல இருங்கண்ணா.. அண்ணியைக் கூப்பிடறேன்.."

அர்ச்சனா போனை வைத்து விட்டு ஊர்மிளாவின் பக்கம் திரும்ப.. அகல்யா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அவளைக் கையை ஆட்டிக் கூப்பிட்டாள். அர்ச்சனா ஊர்மிளாவை மறந்து விட்டு அகல்யாவிடம் ஓடினாள்..

"என்னம்மா..?"

"நெஞ்சு வலிக்குதுடி.. உன் ரூமில பச்சைக் கலர் டப்பாவில ஒரு மாத்திரை வைச்சிருப்பியே.."

"அதை உங்க ரூமுக்கு கொண்டு போகச் சொன்னேனே.. நீங்க எடுத்துக்கிட்டுப் போகலையா..?"

"இல்லையேடி.. நல்லாத்தானே இருக்கோம்ன்னு நினைச்சுட்டேன்.. இப்ப இந்த வலி வலிக்குதேடி.. ஓடிப் போயி ஒரு மாத்திரையை எடுத்தக்கிட்டு வாடி.. என்ன ராஜாத்தியில்ல.."

பெற்றவள் நெஞ்சுவலியென்று துடிக்கும் போது மற்ற நினைவு எப்படி இருக்கும்..?

அர்ச்சனா ஊர்மிளாவிடம் நரேந்திரன் லேண்ட் லைன் போனில் பேசுவதற்காக காத்திருக்கிறான் என்பதைச் சொல்ல மறந்து மாடிப்படிகளல் தாவி ஓடினாள்.. அவள் அந்தப் பக்கம் போனதும்.. இந்தப் பக்கம் எழுந்து கொண்ட

https://t.me/tamilpdfebooks

அகல்யா வேகமாக லேண்ட் லைன் போனின் பக்கம் போய் அதை எடுத்து..

"ஹலோ.." என்றாள்..

"நரேன் பேசறேன்.. ஊர்மிளாவைக் கூப்பிடச் சொல்லி அர்ச்சனாகிட்டச் சொன்னேனே.. அவ எங்கே..?"

"அதையேன்ப்பா கேட்கிற.. அர்ச்சனா வந்து சொன்னா.. அண்ணி.. அண்ணி.. அண்ணன் உங்க கூடப் பேசனும்னு லேண்ட் லைன் போனில் வெயிட் பண்ணிக் கிட்டு இருக்காருன்னு சொன்னா.. உன் பெண்டாட்டி இருந்த இடத்தை விட்டு அசைந்தால்தானே.. சொல்கிறதுக்கே சங்கடமா இருக்கு நரேன்.. ஊர்மிளா கூடப் படிச்சவனாம்.. ராதாகிருஷ்ணன்னு பெயராம்.. அந்தக் கிருஷ்ணனைப் போலவே சிரிச்சுச் சிரிச்சுப் பேசறான்.. இவளும் ராதா.. ராதான்னு அவன்கூடக் குழையறா.. வீட்டில் அர்ச்சனாவும் இருக்காங்கிற நினைப்பு வேணாமா..? அந்த ராதாகிருஷ்ணன் கூடப் பேசிக்கிட்டு அவருக்கென்ன வேலை. எப்பப் பார்த்தாலும் போனில் கூப்பிட்டுக்கிட்டே இருப்பாரு... அப்புறமா பேசிக்கறேன் நீ போன்னு சொல்லிட்டாப்பா.. அந்த ராதாகிருஷ்ணன் கேலியா சிரிக்கிறான்.. எனக்கு கோபம், கோபமா வந்துச்சு.. ஏம்மா கட்டின புருசன்கூடப் பேசாம கண்டவன் கூடப் பேசிக்கிட்டு இருக்கிறதுதான் உன் வேலையான்னு கேட்கலாம்ன்னு தான் நினைச்சேன்.. நீ என்ன சொல்லுவியோன்னு பேசாம இருந்திட்டேன் நரேந்திரா.. வீட்டில கூப்பிட்டு வைச்சுக் கிட்டு வெட்கமில்லாம பேசிக்கிட்டு இருக்கிறா.. வேலையாள்க இருக்கிறாங்க.. அர்ச்சனா இருக்கிறா..

https://t.me/tamilpdfebooks

அருண் இருக்கிறான்.. இந்த நினைப்பெல்லாம் இல்லா... எல்லோரின் முன்னாலும் இவ இப்படிக் கூத்தடிச்சா எப்படி நரேந்திரா..?"

அகல்யா இன்னும் சொன்னாள்.. ராதாகிருஷ்ணன் என்ற நண்பன்தான் ஊர்மிளாவைச் சந்திக்க வந்திருப்பதாக அழகாக கதை பிணைந்தாள்.. மறுமுனையில் கேட்டுக் கொண்டிருந்த நரேந்திரன் முகம் மாறினான்.. ஒரு கட்டத்திற்கு மேல் அகல்யா பேசுவதைக் கேட்க முடியாமல் போனை வைத்து விட்டான்..

அகல்யா நிம்மதியாக பழையபடி தனது இருப்பிடத்துக்கே திரும்பிப் போய் தோழிகளை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

ஊர்மிளாவிடம் பேசியபடி ஊடும்.. பாடும்... அகல்யாவை பார்த்து வைத்த ராதா..

"போன பிறவியில உன் மதர் இன்லா வாட்ச்வுமனா பிறந்திருப்பாங்களோ.." என்று சந்தேகம் கேட்டாள்..

"போடி.." ஊர்மிளாவிற்கு சிரிப்பு வந்தது..

என்ன நடந்தது.. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருந்தால் அவளுக்கு அந்தச் சிரிப்பு வந்திருக்காதுதான்..

இந்த வாழ்க்கையை வாழும் மனித ஜீவன்கள் அப்படித்தானே சிரித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்..?

மாடியிலிருந்து இறங்கி ஓடி வந்த அர்ச்சனா கையிலிருந்த மாத்திரையை அகல்யாவிடம் நீட்டினாள்..

https://t.me/tamilpdfebooks

மகளைக் கண்டதும் இயல்பாக இருந்த முகத்தை அகல்யா கோணிக் கொண்டு ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வரும்படி மகளைப் பணித்தாள்..

பதட்டத்துடன் அர்ச்சனா ஓடினாள்.. ராதாவின் புருவங்கள் சுருங்கின.. கேள்வியாகப் பார்த்த ஊர்மிளாவிடம்..

"உன்னோட மதர் இன் லா செம ஆக்ட்டிங்குடி.." என்றாள்..

"ஆர்ட்டுக்கும் இவங்களுக்கும் ரொம்ப தூரம்.." என்றாள் ஊர்மிளா..

"ஆக்டிங்கிற்கும் இவங்களுக்கும் ரொம்ப ரொம்ப பக்கம்டி ஊர்மிளா.." சிரிக்காமல் சொன்னாள் ராதா..

ஏன் அப்படிச் சொல்கிறாள் என்று ஊர்மிளாவுக்குப் புரியவில்லை.. அர்ச்சனா அகல்யாவுக்கு தண்ணீர் கொண்டு வந்து தந்தாள்..

"நீ போ.. நான் மாத்திரையை போட்டுக்கறேன்.." அகல்யா மகளைக் கடத்தி விடுவதில் குறியாக இருந்தாள்..

"நீங்க முதல்ல டேப்லெட்டை போடுங்க.. அதுக்கப்புறமா.. நான் போறேன்.." அர்ச்சனா பிடிவாதம் பிடித்தாள்..

'விட மாட்டாளே..'

வேறு வழியில்லாமல் மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு தண்ணீரைக் குடித்தான் அகல்யா.. நிம்மதியுடன் அர்ச்சனா அந்தப் பக்கம் திரும்ப.. இந்தப் பக்கம் நாக்குக்கு அடியில் மறைத்து வைத்திருந்த மாத்திரையை எடுத்து ஜன்னல் வழி வெளியே விட்டெறிந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"செம பெர்பார்மன்ஸ்.."

நடப்பதை பார்த்துக் கொண்டிருந்த ராதா வியந்தாள்..

"எதைச் சொல்கிற..?"

பேதையாய் விழி விரித்தாள் ஊர்மிளா.. தோழியை இரக்கத்துடன் பார்த்தாள் ராதா..

'இப்படிப்பட்டவர்களின் மத்தியிலா இவள் வாழ்கிறாள்..?'

ராதாவின் இரக்கப் பார்வையில் முகம் மாறின ஊர்மிளாவிடம்..

"அண்ணி.. அண்ணன் உங்களுக்காக லேண்ட் லைன் போனில் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கார்.." என்று சொன்னாள் அர்ச்சனா..

"என்னது..?"

பதறிப்போன ஊர்மிளா வேகத்துடன் எழுந்து லேண்ட்லைன் போனுக்கு அருகே ஓடினாள்.. அதை குரூரத்துடன் பார்த்துக் கொண்டிருந்த அகல்யாவின் முகத்தில் தெரிந்த இகழ்ச்சிச் சிரிப்பில் ராதாவின் மனதில் ஏதோ இடித்தது..

'இங்கே என்னதான் நடக்குது..?'

கணவனிடம் பேசப் போகும் தோழியின் அருகில் செல்வது நாகரிகமில்லை என்று இருந்த இடத்தில் இருந்தபடியே ஊர்மிளாவையும் அகல்யாவையும் மாறி மாறி பார்த்தாள் ராதா..

"போன் கட்டாயிருக்கே.."

https://t.me/tamilpdfebooks

போனைக் காதில் வைத்த ஊர்மிளா பதறினாள்.. அதில் அகல்யாவின் விழிகளில் திருப்தி வருவதை கண்டு கொண்டாள் ராதா..

"இல்லை அண்ணி.. அண்ணன் லைனில்தான் இருந்தாரு.."

"இப்ப இல்லையே அர்ச்சனா.."

"நான் பேசினேனே அண்ணி.."

"எப்ப..?"

"இப்பத்தான்.."

"உடனே என்னிடம் சொல்வதற்கென்ன..? நான் உன் கண்முன்னாலேதானே உட்கார்ந்திருக்கேன்..?"

ஊர்மிளாவின் கண்களில் நீர் திரண்டு விட்டது.. அர்ச்சனா குற்றஉணர்வுடன் கையைப் பிசைந்தாள்..

"இல்லைண்ணி.. நான் சொல்லத்தான் வந்தேன்.. அதுக்குள்ளே அம்மாவுக்கு நெஞ்சு வலின்னு துடிச்சுப் போயிட்டாங்க.. டேப்லெட் டப்பா மாடியில என் ரூமில் இருந்தது.. அதை எடுத்துக்கிட்டு வந்து அம்மாவுக்கு கொடுத்து டேப்லெட்டை விழுங்க வைக்கிற பதட்டத்தில அண்ணன் போனில் வெயிட் பண்றதை உங்ககிட்ட சொல்ல மறந்துட்டேன் அண்ணி.."

"நெஞ்சு வலியா..? யாருக்கு..?"

ஊர்மிளா திரும்பிப் பார்த்தாள்.. அகல்யா அங்கே இல்லை..

https://t.me/tamilpdfebooks

"இப்பத்தான் அவங்க ரூமுக்கு போனாங்க.." ராதா எழுந்து ஊர்மிளாவின் அருகே வந்தாள்..

"ராதா.." ஊர்மிளாவின் குரல் நடுங்கியது..

"ஈ.ஸி ஊர்மி.. உன் சிஸ்டர் இன் லா வேணும்னே எதையும் பண்ணலையே.. அவங்கம்மா செஸ்ட் பெயின்னு துடிச்சுக்கிட்டு இருக்கிறப்ப யாரா இருந்தாலும் அம்மா வைத்தானே முதலில் கவனிப்பாங்க..? இட்'ஸ் கொயட் நேச்சுரல்.."

"நான் அதைத் தப்புன்னு சொல்லவே இல்லையே ராதா.. பட்.."

"ரிலாக்ஸ் ஊர்மி.. அர்ச்சனா இப்பத்தான் காலேஜில இருந்து வந்திருக்கிறா... அவளுக்கு பசிக்குதுன்னு நினைக்கறேன்.. இன்னும் டிபன் சாப்பிடலை போல.."

ராதாவின் கண்களில் தெரிந்த சமிக்ஞையில் அமைதியானாள் ஊர்மிளா..

"அண்ணி.." மன்னிப்புக் கேட்கும் பாவனையில் தழைந்து பேசின அர்ச்சனாவிடம்..

"இட்ஸ் ஆல்ரைட்.. நீ போ அர்ச்சனா.. நான் அப்புறமா உன் அண்ணனிடம் பேசிக்கறேன்.. இது ஒரு விசயமே இல்லை.." என்று சமாதானப் படுத்தி அனுப்பி வைத்தாள்..

"இதுதான் என்னோட ஊர்மிளா.." ராதா பாராட்டினாள்..

அர்ச்சனா பலமுறை மன்னிப்புக் கேட்டபிறகு சாப்பிடப் போனாள்.. ராதா ஊர்மிளாவுடன் தோட்டத்துக்குப்

https://t.me/tamilpdfebooks

போனாள்.. கலங்கிச் சிவந்திருந்த ஊர்மிளாவின் விழிகளை உற்றுப் பார்த்தாள்..

"சம்திங் ராங் ஊர்மி.." என்றாள்..

"அதைத்தான் நானும் நினைத்துக்கிட்டு இருக்கேன்.. நெஞ்சுவலின்னு மகளிடம் சொல்லி மாடிக்கு அனுப்பினவங்க நம்ம முன்னாலே நார்மலா நடந்து வந்து போனை அட்டெண்ட் பண்றாங்க.."

"ஐ திங்க்.. அது உன் ஹஸ்பெண்டோட போன் காலாத்தான் இருந்திருக்கனும்.."

"அப்படித்தான் அர்ச்சனாவும் சொல்கிறா.."

"இவங்களே எதையோ பேசி கட் பண்ணியிருக்காங்க.."

"நானும் அதைத்தான் நினைக்கிறேன் ராதா.."

"அர்ச்சனா கொடுத்த டேப்லெட்டை நாக்குக்கு அடியில் மறைத்து வைத்து அவ முன்னாலே விழுங்குகிறதைப் போல பாவ்லா பண்ணிட்டு அவ திரும்பியதும் எடுத்து ஜன்னல் வழியா தோட்டத்துக்குள்ளே போடறாங்க.."

"இது எப்ப நடந்தது..?"

"ஜஸ்ட் ஃபியு மினிட்ஸ்க்கு முன்னாலே இந்த சீன் நடந்தது.. நான்கூட செம பெர்பார்மென்ஸ்ன்னு சொன்னேனே.."

https://t.me/tamilpdfebooks

"ராதா.."

குரல் நடுங்க தோழியின் கரங்களை இறுக்கமாக பற்றிக் கொண்டாள் ஊர்மிளா.. ராதா ஆதரவாக ஊர்விளாவின் கைவிரல்களைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள்..

"பயப்படாதே.. உன் அப்பாவுக்கு பெண்ணாய் பிறந்துட்டு நீ பயந்து நிற்கக்கூடாது.. எதிர்த்துப் போராடக் கத்துக்கனும்.. உன்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னு வாட்ச் பண்ணு.."

"எனக்கு அது பழக்கமில்லையேடி.."

"நோ அதர் வே.. பழகித்தான் ஆகணும்.. சரியில்லாத மனிதர்கள் மத்தியில் நீ இருக்கிறேன்னா உன்னைச் சுற்றி என்ன நடக்குதுன்னு வாட்ச் பண்ணிக்கிட்டே இருக்கனும் ஊர்மி.. அதுதான் உனக்குப் பாதுகாப்பு.."

'இதை எப்படிச் சமாளிப்பேன்...'

"நோ பிராப்ளம்.. ரெஸ்ட் எடு.. எல்லாம் சரியாகிப் போயிரும்ன்னு நம்பிக்கையோடு இரு.."

"டிரை பண்றேன்.."

"டிரை பண்ணினாலே உனக்கு பாதி வெற்றி கிடைத்த மாதிரிதான்.."

ராதா போய் விட்டாள்.. ஊர்மிளா மனக் கொதிப்போடு தோட்டத்திலிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்தாள்.. அவளுக்கு தனிமை தேவைப் பட்டது.. அவளைச் சுற்றி என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிய அவள் யோசிக்க வேண்டியிருந்தது..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா கண்களை மூடிக்கொண்டாள்.. காலை லேசாக விந்தினாள்.. ஊஞ்சல் ஆட ஆரம்பித்தது.. நரேந்திரனுக்கு மனைவியாகி அந்த வீட்டில் கால் பதித்தது முதல் அந்த நிமிடம் வரை நடந்தவற்றைக் கோர்த்துப் பார்த்தாள்.. கோர்வையின் தொகுதி சொன்ன விடை ஒன்றுதான்..

அகல்யாவுக்கு ஊர்மிளா நரேந்திரனின் மனைவி யானதில் கொஞ்சம் கூட விருப்பமில்லை... அவள் நரேந்திரனையும் ஊர்மிளாவையும் பிரிக்க நினைக்கிறாள்.. அதை வெளிப்படையாக ஊர்மிளாவிடம் சொல்ல அவள் தயங்கவும் இல்லை.. அச்சப்படவும் இல்லை.. அவள் எதற்கும் துணிந்தவள்..

இப்படிப்பட்டவளை எதிர்த்துப் போராட வேண்டிய விதி தனக்கு வாய்த்து விட்டதே என்று ஊர்மிளா தலை வேதனை கொண்டாள்..

அந்த நினைவுடனே அன்றைய நாள் ஓடியது.. இரவு அவள் தூங்கவில்லை..

நரேந்திரன் வெளிநாட்டுக்குப் போனதிலிருந்து அவனுடன் போனில் பேச ஊர்மிளாவால் ஏன் முடியாமல் போகிறது..? முதல் நாள் மாலையில் லேண்ட் லைன் போனில் நரேந்திரனுடன் பேச முடியாமல் அகல்யா தடுத்து விட்டாள்.. அதற்கு முன்னால்..?

'ஏன் இந்தம்மா என் செல்போனை எடுத்திருக்கக் கூடாது..?'

https://t.me/tamilpdfebooks

விடியலை எதிர்கொண்டிருந்த அந்த வேளையில் தான் மின்னல் வெட்டியது போல அந்த சந்தேகம் ஊர்மிளாவின் மனதில் வந்தது.. திட்டம் போட்டு லேண்ட் லைன் போனை லாக் பண்ணி வைத்திருக்கிறாள் என்றால் ஊர்மிளா நரேந்திரனுடன் பேச லேண்ட் லைன் போனை நாடிவருவாள் என்பதை அகல்யா அறிந்த வைத்திருக் கிறாள் என்றுதானே அர்த்தமாகிறது..?

அப்படியென்றால்.. ஊர்மிளாவின் செல்போன் காணாமல் போய் விட்டதை அகல்யா தெரிந்து; வைத்திருக் கிறாள்..


தனது செல்போன் தொலைந்து விட்டதை ஊர்மிளா வாய் திறந்து யாரிடமும் சொல்லாதபோது அகல்யாவுக்கு மட்டும் எப்படி அந்த விவரம் தெரிந்தது..?

'திருடியவளுக்குத்தானே அந்த விவரம் தெரியும்..'

அவள் கோபத்துடன் கீழே இறங்கிவந்தாள்.. தோட்டத்தின் ஊஞ்சலுக்குப் போனாள்.. அவள் தோட்டத்தில் ஊஞ்சாடிக் கொண்டிருப்பதை பார்வை யிட்டபடி அகல்யா வாசல் கேட்டுக்குப் போய் அங்கிருந்த செக்யூரிட்டியிடம் எதையோ கேட்க ஆரம்பித்தாள்..

அகல்யா தெருப்பக்கம் பார்த்தாற்போல் நின்றிருந்த அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் முனைப்போடு ஊர்மிளா எழுந்தாள.. வீட்டுக்குள் நழுவினாள்.. அகல்யாவின் அறைக்குள் போய் அவசரமாக அவள் தேடியபோது செல்போனின் மணி ஒலித்தது.. அது அகல்யாவின் மெத்தைக்கு அடியிலிருந்து வந்தது..

https://t.me/tamilpdfebooks



குருதியினை சுவடாக்கி..
குரூரமாய் விலகி விட்ட
அழகான ராட்சசி நீ....

'மெத்தைக்கு அடியில செல்போனின் சவுண்டடா..?'

அந்த ஓசை.. ஊர்மிளாவின் செல்போனின் ஓசையாக இருந்ததில் ஊர்மிளா மெத்தையைத் தூக்கி விட்டுப் பார்த்தாள்.. அங்கே ஊர்மிளாவின் செல்போன் ஒலித்துக் கொண்டிருந்தது..

'நான் நினைச்சதைப் போலதான் நடந்திருக்கு..'

ஊர்மிளா செல்போனை எடுத்ததும் அகல்யாவின் அறையை விட்டு வெளியேறியிருக்க வேண்டும்.. அவளும் அதைச் செய்யத்தான் முனைந்தாள்.. அழைப்பது யார் என்று செல்போனின் திரையைப் பார்த்தவளுக்கு அவள் நின்று கொண்டிருப்பது அகல்யாவின் அறை என்ற விவரமே மறந்து விட்டது..

'நரேந்திரன் அழைக்கிறான்..'

செல்போனில் ஒளிர்ந்த அழைப்பில் அவள் அனைத்தையும் மறந்தாள்.. எவனுடைய குரலைக் கேட்க முடியாமல் அவள் துடித்துக் கொண்டிருந்தாளோ.. அவன்

https://t.me/tamilpdfebooks

அழைக்கிறான் என்று அறிந்த பின்னால் அவளுக்கு சுற்றுப்புறமும், சூழலும் எப்படி நினைவிருக்கும்..?

அவள் போனை காதுக்குக் கொடுத்து..

"நரேன்.." என்று பரபரத்த போது போன் கட்டாகி விட்டது..

ஊர்மிளா விக்கித்துப் போனாள்.. மெத்தைக்கு அடியிலிருக்கும் போனை அவள் தேடி எடுக்க நேர்ந்ததில் நேரம் கடந்து விட்டதா..?

அப்போதாவது அவள் அறையை விட்டு வெளியேறித் தொலைத்திருக்கலாம்.. அந்த எண்ணமே வராமல் நரேந்திரனின் பித்துப் பிடித்தவளாக முட்டாளை போல அங்கேயே நின்றபடி நரேந்திரனின் போன் நம்பர்களை அழுத்த ஆரம்பித்தாள்.. அதற்குள் செல்போன் மறுபடியும் ஒலிக்க ஆரம்பித்து விட்டது..

'நரேன் கூப்பிடறாரா..?'

ஆவலுடன் போனைப் பார்த்தவளுக்கு ராதா அழைக்கிறாள் என்ற எழுத்துக்கள் ஏமாற்றத்தைத் தந்தன போனை காதுக்கு கொடுத்து..

"சொல்லு ராதா.." என்றாள் சுரத்தில்லாமல்..

மறுமுனையில் பேசிய ராதா ஊர்மிளா எப்படியிருக்கிறாள் என்று கேட்டாள்..

"உன் முகமே சோர்ந்து இருந்தது ஊர்மிள. உன்னோட தைரியமெல்லாம் எங்கே போச்சு..? இப்படி பட்ட குணம் படைத்தவங்க மத்தியில இருக்கிற

https://t.me/tamilpdfebooks

சோர்ந்து நிற்கலாமா..? தைரியமா அவங்களை. பேஸ் பண்ணுடி.."

ராதா தொடர்ந்து சொன்ன ஆறுதல் வார்த்தைகள் எதுவுமே ஊர்மிளாவின் காதுகளில் நுழையவில்லை.. அவ்வளவு நெருக்கமான ஆருயிர் தோழியின் ஆறுதல் வார்த்தைகளை அந்த நொடியில் அவள் இடைஞ்சலாக உணர்ந்தாள்.. எப்போது ராதா பேச்சை முடிப்பாள் என்று தவித்தாள்.. ஊடே வந்து போன நரேந்திரனின் அழைப்புக்களில் அவளின் உயிர் துடித்தது.. ராதாவின் போனை கட் பண்ணவும் முடியாமல்... நரேந்திரனிடம் பேசவும் முடியாமல்.. நரேந்திரனின் அழைப்புக்கள் வந்து போகும் போதெல்லாம் அவள் தவித்தாள்..

"ஓகே ஊர்மி.. டேக் கேர்.. நாளைக்கு மீட் பண்ணலாம்.. பை.."

ஒரு வழியாக ராதா பேச்சை முடித்ததும்.. ஊர்மிளா பதட்டத்துடன் நரேந்திரனை அழைப்பதற்குள் அவனே அழைத்து விட்டான்..

"நரேன்.."

அவளது அழைப்பில் எதை உணர்ந்தானோ.. நிறுமுனையில் ஓர்நொடி அவன் மௌனம் சாதித்தான்..

"நரேன்.." அவள் தவிப்புடன் அழைத்ததும் பேசினான்..

"எப்பப் பார்த்தாலும் உன் செல்போன் ஸ்விட்ச் ஆஃபில் இருக்கு.. இப்பக் கூப்பிட்டா என்கேஜ்டா இருக்கு.."

https://t.me/tamilpdfebooks

"ஸாரிங்க ராதாகிட்ட பேசிக்கிட்டு இருந்தேன்.."

"ராதான்னா..?" நரேன் இழுத்தான்..

"ராதா.. என் பிரண்ட்.. நேத்து சாயங்காலம் கூட நீங்க போன் பண்ணினப்ப நான் பேசிக்கிட்டிருந்தேன்.. அர்ச்சனா வந்து சொன்னதும் நான் வரனும்னு நினைச்சேன்.." ஊர்மிளா பதட்டத்துடன் தொடர்ந்தாள்..

"ஏன் வரலை..?" கடினமான குரலில் நரேந்திரன் கேட்டான்..

"அது.. வந்துங்க.."

தொடர்ந்து நடந்த விவரங்களை அவள் கொட்ட முனைவதற்குள் அவள் கையிலிருந்த செல்போன் பறிக்கப்பட்டது.. அதிர்ச்சியுடன் ஊர்மிளா நிமிர்ந்து பார்த்தபோது அங்கே ஆவேசத்துடன் அகல்யா நின்றிருந்தாள்.. ஊர்மிளா பேச வாய் திறப்பதற்குள் பாத்ரூமுக்குள் போய் கதவை அடைத்துக் கொண்டாள்..

அதிர்ச்சியிலிருந்து மீண்ட ஊர்மிளாவுக்கு அடுத்து அதிர்ச்சி வந்தது.. கைக்கு எட்டிய நரேந்திரனின் குரலை பறிகொடுத்த துயரத்துடன் அவள் பாத்ரூமின் கதவை ஓங்கித் தட்டினாள்.. கதவு திறக்கப்படவே இல்லை.. வெகு நேரம் தட்டித்தட்டி ஊர்மிளாவுக்கு கைவலி வந்து சோர்ந்து சுவரில் சாய்ந்தபோது பாத்ரூமின் கதவு திறந்தது.. அகல்யா வெளிவந்தாள்.. அவள் கையில் ஊர்மிளாவின் செல்போன் இல்லை.. ஊர்மிளா தவித்தாள்..

"என் செல்போன் எங்கே..?"

https://t.me/tamilpdfebooks

"ஊம்..? உடைஞ்சு சுக்குச்சுக்கா ஆகிருச்சு... அது இருந்தாத்தானே.. எங்கேயிருக்குன்னு மோப்பம் பிடிச்சுக்கிட்டு நீ தேடி அலைஞ்சு கண்டுபிடிப்ப.. இனி என்ன செய்வன்னு பார்க்கலாம்.."

அகல்யா அலட்டிக் கொள்ளாமல் அலட்சியமாக பதிலளித்தாள்.. அவளின் அசாத்திய துணிச்சலில் ஊர்மிளா பத்ரகாளியானாள்..

"உனக்கு இவ்வளவுதான் மரியாதை.. ச்சே..! நீயெல்லாம் மனிதப் பிறவியா..? புருசன் பெண்டாட்டிக் குள்ள ஊடே வர பார்க்கறியே.. சுத்த நாகரிகமில்லாத ஜென்மம்.."

"ஆமாம்.. நான் அப்படித்தான்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

நிதானமான பதிலால் ஊர்மிளாவுக்கு நெஞ்சுவலியை வர வைத்தாள் அகல்யா.. நரேந்திரனுடன் பேச முடியாத துயரத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த ஊர்மிளாவுக்கு.. அப்படியே அவள் தலையில் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டு விட்டால் என்ன என்ற ஆத்திரம் ஏற்பட்டது..

"சீப்பை ஒளிச்சு வைச்சுட்டா கல்யாணம் நின்று போயிரும்ங்கிற கதையாய் உன் கதை இருக்கு.. நீ செல்போனை உடைச்சு நொறுக்கிட்டா என்னால என் நரேனோட பேச முடியாம போயிருமா...?"

அகல்யாவை விட நிதானமாக ஊர்மிளா கேட்டதில் அகல்யாவின் கண்கள் இடுங்கின.. இடுங்கின கண்களின்

https://t.me/tamilpdfebooks

குரூர வீச்சுப் பார்வையை ஊர்மிளாவால் சகித்துக் கொள்ள முடியவில்லை.. அவள் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"அப்படியா..? உன் புருசன்கிட்ட நீ போனில் பேசிருவியா..?" குரூரம் மாறாமல் அகல்யா கேட்டாள்..

"ஷ்யூர்.. நிச்சயமா அவர்கூட நான் பேசுவேன்.. இது பெங்களூர்.. நினைவிருக்கட்டும்.. ஆயிரம் செல்போன் கடை இங்கே இருக்கு.. புதிதாய் ஒரு செல்போனை வாங்கிப் பேச எத்தனை நேரமாகும்..? ஒவ்வொரு தெரு முனையிலும் டெலிபோன் பூத் இருக்கு.. நரேனுக்கு ஐ.எஸ்.டி கால் போட்டுப் பேச எத்தனை நேரமாகும்..? இதே வீட்டிலேயே அருண்குமாரும், அர்ச்சனாவும் இருக்காங்க.. என் செல்போன் தொலைஞ்சிருச்சு.. இம்மீடியட்டா உங்க அண்ணன் கூடப் பேசனும்னு சொன்னா இந்தாங்கண்ணின்னு அவங்க செல்போனை கொடுத்துட்டு திருப்பிக் கேட்கக் கூட மாட்டாங்க.. அதைச் செய்ய எனக்கு எத்தனை நேரமாகும்..? ராதா வருவா.. அவளோட செல் போனை கொடுத்திட்டுப் போடின்னு சொல்ல எத்தனை நேரமாகும்..?" ஊர்மிளா கேள்விகளை அடுக்கினாள்..

"சொடக்குப் போடற நேரம்கூட ஆகாதுதான்.. ஆனா பாரு கண்ணு.. நீ ஆசையாய் பேசினாலும் உன் ஆசை புருசன் உன் கிட்டக் கேட்பான் பாரு ஒரு கேள்வி.. அந்தக் கேள்விக்கு நீ பதில் சொன்ன பின்னாலதான் எந்த ஆசை வார்த்தையையும் அவன் காது கொடுத்துக் கேட்பான்

https://t.me/tamilpdfebooks

கண்ணு.. ஏன்னா அவன் புத்தி அப்பேற்பட்ட குறுகின புத்தி..” விகாரமாக சிரித்தாள் அகல்யா..

ஊர்மிளாவின் இதயம் அதிர்ந்தது.. நரேந்திரன் ஊர்மிளாவைப் பார்த்துக் கேள்வி கேட்பானா..? என்ன கேட்பான்..? அவன் கேள்வி கேட்க என்ன இருக்கிறது..?

“என்னைப் பத்திக் கேள்வி கேட்க என்ன இருக்கு..?”

“இருக்குன்னு கேட்காதே மருமகளே.. இருக்கான்னு கேளு..”

“இருக்கானா..? என்ன உளற்றீங்க..?”

“உளரலா..? இல்லை மருமகளே... இந்த அகல்யாவுக்கு உளரத் தெரியாது.. என்னைப் பத்தி உனக்குத் தெரியாது.. ஆணானப்பட்ட நரேந்திரனையே என்னை அம்மான்னு கூப்பிட வைச்சவ நானு.. என் வீட்டை அவன் வீடா மாத்திக் காட்டினவ நானு.. அப்பேற்பட்ட கோடிஸ்வர தாத்தா பாட்டியையே.. தூக்கி எறிய வைத்தவ நானு..”

“சும்மா.. நான், நான்னு பீற்றிக்காதீங்க.. நரேன் உங்களை அம்மான்னு கூப்பிடறது மத்தவங்க உங்களை குறைவா நினைச்சிரக் கூடாதுங்கிறதுக்காக..”

“யார் குறைவா நினைச்சது..? அப்படி நான் நாடகம் போட்டேன்.. அவன் முன்னால் நீலிக்கண்ணீர் வடிச்சேன்..”

“நீங்க எதையும் செய்வீங்க..”

“தெரிஞ்சுக்கிட்டாச் சரி..”

“இந்த வீட்டில அவர் இருக்கிறது உங்க பிள்ளைகள் மேலே இருக்கிற பரிதாபத்துக்காக..”

https://t.me/tamilpdfebooks

"அதையே பாசமா நான் மாத்திக்காட்டுவேன்.. அவன் சொத்தில பங்கைக் கொடுக்க வைப்பேன்.."

"அது உங்க பிரச்னை.. எனக்கு அதைப்பத்தி எந்த அக்கறையுமில்லை.. எனக்கு முக்கியம் நரேன் மட்டும் தான்.. அவரோட சொத்தில்லை..."

"பிழைக்கத் தெரியாதவ..."

"அப்படியே இருந்துட்டுப் போறேன்.. உங்களைப் போல நான் பிழைக்க வேண்டாம்.. அப்புறம் என்ன சொன்னீங்க.. நரேனின் தாத்தா பாட்டியை அவர் தூக்கி எறிஞ்சுட்டாரா..? கனவு காணாதீங்க.. அவரை வளர்த்தவங்களை அவர் ஒருநாளும் தூக்கி எறிய மாட்டார்.."

"முதலில அவன் உன்னைத் தூக்கி எறியாம இருக்கனுமேன்னு கவலைப்படு.. மத்ததை அப்புறம் யோசிக்கலாம்.. இங்கே உன்பாடே திண்டாட்டமா இருக்கு.. இதில கிழடு கட்டையைப் பத்தி உனக்கேன் கவலை..?"

"என்னை நரேன் தூக்கி எறிவாரா..? குட் ஜோக்.. உங்களைப் போலன்னு நினைத்தீங்களா..? நாங்க வாழ்கிற வாழ்க்கையே வேறு.. என் நரேன் என்மேல உயிரையே வைத்திருக்கார்.."

"நம்பிக்கையை வைச்சிருக்கானா..?"

அகல்யா உரக்கச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பில் ஊர்மிளாவின் இதயம் துடித்தது.. அந்தக் கேள்வி..

https://t.me/tamilpdfebooks

நரேனுக்கும்.. அவளுக்குமான வாழ்வின் மீதான நம்பிக்கையை ஆட்டிப் பார்த்தது..

'ஏன் இப்படிக் கேட்கிறா..?' ஊர்மிளாவால் கண்டு பிடிக்க முடியவில்லை.. அகல்யாவின் பேச்சில் ஒளிந்திருக்கும் மர்மம் எதுவாக இருந்தாலும் ஊர்மிளாவின் நரேந்திரன் ஊர்மிளாவை சந்தேகிப்பானா..? எதற்காக..?

"என்மேல நம்பிக்கை வைக்காம அவர் யார்மேல நம்பிக்கை வைக்கப் போகிறாரு..?"

"என்மேல நம்பிக்கை வைச்சிருக்கான் மருமகளே.."

"உங்க மேலயா..?"

அகல்யா சுயநினைவுடன் தான் பேசுகிறாளா என்ற யோசனையுடன் அவளை மேலும் கீழும் பார்த்தாள் ஊர்மிளா..

அகல்யாவின் மீதான நரேந்திரனின் அபிப்ராயம் எத்தகையது என்பதை இவள் அறிவாளா என்ற இகழ்ச்சிக் கீற்று அவளது இதழோரமாக உதித்தது..

அதை படு அலட்சியமாகப் பார்த்தாள் அகல்யா..

"ஊஹூம்.. வீன் கனவு காணாதேடி பெண்ணே.. உன் ரு ருசன் உன் கிட்ட ஒரேயொரு கேள்வி கேட்பான்.. அதுக்கான பதிலை நீ சொன்னால்தான் அவன் ாழ்க்கையிலே உனக்கு இடம்.. இல்லைன்னா சந்த டம் தான்.. அதனால உச்சானிக் கொம்பு மேலே இன்னும் நீ உட்கார்ந்திருக்கேங்கிற மெதப்பான நினைப்பை

https://t.me/tamilpdfebooks

இத்தோட கைகழுவி விட்டிரு.. உன் புருசன் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லி.. அவன் சந்தேகத்தைத் தீர்த்து.. அவன் கூட பழையபடி குடும்பம் நடத்த ஆரம்பிச்ச பின்னால திரும்பவும் உன்னால உச்சாணிக் கொம்பில ஏற முடிஞ்சா ஏறலாம்.. அதுவரைக்கும் உன்னால அண்ணாந்து பார்க்கக்கூட முடியாது.. அதுக்கு நீ அவன் கையைக் காலப் பிடிச்சு.. உன்னை நம்பச் சொல்லி கதறி அழுதாகனும்.. அவன் கேட்கிற கேள்விக்குப் பதிலைச் சொல்லியாகனும்.. ஹா.. ஹா...”

ஓ.ஏ.கே.. தேவரைப் போல அகல்யா சிரித்த சிரிப்பில் இவள் மெச வில்லி என்று நினைத்துக் கொண்டாள் ஊர்மிளா..

இந்த வில்லி சும்மா.. சும்மா.. நரேந்திரன் ஒற்றைக் கேள்வியைக் கேட்டு ஊர்மிளாவை ஊரை விட்டுத் துரத்துவான் என்று சொல்கிறாளே..

அது என்ன கேள்வி..?

“அப்படி அவர் என்னை என்ன கேள்வி கேட்பாருங்கறிங்க..?”

“ராதாகிருஷ்ணன் யார்..? அவனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்ன்னு கேட்பான்..”

“ராதாகிருஷ்ணனா..?” ஊர்மிளா விழித்தாள்..

“யார் அந்த ராதாகிருஷ்ணன்..?” அகல்யாவிடமே கேட்டாள்..

“என்னடி இது.. இரண்டு நாளா அவன் கூடத்தானே நீ கொஞ்சிக் குழாவிக்கிட்டு இருக்க.. அவன் யாருன்னு

https://t.me/tamilpdfebooks

உனக்குத் தெரியாதா..?" அகல்யா குண்டைத் தூக்கிப் போட்டாள்..

"இரண்டு நாளா கொஞ்சிக் குழாவிக்கிட்டு இருக்கேனா..?"

யார் அது..? என்று ஊர்மிளா மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தாள்.. இரண்டு தினங்களாய் அவள் வெளியே எங்கும் போகவேயில்லை.. அவளைப் பார்க்க வந்தது ராதா மட்டும்தானே.. ஊர்மிளா ராதாவுடன் மட்டும்தானே பேசிக் கொண்டிருந்தாள்..

'ஒருவேளை..'

அடிப்பாவியென்று அனல் பறக்கும் பார்வையுடன் நிமிர்ந்தாள் ஊர்மிளா.. இப்படியும் ஒருத்தி இருப்பாளா என்று அவள் பொருமவில்லை.. அதுதான் கல்லுக் குண்டைப் போல அவளுக்கெதிரே சட்டமாக அகல்யா நின்று கொண்டிருக்கிறாளே..

"ராதாவையா.. ராதாகிருஷ்ணன்னு சொன்ன..?" கொதிப்புடன் அவள் கேட்டபோது..

"ஆமாம்.. அப்படித்தான் சொன்னேன்.." என்று அச்சமில்லாமல் ஒப்புக்கொண்டாள் அகல்யா..

"நீ சொன்னா.. என் நரேன் கேட்டுக்குவாரா..?"

"கேட்டுக்கிட்டானே.. அவன் அந்தப் பக்கம் பிளைட்டில ஏறினதுமே இந்தப் பக்கம் உன் செல்போனை ஸகப்பத்தினேனே.. எதுக்குன்னு நினைக்கிற.. இதைப் போல ஒரு விளையாட்டை ஆரம்பிக்கலாம்ன்னுதான்.. ன் பெண்டாட்டியைப் பார்க்க ராதாகிருஷ்ணன்னு அவளோட பிரண்டுன்னு சொல்லிக்கிட்டு ஒருத்தன்

https://t.me/tamilpdfebooks

வந்திருக்கிறான்.. அவன்கூட உன் பெண்டாட்டி நடு வீட்டில உட்கார்ந்து சிரிச்சுச் சிரிச்சுப் பேசிக்கிட்டு இருக்கா.. வீடே அதை வேடிக்கை பார்க்குதுன்னு சொன்னேன்.. நிஜம்தானே.. உன் பிரண்டோட நீ நடு வீட்டில் உட்கார்ந்துதானே பேசிக்கிட்டு இருக்கிற..? வீட்டில இருக்கிறவங்க அத்தனை பேரும் உங்க ரெண்டு பேரையும் வேடிக்கை பார்த்தாங்கதானே..”

சொல்வதெல்லாம் உண்மை என்ற ரீதியில் முகத்தை வைத்துக் கொண்டு அறியாத பாப்பாவைப் போல உண்மைகளை பிட்டுப்பிட்டு வைத்த அந்த உண்மை விளம்பியை என்ன செய்தால் தேவலாம் என்ற கொலை வெறிக்கு ஆளானாள் ஊர்மிளா..

இப்படிப்பட்ட பிறவிகள் மண்ணில் வாழ்வதால் மண்ணுக்குத்தான் கேடு..

66

பொய்தன்னை எதிர்த்து நின்று..
மெய்தன்னை பற்றிப் பிரிந்த
அழகான ராட்சசி நீ....

ஊர்மிளாவுக்கு பொய் பிடிக்காது.. அவள் பொய் சொல்ல விரும்பாதவள்.. பொய் சொல்கிறவர்களை விரும்பாதவள்..

https://t.me/tamilpdfebooks

அப்படிப்பட்டவளிடம் வந்து உன் தோழி ராதாவை.. உன் தோழன் ராதாகிருஷ்ணன் என்று உன் கணவனிடம் சொல்லியிருக்கிறேன்.. அவனும் அதை நம்பி விட்டான்.. நீ அவனிடம் பேச முயன்றால் அவன் முதல் கேள்வியாக யார் அந்த ராதாகிருஷ்ணன் என்றுதான் கேட்பான்... நீ அதற்கான விளக்கத்தைச் சொல்லி.. அது ராதாகிருஷ்ணன் அல்ல.. உன் தோழி ராதாதான் என்பதை நிருபித்தாக வேண்டும்.. அதன் பின்னால்தான் நீ பேசும் எந்தப் பேச்சையும் அவன் காது கொடுத்துக் கேட்பான் என்று அகல்யா சவால் விடுகிறாள்..

இந்த சவாலை எதிர்கொள்ளாவிட்டால் அவள் ஊர்மிளா அல்லவே..

"நீ சொல்லிட்டா என் நரேன் நம்பிடுவாரா..?"

"நம்பிட்டான்.."

"இல்லை.. அவர் நம்ப மாட்டார்.."

"நினைத்துக்கிட்டே இரு... அவன் நிச்சயமாக உன்னை அந்தக் கேள்வியைக் கேட்பான்.. நீயும் அழுது புரண்டு அவன் காலில் விழுந்து.. இல்லைங்க.. அது ராதாதான், ராதாகிருஷ்ணனில்லைன்னு சொல்லி.. சாட்சி சொல்ல என் பிள்ளைகளையும்.. வேலைக்காரங்களையும் கூப்பிடத்தான் போற.."

"ஒரு நாளும் அது நடக்காது.."

"நடக்கும்.."

அகல்யாவின் உறுதியில் அவளைவிட உறுதியாக ஊர்மிளா நிமிர்ந்து நின்றாள்.. நேர்கொண்ட அவளின்

https://t.me/tamilpdfebooks

பார்வை.. கயமை நிறைந்த அகல்யாவின் பார்வையை வெட்டுவதைப் போல சந்தித்தது..

"இன்றைக்கு நான் சொல்கிறேன்... எழுதி வைத்துக்க.. என் நரேன் ஒரு நாளும் என்னைப் பார்த்து அப்படியொரு கேள்வியை கேட்க மாட்டார்.. அப்படி அவர் கேட்டு விட்டால்.."

"கேட்டுட்டா..?"

"நான் அவருக்கு விளக்கம் சொல்லிக்கிட்டு நிற்க மாட்டேன்.. அந்தக் கணமே அவரை விட்டுப் பிரிந்து போய் விடுவேன்.."

ஊர்மிளா சபதம் செய்தாள்.. நேர்மையின் மறு வடிவமாக.. அக்கினியின் திருவுருமாக பொய்மையை எதிர்த்து சூளுரைத்தாள்..

அவளுடைய காதலின் மீது இருந்த நம்பிக்கையில்.. அவள் காதலன் அவள் மீதான நம்பிக்கையை ஒருநாளும் இழக்க மாட்டான் என்ற நம்பிக்கையில்.. அவள் வாழ்வை பணயம் வைத்த அந்த சபதத்தை அவள் செய்தாள்..

அகல்யாவின் இடுங்கிய கண்கள் பிரகாசித்தன.. எதை அவள் மனதில் வைத்து சதுரங்க வேட்டையை ஆரம்பித்தாளோ.. அது நன்றாகவே முடிந்ததில் அவள் முகத்தில் பரமதிருப்தி நிலவியது.. அடுத்துச் செய்ய வேண்டியதை அவள் மனம் அறிவுறுத்த.. அவள் இகழ்ச்சியாக சிரித்து வைத்தாள்..

https://t.me/tamilpdfebooks

"இப்ப எதுக்கு சிரிக்கிற..?" வெறுப்புடன் கேட்டாள் ஊர்மிளா..

"சிரிக்காம என்ன செய்யச் சொல்ற..? உன் புருசனை கைக்குள்ள போட்டுக்க நீ எப்படியெல்லாம் குழைஞ்சு பேசுவன்னு அந்த மொட்டை மாடி நிலாராத்திரியில பார்த்தவதானே நானு.."

"ச்சீ..! வெட்கம் கெட்ட உன் செயலை வெளியில் சொல்ல உனக்கு வெட்கமாயில்ல..? இப்படி அடுத்த வங்க வாழ்க்கையை ஒட்டுக்கேட்டு.. கேமரா வைச்சு கண்காணிக்கிறயே.. நீயெல்லாம் மனுசப் பிறவிதானா..? த்தூ.. மிருக ஜென்மம்..! உனக்கும் ஒரு குடும்பம் இருக்கிறது.. இந்த வேலையை உன்மகன் வீட்டிலும் ாகள் வீட்டிலும் நடத்திப் பார்ப்பயா..? கேவலப்பட்ட ஜென்மமே..!"

"நீ என்ன வேணும்னாலும் சொல்லிக்க.. எனக்கு தைப்பத்திக் கவலையில்லை.."

"அதெல்லாம் மானம், மரியாதை, ரோசம், சூடு, சொரணை இருக்கிறவங்களுக்குத்தான் வரும்.. உனக்கு ாராது.. நீதான் தட்டிவிட்டுப் போகிற ஜென்மமாச்சே.."

"இங்கே பாரு ஊர்மிளா... இது உனக்கும்... னக்குமான சவால்... என்கிட்ட இந்தப் பக்கம் சபதம் ோட்டுட்டு... அந்தப் பக்கம் நீ திருட்டுத்தனமாக னுக்குப் போன் பண்ணி.. ராதா கிருஷ்ணன்ங்கிறது) யாருமில்ல.. ராதாதான்னு குழைஞ்சு பதில் சொல்லி

https://t.me/tamilpdfebooks

அவனைத் திரும்பவும் கைக்குள்ளே போட்டுக்க மாட்டேன்னு என்ன நிச்சயம்..?"

"நிச்சயமா செய்ய மாட்டேன்.."

அடுத்த சபதத்தை செய்தாள் ஊர்மிளா.. அவள் முகத்தில் எஃகின் உறுதி இருந்தது.. இரும்பின் வலிமை கொண்ட வாக்குறுதியை அந்த வஞ்சகிக்கு அளித்தாள் ஊர்மிளா..

"நரேனிடம் நான் போனில் பேச மாட்டேன்.. அவர் திரும்பி வரட்டும்.. இதே வீட்டில் உன் கண் முன்னாடியே அவரிடம் நான் பேசுகிறேன்.. அதுவரைக்கும் நான் பேசமாட்டேன்.."

"பார்க்கலாம்.."

"பார்க்கலாம்.."

"உன் புருசன் உன்னைக் கேள்வி கேட்க மாட்டான்னு சொல்ற.."

"அப்படிக் கேள்வி கேட்டால் அவரை விட்டு பிரிந்து போய் விடுவேன்னும் சொல்றேன்.. அதைத்தானே நீ எதிர்பார்க்கிற..? உன்னைப் போல ஒருத்தியின் பேச்சைக் கேட்டு என்னைப் பார்த்து அப்படியொரு கேள்வியை என் நரேன் கேட்டு விட்டால்.. அதற்குப் பின்னாலே அவர்கூட வாழ்கிற வாழ்க்கை வாழ்க்கையாய் இருக்காது.."

ஊர்மிளா அகல்யாவின் அறைக்கதவை தடாலென திறந்து விட்டுவிட்டு புயல்போல வெளியேறிவிட்டாள்..

"அப்பாடி.."

https://t.me/tamilpdfebooks

நிம்மதியாய் மூச்சு விட்டு கட்டிலில் படுத்த அகல்யாவிற்கு படுநிம்மதியான தூக்கம் வந்தது.. நரேந்திரனுக்குத் திருமணம் ஆன நாள் முதலாய் அவள் மனதுக்குள் பரவியிருந்த பாதுகாப்பில்லாத உணர்வு மறைந்து போய் வெகு பாதுகாப்பாக தன்னை உணர்ந்தவள் அயர்ந்து உறங்க ஆரம்பித்தாள்..

ஊர்மிளா நிம்மதியைத் தொலைத்தாள்.. அவளையும் நரேந்திரனையும் பிரித்து வைத்திருப்பது கடலும்.. இடையில் உள்ள தொலைவும் மட்டும்தானா என்று குமுறினாள்..

இப்படிப்பட்ட பேச்சை அகல்யா பேசியிருக்கிறாள்.. அதை நரேந்திரன் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறான் என்பதை நம்ப மறுத்தது அவள் மனம்..

எப்படி என் மனைவியை நீ அப்படிப் பேசலாம் என்று அகல்யாவை கிழிகிழியென்று கிழித்து தோரணம் கட்டியிருந்தால் அவள் இப்படியொரு சவாலை ஊர்மிளாவின் முன் வைப்பாளா..?

ஊர்மிளாவின் விழிகள் சிவந்தன..

சற்று நேரத்தில் அவளைக் காண வந்த ராதாவின் புருவங்கள் கேள்வியுடன் உயர்ந்தன..

"இங்கே எதையும் பேச வேணாம்.." வறண்ட குரலில் சொன்னாள்.. ஊர்மிளா.. அவள் தோற்றத்தில் உயிர்ப்பில்லாமல்.. விழிகளில் நிராசை நிறைந்திருந்தது..

அந்த நிலையில் தோழியைக் கண்ட ராதாவிற்கு எங்கோ ஏதோ சரியில்லை என்பது புரிந்து விட்டது..

https://t.me/tamilpdfebooks

அவள்தான் முதல் நாளிலேயே அதை உணர்ந்து விட்டாளே..

"வெளியே கிளம்பிப் போயிடலாம் ராதா.. இந்த வீட்டில் எனக்கு மூச்சு முட்டுது.." ஊர்மிளாவின் குரலில் அவளது மனதின் வலி தெரிந்தது..

ராதாவினால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

"ஓகே.. ஓகே.. நாம கிளம்பலாம்.. வா.."

அவள் காரில் வந்திருந்தாள்... அவளுடைய அத்தையின் வீட்டுக் காராம்..

"எனக்கு டிரைவிங் தெரியுமில்ல.. ஓட்டிக்கிட்டு வந்துட்டேன்.."

இலகுவான குரலில் தோழியையும் அழைத்துக் கொண்டாள்.. அது தேவலையென்று ஊர்மிளாவிற்கும் தோன்றியது.. மனம் விட்டுப் பேசும் போது டிரைவர் இருக்கிறானே என்று சங்கடமடைய தேவையில்லை..

"ஆமாம்ப்பா.. உன் பெண்டாட்டிதான்.. அந்த ராதாகிருஷ்ணன்கூட ஊர் சுற்றக் கிளம்பிட்டா.."

அகல்யாவின் சத்தமான குரல் தோட்டத்துப் பக்கமிருந்து கேட்டது..

"யாருடி அந்த ராதாகிருஷ்ணன்..?"

ராதா காரை ஓட்டியபடி கேட்டபோது ஊர்மிளாவுக்கு தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

https://t.me/tamilpdfebooks

"இந்தக் கேள்வியைத்தான் நரேன் கேட்டிருவார்ன்னு இந்தம்மா சவால் விடுதுடி.." என்றாள்..

"புரியலை.."

"உன்னைத்தான் ராதாகிருஷ்ணன்னு இந்தம்மா நரேன்கிட்டச் சொல்லி வைச்சிருக்குடி.."

"வாட்..?"

ராதா காரின் பிரேக்கில் கால் வைத்ததில் சாலையின் ஓரமாக கார் நின்றது..

"என்னைப் போய் ராதாகிருஷ்ணன்னு சொல்லி யிருக்காங்களா..?"

"ம்ம்ம்.."

ஊர்மிளா கண்கள் கலங்க.. நரேந்திரன் வெளி நாட்டிற்குக் கிளம்பியது முதல் நடந்த அத்தனை சம்பவங்களையும் தோழியிடம் விவரித்தாள்.. முதல் நாள் இரவில் மொட்டை மாடியில் அகல்யா ஒளிந்து மறைந்திருந்ததை அவள் சொன்னபோது..

"இன்டீஸன்ட் வுமன்.." என்று அருவெறுப்புடன் முகம் சுளித்தாள் ராதா..

"இப்ப இந்த நிலையில் என்னைக் கொண்டு வந்து நிறுத்திருச்சுடி.."

"ஐ ஸீ.. இந்த மாதிரியான மெண்டாலிட்டி இருக்கிற வாங்களுக்கு இன்செக்யூர் ஃபீல் அதிகமா இருக்கும் ஊர்மிளா... இந்த லேடி ஒரு ஒட்டுண்ணி... உன் ஹஸ்பெண்டோட புராப்பர்டியை உறிஞ்சி வாழ நினைக்கிற

https://t.me/tamilpdfebooks

ரகம்.. அதுக்கு உரிமை கொண்டாடிக்கிட்டு வேறு யார் வந்தாலும் இவங்க அவங்களை கிட்டே அண்ட விட மாட்டாங்க.. ஒருவகையில் இந்தம்மா 'யாமிருக்க பயமே..'ங்கிற சினிமாவில வருகிற பேய்.."

"என் நரேனிடம் என்னால அண்ட முடியாதா..?"

ஊர்மிளா அழுது விட்டாள்.. தோழியின் தவிப்பில் ராதாவிற்கு வருத்தமாக இருந்தது.. அவள் தேறுதல் சொல்லி.. அவளை அழைத்துக் கொண்டு அன்று முழுவதும் ஊரைச் சுற்றிப் பார்த்தாள்.. அகல்யாவை நினைக்க விடாமல் பழைய கதைகளைப் பேசி ஊர்மிளாவின் மனதை திசை திருப்பினாள்.. மாலையில் ஒரு ஹோட்டலில் அவர்கள் காபி டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது.. ஊர்மிளாவுக்கு வயிற்றைப் பிரட்டியது.. அவள் பாத்ரூமுக்கு ஓடினாள்.. திரும்பி வந்தவளின் சோர்ந்த முகத்தில் ராதா கவலை கொண்டாள்..

"நீ சரியாவே இல்லைடி.. முகம் வெளுத்துப் போய் தெரியுது.. வா.. டாக்டரைப் பார்த்துரலாம்.."

அருகில் இருந்த மருத்துவமனைக்கு அவர்கள் போனார்கள்.. ஊர்மிளாவை பரிசோதித்த லேடி டாக்டர் அவள் கருவுற்றிருப்பதை உறுதி செய்தாள்..

"கங்கிராஜீலேசன்ஸ்.." சந்தோசமாக தோழிக்கு கை கொடுத்தாள் ராதா..

ஊர்மிளா எதுவும் பேசவில்லை.. மௌனமாக காரில் ஏறியவள் அதிகமாக சோர்ந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"இப்ப என்னடி..?" ராதா அதட்டினாள்..

"குழந்தைக்கு அப்பா அவரு.. இந்த சந்தோசமான சமாச்சாரத்தை அவர்கிட்டச் சொல்ல முடியலை பார்த்தியா.."

"ஏன் சொல்லாம இருக்கனும்..? இந்தா.. என் செல்போனைப் பிடி.. அவர்கிட்டப் பேசு.. விவரத்தைச் சொல்லு.. போகும்போது புதிதாய் ஒரு செல்போனை வாங்கிக்கலாம்.. விடிகிறதுக்குள்ள அது ஆக்டிவேட் ஆகிடும்.. நோ பிராப்ளம்.."

ராதா சொல்வதைப் போல எல்லாமே எளிதாக இருந்து விட்டால் எப்படியிருக்கும் என்று மனம் ஏங்கினாள் ஊர்மிளா..

அவளுக்கு அது எளிதில்லையே..

"வேண்டாம் ராதா.." உறுதியுடன் மறுத்தாள்..

"முட்டாளாடி நீ.. யாரிடம் நேர்மையா.. இருக்கனும் தெரியுமா...? நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நன்னடையுமா இருக்கிறவங்ககிட்ட நேர்மையா இருக்கனும்.. உன் ஹஸ்பெண்டின் சித்தி போல இருக்கிறவங்ககிட்ட அவங்க பாணியிலேதான் மோதனும்.."

"என்னால வார்த்தை மாற முடியாது ராதா..?"

ஊர்மிளா உறுதியாக சொல்லி விட்டாள்.. அவர்கள் வீடை அடைந்த போது இருட்டி வெகு நேரமாகி இருந்தது.. ராதா காரை விட்டு இறங்கி ஊர்மிளாவை வீட்டுக்குள் கொண்டு வந்து விட்டு விட்டுப் போனாள்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா சோர்வுடன் மாடிப்படிகளில் ஏறப் போனாள்.. இரவு உணவுக்காக மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தான் அருண்குமார்.. அவனைக் கண்டதும் ஊர்மிளா தயங்கி நின்றாள்.. அவனும் தேங்கி நின்று..

"இப்பத்தான் வர்றீங்களா அண்ணி..?" என்று கேட்டான்..

"ம்ம்ம்.." என்றபடி மாடியேறப் போனாள் ஊர்மிளா..

"இப்பத்தான் வர்றா.. இவ்வளவு நேரமும் அந்த ராதாகிருஷ்ணன்கூட ஊர்சுற்றிட்டு வந்து சேருகிறா.." உரக்கச் சொன்னாள் அகல்யா..

ஹாலில் இருந்த சோபாவில் அவளும் அர்ச்சனாவும் அருகருகே அமர்ந்திருந்தார்கள்.. வனிதா இரவு உணவு தயாராக இருக்கிறது என்று அவளிடம் சொல்ல வந்தாள்.. ரமேஷ் வீட்டிற்கு கிளம்பப் போவதைச் சொல்லி விட்டுப் போக வந்து நின்றிருந்தான்.. வாசலை காவல் காக்கும் செக்யூரிட்டி... தண்ணீர் வாங்கிப் போவதற்காக தண்ணீர் பாட்டிலுடன் வனிதாவைத் தேடியபடி அங்கே வந்திருந்தான்..

இவர்கள் அத்தனை பேரின் காதிலும் அகல்யா சொன்னது அட்சர சுத்தமாக விழுந்தது.. அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டவர்களின் பார்வையில் ஊர்மிளாவின் மீதான பரிதாபம் இருந்தது..

ஊர்மிளா பல்லைக் கடித்தபடி கண்களை இறுக மூடித் திறந்தாள்.. மாடியின் கைப்பிடி வளைவின்

https://t.me/tamilpdfebooks

குழிழைப் பிடித்திருந்தவளின் விரல்களின் இறுக்கத்தில் அருண்குமார் கோபம் கொண்டான்..

"அம்மா.. என்ன இது..? என்ன பேச்சுப் பேசறிங்க..?" முகம் சுளித்தபடி தாயை அதட்டினான்..

"த்ப்ச்..! ஏம்மா இப்படி பேசி வைக்கறிங்க..? தெரியாதவங்க யாராவது இதைக் கேட்டு வைச்சா ன்ன நினைப்பாங்க..? அண்ணி அவங்க பிரண்டு ராதாவோட வெளியில் போயிட்டு வந்திருக்காங்க.. நீங்க என்னடான்னா.. ராதாவை ராதாகிருஷ்ணன்னு ாத்திட்டிங்களே.. சேச்சே.." அர்ச்சனா எரிச்சல் பட்டாள்..

"இதென்னடி வம்பாப் போச்சு.. இப்ப நான் ான்னத்தைச் சொல்லிட்டேன்னு அண்ணனும்.. ங்கையும்.. வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு ாருகிறீங்க..? உங்கண்ணியோட பிரண்டு ராதாதான்னு ாக்குத் தெரியாதா..? ஒரு விளையாட்டுக்கு ராதா கிருஷ்ணன்னு சொன்னா அதைப் பெரிசா எடுத்துக்கிட்டு ாச வந்துட்டிங்க.. மருமகளை மாமியார் கிண்டல் ாண்ணக் கூடாதா..?" அகல்யாவின் விழிகளில் விசமம் ொட்டியது..

"நீங்க பண்ணியது கிண்டலில் சேர்த்தியில்லை.."

அருண்குமார் வெறுப்புடன் டைனிங் ஹாலுக்குப் ாய் விட்டான்.. அர்ச்சனா அகல்யாவின் பக்கத்திலிருந்து ாழுந்து வந்து ஊர்மிளாவிடம் பேச ஆரம்பித்தாள்.. அகல்யா ானதைப் போல உணர்ந்தாள்..

https://t.me/tamilpdfebooks

67

தரியாக என்மனதை..
காதலிலே நெய்து விட்ட
அழகான ராட்சசி நீ....

"எனக்கென்னவோ நீ கன்சீவ் ஆகியிருக்கிறா மேட்டரை உன் ஹஸ்பெண்டுக்கு இன்பர்ம் பண்ணிடனும்னு தோணுது ஊர்மிளா.."

ராதா யோசனையுடன் சொன்னாள்.. பூங்காவின் பூச்செடிகளின் அழகில் மனம் லயிக்காமல் அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஊர்மிளாவின் விசனம் தோய்ந்த முகத்தைப் பார்த்தபோது அவள் மனதை பிசைந்தது..

"சின்ன மேட்டர்.. ஊதி ஊதிப் பெரிசாகிட்டு இருக்கு.. நீ புத்திசாலிதானே.. இதைப் போல சிக்கல்களை இழுத்து விட்டுக் கொள்ளலாமா ஊர்மிளா..?"

ராதா இதமாக அறிவுரை சொன்னாள்.. பொதுவாக அவள் தனி மனித சுதந்திரங்களைப் பேணுபவள் மற்றவர்களின் வாழ்க்கையில் மூக்கை நுழைக்காதவள் அப்படிப்பட்டவளாலேயே ஊர்மிளாவின் வேதனையை பார்த்துக் கொண்டு எனக்கென்ன என்று இருக்க முடியவில்லை..

https://t.me/tamilpdfebooks

"இல்லை ராதா..." ஊர்மிளா சோர்வாக தலையசைத்தாள்..

"நான் இதைப்பற்றிச் சொல்லனும்னா நரேனிடம் பேசனும்.. அவருக்கு இது தெரிய வந்ததுன்னு வைய்யி.. இந்தம்மா என் பிள்ளையைக் காட்டி அவரை வசியம் பண்ணி வைச்சுட்டேன்னு சொல்லும்.. அந்த வார்த்தைகளைக் கேட்க என்னால் முடியாது.."

துயரத்துடன் கண்களை இறுக மூடிக் கொண்ட ஊர்மிளாவின் மனதை ராதாவினால் புரிந்து கொள்ள முடிந்தது..

ஊர்மிளா அவள் மீதான அவளது கணவனின் அக்கறை எப்படிப்பட்டது என்பதை அறியத் துடிக்கிறாள்.. யார் என்ன சொன்னாலும்.. அவன் நம்ப மாட்டான்.. ஊர்மிளாவை மட்டுமே நம்புவான் என்ற அவளது நம்பிக்கை பொய்த்துப் போய் விடக்கூடாது என்று தவிக்கிறாள்... அவளுக்கென்று அவன் மனதில் இருக்கும் இடம் எத்தகையது என்பதை அகல்யாவின் முன்னால் அவள் நிரூபித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறாள்..

ஒரு மனைவியாக கணவனிடம் பேசுவதையே.. உன் கணவனிடம் நீ போனில் கொஞ்சிக் குழாவாமல் இருந்தால் போதும்.. அவன் நிச்சயமாக உன்னைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்பான் என்று சவால் விட்டிருப்பவள்.. இப்போது ஊர்மிளா தாய் மையடைந் திருக்கும் விவரத்தை கணவனிடம் தெரியப்படுத்துவதை

https://t.me/tamilpdfebooks

அறிந்து விட்டால்.. குழந்தையைக் காட்டி நரேந்திரனை தன்பக்கம் இழுக்க ஊர்மிளா முயற்சி செய்வதாக சொல்லி விட மாட்டாளா..?

"அவர் எனக்காக பேசனும் ராதா.. என் கொஞ்சலுக் காகவோ.. என் வயிற்றிலிருக்கும் அவரின் பிள்ளைக் காகவோ பேசக்கூடாது.. அவருடைய ஊர்மிளாவுக்காக பேசனும்.. அதுதான் அவரோடு நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு மரியாதையை கொடுக்கும்.. உலகமே சேர்ந்து வந்து சொன்னாலும் என் புருசன் நம்ப மாட்டார்.. என்னைக் கேள்வி கேட்க மாட்டார்ன்னு நான் சொன்னதும் அந்தம்மா சிரிச்சுச்சே ஒரு சிரிப்பு..! அந்தச் சிரிப்பை ஆயுளுக்கும் என்னால மறக்க முடியாது ராதா.. அந்தச் சிரிப்பை எதிர்த்து நிற்கனும்.. நரேனின் மனதில் என்மேல எந்த அளவுக்கு ஆழமான நம்பிக்கை இருக்குன்னு அந்தம்மாவுக்கு நிருபிச்சுக் காட்டனும்ன்னு என் மனசில கிளம்புச்சே ஒரு வெறி..! அதைப் பத்தி வார்த்தையில சொல்ல முடியாது ராதா.."

ஊர்மிளா குமுறினாள்.. ராதா தோழியின் கையைத் தட்டிக் கொடுத்தாள்.. அருகிலிருந்த சறுக்கு மரத்தில குழந்தைகள் சறுக்கி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.. ஊர்மிளாவின் மனநிலையை மாற்ற விரும்பிய ராதா அதை ஊர்மிளாவுக்குச் சுட்டிக் காட்டினாள்..

"நாளைக்கு உன் குழந்தையும் இது போல விளையாடுமில்ல..?"

https://t.me/tamilpdfebooks

ராதாவின் திட்டம் பலித்தது.. ஊர்மிளாவின் முகம் மலர்ந்தது.. அவளது முகம் விகசித்தது.. தலையை மேலும் கீழுமாக ஆட்டினாள்..

"குழந்தை யார் சாயலில் இருக்கும்ன்னு நினைக்கிற..?"

"நரேன் சாயலில் இருக்கனும்னு ஆசைப்படறேன்.."

ஊர்மிளாவின் வார்த்தைகளில் தோய்ந்திருந்த காதலில் கவரப்பட்டாள் ராதா.. அவளும் ராபிட்சனைக் காதல் திருமணம் செய்து கொண்டவள்தான்.. ஆனால்.. இந்த அளவுக்கு காதலை அவள் உணர்ந்ததில்லையே..

ராபிட்சனும் அவளும் ஒரே கம்பெனியில் வேலை பார்த்தார்கள்.. இந்தியாவிலிருந்து நியுயார்க் போயிருந்த ராதாவுக்கு ஒரு சமயம் கடுமையான காய்ச்சல் வந்து விட்டது.. ராபிட்சன் அவளைக் கவனித்துக் கொண்டான்.. அவனது இதமான கவனிப்பு நோயுற்றிருந்த சமயத்தில் ராதாவுக்கு ஆறுதலாக இருந்தது.. உடல் தேறிய பின்னால் அவர்களுக்குள் ஓர் இறுக்கமான நட்பு உருவாகியது.. சோர்ந்து பேசிய பொழுதுகளில் அவர்களின் எண்ணங்களும்.. ரசனைகளும் ஒரே அலை வரிசையில் இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள்..

"நாம் ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது..?"

ராபிட்சன் ஒருநாள் கேட்டான்.. ஏன் கூடாது என்று ராதாவிற்கும் தோன்றி விட்டது.. அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள்.. ராபிட்சனுடனான அவள் வாழ்வு இனிமை நிறைந்ததாக இருந்தது.. வெளிநாட்டில் பிறந்து

https://t.me/tamilpdfebooks

வளர்ந்தவன் ராதாவின் சுதந்திரப் போக்கை வெகு இயல்பாக எடுத்துக் கொண்டான்.. அவளுக்கு மரியாதை கொடுத்தான்.. அவர்களுடைய வாழ்வில் ஓர் புரிதல் இருந்தது..

ஊர்மிளாவின் வாழ்வில் அது இருக்கிறதா என்று ராதாவிற்குத் தெரியவில்லை.. கணவன், மனைவிக்கு இடையில் அதித காதல் இருக்கிறதோ இல்லையோ.. புரிதலும், நம்பிக்கையும், மரியாதையும் இருக்க வேண்டும்.. அவை இருக்கின்றனவா இல்லையா என்று தெரியாமல் ஊர்மிளாவே தத்தளிக்கும் போது ராதா என்ன கருத்தைச் சொல்லி விட முடியும்..?

"நரேன் வருவார் ராதா.. நான் அவருக்காகத்தான் காத்திருக்கிறேன்.. அவர் வந்ததும் அந்தம்மா என்னைப் பேசிய பேச்சையும்.. படுத்திய பாட்டையும்.. அவர் தோள் மேல சாய்ந்து சொல்லி அழுவேன்.. அந்தம்மாவோட அக்கிரமமான பேச்சுக்கு ஒரு முடிவைக் கட்டுவேன். ராதா வந்ததை ராதாகிருஷ்ணன் வந்ததா உங்க சித்தி சொன்னாங்கன்னு சொல்லுவேன்.. என் நரேன் கேட்பார் ராதா.. வீட்டிலிருக்கிற அத்தனை பேரையும் நிறுத்தி வைச்சு அந்தம்மாவை கேள்வி கேட்பார்.. நான் இல்லாதப்ப என் பெண்டாட்டியை எப்படி நீங்க தேவையில்லாம பேசலாம்ன்னு கேட்பார்.. ஏன் அவளோட செல்போனை எடுத்து வைத்துக்கிட்டு விளையாட்டுக் காட்டினீங்கன்னு கேட்பார்.. எதுக்காக ராதாவை ராதாகிருஷ்ணன்னு சொன்னீங்கன்னு கேட்பார்.. கண்டிச்சு வைப்பார்.. அதுக்கப்புறம்தான் நான் என் வயிற்றில் வளரும்

https://t.me/tamilpdfebooks

.அவரோட குழந்தையைப் பத்திச் சொல்லுவேன் ராதா.. .அதுவரைக்கும் சொல்ல மாட்டேன்..”

ஊர்மிளா உறுதியாக சொல்லி விட்டாள்.. அவள் இந்த அளவுக்கு வைராக்கியம் காட்ட வேண்டுமா என்று ராதாவுக்குத் தோன்றியது.. எப்போதுமே ஊர்மிளா உணர்வு பூர்வமானவள்.. ராதாவைப் போல அறிவுபூர்வமாக எந்த ஒரு நிகழ்வையும் எடுத்துக் கொள்ள மாட்டாள்.. .ஆவேசப் படுவாள்.. அதை அலட்சியப் படுத்திவிட்டுக் கடந்து செல் என்று ராதா சொல்லுவதை காதில் போட்டுக் கொள்ள மாட்டாள்..

“இதையெல்லாம் ஈஸியாக எடுத்துக்கிட்டுப் போயிடனும்.. நீ எதையும் சீரியஸா எடுத்துக்கற.. உன்னோட இந்த சென்சிடிவ் குணத்தைத்தான் உன் மாமியார் பிளஸ் பாயிண்டா எடுத்துக்கிட்டு இருக்கு.. இப்படி ஒரு கேம் விளையாடற தைரியத்தை உன்னோட இந்த ரோசம்தான் அந்த லேடிக்கு கொடுத்திருக்கு.. இதை ஏன் நீ புரிஞ்சுக்கவே மாட்டேங்கிற..?” சிறு குழந்தைக்கு எடுத்துச் சொல்வதைப் போல சொன்னாள் ராதா..

நட்பு என்பது எது..?

உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைவது.. துன்பம் நேர்கையில் யாழெடுத்து இன்பம் சேர்ப்பது.. துயரம் வந்த போதிலே, சாய்ந்து கொள்ள தோள் கொடுப்பது.. இவை அனைத்திலும் மேலாக மதியூக மந்திரியைப் போல ஆலோசனை சொல்வது..

https://t.me/tamilpdfebooks

ராதா அதைத்தான் செய்து கொண்டிருந்தாள்.. பெங்களூரில் இருக்கும் அவளது கம்பெனியின் கிளையில் பணி புரிய டெபுடேசனில் வந்தவள் அவள்.. தாய் நாட்டில் சில நாள்கள் இருக்கலாம்.. அதேசமயம் விடுமுறை என்று சம்பளத்தை இழக்காமல் வேலையும் செய்யலாம் என்ற கணக்கீடுடன் பெங்களூரில் வசிக்கும் தோழியைத் தேடி வந்தவள்..

எதையும் அறிவு பூர்வமாக கணக்கிட்டு அணுக வேண்டும் என்று ராதா எடுத்துச் சொல்லிப் பார்த்து ஓய்ந்து போனாள்..

ஊர்மிளா நரேந்திரனுடன் போனில் பேசவும்.. அவள் தாய்மை அடைந்திருக்கும் விவரத்தைச் சொல்லவும் மறுத்துவிட்டாள்..

"இது எனக்கும் அந்தம்மாவுக்குமான சவால் ராதா.. நான் வாழ்ந்த வாழ்க்கையை ஒரு கேள்வியில் நிறுத்தி வைச்சிருக்கு அந்தம்மா.. இதை ஜெயிச்சுக் காட்டாம.. என் வயிற்றில் இருக்கும் அவரோட குழந்தையைப் பற்றி நான் அவருக்குச் சொல்ல மாட்டேன்.."

"முட்டாளாடி நீ.."

"முட்டாளாவே இருந்துட்டுப் போறேன்.. ஊர்மிளா வயிற்றில் இருக்கும் குழந்தையைக் காட்டி புருசனை வசியம் பண்ணிக்கட்டா.. இல்லேன்னா அவர் அகல்யாவோட பேச்சைக் கேட்டுக்கிட்டு ஊர்மிளாவைப் பார்த்து கேள்வி கேட்கம இருந்திருக்க மாட்டார்ன்னு நாளைபின்னே ஒரு சொல் வந்துரக்கூடாது.."

https://t.me/tamilpdfebooks

"போடி.. நீயும் உன் சொல்லும்.."

ராதா தோழியின் மடத்தனத்தை எண்ணி தலையில் அடித்துக் கொண்டாள்.. அவளின் சிந்தனைகள் வேறு விதமானவை.. ஊர்மிளாவின் மனதில் அதைத் திணிக்க என்றுமே அவள் முற்பட்டதில்லை..

நேர்மையின் மறு வடிவமாக.. தவறை கண்டால் பொங்கும் ரௌத்திரம் கொண்டவளாக இருக்கும் ஊர்மிளாவின் மனதுக்குள் இருக்கும் ஆழ்ந்த பாசமும்.. நேசமும் காணக் கிடைக்காதது என்பதை ராதாவும்.. அமிர்தாவும் மிக நன்றாக தெரிந்து வைத்திருந்தார்கள்.. அதனால்தான்.. மேல்நிலைக் கல்விக்குப் பின்னர் மூவரும் மூன்றுவகையான படிப்புகளில்.. மூன்று திசைகளில் திரும்பிப் பயணித்தாலும்.. அவர்களுக்கு நடுவில் இருந்த நட்புப் பயிரை வாட விடாமல் தண்ணீர் ஊற்றி வளர்த்து மரமாக்கினார்கள்..

அமிர்தா மருத்துவராகி விட்டாள்.. ராதா என்ஜினியராகி விட்டாள்.. ஊர்மிளா ஆசிரியை வேலைக்குப் படித்து விட்டு நரேந்திரனுக்கு மனைவியாகி விட்டாள்..

ஆனாலும்.. அந்த மூன்று தோழிகளின் மனதிலும் இருந்த நட்பு இடம் பெயரவே இல்லை.. மாறாமல் ஒரே இடத்தில் நிலை கொண்டு ஒருவரையொருவர் நலம் விசாரித்து.. தோள் தாங்கி.. அரவணைத்துக் கொண்டிருந்தது..

https://t.me/tamilpdfebooks

ராதா தன் தோழியை பிரியத்துடன் பார்த்தாள்.. ஊர்மிளாவின் முகத்தில் பிரதிபலித்த துயரத்தில் அவள் மனம் துயரம் கொண்டது.. யுகம்.. யுகமாக.. பெண்குலம் அனுபவித்து வரும் அத்தனை துயரங்களையும் ஒட்டு மொத்த குத்தகைக்கு எடுத்ததைப் போல ஊர்மிளாவின் துயரம் இருந்ததில் ராதாவின் மனதில் வருத்தம் வந்தது..

"எனக்காக அவர் இல்லையா ராதா..?" ஊர்மிளா தவிப்புடன் கேட்டாள்..

"லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டவ கேட்கிற கேள்வியாடி இது..?" சூழ்நிலையை இலகுவாக்க முயன்றாள் ராதா..

"இல்லை ராதா.." சோகையாக தலையாட்டி அதை மறுத்தாள் ஊர்மிளா..

"எனக்கும் அவருக்கும் நடுவில் இத்தனை நாளாய் இருந்தது காதலில்லை ராதா.. அவர் பாரின்ல இருந்து வந்ததும்.. என் நம்பிக்கையைக் காப்பாத்த என்னைப் பார்த்து எதையும் கேட்காம கைநீட்டி என்னை அணைச்சுக்குவாரு பாரு.. அதுதான் காதல்..! செய்வாரா ராதா..? என் நம்பிக்கையைக் காப்பாத்துவாரா..?"

ஊர்மிளாவின் உயிர் துடிப்பதை ராதாவால் உணர முடிந்தது.. அவளால் தோழிபடும் துயரத்தைப் பார்க்க முடியவில்லை.. எதுவுமே இல்லாமல் காட்டுத்தீயைப் போல பூதாகரமான பிரச்னைகளைக் கிளப்பி விட முடியும் என்பதை அகல்யாவைப் பார்த்த பின்னால்தான் ராதாவே தெரிந்து கொண்டிருக்கிறாள்..

https://t.me/tamilpdfebooks

வெளியிலிருந்து வேடிக்கை பார்க்கும் அவளுக்கே அகல்யாவின் நடவடிக்கை ஆத்திரத்தை உண்டு பண்ணும் போது.. அதற்குள் சிக்கியிருக்கும் ஊர்மிளாவிற்கு எப்படியிருக்கும்..?

கருத்துச் சொல்வதும்.. அறிவுரை சொல்வதும் யார்க்கும் எளிது.. சொன்ன கருத்தையும்.. அறிவுரையையும் மனதில் வைத்து அதன்படி நடப்பது சொல்பவர்க்கே சிரமம் தரும் ஒன்று..

ராதா அமைதியாகி விட்டாள்.. நரேந்திரனிடம் அவள் போன் பண்ணி நடந்து கொண்டிருக்கும் அகல்யாவின் சில்மிசங்களையும்.. ஊர்மிளா தாய்மை அடைந்திருப்பதையும் சொல்லலாம்தான்.. அதை ஊர்மிளா எதிர்பார்த்திருந்தவளைப் போல முன்னெச்சரிக்கையாக தோழியை தடை செய்து விட்டாளே..

"ராதா நீ நரேனுக்கு போன் பண்ணி விடக்கூடாது.."

"ஏய்ய்.. உன் ஹஸ்பெண்ட் எனக்கு பிரதர்டி.."

"அடச்சீ.. நான் அந்த மீனிங்கில் சொல்லலை.. அது எனக்கும் தெரியும்.. பேச்சை மாத்த டிரை பண்ணாதே.."

"என்னதாண்டி உன் பிராப்ளம்..?"

"நீ சொன்னதினாலதான் அவர் என்னை கேள்வி கேட்காம விட்டார் என்ற பெயர் எனக்கு வரக்கூடாது.. என் வாழ்க்கை உன் சிபாரிசில் வந்ததா இருக்கக் கூடாது.. அவர் என்னைப் பத்தி என்ன நினைக்கிறார்.. அந்தம்மாவுக்கும் எனக்குமான சவாலில் என்னை ஜெயிக்க வைப்பாரா.. இதையெல்லாம் நான் தெரிஞ்சுக்கிட்டே ஆகணும்.."


https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா உறுதியாக நின்றாள்.. ஒரு வகையில் அவளது அந்த உறுதியில் நியாயம் இருப்பதாகவே ராதா நினைத்தாள்..

இந்த அளவுக்கு அகல்யா போகத் துணிந்திருக்கும் போது.. ஊர்மிளா அதை எதிர்கொண்டு.. அவளின் இருப்பிடம் எத்தனை உறுதியானது என்பதை நிரூபித்துத் தானே ஆகவேண்டும்..?

ஊர்மிளா ஜெயிப்பாளா.. இல்லை தோற்பாளா..?

இவை இரண்டும் நரேந்திரன் ஒருவனின் கையிலேயே இருந்தன..



ஓர் வார்த்தை கேட்டுவிட
ஓடோடி வந்து நின்ற
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.. இன்னும் இரண்டு மணி நேரத்தில் அவன் அமர்ந்திருக்கும் விமானம் பெங்களூரைத் தொட்டு விடும்.. நீண்ட நாள்களுக்குப் பின்னால் ஊர்மிளாவைச் சந்திக்கப் போகும் நினைவு அவன் மனதில் எழுந்தது..

https://t.me/tamilpdfebooks

"உன் போன் வந்திருக்குன்னு அர்ச்சனா வந்து சொல்கிறாப்பா.. அவ்ருக்கென்ன வேலை.. அப்புறமா பேசிக்கறேன்னு அந்த ராதாகிருஷ்ணன் முன்னாலேயே சொல்லிட்டு அவன்கூடச் சிரித்துப் பேசிக்கிட்டு இருக்காப்பா உன் பெண்டாட்டி.."

அகல்யாவின் வார்த்தைகள் அவன் காதுகளில் ரீங்காரமிட்டன.. புருவங்களின் மத்தியில் சுளிப்பு வந்தது.. அதை நீவி விட ஊர்மிளா அருகில் இல்லையென்ற தாபம் அவனுக்குள் வந்தது..

நோயே மருந்தாகும் மாயம் அவளிடம் தான் இருந்தது.. அவனது புருவச் சுளிப்பிற்கு காரணம் அவள்தான்.. அதைப் போக்கும் மாய மருந்தும் அவள்தான்.

'ராதா கிருஷ்ணன்..!'

நரேந்திரன் சீட்டில் சாய்ந்து கண்மூடினான்.. மனதில் ஊர்மிளா வந்து சிரித்தாள்.. அவன் கிளம்பி வந்த நாள் முதலாக போனில் அவனிடம் பேசாமல் இருக்க முடிந்த அவனது அன்புக் காதலி..!

'எப்படி அவளால் என்கூடப் பேசாமல் இருக்க முடிந்தது..?'

இந்தக் கேள்விதான் அவன் மனதை அலைக் கழித்தது..

அவன்மீது ஊர்மிளா காட்டிய ஆவேசமான.. அதீதக் காதலை அனுபவித்தவன் அவன்.. திருமணமான நாளிலிருந்து அவனுடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தவளை முதன் முதலாக நீண்ட நாள்கள்

https://t.me/tamilpdfebooks

பிரிந்திருக்கிறான் அவன்.. இப்படிப்பட்ட சூழலில் காதலே இல்லாத மனைவிகூட கணவனைக் கொஞ்சம் நினைத்துப் பார்ப்பாள்..

'என்னத்தைச் செஞ்சுக்கிட்டு இருக்கிற..?' என்ற லட்சணத்தில் போன் பண்ணிக் கேள்வி கேட்டு வைப்பாள்..

இங்கே காதல் கடல் போல பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கிறது என்றுதான் பெயர்.. ஒரு போனைக் காணோம்.. அவள் தான் போன் பண்ணவில்லை யென்றால்.. அவன் போன் பண்ணும் போதாவது எடுத்துப் பேசியிருக்கலாம் அல்லவா..?

ஒன்று.. போன் ஒலித்துக் கொண்டேயிருந்தது.. இல்லையென்றால் சுவிட்ச் ஆஃப் செய்யப் பட்டிருந்தது.. இவை இரண்டும் இல்லையென்றால் அகல்யா போனை எடுத்தாள்.. அவன் மனைவி அவன் இல்லாதபோது கூடப் படித்த சிநேகிதனை வீட்டுக்கே வரவழைத்து கூத்தடித்துக் கொண்டிருக்கிறாள் என்ற குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்தாள்.. அதை வீட்டிலுள்ள வேலையாள்கள் வேடிக்கை பார்த்தார்கள் என்று போட்டுக் கொடுத்தாள்.. அர்ச்சனாவைப் போன்ற வயதுப் பெண் இருக்கும் இடத்தில் ஊர்மிளா சிநேகிதன் என்ற பெயரில் கண்ட தடிமாட்டுத் தாண்டவராயன்களையெல்லாம் வீட்டுக்குள் விடலாமா என்ற கேள்வியை எழுப்பினாள்.. அதனால் அருண்குமார் முகம் சுளிக்கிறான் என்று விசனம் கொண்டாள்..

'இதில் எந்த அளவுக்கு உண்மையிருக்கு..?'

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனுக்கு தலையை வலித்தது.. அகல்யா சொன்ன நிகழ்வுகள் யாவும் அவன் வீட்டில் நடந்ததாகவே இருந்தன.. அதில் அர்ச்சனாவையும்.. அருண்குமாரையும்.. வீட்டில் வேலை செய்யும் வேலையாள்களையும் அவள் சம்பந்தப் படுத்தினாள்..

எதுவும் இல்லாமல் நரேந்திரனிடம் அவள் அவ்வாறு கூறத் துணிவாளா..?

நரேந்திரன் ஊர்மிளாவுக்கு போன் பண்ணிய போது அவளது போன் என்கேஜ்டாக இருந்தது.. அடுத்து அவன் பேசியபோது ராதாவிடம் பேசிக் கொண்டிருந்ததாக அவள் சொன்னாள்.. பேசிக் கொண்டிருக்கும் போதே போனைப் போட்டு விட்டு போய் விட்டாள்.. அதை எடுத்துப் பேசிய அகல்யா.. ராதாகிருஷ்ணன் வந்து விட்டதால் ஊர்மிளா போனைத் தூக்கிப் போட்டுவிட்டு ஓடி விட்டாள் என்று சொன்னாள்..

அன்று முழுவதும் நரேந்திரனுக்கு அது உறுத்தலாகவே இருந்தது..

ஏதாவது வேலையென்று அவள் போனை கீழே போட்டு விட்டுப் போயிருந்தாள் என்றால் சற்று நேரத்தில் வந்து அவனுக்குப் போன் பண்ணிப் பேசியிருக்கலாம் அல்லவா..?

இருந்தும் அவன் போன் பண்ணினான்.. அதற்குப் பின்னால் ஊர்மிளாவின் போன் ஸ்விட்ச் ஆஃபிலேயே இருந்தது..

தாள முடியாமல் லேண்ட் லைனில் அழைத்தான்.. அதிலும் அவள் பேச வர மறுத்து விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

ராதா என்று ஊர்மிளா சொன்னதும்.. ராதாகிருஷ்ணன் என்று அகல்யா சொன்னதும் ஒரே நபரைத்தானா என்று நரேந்திரனுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை..

ராதாகிருஷ்ணன் என்ற அவளின் தோழனை ராதா என்றே ஊர்மிளா அழைத்துப் பேசினாள் என்று அகல்யா சொல்லியிருந்ததில் நரேந்திரன் ஊர்மிளாவைச் சந்திக்க வந்தது அவளது தோழன்தான் என்றே நினைத்து விட்டான்..

அவனில்லாத தருணத்தில் வீட்டுக்கு வந்து தோழனிடம் அவள் பேசிச் சிரித்திருக்கிறாள்.. அதை கண்.. காது.. மூக்கு வைத்து அகல்யா சொல்லுகிறாள் என்று தான் அவன்..

"நான் வந்து விசாரிக்கும் வரை நீங்க அவளை எதுவுமே கேட்கக் கூடாது.." என்று அகல்யாவை மிரட்டி வைத்தான்..

இருந்தாலும் அவனுக்கு சில விளக்கங்கள் தேவைப் பட்டன.. ஏன் அவனுக்கு ஊர்மிளா போன் பண்ணவில்லை..? அவன் அழைத்த போதும் அவன் அழைப்பை ஏற்று எடுத்துப் பேசாமல் ஏன் அமைதி காத்தாள்..? பெரும்பாலான நேரங்களில் அவளது போன் 'ஸ்விட்ச் ஆஃப்' ஆகியிருந்ததின் காரணம் என்ன..? அவன் அழைப்பை எடுத்துப் பேசாதவள் அந்த ராதா என்ற ராதாகிருஷ்ணனின் அழைப்பை மட்டும் எப்படி எடுத்துப் பேசினாள்..? அவனுடன் அவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தவள்.. நரேந்திரன் பேசும் போது மட்டும் ஏன் ஓரிரு வார்த்தைகளுடன்

https://t.me/tamilpdfebooks

முடிவிட்டாள்..? அதற்குப் பின்னால் ஒட்டு மொத்தமாக ஏன் போனை ஸ்விட்ச் ஆஃப் செய்து தூக்கிக் கடாசினாள்..? அவன் லேண்ட் லைனில் அழைத்த போது ஏன் பேச வர மறுத்தாள்..?

லேண்ட் லைன் போனை அகல்யா எடுத்துப் பேசியிருந்தால் அவள் ஊர்மிளாவிடம் போய் சொல்லாமல் இருக்க வாய்ப்பிருக்கிறது.. அப்படியில்லாமல் போனை எடுத்தது அர்ச்சனா.. அவள் கட்டாயம் ஊர்மிளாவிடம் தகவலைச் சொல்லியிருப்பாள்.. இருந்தும் ஏன் ஊர்மிளா பேச வரவில்லை..?

இத்தனை விளக்கங்களையும்.. கோபங்களையும்.. அவளிடம் தனிமையில் கேட்கத்தான் அவன் உத்தேசித்திருந்தான்..

அவையெல்லாம் கணவனுக்கும்.. மனைவிக்கும் இடையினில் நடக்கும் அந்தரங்க உரையாடல்கள்..

அவை இல்லாமல்.. அனைவரின் முன்னாலும் அவன் ஊர்மிளாவிடம் கேட்க வேண்டிய விளக்கம் ஒன்று இருந்தது..

அது அகல்யா சொன்னது உண்மையா என்று கேட்பது..

அதை நரேந்திரன் கேட்டே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருந்தான.. அகல்யா சொன்ன அத்தனை நிகழ்வுகளும் அவன் வீட்டுக்குள் நடந்ததாக இருந்தன.. வேலையாள்களும்.. அருணும்.. அர்ச்சனாவும்.. ஊர்மிளாவின் தோழனைப் பற்றி நல்ல விதமாக நினைக்க

https://t.me/tamilpdfebooks

வில்லை என்று அகல்யா சொல்லியிருந்தாள்.. அதை அனைவரையும் ஒன்றாக நிற்க வைத்து.. ஊர்மிளாவிடம் விளக்கம் கேட்டு.. இல்லையென்று ஊர்ஜிதப் படுத்த வேண்டுமல்லவா..?

அவனுக்கும் அவன் மனைவிக்கும் இடையில் ஆயிரம் ஊடல்கள் இருக்கலாம்.. அது அவர்களுக்குச் சொந்தமானவை..

அகல்யா எப்படி அவ்வளவு துணிச்சலாக அவனிடமே அவன் மனைவியை குறை சொல்லிப் போட்டுக் கொடுக்கலாம்..?

அவள் அப்படிப்பட்ட கீழ்த்தரமான காரியத்தைச் செய்தாள் என்று அனைவரின் முன்னிலையிலும் நிரூபித்து விட்டு அவளை என்னவென்ற ஒரு கேள்வியைக் கேட்டு விட வேண்டாமா..? இனிமேலும் என் மனைவியைப் பற்றி நீ எதையாவது பேசினால் நடப்பது வேறு என்று எச்சரிக்கை விடுத்து கண்டித்து வைக்க வேண்டாமா..? அகல்யா இருக்க வேண்டிய இடம் எது என்று கோடிட்டுக் காட்ட வேண்டாமா..?

"வேண்டாம் நரேன்.."

கஜேந்திரன் திருமண மண்டபத்தில் சொன்னது அவன் மனதில் வந்தது..

"வயசானவன்.. வாழ்ந்து பார்த்தவன்ங்கிற முறையில சொல்லுகிறேன்.. அந்த வீட்டுக்கு உன் மனைவியை அழைத்துக் கொண்டு போகாதே.. அந்த அகல்யா சரியான பெண்ணல்ல.. அவள் உன் மனைவியை நிம்மதியாக வாழ விட மாட்டாள்.."

https://t.me/tamilpdfebooks

தாத்தா சொன்னதைப் கேட்டிருக்க வேண்டுமோ என்று அவனுக்குள் சஞ்சலம் வந்தது.. அவர் வீட்டில் ஊர்மிளா இருந்திருந்தால்.. இதுபோன்ற பழிச் சொற்களுக்கு ஆளாகி இருக்க மாட்டாளே..

'இதை சும்மா விடக்கூடாது..'

அவன் மனதில் கோபம் எழுந்தது.. அது எப்படி அகல்யா நரேந்திரனின் மனைவியைப் பற்றிய அவ்வளவு பெரிய பழிச்சொல்லை அவனிடமே தைரியமாக சொல்லுவாள்..?

'இதை அம்பலப் படுத்தியே ஆகனும்..' நரேந்திரன் தீவிரமாக இருந்தான்..

அவனது திருமண தினத்தன்று சோமசுந்தரமும்.. தங்குழலியும் அவனுடைய வீட்டில் தங்கியிருந்த போது இதுபோன்ற ஒரு பொய்யை அகல்யா உண்மை போல திரித்துச் சொன்னாள்.. அருணும், அர்ச்சனாவும் அவர்கள் இருவரையும் சாப்பிட அழைத்ததாகவும்.. அவர்கள் அதை மறுத்து விட்டார்கள் என்று சொன்னாள்.. நரேந்திரன் அதை நம்பி விடாமல் அருணையும்.. அர்ச்சனாவையும் அழைத்து வீட்டில் இருந்த அனைவரின் முன்னாலும் அகய்லா சொன்னது உண்மையா.. பொய்யா என்று விசாரித்தான்.. அதை உண்மையில்லை என்று ஊர்ஜிதம் செய்து விட்டு அகல்யாவை கண்டித்தான்.. அதையும் வீட்டிலிருந்த அனைவரின் முன்னிலையிலும்தான் செய்தான்..

அதைப் போலதான் அப்போதும் செய்ய நினைத்திருந்தான் நரேந்திரன்.. ஊர்மிளாவிடம் விளக்கம்

https://t.me/tamilpdfebooks

கேட்பது.. அவள் விளக்கம் சொன்னதும் அகல்யாவை உண்டு.. இல்லையென்று ஆக்கி விடுவது..

அவன் மனைவியிடம் சரியான விளக்கம் இருக்கும் என்று அவன் நம்பினான்.. அவள் அதைச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தான்..

ஊர்மிளாவின் மீது நரேந்திரன் குற்றம் காணவில்லை.. அவன் மனைவியை குற்றமற்றவள் என்று அனைவரின் முன்னிலையிலும் நிருபிக்கத்தான் அவன் நினைத்தான்..

சோமசுந்தரம் தெளிவானவர்.. அவன் வீட்டுக்கு அவர் வந்திருந்த போது அகல்யாவை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் ஆட்டி வைத்து விட்டுப் போனதை நரேந்திரன் மறக்கவில்லை.. அகல்யா சொன்ன பொய் வார்த்தைகளை நரேந்திரனின் முன்னிலையில் அம்பலப்படுத்த அவர் தயங்கவில்லை.. அதே தைரியத்தை ஊர்மிளாவிடமும் நரேந்திரன் எதிர்பார்த்தான்..

சோமசுந்தரத்தின் மகள்.. நரேந்திரனின் மனைவி.. எப்படிப்பட்ட போர் குணம் கொண்டவளாக இருக்க வேண்டும்..?

'என்னிடமே இப்படிப் போட்டுக் கொடுக்கிற வங்க வீட்டில் அவளிடம் வாய் விடாம சும்மாவா இருந்திருப்பாங்க..? ஒரு போனைப் போட்டு அதையெல்லாம் என்னிடம் சொல்லனும்னு இவளுக்குத் தோணவே இல்லையா..?'

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனுக்கு அதுதான் மிகப் பெரும் குறையாக இருந்தது.. அருகிலிருந்தாலும்.. தொலைவிலிருந்தாலும்.. சாய்ந்து கொள்ள அவன் தோளை அவள் தேடியிருக்க வேண்டாமா..?

விமானம் பெங்களூரில் தரையிறங்கியது.. விமானத்தில் பயணம் செய்த பயணிகளும் தரையிறங்கினார்கள்..

காத்திருந்த அருண்குமாரை நோக்கி நடந்தான் நரேந்திரன்.. காரில் வரும்போது வீட்டில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி விசாரித்தான்.. புதிதாக எதுவும் இல்லையே என்றான் அருண்.. அகல்யா சொன்னதற்கு நேர் எதிர்மாறாக இருந்த அவன் பதிலில்..

'நினைத்தேன்..' என்று பல்லைக் கடித்தான் நரேந்திரன்..

அவன் வீட்டுக்குள் நுழைந்ததும் அகல்யா ஓடி வந்தாள்..

"நரேன் வாப்பா:. என்னப்பா.. இளைச்சிட்ட.. சாப்பாடு சரியில்லையா..?" என்று வராத கண்ணீரைத் துடைத்தாள்..

"அண்ணா.." அர்ச்சனா குதித்துக் கொண்டு வந்தாள்..

நரேந்திரனின் விழிகள் ஊர்மிளாவைத் தேடின.. அவன் வந்திருக்கிறான்.. அவனைத் தேடி வராமல் அவள் எங்கிருக்கிறாள்..?

ஊர்மிளா அங்கேதான் இருந்தாள்.. நரேந்திரனின் கார் வீட்டுக் காம்பவுண்டுக்குள் வருவதை விழியோரம்

https://t.me/tamilpdfebooks

அரும்புக் கட்டியிருந்த கண்ணீருடன் யாரோ ஒருத்தியைப் போல மாடி பால்கனியிலிருந்து பார்த்தபடி அந்த வீட்டில்தான் இருந்தாள்.. அவளுடைய இதயம் துடித்தது.. நடுங்கியது... அந்த நடுக்கம் இடம் பெயர்ந்து வைவிரல்களுக்கு மாறியதில் அவள் கண்மூடி அவர்களின் அறையிலேயே உட்கார்ந்து விட்டாள்..

"அருண்.. காலையிலே சீக்கிரமாவே எழுந்திருச்சுருடா.."

ஊர்மிளாவை கடைக் கண்ணால் பார்த்தபடி முதல் நாள் மாலையில் அகல்யா ஆர்ப்பரித்தபோது அதை சட்டை செய்யாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ஊர்மிளா..

வாந்தியும்.. தலை சுற்றலுமாக படுக்கையில் படுத்திருக்க அவளது உடல் கெஞ்சினாலும்.. அவ்வபோது அவள் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து விடுவதை வழக்கமாக வைத்திருந்தாள்..

அகல்யாவின் அச்சுறுத்தலுக்குப் பயந்து போய் ஊர்மிளா அறைக்குள்ளேயே முடங்கி விட்டாள் என்று அகல்யா மகிழ்ந்து போய் விடக்கூடாது என்பது முதல் காரணம்..

அப்படி அறைக்குள்ளேயே அடைந்து கிடப்பதால் தேவையற்ற பயங்கள் வந்து ஊர்மிளாவை அழுத்தி மீளமுடியாத இருள் புதை குழியில் தள்ளுவதைப் போல ஊர்மிளா உணர ஆரம்பித்திருந்தது இரண்டாவது காரணம்..

தாய்மை அடைந்திருக்கும் சமயத்தில் பெண்களுக்கு ஏற்படும் நூதன உணர்வு அது.. உறக்கமும்.. விழிப்பும்

https://t.me/tamilpdfebooks

இல்லாத 'மசக்கை'யை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது ஏற்படும் மனபயம் அது..

ஊர்மிளா தாயின் அரவணைப்பாக நரேந்திரனின் அரவணைப்பைத் தேடினாள்.. மயக்கம் தரும் நிலையை அவன் மார்பில் சாய்ந்து கண்மூடி அவனிடம் சொல்லி வாந்தி எடுத்தாள்..

கேள்.. உன் குழந்தை என் வயிற்றில் வளர்கிறது.. அதனால் எனக்கு மயக்கம் வருகிறது.. வாந்தி வருகிறது.. பயம் வருகிறது.. நீ என் அருகிலேயே இருப்பாயா..? என் பயத்தைப் போக்கி.. என் மனதுக்கு தைரியம் அளிப்பாயா..?

இப்படியெல்லாம் விரல் கோர்த்து.. முகம் பார்த்துப் பேசி விட தவித்தாள்.. அந்தத் தவிப்பையும்.. துடிப்பையும் தீர்க்கக் கூடியவன் அந்த வீட்டுக்குள் வந்து விட்டான்.. அவனை எதிர்கொள்ள அவகாசம் தேடி அந்த ஏந்திழை தனிமையின் கும்மிருட்டில் அனாதரவாக அமர்ந்திருந்தாள்..

"எனக்குத் தெரியும்மா.." எரிச்சலுடன் சொன்னான் அருண்குமார்..

அங்கே உட்கார்ந்திருந்த ஊர்மிளாவின் முன்னால் அகல்யா ஆர்ப்பரித்ததை அவன் விரும்பவில்லை..

இப்போதெல்லாம் ஊர்மிளா யாருடனும் அதிகமாகப் பேசுவதில்லை என்பதை அவன் கவனித்துக் கொண்டு தான் இருந்தான்.. அவள் முகம் வாடியிருந்தது.. என்னவென்று கேட்கலாம்தான்... அது இயல்பான ஒன்றுதான்.. அகல்யா அதை இயல்பாக இருக்க விடுவாளா..? அவள்தான் ஏதாவது ஒன்றைச் சொல்லி

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவை தனிமைப் புதைகுழிக்குள் தள்ளி விடுவதையே குறிக்கோளாக வைத்திருக்கிறாளே..

அந்த வீட்டில் இருப்பதை அத்துவானக் காட்டுக்குள் இருப்பதைப் போல ஊர்மிளாவுக்கு அகல்யா உணர்த்திக் கொண்டிருக்கிறாள் என்பது அவனது அனுமானமாக இருந்தது.. அதை அவனால் கண்டிக்கவும் முடியவில்லை.. நரேந்திரனின் கவனத்திற்கு எடுத்துச் செல்லவும் முடியவில்லை..

என்னதான் அருண்குமார் நியாயமானவனாக.. நல்ல குணங்களைக் கொண்டவனாக இருந்தபோதும்.. நரேந்திரனிடம் இந்த விவரத்தை எடுத்துச் சொல்லத் தயங்கினான்..

அவன் நரேந்திரனைப் பற்றி நன்கு அறிவான்.. அகல்யாவிடம் நரேந்திரனுக்கு பாசமோ.. ஒட்டுதலோ.. மதிப்பு மரியாதையோ அறவே கிடையாது என்பதையும் நன்கு அறிவான்.. எந்த நொடியிலும் நரேந்திரன்.. அந்தக் குடும்பத்துடனான உறவை முறித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விடக்கூடும் என்பதையும் நன்கு அறிவான்..

அப்படியொரு சூழ்நிலை வந்து விட்டால் என்ன செய்வது என்ற பயமே அருண்குமாரின் வாயைக் கட்டிப் போட்டு வைத்திருந்தது.. நரேந்திரனைச் சார்ந்திருக்கும் அந்தக் குடும்பம்.. அவனைப் பிரிந்து விட்டால் என்ன செய்வது என்ற பதட்டத்துடன் அவன் வாயிருந்தும் ஊமையாகிப் போனான்..

https://t.me/tamilpdfebooks

"உனக்குத் தெரியும்டா அருண்.. எனக்கும் தெரியும்.. அது மத்தவங்களுக்குத் தெரியனுமே.."

ஊர்மிளாவை ஜாடையாகப் பார்த்தபடி சொன்னாள் அகல்யா.. ஊர்மிளாவின் புருவங்கள் முடிச்சிட்டன.. அகல்யா ஏதோ ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லப் போகிறாள் என்று அவளுடைய உள்ளுணர்வு சொல்லியது.. அது எந்தச் செய்தியாக இருக்கக் கூடும்..?

"மத்தவங்கன்னா யாரைச் சொல்கிறீங்கம்மா.. அர்ச்சனாவுக்கு அண்ணன் வரப் போகிறார்ன்னு தெரியும்.." என்றான் அருண்குமார்..

'என்னது..? நரேந்திரன் வரப் போகிறானா..?'

ஊர்மிளா ஆவலுடன் நிமிர்ந்தாள்.. அவளுடைய முகத்தில் ஆவலுடன் வேடிக்கை பார்த்த அகல்யாவின் விழிகளில் குரூரம் மின்னியது.. அவள் உதடுகளில் இகழ்ச்சிச் சிரிப்புத் தவழ்ந்தது..

'பார்.. உன் புருசன் ஊருக்குத் திரும்பப் போகிறான்.. அந்த விசயம் உன்னைத் தவிர.. எங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது..' அகல்யாவின் விழிகள் இகழ்ச்சியுடன் சொல்லின..

'கடவுளே..' ஊர்மிளா கண்களை மூடிக் கொண்டாள்.

அவளுடைய காதல் கணவன் வீடு திரும்பப் போகிறான்.. அது அவளுக்குத் தெரியவில்லை.. அவளைத் தவிர மற்ற அனைவருக்கும் தெரிந்திருக்கிறது.. இந்தக் கொடுமையை அவள் எங்கே போய் சொல்லுவாள்..?

https://t.me/tamilpdfebooks

"உங்கண்ணன் நாளைக்குக் காலை பிளைட்டில வரப்போகிறான்... நீ ஏர் போர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கும்.. சீக்கிரமா எழுந்திருச்சுருடா.." அகல்யா அக்கறையுடன் சொன்னாள்..

"நீங்க சொல்லித்தான் அதை நான் செய்யனுமா..?" அருண்குமார் கோபத்துடன் மாடிக்குப் போய் விட்டான்..

அகல்யா ஊர்மிளாவை எகத்தாளமாக பார்த்தாள்..

'ஊர்மிளா.. ஓடி விடு.. இந்தப் பாதகி எதையோ சொல்லப் போகிறாள்..' ஊர்மிளாவின் மனம் எச்சரித்தது..

ஊர்மிளா தோட்டத்துப் பக்கம் போய் விடலாமென்று எழுந்தாள்..

"என்ன..? நாளைக்குக் காலையிலேதானே நீ வீட்டைவிட்டு ஓடப் போகிற..? இப்ப அதுக்கு ஒத்திகை பார்த்து வைச்சுக்கறியா..?"

இரக்கமில்லாமல் கேட்டாள் அகல்யா.. அவளுடைய கபடம் தகம்பிய விழிகளில் தெரிந்த இறுமாப்பில் மனம் நைந்தாள் ஊர்மிளா..

அகல்யாவைப் போன்ற வஞ்சகிகள் எல்லாம் பேச அவள் கேட்டுக் கொண்டிருக்கும் நிலை வந்து விட்டதே என்று மனதுக்குள் குமைந்தாள்..

பதில் சொல்லாமல் தோட்டதுக்குப் போய் விட்டவளின் மனது ஒரு நிலையில் இல்லை.. அமைதியாக இரு மனமே என்ற அவளின் ஆக்னைனுக்குக் கட்டுப் படாமல் அலைகடலாக அவள் மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது..

https://t.me/tamilpdfebooks

'ஒருவேளை.. நரேன் இந்தம்மா சொல்கிறதைப் [illegible]லை என்னைக் கேட்டு வைத்துட்டா..?'

நெஞ்சம் நடுங்க கண்களை மூடிக் கொண்டாள் [illegible]ர்மிளா.. பொய்யும், புரட்டலும், தந்திரமும் ஒன்று சேர்ந்த [illegible]ஸ்யாவின் வார்த்தை பலிக்குமானால் இந்த உலகில் [illegible]திக்கும், நேர்மைக்கும் இடமிருக்கிறதா..? அவள் மனம் [illegible]கிலி கொண்டது..

தூக்கமின்றி அவள் கழித்த இரவுகளில் மற்றுமொரு [illegible]லாக அந்த இரவு அவளுக்கு அமைந்திருந்தது.. [illegible]டியில் ஒருக்களித்துப் படுத்து.. தலை மாட்டிலிருந்த [illegible]ந்திரனின் புகைப்படத்தையே இமைக்காமல் அவள் [illegible]த்துக் கொண்டிருந்தாள்..

அவள் தொட்ட.. முத்தமிட்ட.. முடிகோதிவிட்ட.. [illegible]டியணைத்த.. கலவியில் கலந்த.. அவளுடையவன் [illegible]ாட்டோவுக்குள் அசையாமல் சிரித்த வண்ணம் [illegible]ருந்தான்..

'என் நரேன்..' ஏனோ அவள் மனம் பதைத்தது..

மறுநாள் காலையில் அவனை வரவேற்கப் போகும் [illegible]ற்சாகமின்றி அவள் எழுந்து தயாரானாள்.. அவன் வந்து [illegible]ட செய்தியை அறிந்தும் அறைக்குள்ளேயே முடங்கி [illegible]டகார்ந்திருந்தாள்.. அவன் மாடிக்கு வருவானா என்று [illegible]திர்பார்த்தாள்.. அவன் வரவில்லை.. அவள் வரவை [illegible]திர்பார்த்து அவன் ஹாலிலேயே நின்று விட்டான்..

ஊர்மிளா வந்தாள்.. மாடிப்படிகளில் இறங்கி [illegible]ந்தவளின் விழிகளில் இருந்த தவிப்பும்.. துடிப்பும்..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனை பேச்சிழக்கச் செய்தன.. மனைவியை ஊன்றிப் பார்த்தான்.. தவிப்போடு அவன் பார்வையோடு பின்னிப் பிணைந்தது அவளின் பார்வை.. அவள் விழிகளில் இருந்த வேதனையில் அவன் துடித்துப் போனான்.. சுற்றிலும் பார்த்தான்.. வீட்டிலிருந்த அனைவரும்.. வேலையாள்கள் உட்பட அங்கே இருந்ததை அவன் பார்வை கணக்கெடுத்தது.. செக்யூரிட்டி கூட அங்கேதான் இருந்தான்..

நரேந்திரன் மனைவியைப் பார்த்தான்.. அவளது உயிர் துடித்தது..

'கேட்டு விடுவானோ..' அவள் மனம் பதறினாள்..

"ராதாகிருஷ்ணன்ங்கிறது யாருடி..? உன்னுடன் படித்த கிளாஸ் மேட்டா..? உன் பிரண்டா..? நான் இல்லாதப்ப நம்ம வீட்டுக்கு கெஸ்டா வந்திருந்தாரா..?"

நரேந்திரன் என்னவோ இதமாகத்தான் கேட்டான். ஊர்மிளா விக்கித்துப் போய் நின்று விட்டாள்.. அகல்யா அவளைப் பார்த்த பார்வையில் தெரிந்த சாகச வெற்றி சிரிப்பு ஊர்மிளாவின் தோல்வியைச் சொன்னது..

ஆயுளுக்கும் அந்த பார்வையை மறக்க முடியாது என்ற துக்கத்துடன் நரேந்திரனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஊர்மிளா விலகி நடந்தாள்..

- மூன்றாம் பாகத்தில் தொடரும்

https://t.me/tamilpdfebooks

லட்சுமி பாலாஜி பதிப்பகம்